தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1968 மார்ச் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் **246, 247** பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

துணி ஏற்றுமதியை ஊக்குவிக்கப் பூரிப்பூதியம்

* 248 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மில்லில் அல்லது விசைத்தறிகளில் உற்பத்தியாகும் ஜவுளியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்கமளிக்கும் போனஸ், மத்திய, மாகாண சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பதிவுபெற்ற ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கப்பலில் இலவசமாக ஏற்றி அனுப்பப்படும் சரக்குகளின் 5 சதவிகிதம் மதிப்புள்ள இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் ஆலைத் தயாரிப்பு, விசைத் தறி பருத்தித் துணிகளுக்குப் பதிலாக அனுமதிக்கப்பட்ட இனங்களைச் சார்ந்த சாயப் பொருள்களையும், இரசாயனப் பொருட்களையும் இறக்குமதி செய்ய வகைசெய்வதே இவ்வுரிமங்கள் வழங்குவதன் நோக்கமாகும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மில்லில் அல்லது விசைத் தறியில் உற்பத்தியாகும் ஜவுளிக்குமாத்திரம் ஏற்றுமதி செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் தன்மையில் அப்படிக் கொடுக்கப்படும்போது கைத் தறி ஜவுளிகள் ஏற்றுமதி செய்வதற்குக் கொடுக்கப்பட்டுவந்ததே, இப்பொழுது என் நிறுத்திவிட்டார்கள் ? இனிமேலாவது அதைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கைத் தறிக்குக் கொடுத்திருக்கிறார்களா அல்லது இப்போது அதை நிறுத்தி வைத்திருக்கிறார்களா என்பது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கைத்தறித் துணிகள் மிக அதிகமான அளவிற்கு, குறிப்பாக மதுரையில் ஒரு கோடி ரூபாயளவிற்கு, தேங்கிக்கிடப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றனவா ? அப்படியிருந்தால் அவற்றை விற்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கைத் தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு எல்லா வகைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஸ்டேட் டிரேடிங் கார்பொரேஷன் இதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்கா, கிழக்கு ஆசியா போன்ற நாடுகளில் இவற்றை விற்பனை செய்வதற்கு முயற்சிகள் நடைபெறு

கின்றன. எந்தெந்தத் துறைகளில் வாய்ப்பு இருக்கிறதோ, அவற்றிலே ஏற்றுமதிக்கான சலுகைகள் தரப்படுகின்றன. மார்க்கெட்டைப் பொறுத்துத்தான் ஏற்றுமதியும் இருக்கும், பிளீடிங் மெட்ராஸ் பொறுத்தளவில் 1966—67-ம் ஆண்டில் ஆறு கோடி ரூபாயாக இருந்தது இப்போது 10, 15 லட்சம் அளவிற்கு இறங்கிவிட்டது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதற்கு வேண்டிய மார்க்கெட்டுகள் மற்ற இடங்களில் பிடிப்பதற்கு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் முயன்று கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கைத்தறி ஏற்றுமதி பற்றி முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் மேல் நாடுகள் சென்ற குழுவினால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்பை, மத்திய அரசு செயல்படுத்தியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இப்பொழுது கைத்தறித் துணிகளை அதிகமாகத் தேங்கி இருப்பதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் பரிசீலித்ததா ? இந்தக் காரணத்தினாலே ஏற்படுகின்ற சிக்கல்களைப் போக்குவதற்குத் தற்காலிக நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் இப்படிப்பட்ட சமயங்களில் தேங்குவதும், அதை எடுத்துக் கொள்வதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதும், ஆண்டு ஆண்டுதோறும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. 2½ கோடி அளவிற்குப் பல்வேறு சொஸைடிகளில் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிகமாக விற்பனை செய்வதற்காகக் கண்காட்சிகளை ஏற்படுத்தி, வார விழாக்கள் நடைபெற்று வருகின்றன. எந்தெந்த வகையில் இதற்கு ஊக்கம் அளிக்க முடியுமோ, அந்தந்த வகையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டெக்ஸ்டைல் கமிஷனரும் ஏற்றுமதியை அதிகமாக்குவதற்கு முயற்சித்து வருகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆலைத் துணிகளுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய தன்மையில் மில் துணிகளுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால், அதே நேரத்தில் கைத்தறிக்குக் கொடுக்கப்பட்டதை நிறுத்திய காரணத்தினாலே வாரவிழா கொண்டாடுவதுபோன்ற முறையிலே ஏமாற்றக்கூடிய தன்மையைப் போக்குவதற்கு மத்திய சர்க்காரோடு போரிட்டு, மத்திய சர்க்காரை மீண்டும் கொடுக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. This question will have to be put on the floor of the Parliament and not here.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மத்திய சர்க்கார்பற்றிய குறைகளை இங்கே சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : குறை சொல்லவில்லை. மத்திய சர்க்காரின் போக்கு அப்படியிருக்கிறது. கொடுக்கப்பட்ட இதே போனஸை நிறுத்தியிருக்கிறார்கள். மில் துணிக்கு மாத்திரம் கொடுத்துவிட்டு கைத்தறித் துணிக்குமாத்திரம் கொடுக்காமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பெறுவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நிலைமையைப் பொறுத்துக் கொடுக்கப்பட்ட உதவி நிறுத்தப்பட்டிருக்குமானால் அந்தச் சூழ்நிலையை ஆராய்ந்து தக்க முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு மீண்டும் மத்திய அரசைக் கேட்டு வழிவகை செய்யப்படும்.

தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1968 மார்ச் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 246, 247 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

துணி ஏற்றுமதியை ஊக்குவிக்கப் பூரிப்பூதியம்

* 248 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மில்லில் அல்லது விசைத்தறிகளில் உற்பத்தியாகும் ஜவுளியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்கமளிக்கும் போனஸ், மத்திய, மாகாண சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பதிவுபெற்ற ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கப்பலில் இலவசமாக ஏற்றி அனுப்பப்படும் சரக்குகளின் 5 சதவிகிதம் மதிப்புள்ள இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் ஆலைத் தயாரிப்பு, விசைத் தறி பருத்தித் துணிகளுக்குப் பதிலாக அனுமதிக்கப்பட்ட இனங்களைச் சார்ந்த சாயப் பொருள்களையும், இரசாயனப் பொருட்களையும் இறக்குமதி செய்ய வகைசெய்வதே இவ்வுரிமங்கள் வழங்குவதன் நோக்கமாகும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மில்லில் அல்லது விசைத் தறியில் உற்பத்தியாகும் ஜவுளிக்குமாத்திரம் ஏற்றுமதி செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் தன்மையில் அப்படிக் கொடுக்கப்படும்போது கைத் தறி ஜவுளிகள் ஏற்றுமதி செய்வதற்குக் கொடுக்கப்பட்டுவந்ததே, இப் பொழுது ஏன் நிறுத்திவிட்டார்கள் ? இனிமேலாவது அதைக் கொடுப் பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கைத் தறிக்குக் கொடுத்திருக்கிறார்களா அல்லது இப்போது அதை நிறுத்தி வைத்திருக்கிறார்களா என்பது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கைத்தறித் துணிகள் மிக அதிக மான அளவிற்கு, குறிப்பாக மதுரையில் ஒரு கோடி ரூபாயளவிற்கு, தேங்கிக்கிடப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றனவா ? அப்படியிருந்தால் அவற்றை விற்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கைத் தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்கு எல்லா வகைகளிலும் முயற்சி கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஸ்டேட் டிரேடிங் கார்பபொரேஷன் இதற் காக முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்கா, கிழக்கு ஆசியா போன்ற நாடுகளில் இவற்றை விற்பனை செய்வதற்கு முயற்சிகள் நடைபெறு

கின்றன. எந்தெந்தத் துறைகளில் வாய்ப்பு இருக்கிறதோ, அவற்றிலே ஏற்றுமதிக்கான சலுகைகள் தரப்படுகின்றன. மார்க்கெட்டைப் பொறுத்துத்தான் ஏற்றுமதியும் இருக்கும், பிளீடிங் மெட்ராஸ் பொறுத்தளவில் 1966—67-ம் ஆண்டில் ஆறு கோடி ரூபாயாக இருந்தது இப்போது 10, 15 லட்சம் அளவிற்கு இறங்கிவிட்டது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதற்கு வேண்டிய மார்க்கெட்டுகள் மற்ற இடங்களில் பிடிப்பதற்கு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் முயன்று கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கைத்தறி ஏற்றுமதி பற்றி முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் மேல் நாடுகள் சென்ற குழுவினால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்பை, மத்திய அரசு செயல்படுத்தியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இப்பொழுது கைத்தறித் துணிகள் அதிகமாகத் தேங்கி இருப்பதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் பரிசீலித்ததா ? இந்தக் காரணத்தினாலே ஏற்படுகின்ற சிக்கல்களைப் போக்குவதற்குத் தற்காலிக நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் இப்படிப்பட்ட சமயங்களில் தேங்குவதும், அதை எடுத்துக் கொள்வதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதும், ஆண்டு ஆண்டுதோறும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. 2½ கோடி அளவிற்குப் பல்வேறு சொஸைடிகளில் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிகமாக விற்பனை செய்வதற்காகக் கண்காட்சிகள் ஏற்படுத்தி, வார விழாக்கள் நடைபெற்று வருகின்றன. எந்தெந்த வகையில் இதற்கு ஊக்கம் அளிக்க முடியுமோ, அந்தந்த வகையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டெக்ஸ்டைல் கமிஷனரும் ஏற்றுமதியை அதிகமாக்குவதற்கு முயற்சித்து வருகிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆலைத் துணிகளுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய தன்மையில் மில் துணிகளுக்கு போனஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால், அதே நேரத்தில் கைத்தறிக்குக் கொடுக்கப்பட்டதை நிறுத்திய காரணத்தினாலே வாரவிழா கொண்டாடுவதுபோன்ற முறையிலே ஏமாற்றக்கூடிய தன்மையைப் போக்குவதற்கு மத்திய சர்க்காரோடு போரிட்டு, மத்திய சர்க்காரை மீண்டும் கொடுக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. This question will have to be put on the floor of the Parliament and not here.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மத்திய சர்க்கார்பற்றிய குறைகளை இங்கே சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : குறை சொல்லவில்லை. மத்திய சர்க்காரின் போக்கு அப்படியிருக்கிறது. கொடுக்கப்பட்ட இதே போனசை நிறுத்தியிருக்கிறார்கள். மில் துணிக்கு மாத்திரம் கொடுத்துவிட்டு கைத்தறித் துணிக்குமாத்திரம் கொடுக்காமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைப் பெறுவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நிலைமையைப் பொறுத்துக் கொடுக்கப்பட்ட உதவி நிறுத்தப்பட்டிருக்குமானால் அந்தச் சூழ்நிலையை ஆராய்ந்து தக்க முயற்சியை இந்த அரசு மேற்கொண்டு மீண்டும் மத்திய அரசைக் கேட்டு வழிவகை செய்யப்படும்.

1968 மார்ச் 19]

திரு. டி. எஸ். ஆதிமூலம் : கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய முறையில், அவர்களுக்கு ஜீவனோபாயம் தருகின்ற முறையில், சில ரகத் துணிகளை அவர்களுக்கே ஒதுக்கிவிடுவதென்ற முறை இருந்ததே, இப்போது அந்த முறையிருக்கிறதா ? இந்திய அரசுக்கு இதைபபற்றி எழுதி முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லையென்றாலும், கைத்தறிக்குக் கரை போட்ட வேட்டியும், கரைபோட்ட சேலையும் ஒதுக்கலாம் என்று கொள்கையளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. அண்மையில் பெங்களூரில நடைபெற்ற மாநாட்டிலே இந்தியத் துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயிடம் சொன்னபோது, இதைப்பற்றிக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி மீண்டும் வற்புறுத்தக்கூடிய நிலையிலே அரசு இருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகளில் புதுமாதிரியான ரகங்களை எப்படி உற்பத்தி செய்யலாம் என்று ஆராய்வதற்காக ஒரு நிரந்தரமான குழுவை அமைத்து, மேலும் புதிய ரகங்களை உற்பத்தி செய்யலாம், வெளிநாடுகளிலே வாழ்கின்ற மக்கள் எந்தெந்த முறையிலே துணிகளை விரும்புகிறார்கள் என்பதைப் பரிசிலிக்கக் கைத்தறித் தொழிலில் அக்கறை கொண்டுள்ளவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது போனஸ் கொடுப்பது பற்றிய கேள்வி. அதைப்பற்றி மட்டும் கேட்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு எம். எஸ். மணி : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய கைத்தறித் துணிகளுக்கு ஐன்சென்டிவ் என்ற முறையில் போனஸ் கொடுக்கப்படுகிறது. சில நாடுகளுக்குக் கொடுக்கிறார்கள். சில நாடுகளுக்குக் கொடுப்பதில்லை. எல்லா நாடுகளுக்கும் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன், இந்த அரசு இந்திய அரசுக்குத் தெரிவிக்கும் முறையில நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். ராமலிங்கம் : வெளிநாடுகளிலே மார்க்கெட்டுகளைப் பிடிப்பதற்குக் கைத்தறியைப் பொறுத்தவரை விளம்பரங்கள் எந்த அளவுக்குச் செய்யப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கங்கே இருக்கின்ற டிரேட் கமிஷனர் விளம்பரங்கள் செய்துவருகிறார்கள். மான்ட்ரீல் கண்காட்சியிலே கைத்தறிபற்றிய விளம்பரம் செய்யப்பட்டது. அமெரிக்காவிலுள்ள பலவேறு பத்திரிகைகளிலும், ஐரோப்பாவிலுள்ள பத்திரிகைகளிலும் இதைப்பற்றி விளம்பரங்கள் செய்வதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. அதற்காகத் தூதுக் குழுவினர் இரண்டு முறை சென்று வந்திருக்கிறார்கள் மவுண்ட் ரோட்டிலுள்ள இடத்தில் விதவிதமான ரகங்களை வைத்துக் காட்டிவருகிறார்கள். எப்படிப்பட்ட ரகங்கள் தேவைப்படும், எந்தவிதமான ரகங்களை விரும்புகிறார்கள் என்று பார்த்து, அப்படிப்பட்ட ரகங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய டிசைனகளை வரைவதற்கு காஞ்சீபுரத்தில் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே. என். குமாரசாமி : நமது மாநிலத்தில் நூல்மட்டும் உற்பத்தி செய்யும் ஆலைதான் இருக்கிறது. அதனால் நஷ்டம ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகையால் துணியை உறபத்தி செய்யக் கூடிய ஆலையையும் ஏற்படுத்துவதற்கு முயற்சிசெய்து, அதன்மூலம் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை 160 நூற்பு ஆலைகள் இருக்கின்றன. நூறபு நெசவு காம்போசிட் மில்கள் 25 இருககின்றன. நம்முடைய மாநிலததைப் பொறுததவரையில் துணைகள் வேறு மாநிலத்திலிருந்துதான் இறக்குமதி செய்கின்ற நிலையில் இருக்கின்றது. காம்போசிட் ஆலையை விட நூறபு ஆலை ஏற்படுத்துவது சௌகர்யம் என்று அதைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். நெசவு ஆலைகளைத் துவககுவதற்கு விண்ணப்பம் செய்யப் பட்டால், அதை நிறைவேற்றுவதற்கு இநத அரசு முயற்சிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, ப்ளீடிங் மெட்ராஸ் என்ற வண்ணம் மாறும் கைத்தறித் துணி அமெரிக்காவுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செயயப்பட்டதே, அது இரண்டு மூன்று வருஷங் களாகக் குறைந்திருக்கிறது, அதை இன்னும் அதிகமாக ஏற்றுமதி செய்ய என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முதலில் அதிகமாக ஏற்றுமதி ஆயிற்று. நம்முடைய வியாபாரிகள் தரக்குறைவான துணியை அனுப்ப ஆரம்பித்தவுடன், ஒரு முறை வீழ்ச்சி அடைந்தது. அப்புறம் க்வாலிடி கண்ட்ரோல் வைத்து அனுப்ப ஆரம்பித்தோம். இப்போது வீழ்ச்சி அடைநதிருப்பதற்குக் காரணம் பல இருக்கின்றன. ஒன்று, பாஷன் மாறிவிட்டது. இரண்டாவது, இந்த ரகத் துணியை அங்கேயே உற்பத்தி செய்ய ஆரம்பித்தது. மூன்றுவது, இந்த ரகத் துணி ஜப்பான நாட்டில் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு நம் துணியைவிட மலிவான விலையில் அங்கே கொடுககப்படுவது. இதைப்பற்றி எல்லாம் டிரேட் கமிஷனர் ஆராய்ந்துகொண்டு வருகிறார்கள்.

THIRU K. VINAYAKAM: Sir, apart from obtaining the bonus for the export of these goods to foreign countries, what steps have the Government taken to clear the stocks of handloom goods now lying stagnant, worth about Rs. 4½ crores?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதுபற்றிக் கைத்தறி இலாகா இயக்குநர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

Price of mill-made textiles

* 249 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that the Central Government have increased the price of mill-made textiles (controlled cloth) with effect from 1st April 1967; and

(b) if so, to what extent?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஆம்; மத்திய அரசு 15—4—67 முதல் கட்டுப்பாட்டிலுள்ள ஆலை நெய்த துணி தினுசு களின் விலையை 4½ சத வீதம் உயர்த்தி இருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Sir, are the Government aware of the valid reasons that impelled the Central Government to increase the price of these mill-made textiles and also whether this Government was consulted before the price was raised?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: விலை நிர்ணயிக்கிற உரிமை முழுவதும் மத்திய அரசிடமேதான் இருக்கிறது. நம்மைக் கலந்து கொண்டு விலை நிர்ணயிக்கப்படுவதில்லை. வேஷ்டி, புடவை, லாங்க் க்ளாத்

1968 மார்ச் 19]

எல்லாவற்றிற்கும் 20-10-64-ல் விலை ஏற்றப்பட்டது. மறுபடியும் 1-12-64-ல் விலை உயர்த்தப்பட்டது. மில் அடக்கவிலையைவிட 18 சத வீதம் அதிகமாக லாபம் வைத்து விற்கலாம் என்றார்கள். அப்புறம் 20 சத வீதம் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் விலை ஏறியிருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுவது போல இப்படித் துணியின் விலையை மத்திய சர்க்கார் அடிக்கடி உயர்த்தி வந்திருந்தும்கூட மில் முதலாளிகள் திட்டமிட்டே ஏப்ரல் முதல் கோவையில் 15 மில்களை மூடிவிட நடவடிக்கை எடுத்து வருகிறார்களே, அதைத் தடுத்து நிறுத்த இந்த அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல 1-3-65-ல் விலையேற்றப்பட்டது. 1-11-65-ல் விலையேற்றப்பட்டது 1-4-66-ல் ஏற்றப்பட்டது. 1-10-66-ல் ஏற்றப்பட்டது. 14-5-67-ல் ஏற்றப்பட்டது. இப்படி ஏற்றப்படுகிற விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு அவர்கள் விற்கிறார்கள், அதைத் தடுப்பதற்குத்தான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். இருந்தும், இப்போது மில்களை மூடிவிட எடுக்கிற முயற்சியைத் தவிர்க்க அரசாங்கம் அதிகாரிகளைக்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மில் துணிகளுக்கு விலை ஏற்றப்படுவதாகச் சொன்னார்கள். அதை எதிர்ப்பதற்கு ஏன் எல்லோரும் கைத்தறித் துணிகளையே வாங்கி உபயோகிக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கருத்தைத்தான் சொல்லிவருகிறோம். கனம் உறுப்பினரும் அந்தக் கருத்தை நல்ல முறையில் பிரச்சாரம் செய்யவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய அரசு விலை உயர்த்தியுள்ள ஜவுளிகளின் ரகம் என்ன? ஏழைகள் உபயோகிக்கக்கூடிய லோயர் கவுண்ட்ஸுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறதா? பணக்காரர்கள் உபயோகிக்கக் கூடிய ஹையர் கவுண்ட்ஸுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சூப்பர் பைன் என்கிற உயர்ந்த ரகத்திற்குத்தான் காலிகோ, பின்லே, அரவிந்த், சென்சுரி முதலிய மில் துணிகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. ஆலடி அருணா : கடந்த ஓராண்டுக் காலமாகப் பருத்தியின் விலை வீழ்ந்துவிட்டது. பொதி 400 ரூபாயாக விற்றது இப்போது 200 ரூபாயாகி யிருக்கிறது. ஆனால் துணிகளின் விலைகள் உயர்ந்துகொண்டே போகின்றன. ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்திசெய்கிற பருத்திக்கு விலையை உயர்த்திக்கொடுக்க முடியுமா? அல்லது துணிவிலையைக் குறைக்க முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி விலை நிர்ணயிக்கக்கூடிய உரிமை மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. நாம் பாதிக்கப் படுகிறபோது, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யலாம். ஆனால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், நாடாளு மன்றத்தில் கேட்கப்படவேண்டிய கேள்வியை இங்கே அனுமதிக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்கள் அவர்களுக்குத் தெரிந்த செய்தியை விடையிறுக்கிற நேரத்தில் அனுமதிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : மக்களது வாங்கும் சக்தியை அடிப்படையாகக் கொண்டு விலை நிர்ணயிக்கப்படவில்லை. அதனால் ஜவுளிகள் தேங்கிக் கிடக்கின்றன. இனியாவது வாங்கும் சக்தியை அடிப்படையாக வைத்து, உற்பத்தி செய்யும் செலவை அடிப்படையாக வைத்து, விலை நிர்ணயம்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விலை நிர்ணயிக்கிற உரிமை மத்திய அரசிடம் தான் இருக்கிறது. செய்திகளைத்தான் அவர்களிடம் இருந்து நாங்கள் வாங்கிக் கொடுக்கிற நிலை இருக்கிறது. நாம் ஏதாவது சிபாரிசு செய்யலாம். அதையும் முறைப்படி வற்புறுத்துகின்ற சூழ்நிலை இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : கைத்தறித் துணிக்குப் பரிந்து பேசுகின்ற அங்கத்தினர்கள் மில் துணியைக் கட்டுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கைத்தறித் துணியை ஆதரிப்பது என்பதுதான் பொதுவான கொள்கை. கைத்தறித்துணிகளையே வாங்கி உடுத்தி வருகிறார்கள். கைத்தறித் துணியைத்தான் வாங்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆதலால் இடையிடையே மில் துணியையும் வாங்கிவருகிறார்கள். இதுதான் அமைச்சர்கள் உட்பட அனுசரிக்கிற முறை.

Dr. H. V. HANDE : Sir, just now the Hon. Minister had replied that the prices were fixed by the Central Government. I want to know from the Hon. Minister whether the Central Government consulted the State Government in this regard and if so, what were the recommendations made by the State Government with regard to this matter. Also, do the State Government agree with the Centre regarding the increase of the price of the goods and what was the view of the State Government expressed to the Centre in regard to this matter?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முன்பே கூறியபடி விலை நிர்ணயிப்பதில் நமக்கு அதிகாரம் இல்லை. நாம் பாதிக்கப்படுகிறபோது அதை எடுத்துச் சுட்டிக்காட்டலாம். அதை வற்புறுத்துகின்ற சூழ்நிலைகூட இல்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மத்திய அரசு பெரும் முதலாளிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஆலைத் துணிகளின் விலைகளை அதிகரித்துக்கொண்டே வருகிறது. நமது மாநிலத்தில் கைத்தறித் தொழிலாளர்களின் நிலைமையும், விவசாயிகளுடைய நிலைமையும் விலை உயர்த்தப்படாமல் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, விலையை உயர்த்தும்பொழுது பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு மாநில அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலேயே குறிப்பிட்டபடி விலையை நிர்ணயிக்கிற முழு உரிமையும் அவர்களிடத்திலே தான் இருக்கிறது. ஆலைத் துணிகளின்விலை ஏறியிருக்கிற காரணத்தினாலே கைத்தறித் துணிகள் விலை போகும். காம்பெடிஷன் என்கிற முறையிலே அதை வாங்காமல் இதை வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். கைத்தறியை வைத்துக்கொண்டு பார்த்தால் ஆலைத் துணிகளின் விலை ஏறுவது சாதாரணமாகத்தான் படும்; ஆனால் பொதுவாகப் பார்த்தால், அதனுடைய விலையேற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய நிலைமைதான் தெரியும். நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகிற கைத்தறித் துணிகள் அத்தனையையும் நாம் பயன்படுத்துவோமானால் நம்முடைய தேவையில் அது மூன்றில் ஒரு பங்கைத்தான் நிறைவேற்றும்; இரண்டு பங்கு மில் துணியைத்தான் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டுமானால், கைத்தறி முழுவதையும் தமிழகத்தில் பயன்படுத்த வேண்டும். அதற்காக எல்லோரும் சேர்ந்து மக்களைக் கேட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

திரு. எம். எஸ். மணி : வெளியிலே கதர்போடுகின்ற சில நண்பர்களின் வீடுகளிலே எல்லாம் மில் துணிகளைக் கட்டுவது, பட்டுத் துணிகளைக் கட்டுவது உண்டு என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஆலைத் துணியின் விலையேற்றத்தைப்பற்றிய கேள்வி.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பாதிக்கின்ற முறையிலே விலை குறைந்துகொண்டே வருகிற காரணத்தால் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுமா என்று கேட்டபொழுது, மத்திய சர்க்கார்தான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். பருத்தி உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளின் நிலைமை பருத்தியின் விலை மிகமிகக் குறைந்துகொண்டே போகிற காரணத்தால், பாதிக்கப்படுகிறது. இதைப் பரிசீலனை செய்வதற்கு நம்முடைய அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஆலைத் துணிகளின் விலையேற்றத்தைப்பற்றிய கேள்வி, அதைப்பற்றி மட்டிலும் கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM : Consequent on the increase in the price of mill-made goods by the Central Government, was any representation made by our Government requesting the Central Government to decrease the price? What are the repercussions of the increase in price on the purchase of handlooms in which we are very much interested? Has the sale of handloom goods gone up in consequence of the increase in the price of mill-made goods?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

தஞ்சை மாவட்டத்திற்குச் சிறப்பு வடிகால் திட்டம்

*250 வினா.—திரு. ஆ. கு. சுப்பையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திற்கென விசேட வடிகால் திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டதா ?

(இ) ஆமென்றால், எத்தனை ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அத்திட்டம் எப்போது அமலாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) தஞ்சை மாவட்டத்திற்கான வடிகால் ஏற்பாட்டுத்திட்டம்பற்றிய ஆய்வு வேலையை இதற்கென ஏற்படுத்த ஒப்பளிக்கப்பட்டுள்ள தனிப்பிரிவு தற்போது மேற்கொண்டுள்ளது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்குத் தற்போது இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, தஞ்சை வடிகால் திட்டத்தின் விவரங்கள் என்ன ? அந்தத் திட்டத்தின் வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் பெருமழை ஏற்படுங்கால் தேங்கி நிற்கும் தண்ணீரைப் பயிர்களுக்கு ஊறுவிளைவிப்பதைத் தடுப்பதற்காக இந்த வடிகால் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக ஆய்வுகளைச் செய்வதற்கு 1966 ஆம் ஆண்டில் இந்தக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் இந்தக் குழு அந்தப் பகுதியிலே பணியாற்று

கின்ற கிரவுண்ட் வாட்டர் ஸ்கீம் திட்டத்தோடு இணைந்து பணியாற்றவேண்டியிருந்த காரணத்தால், இந்தக் குழுவின் வேலை துவங்கப்படவில்லை. 1967-ம் ஆண்டு இந்தக் குழு செயல்படத்தொடங்கி கீழ்க்கண்டவாறு சில திட்டங்களை மேற்கொள்ளச் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறது :—

(1) வெண்ணாற்றில் இப்பொழுது வடியும் மேல்நிலை வடிகாலைத் திருப்புதல்.

(2) வடக்கே கொள்ளிடத்தைப்போலவே தெற்கே பாமினி ஆற்றையும் வெள்ள நீர் வடிகால் ஆறாக மேம்படுத்துதல்.

(3) நேரடியான வடிகால்களை அமைப்பதன்மூலம் வெள்ளநீரைக் கடலில் செலுத்துவது.

(4) அதிகப்படியான நீரைக் கழிமுகப் பண்ணையில் செல்லும் வகையில் இறைத்து ஆற்று நீரைக் கடலில் கலக்க வகைசெய்தல்.

(5) தாழ்வான இடங்களில் அவசியமான வடிகால் ஏற்பாடுகளைச் செய்தல்.

இந்த ஆய்வு வேலைகள் முடிவடைய இரண்டு ஆண்டுகள் ஆகும் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது தஞ்சை மாவட்டத்தில் வடிகால்பற்றிய கேள்வி, அதைப்பற்றி மட்டிலும் கேளுங்கள்.

திரு. எஸ். ராமலிங்கம்: தஞ்சை மாவட்டத்தையொட்டி, திருச்சி மாவட்டமும் இருக்கிறது. தஞ்சை, திருச்சி இரண்டு மாவட்டங்களும் பக்கத்திலே இருக்கின்றன. ஆகவே தஞ்சை மாவட்டத்திலே செய்யப்படுகின்ற வடிகால் திட்டத்தைப்போல் திருச்சி மாவட்டத்திற்கும் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது ஆய்வில் இருக்கிற வேலையை முடித்ததற்குப் பிறகு திருச்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ரா. ராமசந்திர துரை : தஞ்சை ஜில்லாவில் எந்த எந்தத் தாலூகாக்களில் இந்த விசேஷ வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. எம். பூபதி : ஒரு கிளாரிபிகேஷன் சார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது கிளாரிபிகேஷன் ஒன்றும் கேட்க முடியாது.

மேலூர் வட்டத்திலுள்ள புஞ்சைகள்

*251 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வட்டம், கிடாரிப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பெரியாற்றிலிருந்து கிளை வாய்க்கால் அமைத்து, பாசன வசதி செய்வதன்மூலம் மேலூர் வட்டத்தின் வட பகுதிப் புஞ்சைகளை நஞ்சைகளாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

1968 மார்ச் 19]

திரு. பெ. மலைச்சாமி : தற்பொழுது மேலூர் வட்டத்தில் மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒரு ஒன்றியத்தில் பெரியாறு தண்ணீர் பயன்படுகிறது. மற்ற இரண்டு ஒன்றியங்களுக்கு அந்தத் தண்ணீர் முழுமையாகப் பயன்படாவிட்டாலும், ஆறு ஆயிரத்திலிருந்து எட்டு ஆயிரம் ஏக்கர் வரையில், புஞ்சை நிலம் நஞ்சை நிலமாகக்கூடிய வகையில் இந்தத் திட்டத்தையும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது போடப்படுகின்ற எஸ்டிமேட்டில் கடாரிப்பட்டிப் பகுதியில் பெரியாறு இடம் பெறுகிறதா இல்லையா என்ற கேள்விக்கு இடம் இல்லாமல் இருக்கிறது. எஸ்டிமேட் வந்ததற்குப் பிறகுதான் விரிவாகக் கூற முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி 252 பிறகு எடுத்துக் கொள்ளப்படும். நேற்று ஒத்திவைக்கப்பட்ட கேள்வி 243 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

கசிவு நீர்க்குளங்கள்

* **243 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1962 முதல் 1966 வரை காடு மலையடிவாரங்களில் (Percolation tanks) நமது ராஜ்யத்தில் எத்தனை இடங்களில் கட்டப்பட்டுள்ளன, ஜில்லா வாரியாக ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சபைமுன் ஓர் அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : காடு, மலையடிவாரங்களில் மழை காலங்களிலே மலைமேலே பொழியக்கூடிய தண்ணீர் பண்ணிலே இருக்கக் கூடிய வளத்தை எல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. அதனால் விவசாயம் செய்யமுடியாத அளவுக்கு லாயக்கு இல்லாத அளவுக்குப் போய் விடுகிறது என்ற காரணத்தினாலே இது போன்றவற்றைத் தடுப்பதற்காகச் சிறிய சிறிய குளங்களைக் கட்டக்கூடிய அளவுக்கு நிலைமை உண்டாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே நமது ராஜ்யத்திலே வட ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற பல இடங்களில் காடு, மலைகள் அதிகப்படியாக இருக்கின்ற பிரதேசங்கள் இருப்பதன் காரணமாக . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதைச் சொல்லிவிட்டுத்தான் கேள்வி போடவேண்டும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவ்வளவு நேரம் ?

திரு. வி. கே. கோதண்டராமன் : திரு. விநாயகம் அவர்கள் எல்லாம் 10 நிமிடங்களுக்குச் சொல்கிறார்கள், பேசாமல் இருக்கிறார்கள். நான் விளக்கும் பொழுதுதான் கேள்வியாகப் போடுங்கள் என்று சொல்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவர்பற்றிச் சொல்லி, ஒருவர்பற்றிச் சொல்லாமல் இருப்பதில்லை, சீக்கிரமாகக் கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபோன்ற செக் டாம்ஸ் கட்டுவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

* 649—650-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற முக்கியத்துவத்தை உணர்ந்துதான் சாயில் கன்சர்வேஷன் திட்டத்தின்கீழே ஆராய்ச்சிகள்செய்து இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. மலையையும் காட்டையும் சேர்ந்த பிரதேசங்களில்மட்டும் 7 திட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும், கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல திருச்சி, கோயம்பத்தூர், தர்மபுரி மாவட்டங் களில் காடு, மலை இவையில்லாத மற்றப் பகுதிகளிலும் இது செய்யப்பட்டு வருகிறது.

திரு. டி. மார்டின் : சார், நெல்லை மாவட்டத்தில் என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் ஒரு பரந்த காடு உண்டு. அங்கே திடீரென்று பெய்கிற மழையின் காரணமாகத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடி, புத்தன் தருவை என்ற இடத்தில் விவசாய நிலங்களையெல்லாம் தண்ணீருக்குள் ஆழ்த்திவிடுகிறது. இதைப்பற்றி அரசுக்கு ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லை மாவட்டத்திலே 6 இடங்களிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : மேஜையின்மேல் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால், 1962-லிருந்து 1966 வரையிலேதான் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. போன ஆண்டும் இந்த ஆண்டும் குறிப்பாக ஆந்திர மாநிலத்திலிருந்து நம்முடைய மாநிலத்தோடு சேர்க்கப்பட்ட திருத்தணித் தாலுகாவிலே இம்மாதிரி வேலைகள் செய்வதற்குக் குறிப்பு இருக்கிறதா ? இல்லையென்றால் அரசாங்கம் அதைக் கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்களுடைய திருத்தணிப் பகுதியிலே இந்தத் திட்டம் செய்யப்படவில்லை. தகுதியான இடம் இருக்குமானால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவற்றைப் பரிசீலிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

முற்பகல் 9-30

திரு. மு. ச. சிவசாமி : சார், நெல்லை மாவட்டத்தில் கட்டப்பட இருக்கிற அந்த 6 இடங்கள் எவை எவை ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில் பகுதியில அரியநாயகிபுரம் பாகொலேஷன் பாண்ட்-3589. சின்னக்கோயிலன் குளம் பாகொலேஷன் பாண்ட்-2029. திருநெல்வேலி சப்-டிவிஷனில் சமூகரங்கபுரம் 6472, பொய்கை 8375, குறுகல்பட்டி 3699, நகரம் 4864.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I wish to know from the Hon. Minister for Agriculture the number of percolation tanks proposed for the Hosur taluk in the Dharmapuri district?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஹோசூர் தாலுகாவில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கிருஷ்ணகிரிப் பகுதியில்மட்டும் இரண்டு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மலையடிவாரங்களில் வரக்கூடிய தண்ணீரை ஆங்காங்கே சிறு சிறு குட்டைகளாகக் கட்டிச் தேக்குவதற்காகப் பல முறை எடுத்துச் சொல்லியும், விவசாயக் கருத்தரங்கில் அதுபற்றிப் பல விளக்கங்கள் கொடுத்தும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்மீது நடவடிக்கை கள் எடுப்பதோடு, ஃபாரஸ்ட் பகுதியில் மலையடிவாரங்களில் விவசாயத்திற்குத் தகுதியான நிலங்கள் அதிகமாக இருக்கின்றன, அவற்றையும் விவசாயி களுக்குப் பட்டா வழங்கி அப்படிப்பட்ட நிலங்களை விவசாயத்துக்குத் தகுதியாக்கும் எண்ணம் அரசாங்கத்திற்குண்டா ?

1968 மார்ச் 19]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அங்கத்தினரவர்களுடைய முன் பகுதி கேள்விக்குமட்டும் பதில் அளிக்க முடியும். அவர்கள் குறிப்பிடுகிற பகுதிகள் எந்தெந்தப் பகுதிகள் என்று விளக்கினால், அதைப் பரிசீலனைச் செய்யச் சொல்லலாம். பட்டா வழங்கும் பிரச்னை தனிப்பட்ட பிரச்னை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு பேஸின் ரூல்ஸ் என்று சொல்லக்கூடிய மோசமான ஒரு சட்டம் அங்கிருக்கிற காரணத்தினால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மோசமான சட்டம் என்று சொல்லக்கூடாது. பாலாறு பேஸின் சட்டம் என்று சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அது விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய ஒரு சட்டமாக இருப்பதால், ஆந்திராவின் பார்டர்—எல்லையில் காட்டுப் பிரதேசத்தின் ஓரமாக இருக்கிற காரணத்தாலும், இந்தத் திட்டத்தின்கீழ் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்தித் தண்ணீர்த் தேக்கங்களை ஏற் படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது, உறுப்பினர் அவர்களின் குடியாத்தம் பகுதியில்மட்டும் 7 திட்டங்கள் இருக்கின்றன. மேற்கொண்டு திட்டம் இருக்குமானால், எந்தெந்தப் பகுதியில் அந்தத் திட்டத்தை அமலாக்கலாம், எங்கு அதற்கு வாய்ப்பிருக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தண்ணீரைத் தேக்கவும், வண்டல் அடித்துக் கொண்டுபோகாமல், அரிப்பு ஏற்படாமல் தடுத்து நிறுத்தவும், ஏற்பாடு செய்ய முடியும். அப்படிக் குளங்கள் அமைத்து பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கிறோம். பஞ்சாயத்துக்கள் ஒழுங்கான முறையில் கண்காணித்து, ஓரங்களில் செடி, மரங்கள் வைத்து உற்பத்திசெய்து, அதைக் காப்பாற்றுவதன் மூலமாக ஊற்று சுரப்பதற்குக் கூட வாய்ப்பிருக்கிறது. இது நல்ல திட்டம் என்று உணர்ந்துதான் மேற் கொண்டிருக்கிறது. வேறு பகுதிகளில் சாத்தியக் கூறுகள் இருக்குமானால், அதைப்பற்றிக் கூறலாமே தவிர, பாலாறு பேஸின் ரூலுக்கும் இதற்கும் முடிச்சுப் போடவேண்டியது இல்லை.

தஞ்சை மாவட்டத்திலுள்ள முறைப்படுத்தப்பட்ட சந்தைகள்

*253.—வினா திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில்; எத்தனை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூடப்பட்டன ?

(இ) அதற்கான காரணமென்ன ?

(உ) அதனால் எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் ?

(எ) இது விஷயமாக விவசாய அமைச்சருக்கு மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஐ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முறைப்படுத்தப்பட்ட பதின்மூன்று சந்தைகள் செயல்படுவதை நிறுத்தின. இவற்றில் ஒன்று மீண்டும் துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

[1968 மார்ச் 19

(இ) தஞ்சாவூர் மாவட்டத்தில் முறைப்படுத்தப்பட்ட சந்தைகள்மூலம் விற்பனையாவதில் நெல் முக்கியமான பொருளாக இருந்தது. ஆனால் 1964-ல் நெல் கொள்முதல் திட்டம் ஆரம்பித்தபோதும், நெல் கொண்டு செல்வதன்மீது கட்டுப்பாடுகள் போடப்பட்டபோதும், முறைப்படுத்தப்பட்ட சந்தைகள் செயல்படுவது பாதிக்கப்பட்டது. மாவட்டச் சந்தைக் குழுவிற்கு முக்கிய வருவாய் வாணிகக் களங்களிலும், அதைச் சுற்றிப் பத்து மைல்களுக்குள்ளும் விற்பனையாகும் நெல்லின்பேரில் வசூலித்த செஸ் வரியாகும். தமிழ்நாடு 1959-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சந்தைகள் சட்டத்தின் 35-வது பிரிவின்கீழ், செஸ் வரியையும், உரிமக் கட்டணத்தையும் செலுத்துவதிலிருந்து அரசாங்க வணிகத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆதலால் இந்த செஸ் வரியை அரசாங்கத்திற்காகக் கொள்முதல்செய்யும் நெல்லின்மேல் வசூலிக்க இயலவில்லை. அதனால் சந்தைக் குழுவின் வருமானம் கணிசமாகக் குறைந்துவிட்டது. எனவே, முறைப்படுத்தப்பட்ட சந்தைகளின் நடவடிக்கைகளைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளுமாறு குழுவிற்கு ஆலோசனை கூறப்பட்டது. குழு தற்போது நெல் குறித்துச் செயல்பட்டு வந்த பன்னிரண்டு முறைப்படுத்தப்பட்ட சந்தைகளை நடத்தவில்லை. வேர்க்கடலை, முந்திரி குறித்த முறைப்படுத்தப்பட்ட ஆறு சந்தைகளைமட்டுமே குழு நடத்தி வருகின்றது.

(உ) பாதிக்கப்பட்ட பணியாளர் விவரங்கள் வருமாறு :—

கண்காணிப்பாளர்கள்	10
மேற்பார்வையாளர்கள்	7
எழுத்தர்கள்	14
ஏவலர்கள்	14
மொத்தம் ..	45

(எ) ஆம்.

(ஐ) வேளாண்மைத் துறை இயக்குநர் முறையீட்டை ஆலோசித்து வருகிறார்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் என்று சொல்லக்கூடிய இந்த முறையைக் கொண்டுவந்ததன் நோக்கம், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை நல்ல விலைக்கு விற்பனைசெய்து, அதனால் பலன் அடைய வேண்டுமென்பது குறிக்கோள். ஆனால், நமது ராஜ்யத்திலே மற்ற ராஜ்யங்களைவிட இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நல்ல முறையில் நடைபெற இல்லை என்பது உண்மையா? ஆகவே, இதை மேலும் நல்ல முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்த ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் சரியான முறையில்தான் நடக்கின்றன. இதில் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஏதோ குற்றம் சாட்டவேண்டும் என்ற முறையில் முனைந்தாலும்கூட இது விஷயத்தில் குற்றம் சொல்லமுடியாது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியும். இது நல்ல முறையில் பணியாற்றுவதால் முதன்முதலாக தென்ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட மார்க்கெட் கமிட்டி பரவலாக மாநிலம் முழுவதுமே, மாவட்டந்தோறும் கமிட்டிகளை நிறுவவேண்டும் என்று விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வந்து, அவற்றை ஆங்காங்கு நிறுவி வருகிறார்கள். அதனால் ஆதாயம்தான் இருக்கிறதே தவிர நஷ்டத்தில் இயங்கும் நிலை இல்லை. இதனால் விவசாயிகளுக்கு நல்ல ஆதாயம் இருக்கிறது. அவர்கள் கொண்டுவருகிற சரக்குகளைச் சரியான எடைபோட்டு வாங்குகிறார்கள். வியாபாரிகளுக்கும் தரமான பொருள்கள் கிடைக்கின்றன. தேவையான பொருள்களை ஒரே இடத்தில் போய் ஏலம் கேட்டு வாங்குகின்ற வாய்ப்பிருக்கிறது. விலை நிர்ணயம் செய்வதில்கூட யார் ஹையஸ்ட் பிட் கேட்கிறார்களோ, அவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. தற்சமயம் இதில் எந்தவிதமான தவறும் வர நியாயம் இல்லை.

1968 மார்ச் 19]

திரு. ந. தருமலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் எந்த எந்த ஊர்களில் என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : செம்பனார்கோவில், சீர்காழி, குத்தாலம், கும்பகோணம், பாபநாசம், மன்னார்குடி, திருவாரூர், கொரடாச்சேரி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, அதிராமபட்டினம், மதுக்கூர், பேராவூரணி ஆகிய ஊர்களில்.

திரு. கே. வினாயகம் : தஞ்சை மாவட்டத்தில் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூடப்பட்டதால் இதில் பாதிக்கப்பட்டவர்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1964-ல் கொள்முதல் ஆரம்பித்த தினத்திலிருந்து இவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். தொடர்ந்து கொள்முதல் நடப்பதால் இந்த 45 பேர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிறது, மீண்டும் அங்கு மார்க்கெட் கமிட்டி திறக்கிறபோது ஏற்கனவே பணியாற்றியவர்களுக்கு முக்கியமாக வேலைவாய்ப்பு தேடித் தரப்படும். நெல் விஷயத்தில் சர்க்கார் கொள்முதல் செய்கிற நெல்போக மற்ற நெல்லை மார்க்கெட் கமிட்டியில் கொண்டு வந்து விற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறது. அத் திட்டம் உருவாகும் நிலை வரும்போது இந்த 45 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதோடு கூடுதல் பேர்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி : இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மணிலாப் பயிர்கள் மட்டுந்தான் விற்பனை செய்ய வசதி இருக்கிறது. மற்றப் பொருள்களையும், குறிப்பாக வெல்லத்தையும் அங்கு கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு வசதி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த வியாபாரப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்கிறதோ அந்தப் பொருள்கள் எல்லாம் விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். சில மாவட்டங்களில் மணிலா அதிகமாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் எள் அதிகமாக இருக்கிறது. கோவை மாவட்டத்தில் பருத்தி அதிகமாக வருகிறது. அந்த முறையில் பொருள்கள் விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பதற்கு வசதி செய்யப்படுகிறது. கனம் உறுப்பினர் கூறுகிற வெல்லத்தைப் பொறுத்தமட்டில் அது நேரடியாக கச்சாப் பொருளாக வராமல் கரும்பில் இருந்து உற்பத்தி செய்யப்படுகிற காரணத்தால் அதைச் சேர்த்துக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். மணிலா தவிர வேறு வியாபாரப் பொருள்கள் கணிசமான அளவுக்கு இருக்குமானால் அதையும் விற்பனைக் கூடங்கள் மூலமாக விறகலாம். கரும்பையே அந்த அளவுக்குக் கொண்டுவரலாமா என்று யோசித்துப்பார்த்து முடியாத நிலையில் விட்டுவிட்டார்கள்.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : நோடிபைட் ப்ராட்யூஸ் என்று சொல்லப்படுகிற தானியங்கள் கட்டாயமாக ஒழுங்கு முறைக் கூடத்தின் மூலமாகத் தான் விற்பனை செய்யப்படவேண்டுமென்ற முறையில் ஏற்படுத்திய சட்டத்தின் 6-வது விதியை அமலுக்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த அடிப்படையில்தான் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மார்க்கெட் கமிட்டிகளுக்கு விவசாயிகள் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சி எடுக்கப்படுகிறது. சில நேரத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் தரகர்களை வைத்து வண்டிகளை மறித்து பொருள்களைக் கொண்டுபோக முயற்சி நடைபெறுகிறது, அந்த மாதிரி நிலைமைகளையும் கண்காணிப்பதற்காகத்தான் மார்க்கட்டிங் கமிட்டியில் சூப்பர்வைசர்கள், பணியாளர்கள் ஆகியவர்களைப் போட்டிருக்கிறோம்.

மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் விற்பனை செய்வதால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. அந்த நன்மையை உணர்ந்த விவசாயிகள் தாங்களாகவே பொருள்களை விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். விவசாயிகளைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்ற நிலைமை இப்போது இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தனி நபர்கள் மார்க்கெட்டிங் சொசைட்டிக்குக் கொண்டுவருவதைத் தடுப்பதாகச் சொன்னார்கள், தனி நபர்கள் மூட்டை ஒன்றுக்கு எட்டணா கமிஷன் வாங்குகிறார்கள். மார்க்கெட்டிங் சொசைட்டியில் அந்த நஷ்டம் விவசாயிகளுக்கு ஏற்படுவதில்லை. ஒரு பக்கத்தில் மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு எடுத்துச் சென்று விற்பதும், இன்னொரு பக்கத்தில் தனி நபர்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருப்பதுமான நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்த்து மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாகத்தான் விவசாயிகள் தங்கள் பொருள்களை விற்கவேண்டும் என்ற முறைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: தனிப்பட்ட வியாபாரிகள் என்று சொல்லும்போது அதற்காக அவர்கள் லைசென்ஸ் வைத்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் விவசாயிகள் சாகுபடிக்கு மற்றவற்றுக்குக் கடன் வாங்குகிற நிலைமை இருப்பதால், இடையிலே கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலையில் தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் கொடுத்து விடுகிறார்கள். அதைத் தவிர்க்கமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் கமிஷன் வாங்கவேண்டுமென்று சர்க்கார் எந்தவிதமான உத்தரவும் போடவில்லை. எப்படியும் மார்க்கெட் கமிட்டிக்கு வந்தபிறகுதான் எந்த வியாபாரியும் சீட்டு கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால் பல நன்மைகள் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஒழுங்கு முறைக் கூடங்களுக்கு விவசாயிகள் பொருள்களைக் கொண்டுவந்த உடனே விற்பனை செய்ய முடியாது. அவர்கள் தங்கள் பொருள்களை அங்கே கொண்டுபோய் வைத்ததும் முன்பணம் எதுவும் கொடுப்பதில்லை. அவ்வாறு அவர்கள் தங்கள் பொருள்களைக் கொண்டுவந்து வைத்தவுடன் விவசாயிகளை நம்பி முன்பணம் தற்போது கொடுப்பதில்லை என்றாலும் இனிமேலாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மார்க்கெட்டிங் கமிட்டி என்பது அரசாங்கம் நடத்துகிற வியாபாரம் அல்ல. வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் மத்தியில் இருந்து ஒழுங்காக விவசாயிகளின் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா, பணம் வருகிறதா என்பதைக் கண்காணிக்கத்தான் அந்த ஸ்தாபனம் இருக்கிறது. விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருள்களைக் கொண்டுவந்து அங்கு வைக்கிறார்கள். அந்த மூட்டைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு மார்க்கெட்டிங் கமிட்டிக்கு உண்டு. அதற்காக விவசாயின் பணம் கட்டவேண்டுமென்ற நிலை இருந்தாலும், விவசாயிகளிடத்திலிருந்து அப்படி கட்டணம் வசூலிக்காமல் இலவசமாகவே மார்க்கெட்டிங் கமிட்டி அந்த மூட்டைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறது. கடன் கொடுப்பதற்கு அடைமானம் வைத்துக்கொள்கிற ஸ்தாபனம் வேறு.

அரசு அச்சக தொழிலாளர்கள்

* 254 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, அரசாங்க அச்சகத்தில் வேலை செய்கின்ற தொழிலாளிகள் 15 ஆண்டு கால சர்வீஸ் ஆகியும்கூட இன்னும் அவர்களின் வேலைகள் நிரந்தரப் படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் யாவை?

1968 மார்ச் 19]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சென்னை அரசாங்க அச்சகத்தில் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டுப் பணியாற்றும் ஊழியர் எவரும் பதவியில் நிலைப்படுத்தப் பெறாமல் இல்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : குறைந்தபட்சம் எத்தனை ஆண்டுகள் வேலை பார்த்தவர்கள் இன்னும் வேலை நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1963-ம் ஆண்டுக்கு முன்னால் இருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு மேல் தற்காலிகமாக வேலை செய்பவர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர். அதற்குப் பிறகு மூன்றாண்டு கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாண்டுக் காலமாகியும் பலபேர் இன்றைக்கும் தற்காலிகமாக இருக்கிறார்கள். அந்தந்தப் பணியில் வேலை செய்கிறவர்கள் அந்தப் பணியைப் பூரணமாக உணரவேண்டும். அதற்கான தகுதியைப் பூரணமாகப் பெறுவதற்குப் போதுமான காலம் கொடுத்த பிறகு நிரந்தரமாக்கப்படுகிறார்கள். அந்தப் பட்டியலில் இன்றைக்கு 58 பேர் அந்தப் பதவி நிரந்தரமாக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் அந்தப் பதவியில் ஒப்பளிக்கப்படாமல் இருக்கிறார்கள்.

Dr. H. V. HANDE : For the past one year or two years there have been a number of grievances for the employees working in that department. Have the representatives of these employees presented any memorandum of grievances to the ministry and, if so, what is the number of grievances redressed by the ministry and what is the state in which the matter is at present?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மூலக் கேள்வி தாற்காலிகமாகப் பணியாற்றுகிறவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேர் நிரந்தரமாக்கப்பட்டார்கள் என்பதாகும். கனம் உறுப்பினர் அவர்கள் அந்த உறுப்பினர்களுக்கு இருக்கிற குறைபாடுகளைக் குறித்துக் கேட்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லமுடியும்.

திரு. எம். பூபதி : 240 நாட்கள் வேலை செய்தால் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கும்போது நமது சர்க்காரால் நடத்தப்படுகிற அச்சகத்தில் 240 நாட்களுக்கு மேற்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்களே, இதுவரை அப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும் இனியாவது அவர்களுக்கு அதனால் கிடைக்கக்கூடிய வசதிகள் எல்லாம் கிடைக்கும் வகையில் நிரந்தரமாக்கப்படுவதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கத்தின் சட்டப்படி மூன்றாண்டுக் காலம் தாற்காலிகமாக வேலை செய்த பிறகு தான் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. 240 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற விதி எதுவும் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : அரசாங்க அச்சகத்தில் வேலை பார்க்கும் இவர்கள் அரசாங்க ஊழியர்கள் என்ற அடிப்படையில் வருகிறார்களா அல்லது தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் வருகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்க ஊழியர்கள் என்ற அடிப்படையில்தான் வருவார்கள்.

திரு. கே. விநாயகம் : அப்படி வேலை செய்பவர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட்டால் 9 (எ) (1) என்ற விதியின்கீழ் வேலைக்குச் சேர்க்கப்பட்டார்களா ? அப்படிச் சேர்க்கப்பட்டிருந்தாலும் மூன்று

ஆண்டுகளுக்குப் பிறகும் நிரந்தரமாக்கப்படாமல் வைத்திருக்கக் காரணம் என்ன? அப்படி இருந்தால் இதுவரையில் எந்த அடிப்படையில் செய்தாலும்கூட இனியாகிலும் உத்தியோகஸ்தர்களுக்கு நிரந்தரமாக வேலை இருக்கும் என்பதிலே நம்பிக்கை ஏற்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள் எந்த செக்ஷன் அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் இருந்தும் அவர்கள் தங்கள் வேலையைப் பூரணமாக உணர்ந்து கொள்ளாத நிலையில் நிரந்தரமாக்கப்படமாட்டார்கள் என்பதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தபிறகு அவர்கள் நிரந்தரமாக்கப் படுவார்கள்.

திருமங்கலத்தில் மருத்துவமனை பணியாளர்களுக்கு குடியிருப்பு

* 255 வினா.— **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் பணியாற்றுவோருக்கு வீடு கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிதி நிலைமை காரணத்தால் இவ்விஷயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருமங்கலம் அரசினர் மருத்துவ மனைக்கு மாற்றப்படும் மருத்துவமனை ஊழியர்களுக்கு திருமங்கலத்தில் வீடுகள் வாடகைக்கு எளிதாகக் கிடைப்பதில்லை. மருத்துவ மனைக்கு அருகாமையில் டாக்டர்களும், நர்ஸ்களும் இருந்தால் அவர்களின் பணி எளிதாக கிடைக்குமல்லவா? ஆகவே இத்திட்டம் விரைவுபடுத்தி செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிதிநிலை சீர்பட்டவுடன் உடனே கவனிக்கப்படும்.

Vigilance Committees

* 246 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that vigilance committees are formed in slum areas in the City of Madras; and

(*b*) if so, the composition and function of the same?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) ஆம். குடிசைப் பகுதிகளில் "மக்கள் நலக்குழு" என வழங்கும் சில குழுக்கள் ஆய்வு அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த செல்வாக்கும் தகுதியும் உள்ளவர்கள் அவ்வாறான கட்சிச் சார்பற்றோர் இக்குழுக்களின் உறுப்பினர்களாவர். குடிசைப் பகுதிகளில் குற்றங்கள் நிகழா வண்ணம் தடுப்பதும் குற்றங்களைத் துப்புத் துலக்கு வதில் காவல்துறையுடன் ஒத்துழைப்பதும் இக்குழுவின் பணிகளாகும். தீயவர்களை நல்வழிப்படுத்தும் சீர்திருத்தக் குழுவாகவும் இக்குழு செய லாற்றும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the object and intention of forming these Vigilance Committees is to be above suspicion, a very good and appreciable one—I was made to understand that these Committees are composed of persons belonging to a particular party that is in power. Is my fear unfounded or real and also will the Government give a concrete example about the composition of one Committee wherein members of all parties have been drafted?

THE HON. THIRU C. N. ANNADURAI : While I am prepared to give a concrete example about the composition of such a committee, I am only sorry that before putting that question, the hon. Member was not able to get correct fact, about this. These Vigilance Committees are composed of members belonging to all parties. To give an instance, there are now four Committees in the Chetpet area—Janganathapuram Committee, Mangalapuram Committee, Meenakshi Sivaraj Committee and Brindavan Committee. Recently, these committees were formed but the selection of the members was done by the Police officials keeping in view that all the political parties should be represented there. So, the hon. Member's apprehension is unfounded and the Committee is not loaded with any one political party.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த குடிசைவாழ் பகுதி மக்களுக்கு மட்டிலும் ஒழுக்கக் கண்காணிப்புக் கமிட்டி போடப்பட்டுள்ளதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒழுக்கம் என்று சொன்னால் என்ன என்பதுபற்றி கொஞ்சம் தயவுசெய்து விளக்கவேண்டும். குடிசைகளில் வாழ்பவர்கள் சம்பந்தப்பட்ட மட்டிலுந்தானா இந்தக் கண்காணிப்பா அல்லது மற்ற பெரிய இடங்களில் வசிக்கக்கூடியவர்கள் இடையிலும் இந்த கண்காணிப்பு உண்டா என்பதை விளக்கவேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முறையில் அதை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. சொன்னால் கேட்கக்கூடியவர்கள் அந்தப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற பண்பாட்டு முறையோடுகூட அதைக் கவனிக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, will the Hon. Chief Minister tell us the number of such committees and the number of slums in the Madras City and also whether most of the slums are covered by these committees?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know the full facts. I have given information only about the composition of the committees recently formed, and the hon. Member, Thiru Vinayakam wanted to know about the composition of the Committee. I have given an example of that committee and even then he is not satisfied. He wants to know how many members are exactly there. An equal number of D.M.K. members and an equal number of Congress members are there.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state whether the persons who were convicted by Courts for commission of offences could be members of these Vigilance Committees?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am quite sure that, as an Advocate, he would not advocate such a dangerous course.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த விஜிலன்ஸ் கமிட்டிகள் மதராஸ் ஸிட்டியில் மட்டும் என்று சொன்னார்கள். இதரப் பகுதிகளிலும் இது மாதிரி கமிட்டிகள் அமைக்கப்படுமா? அப்படி ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா, பிற மாவட்டங்களில்?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know the facts about this but if the hon. Member wants that such committees should be established on an extensive scale, I would like to endorse his view.

திரு. எம். சுரேந்திரன் : ஒழுக்கக் கேடுகள் என்பது உடனே பார்க்கக் கூடிய இடங்களில் மட்டும் அமைவது அல்ல. ஒழுக்கக்கேடுகள் பரவலாக ஏற்படுகின்றன. அதன் பிரதிபலிப்பு வசதி படைத்தவர்களிடத்திலிருந்து தான் பொதுவாக உண்டாகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஒழுக்கக்கேடு என்பது வசதி படைத்தவர்கள் வசதி படைக்காதவர்கள் ஆகிய அனைவரிடத்திலும் சிலரிடத்தில் அந்த ஒழுக்கக்கேடுகள் ஏற்பட்டு விடுகின்றன. இது ஒழுக்கக் கேடுகளை நீக்குவதற்காக மட்டுமல்ல. அமைதியை ஏற்படுத்த, தீய சக்திகளை ஒடுக்குவதற்கு, அதற்காக போலீஸ் நடவடிக்கை எடுக்கிறபோது அதற்குத் துணையாக இருக்க என்று பல்வேறு பணிகள் அதற்கு இருக்கின்றன.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : இந்தக் கண்காணிப்புக் கமிட்டிகளுக்கு யார் யாரால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்தந்த வட்டத்து போலீஸ் உயர்தர அதிகாரிகளால்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there is widespread fear among the public that the members belonging to some political parties will pump in political views into these committees and they cannot be devoid of the political influence of their parties, will this Government think of the possibility of appointing members who do not belong to any political party, who are above suspicion and who are above politics. As only such kind of men could be drafted, will the Government reconsider the reconstitution of these committees on these basis?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would, first of all, request the hon. Member to reconstitute his question. He was talking about political considerations and he also used the word 'suspicion'. To have certain political views is not to be considered as 'suspicion'. As a matter of fact, in this Committee, if we want only non-party persons, they may not be in a position to persuade others not to do this thing or that thing. Therefore, people belonging to different political parties are there. As for my hon. Friend's apprehension that they would pump in their political views, I would only ask him to bear in mind that political parties have got pumping stations every evening.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the object and intention of forming these Vigilance Committees is to be above suspicion, a very good and appreciable one—I was made to understand that these Committees are composed of persons belonging to a particular party that is in power. Is my fear unfounded or real and also will the Government give a concrete example about the composition of one Committee wherein members of all parties have been drafted?

THE HON. THIRU C. N. ANNADURAI: While I am prepared to give a concrete example about the composition of such a committee, I am only sorry that before putting that question, the hon. Member was not able to get correct fact, about this. These Vigilance Committees are composed of members belonging to all parties. To give an instance, there are now four Committees in the Chetpet area—Janganathapuram Committee, Mangalapuram Committee, Meenakshi Sivaraj Committee and Brindavan Committee. Recently, these committees were formed but the selection of the members was done by the Police officials keeping in view that all the political parties should be represented there. So, the hon. Member's apprehension is unfounded and the Committee is not loaded with any one political party.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த குடிசைவாழ் பகுதி மக்களுக்கு மட்டிலும் ஒழுக்கக் கண்காணிப்புக் கமிட்டி போடப்பட்டுள்ளதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒழுக்கம் என்று சொன்னால் என்ன என்பதுபற்றி கொஞ்சம் தயவுசெய்து விளக்க வேண்டும். குடிசைகளில் வாழ்பவர்கள் சம்பந்தப்பட்ட மட்டிலுந்தானா இந்தக் கண்காணிப்பா அல்லது மற்ற பெரிய இடங்களில் வசிக்கக்கூடியவர்கள் இடையிலும் இந்த கண்காணிப்பு உண்டா என்பதை விளக்கவேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முறையில் அதை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. சொன்னால் கேட்கக்கூடியவர்கள் அந்தப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள் என்ற பண்பாட்டு முறையோடுகூட அதைக் கவனிக்கலாம்.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Chief Minister tell us the number of such committees and the number of slums in the Madras City and also whether most of the slums are covered by these committees?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not know the full facts. I have given information only about the composition of the committees recently formed, and the hon. Member, Thiru Vinayakam wanted to know about the composition of the Committee. I have given an example of that committee and even then he is not satisfied. He wants to know how many members are exactly there. An equal number of D.M.K. members and an equal number of Congress members are there.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether the persons who were convicted by Courts for commission of offences could be members of these Vigilance Committees?

THE HON. THIRU C. N. ANNADURAI : I am quite sure that, as an Advocate, he would not advocate such a dangerous course.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த விஜிலன்ஸ் கமிட்டிகள் மதராஸ் ஸ்டேட்டில் மட்டும் என்று சொன்னார்கள். இதரப் பகுதிகளிலும் இது மாதிரி கமிட்டிகள் அமைக்கப்படுமா? அப்படி ஏதாவது அமைக்கப்பட்டிருக்கிறதா, பிற மாவட்டங்களில்?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know the facts about this but if the hon. Member wants that such committees should be established on an extensive scale, I would like to endorse his view.

திரு. எம். சுரேந்திரன் : ஒழுக்கக் கேடுகள் என்பது உடனே பார்க்கக் கூடிய இடங்களில் மட்டும் அமைவது அல்ல. ஒழுக்கக்கேடுகள் பரவலாக ஏற்படுகின்றன. அதன் பிரதிபலிப்பு வசதி படைத்தவர்களிடத்திலிருந்து தான் பொதுவாக உண்டாகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஒழுக்கக்கேடு என்பது வசதி படைத்தவர்கள் வசதி படைக்காதவர்கள் ஆகிய அனைவரிடத்திலும் சிலரிடத்தில் அந்த ஒழுக்கக்கேடுகள் ஏற்பட்டு விடுகின்றன. இது ஒழுக்கக் கேடுகளை நீக்குவதற்காக மட்டுமல்ல. அமைதியை ஏற்படுத்த, தீய சக்திகளை ஒடுக்குவதற்கு, அதற்காக போலீஸ் நடவடிக்கை எடுக்கிறபோது அதற்குத் துணையாக இருக்க என்று பல்வேறு பணிகள் அதற்கு இருக்கின்றன.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : இந்தக் கண்காணிப்புக் கமிட்டிகளுக்கு யார் யாரால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்தந்த வட்டத்து போலீஸ் உயர்தர அதிகாரிகளால்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there is widespread fear among the public that the members belonging to some political parties will pump in political views into these committees and they cannot be devoid of the political influence of their parties, will this Government think of the possibility of appointing members who do not belong to any political party, who are above suspicion and who are above politics. As only such kind of men could be drafted, will the Government reconsider the reconstitution of these committees on these basis?

THE HON. THIRU C. N. ANNADURAI : I would, first of all, request the hon. Member to reconstitute his question. He was talking about political considerations and he also used the word 'suspicion'. To have certain political views is not to be considered as 'suspicion'. As a matter of fact, in this Committee, if we want only non-party persons, they may not be in a position to persuade others not to do this thing or that thing. Therefore, people belonging to different political parties are there. As for my hon. Friend's apprehension that they would pump in their political views, I would only ask him to bear in mind that political parties have got pumping stations every evening.

பிரதமர்—முதலமைச்சர் சந்திப்பு

*247 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : } மாண்புமிகு முதல்
திரு வி. கே. கோதண்டராமன் }
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ல் மதுரை விமான நிலையத்தில் இந்திய பிரதம மந்திரி அவர்களும் தமிழக முதல் அமைச்சர் அவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்களா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் பேரவை மேஜை மேல் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் 1967 ஆகஸ்ட் 24-ந் தேதியன்று மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்ததால், இந்திய பிரதம மந்திரி அவர்கள் வருகைதந்தபோது அவரை அன்று மதுரை விமான நிலையத்தில் சந்தித்தார். பிரதம மந்திரி அவர்களைக் காணவேண்டுமென்ற நாகரிகப் பண்பிற்கிணங்க சந்தித்தாரேயன்றி, முறையான உரையாடல் ஏதும் நிகழவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பத்திரிகை வாயிலாகப் பார்த்தோம். நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பல குறைகளைப்பற்றி அவர்களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தியதாக. ஏதோ முறைக்காக காணச் சென்றதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள் அப்படிச் சொல்லக்கூடிய அளவிற்கு, அந்த பேச்சுவார்த்தை நடத்தியதை சொல்லமுடியாத அளவிற்கு இருந்ததா ? அப்படியிருந்தால் அதையாவது சொல்லிவிடுங்கள். ஏதாவது இருந்தது என்றால் அதைச் சொல்வது நலமாகயிருக்குமல்லவா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பேச்சுவார்த்தை நடத்துவது என்பது முன்கூட்டியே இரு தலைவர்களும் இன்னதைப்பற்றிப் பேசவேண்டுமென்று அறிவித்துக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதுதான் அவர்கள் எடுத்துச் சொல்லக்கூடிய பேச்சுவார்த்தையாகும். ஒரு நாட்டுப் பிரதமர் அவர்களும் ஒரு மாநில முதல் அமைச்சர் அவர்களும் சந்திப்பார்களானால் குடும்ப விவகாரங்களைப்பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். பல அரசியல் பிரச்னைகளையும் பேசியிருப்பார்கள். அவைகள் எல்லாம் திட்டமிடப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு பேசப்பட்ட பேச்சுக்கள் அல்ல.

DR. H. V. HANDE : With regard to these frequent visits by the Prime Minister or the Deputy Prime Minister, is there any procedure that is adopted by this Ministry by way of informing them whether they can come or not? There is a general feeling outside that the Chief Minister asked the Prime Minister not to come to Madras and that the Prime Minister did not pay heed and came there. Will the Chief Minister give a categorical answer about the procedure adopted whenever dignitaries come to Madras? முற்பகல் 10–00

THE HON. THIRU C. N. ANNADURAI : I never thought that my hon. Friend will touch upon such a delicate subject as that. I would like to give a general answer to that question. Whenever the Prime Minister or any Central Government dignitary proposes to come to this State on various functions, they inform the State Government and the State Government give certain suggestions. In that way various suggestions have been given to various dignitaries at various periods.

2. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை ('காவல் துறை' பற்றி குழுவின் பரிந்துரைகள்மீது எடுத்த நடவடிக்கை குறித்து).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளிப்பார்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ''காவல்துறை'' பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள்மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் மூன்றும் அறிக்கையை அளிக்கிறேன்.

3. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு— தொடர்ச்சி.

கோரிக்கை எண் 24—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து கோரிக்கை எண் 24, மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 24–தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்*@ என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,38,31,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

Dr. H. V. HANDE : Sir, to discuss policy, I move the cut motion standing in my name, namely—

" That the allotment of Rs. 2,38,31,600 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100. ".

திரு. செ பாலசுப்பிரமணியன் : ஐயா, நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறுவது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண். 24–தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,38,31,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru K. RAMAMOORTHI : Sir, to discuss the explosive situation in factories in and around Madras City because of the Government's labour policy, I move the cut motion standing in my name, namely—

" That the allotment of Rs. 2,38,31,600 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100. ".

* 103–150-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அமைச்சரின் ஆய்வுரை அச்சிடப்பட்டுள்ளது.

@ 151–157-ம் பக்கங்களில் 11—7—67-ல் பேரவைமுன் வைக்கப்பட்ட ஆங்கில விவர அறிக்கையின் தமிழாக்கம் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1968 மார்ச் 19]

திரு. எம். சுரேந்திரன் : ஐயா, தொழிலாளர்களுக்கு வேலையில்லா கால பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாதது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண். 24–தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,38,31,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மூன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : ஐயா, தொழிற் சங்கங்களின் அங்கீகாரத திற்காக ஒரு சங்கததின் பிரதிநிதித்துவத் தன்மையை அறிந்துகொள்ள இரகசிய வாக்கெடுப்பு முறையை உடனே கொணடுவர வேண்டியதன் அவசியத்தை வலியுறுததிக்கூற—

"கோரிக்கை எண். 24—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,38,31 600—ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை மூன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது நிதிக் கோரிக் கையும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வைக்கப்படு கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது எங்களுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தி என்னுடைய கட்சியினுடைய கொள்கைகளை விளக்க விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி பேசுகின்ற நேரத்திலே தொழிலாளர் கொள்கை பற்றிய விவர அறிக்கை ஒன்று இந்தப் பேர வையில் 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள், 11-ம் நாள் வைக்கப்பட்டது. அந்த அறிக்கை இந்த ஆட்சியினுடைய, புதிய அரசினுடைய உயரிய கொள்கைகளை, உயரிய நோக்கங்களை விளக்குவதான ஒன்றாக அமைந் திருந்தது. இந்த ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் எந்த அள வுக்கு சிந்தனை வயப்பட்டிருக்கிறார்கள், எவ்வளவு உயரிய சிந்தனையிலே இருக்கிறார்கள், எவ்வளவு உயரிய பக்குவத்திலே வைக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதை விளக்குவதாக இருந்தது. ஆனால், அந்த உயரிய சிந்தனைகளை நடைமுறையில் செயல்படுத்த முடியாத நிலையில், அவர்கள் நினைத்ததைச் செயல்படுத்த முடியாத நிலையில், அந்த உயரிய கொள் கைகளை நடைமுறைப் படுத்தமுடியாத நிலையில் அவர்கள் செயல்படுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்ற முறையில்தான் இன்றையதினம் கொடுக்கப்பட்ட இவ்வாண்டு அறிக்கை இருக்கிறது. முன்பு கொடுக்கப்பட்ட அறிக்கையிலே பல உருவான யோசனைகள் கூறப் பட்டன. ஆனால், ஓராண்டுக்குப் பிறகும் அதிலே குறிப்பிட்ட யோசனை களையும், திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்த, நடைமுறைப்படுத்த தவறிவிட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அன்று கொடுத்த அந்த அறிக்கையிலே தொழிலாளர் கொள்கை யைப் பற்றி விளக்கமாக, விரிவாக எந்த அளவில் இந்த அரசும் செயல்படும் என்று முறையில் மக்கள் தெரிந்து கொள்ளும் முறையில் அதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள்.

தொழிலாளர் தகராறுகளைத் தீர்ப்பதற்கு குறை தீர்ப்பு அமைப்பு (Grievance machinery) ஒன்று அமைந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி வாசகங்களை இந்த அவை முன் படித்துக் காட்ட விரும்புகிறேன். 'புண்பட்ட உணர்வுகளும், கொந் தளிப்புகளும், ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்து கொள்ளும் நேர்வு களுமே பெரும்பாலான தொழிலாளர் தகராறுகளுக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்துள்ளன. இந்தத் தகராறுகள் ஏற்பட்ட தொழில்

நிறுவனங்களிலே குறை தீர்ப்பு அமைப்பு (Grivevance machinery) ஒன்று செவ்வைய முறையில் அமைந்திருந்தால், இந்தத் தகராறுகளைத் தவிர்த்திருக்கலாம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் இங்கே இருக்கிற தொழிற் கூடங்களிலே, இந்த நகரத்திலே மட்டுமல்ல; நம்முடைய மாநிலத்திலே பெரும் அளவுக்கு தொழில் தகராறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த குறை தீர்ப்பு அமைப்பு எந்த அளவுக்கு அமைந்திருக்கிறது என்று பார்த்தால் ஒன்றுகூட அமையாத நிலையிலே தான் இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்று இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட விவர அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது,

அதைப் போல 'Joint Management Councils' கூட்டு நிர்வாக மன்றங்கள் என்பதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 'பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் கூட்டு நிர்வாக மன்றங்கள (Joint Management Council) அமைப்பது குறித்தும் அரசாங்கம் முனைந்து நாட்டம் செலுத்தும். இத்தகைய நல்லதொரு மன்றத்தை நிறுவுவது குறித்து இதுவரை நாட்டம் செலுத்தப்படாதது வருந்தற்பாலது, என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் இதிலே செய்வதாகச் சொல்லுகிற அதே நேரத்திலே கடந்தகால அரசு இதைச் செய்யவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படிக் குற்றச்சாட்டை மற்றவர்கள் மீதுத் தூக்கிப் போட்டு நாங்கள் செய்கிறோம் என்று வந்தவர்கள் இன்றையதினம் இதை செய்தார்களா? இல்லை. அவர்கள் மீது குற்றம் சொல்லுகிறவர்கள் நங்களும் அதைச் செய்யவில்லை என்று சொல்லுகிற அளவுக்கு இந்த அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள். அதில் இன்றையதினம் இந்த அரசு பலவீனமாகக் கூட இருக்கிறது என்று நான் ஓரளவு சொல்ல முடியும். கொள்கை அறிக்கையிலே 'தொழிற் சங்கங்களும், நிர்வாகங்களும் தங்கள் உறவு முறையை உயர் ஒழுக்க நெறிமுறைக் கோட்பாடுகள் குறிப்பிடுகிறபடி இயல்பாகவும் விரும்பியும் நல்ல முறையில் அமைத்துக் கொள்ள முடியுமானால், இந்தக் கோட்பாடுகளுக்கே இடமிருக்காது. எக்காரணத்தை முன்னிட்டேனும் இத்தகைய நல்லுறவு அமையாவிட்டால், இந்த கோட்பாடுகள் இருப்பதனாலும் பயனில்லை. சொல் அலங்காரமாகப் பேசுவதில் மட்டும் நாம் மன நிறைவுகொள்ளும் பழக்கத்தை விட்டுவிட்டால், தொழிலாளர் சிக்கல்களை நாம் நல்ல வகையில் புரிந்துகொள்ள முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது இந்த நாட்டிற்கு, இந்த நாட்டிலே இருக்கிற தொழிலாளர் இயக்கத்திற்கு, தொழிலாளர் தலைவர்களுக்கு, தொழிலாளர் இயக்கங்களிலே கூறப்பட்டிருக்கிற இந்த அரசுக்கு, இன்றையதினம் இந்த மன்றத்திலே இருப்பவர்களுக்கு, வெளியிலே இருப்பவர்களுக்கு ஆக எல்லோருக்கும் சேர்த்து சொல்லப்பட்டது என்றாலும் இதிலே இருக்கிற மிகப் பெரிய பொறுப்பு ஆளும் கட்சிக்குத்தான் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இவர்கள், சொன்னதைச் செய்தார்களா? நடைமுறையில் செயல்படுத்தவில்லை என்பதை நான் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டும் அல்ல, இன்னொரு பெரிய எண்ணத்தையும் வெளியிட்டுள்ளார்கள். ஒரு உயரிய எண்ணத்தை வெளியிட்டுள்ளார்கள். அது நடைமுறைக்கு சிறிதும் ஒவ்வாதது மட்டும் அல்ல; அதை அவர்களே இன்றையதினம் அமுல்படுத்தாத முறையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள. அதை நடைமுறைப்படுத்தாத முறையிலே திராவிட முன்னேற்றக் கழகம் நடந்து கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். 'ஒரு தொழிலில் ஒரு தொழிற் சங்கம் மட்டுமே உருவாக்குவது எப்படி என்பதே நம் முன்னுள்ள கேள்வி' என்று சொல்லி, அதை எப்படி அமுல்படுத்துவது என்பதை இந்த விவர அறிக்கையிலே குறிப்பிட்டு இருந்தார்கள். ஆனால், இவ்வளவுக்கும் பிறகு இன்று நாட்டிலே இருக்கிற நிலைமைகளை நான் இந்த மன்றத்திற்குத் தெளிவு

படுத்த விரும்புகிறேன். இந்த விளக்கங்கள் எல்லாம், இந்தக் கொள்கைக் கோட்பாடுகள் எல்லாம் கிராமப்புறங்களிலே சொல்லுவார்கள், ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று, அதைப்போலத்தான் இருக்கிறது. நம்முடைய சிந்தனைகள், நம்முடைய எண்ணங்கள், நம்முடைய கொள்கைகள் எல்லாவற்றையும் செயல்படுத்துகின்ற முறையிலே செயல்படுத்தினால், செயல்படுத்தப்படுமானால் அதுதான் இந்த நாட்டிற்கும், இந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். வெறும் எண்ணங்களை மட்டும் தெரிவித்துக் கொண்டு, அதன்படி நாம செயல்படாமல் இருந்தால், நம்முடைய வழியிலேயே நாம் சென்றுகொண்டிருப்போமானால், தொழிலாளர்கள் தவறான வழிகளிலே சென்று, தவறான எண்ணங்களுக்கு உள்ளாகி, அதன் காரணமாகத் தொழில் சிக்கல்கள், தொழில் தகராறுகள் உண்டாகின்ற நிலையைத்தான் உண்டாக்குமே தவிர, நன்மை ஏற்படாது. ஆகவே, இந்த நாட்டிலே உள்ள முக்கியமான தொழில் பிரச்சினைகளிலே கவனம் செலுத்த வேண்டியது முக்கியமானது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்று அதை நடைமுறைப்படுத்துவதற்கு, நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை திராவிட முன்னேற்றக் கழக அரசு எடுத்திருக்கிறது? ஒரு தொழிற்சாலைக்கு, ஒரு ஃபாக்டரிக்கு ஒரு யூனியன் என்று சொன்னார்கள். நான் ஒன்றை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு, பதவியேற்பதற்கு முன்பு, அரசுப் பொறுப்பேற்றதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கங்கள் எத்தனை இருந்தன, இன்றையதினம் எத்தனை தொழிற் சங்கங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையவை இருக்கின்றன என்று கணக்கெடுத்து, அதற்குரிய விவரமான கணக்குகளை இந்த மன்றத்தின் முன் வைக்கட்டும். அப்படி வைக்கப்படுமானால், திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கங்கள் புதிதாக ஏற்பட்டுள்ளன என்பது தெளிவுபடும். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், இந்த புதிய தொழிற் சங்கங்கள் ஏற்கனவே இல்லாத இடங்களிலே உண்டாகியிருக்கின்றனவா என்றால் இல்லையென்று நிச்சயமாகச் சொல்ல முடியும். அதோடு மட்டும் அல்ல. அவர்களுடைய தோழமைக் கட்சிகளாக இருந்து வருகிற பல கட்சிகள் சேர்ந்து தொழிற் சங்கங்கள் இருக்கிற ஃபாக்டரிகளிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கங்கள் இன்றையதினம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இது அவர்களுடைய திட்டத்தை, அவர்களுடைய எண்ணத்தை, அவர்களுடைய பாலிஸியை, அவர்களுடைய நோக்கத்தை செயல்படுத்துவதாக அமையவில்லை யென்று இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இவர்கள் எதைச் சொல்கிறார்களோ, அதை நடைமுறைப்படுத்துவதில்லை. சொல்லுகின்ற நேரத்திலே உயரிய நோக்கங்களை சொல்லிவிட்டு, நடைமுறைப்படுத்துவதில் தவறு இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

இந்த கேரோவைப் பற்றிச் சொன்னார்கள். முன்னாலே பேசப்பட்டு வந்தது இன்றையதினம் செயலிலும் இருக்கிறது என்பதற்காக அதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'இறுதியாக உள்ளம் மகிழ முடியாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் முனைந்துள்ள முற்றுகை (gherao) பற்றிக் கூற விரும்புகிறேன். தொழில் சங்கங்களில் தொழிலாளர் உறவுகளில் வன்முறைகள் கையாளப்படுவதை இம மாநில அரசு ஏற்கனவே ஐயத்திற்கு இடமின்றி கண்டித்துள்ளது' என்று கொள்கை விளக்க விவர அறிக்கையிலே கூறப்பட்டிருககிறது. ஆனால் கண்டித்தால் மட்டும் போதாது. இந்த அரசு அதிலே நம்பிக்கையில்லை என்று சொல்வதாலும், அது இதை விரும்பவில்லையென்று சொல்வதாலும் அந்தப் புரட்டு முறையை எதிர்க்கின்றது என்று சொல்வதால் மட்டும் பிரச்சினை முடிந்துவிடாது. அந்த நிலை உருவாகுமானால், உருவாகி இருக்குமானால் அதைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு என்ன என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்த்தால் நிச்சயம்

நம்முடைய மாநிலத்திலே நடந்திருக்கிறது; இந்த அரசு அதை மறுக்க முடியாது. ஆனாலும் கூட அந்த கேரோக்களைத் தடுப்பதற்கு, தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதை நானும் இந்த அவையுமறிய மிகவும் ஆவலாளள்ளவர்களாக இருக்கிறோம்.

இன்றுள்ள தொழிலாளர் பிரச்சினைகள்பற்றிச் சொல்கின்றபொழுது, கடநத கால காங்கிஸ் ஆட்சியிலே தொழிலாளர்கள், அன்றையதினம் இருநத தொழிற் சங்கங்கள், அவைகளினுடைய நிலைமைகள், தொழில் துறைகள் இவைகளைப் பற்றியெல்லாம் சொல்லி, அதைவிட நாங்கள் பரவாயில்லை என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு சொல்லுகின்ற நிலையை இங்கே நாம் பார்க்கிறோம். அவர்கள் தவறுகச் சொல்லி இருக்கிறார்கள் என்பதுதான் விவர அறிக்கையைப் பார்க்கின்றபொழுது தெரிய வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அவர்களுடைய அறிக்கையிலே இருக்கிற குறிப்புக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1966–லே இந்த மாநிலத்திலே ஏற்பட்ட மொத்த ஸ்டிரைக்கள் 176. இன்றையதினம், 1967-லே மொத்தம் 305 ஸ்டிரைக்குகள் நடைபெற்றிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல; "மான்டேஸ் லாஸ்டு" என்பதற்கான கணக்கையும், அதாவது தொழிலாளர்கள் இழநத மனித உழைப்பு நாட்களையும் கணக்கெடுத்திருக்கிறார்கள். அது 1966-லே காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தபொழுது 7,54,612 நாட்கள். இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக அரசிலே 11,20,517 நாட்கள் வீணாக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டும் அல்ல, தொழில் துறையிலே பீடிப் ஃபேக்டரியைப் பொறுத்த வரையிலும் எந்த அளவுக்கு இன்றைய நிலைமை வளர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1966–67–லே மொத்த தொழில் நிறுவனங்கள் 2,932, அவற்றிலே ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 46,487. ஆனால் இந்த ஆண்டிலே, 1967-68-லே இவற்றிலே ஈடுபட்டிருக்கிற தொழில் நிறுவனங்கள் 2,256. தொழிலாளர்களின் எண்ணிக்கை 33,190, ஏறத்தாழ 700 தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன. அந்த அளவு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதோடு மட்டும் அல்ல; அதன் விளைவாக இன்றையதினம் ஏறத்தாழ 13,000 தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

33,190 பேர்கள் தான் இன்றையதினம் அந்தத் துறையிலே இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். 'இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், உங்களுடைய காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிற மாநிலங்களைவிட, மத்திய அரசின் பொறுப்பிலுள்ள பாக்டரிகளில் உள்ள நிலைமையை விட, மற்ற மற்ற மாநிலங்களைவிட, இந்த மாநிலம் எவ்வளவோ மேல், நாங்கள் நன்றாக செயல்பட்டு வருகிறோம்' என்று வாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் வாதத்தின் உள்ளே புகுந்து பார்ப்போமேயானால், இந்த மாநிலத்தில் நிலைமை மற்ற மாநிலங்களைவிட மிக மிக சுமுகமான ஒரு நல்ல சூழ்நிலையில் இருநதது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் இந்தச் சூழ்நிலைக்குப் பிறகு, இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு. . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் படித்துச் சொல்கிறார். கொஞ்சம் உன்னிப்பாக சரியாகப் படித்துச் சொன்னால் இந்த மன்றத்திற்கு நல்லது. அறிக்கை அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம். தொழிலாளர்கள் யாரையும் வீட்டுக்குப் போகச் சொல்லவில்லை. உரிமம், அதாவது லைசென்ஸ் எவ்வளவு கேட்கப்பட்டது, எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு தொழிலாளர்களை நியமிக்க லைசென்ஸ் கேட்கப்பட்டது என்பதெல்லாம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. யாரையும் வீட்டிற்குப் போகச் சொல்லவில்லை. சரியாகப் படித்துவிட்டுச் சொல்வது நல்லது.

1968 மார்ச் 19]

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் குறிப்புகளைச் சரியாகப் படித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் குறிப்பில் 'நெம்பர் ஆஃப் பெர்ஸன்ஸ் எம்பலாய்டு' என்ற தலைப்பின் கீழ் 1966-67-ல் 46,487 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 'நெம்பர் ஆஃப் பெர்ஸன்ஸ் எம்ப்லாய்டு' என்றால், வேலையிலே இருந்தவர்கள் என்று அப்படித்தான் நான் படித்த ஆங்கிலம் சொல்கிறது. அடுத்த ஆண்டிலே 1967–68-ல் 33,190 பேர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நிச்சயம் 10,000 பேர்கள் குறைந்துவிட்டார்கள். . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 'The number of workers for whose employment licence was applied' and 'the number of beedi industrial premises which have applied for licence' என்பதுதான் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : நான் அதைத் தமிழிலேயும் படித்துச் சொல்ல விரும்புகிறேன். முக்கிய புள்ளி விவரக் குறிப்புகள் என்று இருப்பதில், வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ற தலைப்பின் கீழே 1966–67-ம் ஆண்டில் 46,487 என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே 1967–68-ம் ஆண்டில் 33,190 என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலிருந்துதான், அமைச்சர் அவர்கள் கொடுக்கும் புள்ளி விவரங்களிலிருந்துதான் நாங்கள் பேசலாமே தவிர, வேறுவகையான விவரங்கள் எங்களுக்குக் கிடைப்பதற்கு வசதியில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் புதிய அரசு ஏற்பட்ட பிறகு, இவர்களுடைய எண்ணங்களை இவர்கள் வெளிப்படுத்தியதன் காரணமாக, தொழிலாளர்கள் பற்றிய எண்ணங்களை வெளிப்படுத்தியதின் காரணமாக, தொழிலாளர்கள் பற்றிய கொள்கையை வெளிப்படுத்தியதன் காரணமாக, அந்த நிலைமைகளினால் இன்றையதினம் தொழில் துறையில் பெரிய அளவுக்கு ஒரு மந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் அவர்கள் எதை நினைத்தாலும், எதைக் கேட்டாலும், உடனே அவைகளைச் சாதிக்க, அவர்களுக்காக வாதாட இங்கே ஒரு தொழிலாளர் நல அரசு இருக்கிறது என்று நினைக்கிறார்கள். அதைப் போலவே இவர்களை வேலைக்கு அமர்த்துகிறவர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால் அவர்களும் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்து, இதனைச் செய்து கொள்ள முடியும், அதனைச் செய்துகொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள். இதன் விளைவாக என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால் அரசாங்கத்தினிடம் ஒரு இயந்திரம் இருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு லேபர் ஆபீஸ், லேபர் கமிஷனர் என்ற இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரம், இந்த உத்தியோகஸ்தர்கள் செயல்பட முடியாத ஒரு நிலைமை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அந்த இயந்திரத்தை வைத்துக் கொண்டு தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் தீர்க்க முடியாது என்ற நிலை ஏற்பட்டு, அதுவும் முடியாதுபோனால் படிப்படியாக கடைசியில் தான், கடைசி நிலையில் தான் அமைச்சர்கள் வருவது, உயர் அதிகாரிகள் போவது என்ற நிலைமை எழாமலேயே, ஆரம்பக் கட்டத்திலேயே அமைச்சர்கள் சென்றுவிடுகிறார்கள். இந்த ஒரு நிலைமையின் காரணமாக அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கிற அதிகாரிகள் அவர்களுடைய வேலையைச் செவ்வனே செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எந்தத் தகராறு ஏற்பட்டாலும், முதலாளிகளும் சரி, தொழிலாளிகளும் சரி, அவர்களை அலட்சியப்படுத்தி, புறக்கணிக்கின்ற ஒரு நிலை இதன் பயனாக ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படி யாராவது அதிகாரிகள் கனம் உறுப்பினர் அவர்களிடம் புகார் செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நிச்சயம் அதிகாரிகள் என்னிடம் புகார் செய்யவில்லை. நடைமுறையில் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்களை வைத்துக் கொண்டு இதை நான் யூகிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : 'அதிகாரிகள் வேலை செய்ய முடியாதபடி அமைச்சர்கள் ஆரம்ப கட்டத்திலேயே ஈடுபட்டுவிடுகிறார்கள். அதனால் அதிகாரிகள் சரிவர வேலை செய்ய முடியவில்லை' என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தகவலைக் கொடுத்திருக்கக்கூடியவர்கள் அதிகாரிகளாகத்தான் இருக்க முடியும். ஆகையால், யாராவது அதிகாரிகள் அப்படிச் சொல்லியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நிச்சயம் அதிகாரிகள் சொல்லவில்லை. அவர்கள் மீது வீணாகப் பழி போட வேண்டாம். தொழிலாளர்கள், உண்மையான நிலைமையை உணர்ந்தவர்கள் சொல்லிய விவரங்களிலிருந்துதான் சொல்கிறேன். தொழில் துறையில் ஒரு நிலைமை ஏற்பட்டால், அதில் ஈடுபட்டிருக்கிற எல்லாத் தொழிலாளர்களும் அங்குள்ள தொழிலாளர்களுடைய நிலைமையை ஆதரிப்பவர்களாக இருக்க முடியாது. அதிலும் மாறுபட்ட கருத்துக்களை உடையவர்களும். . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நான் கேட்பதற்கு விடை அளிக்காமல் வேறு பக்கமாகத் திருப்புகிறார்கள். தொழில் தகராறைத் தீர்த்துவைப்பதில் அந்தத் துறையில் இருக்கும்படியான அதிகாரிகள் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி எந்த அதிகாரியாவது உறுப்பினர் அவர்களிடம் புகார் செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அதிகாரிகள் என்னிடம் புகார் செய்யவில்லை. தொழிலாளர்களிடமிருந்து எனக்குக் கிடைக்கிற விவரங்களை வைத்துக் கொண்டு நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதிகாரிகள் தீர்த்து வைப்பது, அமைச்சர்கள் தீர்த்து வைப்பது என்ற வித்தியாசத்தைத் தொழிலாளர்கள் காண முடியாது. எனவே, தொழிலாளர்கள் யாரும் தங்களிடம் எந்தப் புகாரும் செய்திருக்க முடியாது யாராவது அதிகாரிகள் தான் புகார் செய்திருக்கலாம். கூச்சப்படத் தேவையில்லை, சொல்லலாம்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இது ஏதோ தொழிலாளர்களோடு நின்றுவிடுவது அல்ல. இது ஒரு தேசியப் பிரச்சினை என்ற காரணத்தினால், தொழிலாளர்களுடைய தலைவர்களுடன் எனக்கு நிறைய பழக்கம் இருக்கிறது. நிலைமைகள் எப்படியிருக்கின்றன. எப்படி உருவாகின்றன என்று விளக்கமாக அவர்களோடு பேசுகின்ற நேரத்தில் எனக்குத் தகவல்கள் கிடைக்கின்றன.

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஒன்றை மட்டும் உதாரணமாக நான் சொல்ல விரும்புகிறேன். நாஷனல் கமிஷன் ஆஃப் லேபர் என்ற ஒரு கமிஷன் இந்தத் துறையைப் பற்றி விசாரித்து இருக்கிறது. ஒரு அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதை நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் இருக்கிற தொழிலாளர்களுடைய நிலைபற்றி, இங்கே ஏற்பட்டிருக்கிற தொழிற் சங்கங்களுடைய நிலைபற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல குறைபாடுகளைப்பற்றி குறிப்பிடுகிற நேரத்தில், அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன்.

" The Study Group has listed 7 factors of Government policy as having contributed to the unfortunate situation in industrial relations. "

என்பதிலே நான்காவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

" Ministerial pressure on management to reinstate the dismissed workers without even examining the merits of the case "

என்பதாக ஒன்றையும் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகள் இந்த மாநிலத்திலுள்ள தொழிற் சங்கங்களுள் புகுந்ததற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆலோசிக்க வேண்டும். அப்படி ஆலோசித்தால் இப்படிப்பட்ட காரணங்கள் கிடைக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாஷனல் கமிஷன் ஆஃப் லேபர் கூறிய கருத்துக்களையெல்லாம் அரசாங்கம் பார்த்திருக்கிறது. அதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்து என்ன, அவர்களுடைய கட்சியின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இந்த அமைச்சரவை தொழிலாளர்களுக்கு ஒரு பாதகம் ஏற்பட்டால், அதில் எல்லா அமைச்சர்களும் கவனம் எடுத்து, தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசி, வேலை போகக்கூடிய குறைகள் இருந்தால், தீர்க்கப்பட வேண்டும் என்பதாகச் செய்து வருகிறது. இது தவறு என்று இந்தக் குழுவினால் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பேரில் கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்து என்ன, அவர்கள் கட்சியினுடைய கருத்து என்ன என்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நிச்சயம் என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படும் ஒன்றையும் ஆதரிக்க மாட்டோம். நாங்கள் தொழிலாளர்களுக்காகத்தான் இருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் தொழிலாளர்களைத் திசைத் திருப்பி, அவர்களை மற்ற காரியங்களுக்காகப் பயன்படுத்த நாங்கள் தயாராக இல்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது, 15, 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய கட்சியின் சார்பாக மூன்று பேர்கள்தான் பேச இருக்கிறோம். கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

ஆகவே, அப்படிப்பட்ட நிலையிலே தொழிலாளர்களுக்கு இன்னது தான், இப்படித்தான் என்று தலைமை அதாவது 'லீட்' கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது இந்த அரசு, தொழிலாளர்கள் 'ஃப்ரிவலஸ் கிரவுண்ட்ஸ்', அதாவது மிகச் சாதாரண காரணங்களுக்காக ஸ்ட்ரைக், மற்ற செயல்களில் ஈடுபட்டார்களேயானால் 'நீங்கள் செய்வது தவறு' என்று அவர்களிடம் வலியுறுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. அது அவர்களுக்கு விரோதமாக இருந்தாலும், அவர்கள் விரும்பாத நடவடிக்கையாக இருந்தாலும்கூட, இந்த நாட்டின் நலனைக் கருதி இந்த அரசு அப்படிச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. இவர்கள் மட்டுமல்ல, யார் அங்கே இருந்தாலும் சரி, அதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு இதை மனதில் கொள்ள வேண்டும். தொழிலாளர்களைத் திருப்திப்படுத்துவது ஒன்றுமட்டும் போதாது. அதே நேரத்தில் தொழிலாளர் மிகவும் கஷ்டப்பட்டுப் போராடி பெற்ற அந்த ஸ்ட்ரைக் என்ற உரிமையை—போர்க்களத்தில் அது ஒரு கருவி

என்று அதற்கு ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது—முழுக்க முழுக்க அவர்கள் உபயோகப்படுத்துகிற பொழுதெல்லாம், அந்தக் கருவி நல்ல கருவி, அதுதான நியாயமான கருவி என்ற ஒரு முடிவுக்கு அரசு வந்துவிட முடியாது. அவர்கள் எங்கே தவறு செய்கிறார்களோ அந்த நேரத்தில் அதைத் தடுத்து நிறுத்தி 'இந்த நாட்டினுடைய நலனுக்காக நீங்கள் உங்கள் தவறைத் திருததிக்கொள்ள வேண்டும்' என்று உடனே அரசு தலையிட வேண்டும். அப்படித் தலையிடும் நிலை ஏற்பட்டிருந்தால், நம்முடைய சென்னை நகரத்தில ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள் நடந்திருக்காது, அல்லது நடந்திருந்தாலும், வெகு சீக்கிரத்தில ஒரு முடிவு ஏற்பட்டிருக்கும். இந்த மாதிரி 80 நாள், 85 நாள் என்று வளர்ந்து கொண்டே வந்திருக்காது. ஒன்றை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடிக்கலாம் எனறிருக்கிறேன்.

முற்பகல் 10–30.

ஜர்னலிஸ்டு வேஜ் போர்டு என்று ஒரு போர்டு இருக்கிறது. அந்த போர்டில் இரண்டு ரிபோர்ட்டுகள் கூடக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அது ஒன்றும் அமுல் நடத்தப் படவில்லை. பல பத்திரிகைகளில், பல ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள், தினத் தந்தி, மாலைமுரசு போன்ற பத்திரிகைகளில், அந்தத் தொழிலாளர் பெயர்கள் இன்னும் அட்டண்டன்ஸ் ரெஜிஸ்தரில் கிடையாது. தினக் கூலிகளாகவே வைக்கப்பட்டு, வவுச்சர் பேமெண்ட்தான் நடக்கிறது. அந்த போர்டின் ரிபோர்ட் ஸ்டாசுடரி ரெகம்மண்டேஷன் என்றாலும், செயல்படுத்தப்படவில்லை. அந்தப் பத்திரிகைக்காரர்களை அழைத்து, செயல்படுத்தச் செய்ய இந்த அரசுக்குக் கடமை இருக்கிறது. அவ்விதமான கடமை இருந்தாலும், தைரியமாகச் செய்ய வேண்டும். தங்களைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அப்படிச் செயல்படத் தவறக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, இன்றையதினம், சென்னையைச் சுற்றியிருக்கிற இடங்களில் மட்டும் தொழில் தகராறுகள் என்று இல்லை. கோவையில், மதுரையில், இன்னும் மற்ற இடங்களில் தகராறுகள் வளருகிறது. நெய்வேலியில் தலையெடுத்திருக்கிறது. ஆகவே, இந்த நேரத்திலே அரசாங்கம் வெகு விரைவாக முன் வந்து தைரியமாகக் கையாளவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோயம்புத்தூரைப் பொருத்த வரையில், நம்முடைய முதல் அமைச்சர் பெரும் அளவிற்கு ஊக்கம் எடுத்துக் கொண்டு, மூடிய மில்களைத் துவக்க முயற்சிகள் செய்தார்கள் என்றாலும இந்த அரசினுடைய ஜாதக விசேஷமோ என்னமோ, அவர்கள் திறக்க திறக்க, இன்னும் வேறு மில்கள் மூடும் நிலைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது கோயம்புத்தூரிலே மேலும் மில்கள் மூடப்படுமோ என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவற்றை ஆராய்ந்து இதற்கெல்லாம் வழி காண வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இந்தத் துறை மானியத்திற்குக் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தைக் கொடுத்து விட்டால், தவறான கருத்து சொல்லப்படாமல் இருக்கும் எனபதற்காகச் சொல்ல விரும்புகிறேன். பீடித் தொழில் சம்பந்தமான சட்டம் 1958-ம் ஆண்டு சட்டம். அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது முன்னால் இருந்த அரசு. அதை நிறைவேற்றாமல், எக்ஸம்ஷன் கொடுத்ததும் முன்னால் இருந்த ஆட்சிதான். தொழிலாளர்களை இந்த அரசு போகச் சொல்லிவிட்டதாக கனம் உறுப்பினர் நினைக்கக் கூடாது. திரு. காசிராமன் கடைசிப் பக்கத்தைக் காண்பித்தார்கள். அதுவும் இதுவும் ஒன்றுதான். 1958-ம் வருஷ சட்டத்தின் கீழ் அனுமதி கொடுக்கக்கூடிய உரிமை சர்க்காருக்கு இருக்கிறது. அனுமதி கேட்டால் கொடுக்கப்படும். அதற்கும் மத்திய சட்டம் வந்துவிட்டது. அனுமதி பெறப்படாத தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அனுமதி வாங்காமல் நடத்தப்படும் தொழிற்சாலைகளைத் தடுத்து அவர்களையும் அனுமதி வாங்கச் செய்ய வேண்டும். அதற்கும் இந்த

அரசாங்கத்திற்கு இப்பொழுது உரிமை குறைக்கப்பட்டு, மத்திய சட்டம் வந்திருக்கிறது. அமுல் நடத்த விதிகள் பிறப்பிக்கப்படும் நிலை இருக்கிறது. தொழிலாளர்களைக் குறைத்து நடத்துவது பற்றியோ, மற்றவை பற்றியோ விஷயம் புரியாமல் பேசுதல் நல்லதல்ல என்பதற்காக விளக்கத்தைக் கொடுக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஒரே ஒரு வார்த்தை. இந்தச் சட்டங்களை நாங்கள் சரிவர அமல் நடத்தவில்லை, தவறிவிட்டோம் என்று சொல்லித்தானே, இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அப்படி ஆட்சிக்கு வந்தவுடனே, செயல்படுத்தாமல் என்ன செய்தார்கள் என்பதுதான் கேள்வி. தொழிலாளிகளைப் பொருத்தவரையில், அரசு பீடித் தொழிலை நடத்தவில்லை. ஆனால், அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள், லைசென்ஸ் பெற்றவர்கள், தொழில் நடத்தும்போது, தொடர்ந்து பெறுவதற்கு, அதில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுடைய வேலை குறையாமல் பார்த்துக் கொள்ளத்தான் அரசு இருக்கிறது. அந்த வகையில் நடவடிக்கை எடுககவில்லை என்பதுதான் என்னுடைய குறை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. இராமச்சந்திரன், 15 நிமிஷத்திற்கு மேற்படாமல் பேசுவார்கள்.

***திரு. எஸ். இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில், தொழிலாளிகள், தொழிற்சாலைகள் பற்றிய இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். எனக்குமுன் பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் புள்ளி விவரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்றார்கள். நான் இப்பொழுது கொடுக்கிறேன், குறித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, 1—3—1967-லிருந்து, 31—10—1967 வரையில், உள்ள நிலைகளையும், அதற்கு முன்னால் இருந்த, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1—3—1966-ல் இருந்து 31—10—1966 வரை இருந்த புள்ளி விவரங்களையும் நான் அவர்கள் மத்தியில் தரலாம் என்று கருதுகிறேன். தொழில் தகராறுகள் சம்பந்தமாக, கொடுத்த கம்ப்ளெயிண்டுகள், அவர்கள் ஆட்சிக் காலத்தில் 6,056; நம்முடைய ஆட்சிக் காலத்தில் 5,881. சமரசப் பேச்சு வார்த்தைகளுக்கு எடுத்துக் கொண்டது, அவர்கள் காலத்தில் 1,261, கடந்த ஆண்டில் 1,329. பேசி சமரசமாக, சுமுகமாகத் தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது அவர்கள் காலத்தில் 728, எங்கள் காலத்தில் 985. இருதரப்பாருக்கும் பொதுவாக ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் நடுவர் மன்றங்களுக்குச் சென்றது, அவர்கள் காலத்தில் 136, நம்முடைய ஆட்சி காலத்தில் 238. ஆகையினால், கடந்த ஆண்டு நல்ல முறையில் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, அதே நேரத்தில் தொழில் அதிபர்களும் அவர்களுடைய கோரிக்கைகளையும் பரிசீலித்துத் தீர்வு காண அரசாங்கம் முயன்றிருக்கிறது. ஏனென்றால், தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் என்றால், ஏதோ தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் தகராறு என்றல்ல பொருள். தொழிலாளர்களுக்கும், தொழில் செய்கின்ற முதலாளிகளுக்கும் ஏற்படும் தகராறுகளுக்குத் தீர்வு காண வழிவகைகள் காண வேண்டும். அதற்கு முன்னால் இருந்த அரசு எந்த அளவு செய்ததோ அதைவிட அதிக அளவு பயன் ஏற்பட்டுள்ளது என்ற நிலைமை இருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. மற்றும் தொழிலாளர்களுடைய கோரிக்கையைக் கேட்டவுடனே கொடுக்கவும், அதே நேரத்தில் முதலாளிகள் அரசாங்கத்தினுடைய தீர்ப்புக்களை அமுல் நடத்தவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கும் நிலையிலும் மாநில சர்க்கார் இல்லை என்பதை நன்றாகப் புரிந்து கொண்டால் நலமாக இருக்கும்.

முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டார்கள், நாஷனல் லேபர் கமிஷன் பற்றி, நியமிக்கப்பட்ட அந்தக் குழு, தமிழக அரசு மீது சாட்டுகின்ற குற்றமே, தொழிலாளிகளுக்காக இந்த அரசு வாதாடுகிறது என்பதுதான். ஆனால், தொழில் மானியத்தின் மீது பேசும்போதெல்லாம்

இது தொழிலாளர் அரசு, தொழிலாளர் அரசு, என்று சொல்லி தொழிலாளர்களைத் தூண்டிவிடுகிறார்கள். தொழில் தகராறுகள் பெருகுகின்றது, அப்படி எல்லாம் இருப்பதனால், தொழில் அதிபர்கள், தொழில் துவங்க வருவதில்லை என்று குற்றச்சாட்டு அந்தத் தரப்பிலிருந்து வருகிறது. அது மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏதோ சட்டம் நடவடிக்கைகளை எடுக்கும்பொழுது தொழிலாளியை சுட்டுவிட்டார்கள். தொழிலாளர் விரோத அரசு என்ற புரளியையும் கிளப்புகிறார்கள். ஆனாலும், காங்கிரஸ கட்சிக்கு தெளிவான உண்மையான நிலையான தொழில் கொள்கை இல்லை என்றே சொல்ல வேண்டும். அவர்கள் செய்வதெல்லாம், எங்கேயாவது, குழப்பம் ஏற்பட்டால், அதை எடுத்துக்கொண்டு, வாதாடுவது, வெளியிடுவது, பிரசாரம் செய்வது, இவ்வளவுதான். ஆனால் தொழில், தொழிலாளிகள் பற்றிய நிலையான கொள்கை, அக்கறை கிடையாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழக அரசு அமைச்சர்கள், தொழிலாளர்களுடைய பிரச்சினையை, அன்றாடம், உழைத்துப் பிழைப்பவரின் பிரச்சினையை வாங்கி, உழைத்து உண்டு, காலத்தைக் கழிக்கின்றவர்களுடைய பிரச்சினையைத் தங்களுடைய பிரச்சினையாகக் கருதி, நேரடியாகச் சென்று, அது என்ன என்று ஆராய்ந்து, அதைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளைக் கண்டு என் அப்படி அந்தக் கமிஷன் கோபப்பட வேண்டும் என்று தெரியவில்லை. அதனுடைய தலைவராக இருப்பவர் இங்கே நமது மாநிலத்திலேயுள்ள பின்னி கம்பெனியைச் சேர்ந்தவர்தான். இங்கே உள்ள தொழில் அதிபர்களும் அதில் இருக்கிறார்கள். திரு. எஸ். வி. வி. அந்தோணி பிள்ளை அவர்களும் அதிலே இருக்கிறார்கள் ஆகவே, அவர்களுக்கும் இங்குள்ள நிலைமை தெரியாதது அல்ல. ஏதோ இந்த அரசாட்சியின் மீது ஏற்பட்டிருக்கின்ற வேகத்தினாலும், உணர்வினாலும், தொழிலாளர் நலனுக்கு விரோதமான போக்கிலே அது அமைந்திருக்கிறது என்று கருதுவதற்கு இடம் இருக்கிறதே தவிர, வேறு எந்த முறையிலும் அல்ல. ஆகையால் தொழிலாளர் நலனைக் காக்கிற அரசு இங்கே நடந்து கொண்டிருக்கிறது என்பதை நன்றாக நான் இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், ஒன்றே ஒன்று கூற விரும்புகிறேன். இந்தத் தொழில் பற்றிய தகராறுகளைக் குறித்த அறிக்கையில் பார்க்கின்றபோது, எவ்வளவு சாதாரண விஷயங்களுக்கெல்லாம் தகராறுகள் வருகின்றன என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அலுவல் நேரத்தில் தொழிலாளர்களுக்குக் காப்பி வழங்குதல், ஆதாயம் காணபதற்காக வில்லைகள் வழங்குதல், மேலும் ஒரு ஜோடி காலணி வழங்குதல், மேலும் ஒரு தடவை உடுப்பு வழங்குதல், குளிர்காலத்தில் கம்பளி வழங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் தகராறுகள் எழுந்தன. எந்த அளவுக்குக் கல்லில் நார் உறிக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தயவு செய்து சிந்திப்போமானால், எந்த அளவுக்குத் இத் துறையில் சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் நாம் உணர முடியும்.

அதுமட்டுமல்லாமல், இப்பொழுது எதற்கெடுத்தாலும் தொழிலாளர் தகராறுகள் வருகின்றன என்று சொல்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஏற்கனவே முன்பு இருந்த ஆட்சிக் காலத்தில் மக்களே போர்க் கோலம் கொண்டிருந்தார்கள். முந்தைய ஆட்சியின் கொள்கையையும், மேற்கொண்ட நடைமுறைகளையும் எதிர்த்து மக்களே ஆர்பாட்ட ஊர் வலங்கள் நடத்தி வந்தார்கள். ஆகவே அப்பொழுது நடந்த தொழிலாளர் போராட்டங்கள் விளம்பரம் பெறவில்லை. ஆனால் இப்பொழுது தொழிலாளர்கள் மட்டும் அவர்களுக்குரிய குறைகளை எடுத்துச் சொல்லும் அளவில மட்டும் இருப்பதால், அதை மட்டுமே பெரிதுபடுத்த வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் அல்ல. இது ஏற்கனவே இருந்தது. ஆனால், மக்கள் போராட்டத்தில் இது அழிந்துவிட்டது. இப்பொழுது மக்களாட்சி வந்தபிறகு, மக்களால் ஏற்பட்ட ஒரு பெரிய அரசு வந்த பிறகு, தொழிலாளர் பிரச்சினை கண்ணுக்குப் பெரிதாகத் தெரிகிறது. அதைமட்டும் எடுத்துச் சொல்லி, தொழிலாளர்

கள், தொழிலாளர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல. இதிலே நான் சொல்வதெல்லாம், அரசினுடைய நெருக்கடியை உணர்ந்து, முதலாளிகள் ஓரளவுக்கு விட்டுக் கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும். அவர்கள் இன்னும் அந்தப் பழைய போக்கிலேயே இருக்கிறார்கள். இன்னுங்கூடச் சொல்லப் போனால், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கோ, அல்லது அவர்கள் செய்கிற தவறைத் திருத்துவதற்கோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கோ, இந்த அரசுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைக்குப் போராடலாம். அந்தத் தொழிலதிபர் தர மறுத்தால், தொழிலாளி உடனே வேலை நிறுத்தம் செய்கிறான். வேலை நிறுத்தம் செய்துவிட்டான் என்று தொழிற்சாலையை அவர்கள் மூடிவிட்டால், அந்த தொழிற்சாலையை ஏற்று நடத்தி, அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு வாழ்க்கை வசதியை ஏற்படுத்தித் தருவதற்கான சாதாரண அடிப்படை அதிகாரம் கூட இந்த அரசுக்குக் கிடையாது. கோயமுத்தூரில் மில்கள் மூடப்பட்டன. அதனால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆனால், அதனுடைய நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கு இருக்கின்ற அதிகாரம் இந்திய அரசுக்கு இருக்கிறதோடு மட்டுமல்லாமல், அங்கிருக்கும் இன்னொரு விவகாரம் என்னவென்றால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மறுபடியும் அந்தத் தொழிற்சாலையை நடத்தி, அந்தத் தொழிலில் லாபம் வருமானால், மறுபடியும் அந்த முதலாளியினிடத்திலேயே அந்தத் தொழிற்சாலையை ஒப்படைக்க வேண்டும் என்று சட்டத்திலேயே அமைத்திருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்ட வேண்டிய கடமை மட்டும் மாநில சர்க்காரிடத்திலே இருக்கிறதே தவிர, தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்க்கவும், தொழிலை வளர்க்கவும், தொழிலதிபர்களை ஒருமைப்படுத்தவும் முழு அதிகாரங்கள் மாநில அரசுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் இந்தப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நாளாவட்டத்தில் பெருகிக் கொண்டே வருகிறார்கள். தொழில் பெருகப் பெருக, இனிமேல் வருங்கால சமுதாயம் தொழிலாளர்கள் நிறைந்த சமுதாயமாக இருக்கப் போகிறது. ஆகையால், தொழிலாளர்கள் பற்றி, நல்ல நிரந்தரமான அமைதியான இந்தக் கொள்கையின் வழியில் நாம் முன்னேறுவதற்கு வழிவகை காண வேண்டும்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று நாம் சொல்லுகிறோம். நான் முன்பு கூட சொல்லியிருக்கிறேன், எதிர்க் கட்சியைச் சார்ந்த, இப்பொழுது திட்டக் குழுவில் உறுப்பினராக இருக்கும், திரு. வெங்கட்டராமன் அவர்கள் கூட ஒரு கருத்தரங்கில் பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால், எல்லாக் கட்சிகளினுடைய சங்கங்களும் இருக்கின்றன. ஆகவே, இது எல்லாக் கட்சித் தலைவர்களும், இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள அத்தனைபேரும் சேர்ந்து ஒருமுகமாக முடிவு எடுத்து, இந்திய அரசுக்குத் தெரிவித்து, சட்டம் கொண்டுவந்து அதை நிறைவேற்ற வேண்டுமே தவிர, நீங்கள் மட்டும் நிறைவேற்றுங்கள், நீங்கள் நிறைவேற்றுங்கள் என்று சொல்லிப் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதில் பலன் இல்லை. ஏனென்றால், வர இருக்கிற சமுதாயம் தொழிலாளர்கள் நிறைந்த பெரிய சமுதாயம். தொழில்கள் அதிகமாக அமையப் போகின்றன. ஆகையால், தொழிலாளர் பற்றிய கொள்கையை நிலையாக நாம் ஒரு வரையறைக்குள் கொண்டுவந்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கடந்த ஆண்டு நல்ல முறையில் தொழிலாளர்களின் நியாயமான குறைகளைத் தீர்த்து, அவர்களுக்கு இருக்கும் நெருக்கடிகளையெல்லாம் சமாளித்து, நல்ல முறையில் நடந்திருக்கிறது வேண்டுமானால் தங்களுடைய லாபத்தைத் தாங்களே அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொஞ்சம் தொழிலதிபர்கள் தியாகம் செய்ய வேண்டி வந்ததே தவிர, அதற்காக எதிர்க் கட்சியினர் கோபித்துக் கொள்ள வேண்டாம். அவர்களும் கொஞ்சம் தியாகம் செய்யலாம். ஏனென்றால்

தொழிலாளர்களும் உடன்பிறந்தவர்கள்தான் என்ற நிலைமையில் அவர்கள் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். எதிர் கட்சியினர் ஒத்துழைத்தால் ஓரளவுக்கு இந்தத் தொழிலிலே அமைதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இனிமேல் பேசுகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எட்டு நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. சி. கோவிந்தராசன் :** அவைத்துணைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை யொட்டி, என்னுடைய சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இப்படி நான் எங்களுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூறும்போது, ஏனைய எதிர்க்கட்சிகள், குறிப்பாக, பிரதான எதிர்கட்சியாக அமைந்திருக்கிறவர்கள் கொடுக்கிற கருததுக்கும் இத்தகைய குறைபாடுகளை அவர்கள் சுட்டிக்காட்டினாலுங்கூட, அதற்கும் நாங்கள் சொல்லுவதற்கும் அடிடபடையிலே வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த அடிப்படையில் எங்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் எடுத்த எடுப்பிலேயே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த பல்லாண்டுக்காலமாக, அடித்தளத்தில் இருக்கக்கூடிய தொழிலாளி வர்க்கம், பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கக்கூடிய தொழி லாளி வர்க்கம், தமிழகத்திலே ஒரு புதிய அரசு ஏறபட்ட பிறகு நிச்சயமாக நம்முடைய நிலைமை உயரும், நம்முடைய குறைபாடுகள் ஓரளவுக்காவது நீங்கும், தீரும் என்ற நல்ல நம்பிக்கையில் இருக்கிறார் கள். அந்த நம்பிக்கையை ஓரளவுக்கு, முடிந்த அளவுக்கு, நம்முடைய தமிழக அரசு, நம்முடைய அதிகாரத்திற்குட்பட்டு பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களுடைய குறைபாடுகளைப் போக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற முறையில்தான் நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறேன்.

விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகின்றன. அதற்கு யாரும் பொறுப்பு கிடையாது என்று சொல்லப்படுகிறது. எவர் பொறுப்பிலும் இல்லாமல் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. எல்லாப் பொருட்களுக்கும் விலையை உயர்த்த வேண்டும் என்று கோருகிறார்கள். சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. சர்க்கரை முதலாளிகள், கண்ட்ரோலை எடுத்துவிடுங்கள், எங்களுடைய சர்க்கரைக்கு அதிக விலை நிர்ணயம் செய்யுங்கள் என்று கோருகிறார்கள். சிமெண்ட் உற்பத்தியாளர்களும், கண்ட்ரோலை எடுத்துவிடுங்கள், எங்களுடைய பொருளுக்கும் விலையை அதிகப்படுத்த வேண்டும் என்று கோருகிறார்கள். ஏன் ? நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, நெல்லுக்கு விலையை உயர்த்த வேண்டும், அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கோருகிறார் கள். எனவே, இப்படி எல்லாப் பொருட்களுக்கும் விலை அதிகம் கோரக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்யக் கூடிய, எல்லாச் சரக்குகளையும் உற்பத்தி செய்யக்கூடிய 'உழைப்பு' என்று சொல்லக்கூடிய அந்தச் சரக்குக்கு மட்டும் விலை உயராமலேயே இருக்கிறது. அதை அவர்கள் கோரும்போது, அனைவருக்கும் கோபம் வருகிறது. வேறுவிதமான ஆத்திரமும் வருகிறது. உழைப்பு என்பது மனித உருவத்தில் நின்று கொண்டு, என்னுடைய, உழைப்புக்கு இன்னும் கொஞ்சம் அதிக விலை கொடுங்கள் என்று கோரும்போதுதான், அதை எதிர்க்கக்கூடிய நிலைமை, இருக்கிறது. இந்தச் சமுதாயத்தில் பல்வேறு சரக்குகளை உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய அந்த உழைப்பு, மனித உருவத்தில் நின்று கொண்டு, என்னுடைய உழைப்புக்கும் கொஞ்சம் விலையைக் கூட்டுங்கள் என்று கேட்கும்போது ஆத்திரம் வருகிறது. பல்வேறுவிதமாக அதைப் பேசுகிறார்கள். ஏதோ அரசியல் கட்சி தூண்டி விடக்கூடிய பிரச்சினை என்றும் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட கண்ணோட்டத் தைத் தயவு செய்து இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் தொழிலாளர். தொழி

லாளர் என்று பேசும்போது, அவர்களுக்கு உண்மையான நீதியை வழங்குவதாகவும், அவர்களை உண்மையிலேயே கைதூக்கிவிடுவதற்காக உழைக்கிறோம் என்று சொல்லுவதற்கும் அர்த்தம் இருக்கும் என்பதை யும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எந்தச் சங்கத்தில் யார் தலைவராக இருந்தாலும் சரி, எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அவர் நினைத்தால் எந்த விதமான போராட்டத்தையும் தூண்டிவிட முடியாது. இது சரித்திரம் கண்ட உண்மை. தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளைப் போக்கிக் கொள்ளுவதற்குப் பல்வேறுவிதமான வழிமுறைகளைக் கையாண்டு, வேறு வழி இல்லாமல் போராடியே தீரவேண்டும் என்று, எல்லாத் தொழி லாளிகளுக்கும் உணர்வு பூர்வமாக அந்த நிலைமை வந்தாலொழிய எந்த அரசியல் கட்சியானாலும் சரி, எந்தத் தொழிற்சங்கத் தலைவரானாலும் சரி, அவர்களைத் தூண்டிவிட முடியாது. இதுவும் சரித்திரம் கண்ட உண்மை என்பதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

எனவேதான், நம்முடைய புதிய தமிழக அரசு தொழிலாளர்களுடைய நம்பிக்கையை மேலும் மேலும் பெறக்கூடிய அளவிலே, சாத்தியப்பட்டவை களையெல்லாம் துரிதமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் இலாக்காவினுடைய கடமைகூட தொழிலாளர்களுக்காக வாதாட வேண்டுமென்பதுதான். இன்றைக்கு என்ன நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். தொழிலாளர் இலாக்கா இன்றைக்கு முதலாளிகள், தொழிலாளர்கள் இரண்டு தரப்பினருக்கும் மத்தியில் நடுநிலைமையாக இருந்து கொண்டு நிலைமைகளைப் பரிசீலித்துக் கொண்டு வருகின்றது. இந்தப் போக்கு அரசியலமைப்புச் சட்டம் ஆரம்பமான திலிருந்து இருந்து வருகிறது. தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகத்தான் தொழிலாளர் நல இலாக்கா அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்தெந்த ரூபத்தில் தொழிலாளர்களுக்கு உதவி செய்யலாம் என்ற மனப்பான்மையுடன் இந்த இலாக்கா தன் கண்ணோட்டத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இலாகாவில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு, தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மை இருந்தால்தான், தொழிலாளர் பற்றிய பிரச்சினை ஏதாவது வரும்போது தங்களாலான உதவிகளைச் செய்ய முடியும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

நம்முடைய அரசு வந்தபிறகு தொழிலாளர் சம்பந்தமாக சென்ற ஆண்டு வைத்த கொள்கை அறிக்கை மிகவும் நல்ல முறையில் இருந்தது. பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நல்ல வழிவகைகளை அதில் கூறி இருந்தது. இந்த அரசே, 'தொழிலாளர் நல அரசு' என்று அந்த விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. This Government is committed to the welfare of labour. இந்த அரசு தொழிலாளர் நலனைக் கவனிக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த பல ஆண்டுகளாக இருந்து வந்த குறைபாடுகள், தொழிலாளர் பிரச்சினைகள் போன்றவற்றை இந்த அரசு போக்க முயற்சி செய்யும் என்று கொள்கை அறிக்கையில் கூறப்பட்டிருந்தும்கூட, இதுவரை எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை யென்பதை நான் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு அரசு காரணமா, அல்லது தொழிலாளர் நல இலாக்கா காரணமா என் பதை அறியமுடியவில்லை. அரசின் கொள்கை விளக்க அறிக்கை வந்த போது, நான் அது மிகவும் நல்ல முறையில் இருக்கிறது என்று குறிப்பிட் டேன். இதுவரை இருந்து வந்த அரசு நல்ல கொள்கைகளைச் செயல் படுத்தவில்லை. எந்த நல்ல கொள்கையையும் செயல்படுத்துவதில்தான் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

" The difference between the policy of one Government and another lies not in their published statements, but in the degree of seriousness with which they try to fulfil it."

என்று அந்த அறிக்கையிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்வேறு விஷயங்களைப்பற்றி அதில் கூறப்பட்டிருக்கின்றன. தொழில் தகராறுகளுக்கெல்லாம் என்ன காரணம்? சம்பளம், பஞ்சப்படி போன்ற பிரச்சினையா அல்லது முதலாளிகளின் பழிவாங்கும் நடவடிக்கைகளான சஸ்பெண்ட் செய்தல், தண்டித்தல், டிஸ்மிஸ் செய்தல் போன்றவைகள் காரணமா என்பன போன்ற புள்ளி விவரங்கள்கூட அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தன. டிஸ்பியூட்டுகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றியும் அறிக்கை தெளிவாக எடுத்துக் கூறியது இந்தப் புதிய அரசுக்கு ஓராண்டு காலத்திற்குள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொள்வதற்குத்தான் சந்தர்ப்பம் இருக்கிறதே தவிர, அவைகளை அமல் படுத்தி நிறைவேற்ற அவகாசம் இல்லாமல் இருக்கலாம். தொழிலாளர் நல இலாகா அதிகாரிகள் தொடர்ந்து இருந்து வந்த பழக்கத்தின் காரணமாகவோ, அல்லது தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதில் உற்சாகம் காட்டாமல் இருப்பதில் பழக்கப்பட்டவர்களாக இருக்கிற காரணத்தினாலோ என்னவோ, நல்ல திட்டங்களை அமல்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகிறார்கள் என்ற ஐயப்பாடு இருந்து வருகிறது.

ஆகவே, இந்த அரசு தன்னுடைய கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1966-ம் ஆண்டில் பெரும்பாலான தகராறுகளில் 32 சதவிகிதம் முதலாளிகளால் பழிவாங்கப்பட்ட தகராறுகள், சஸ்பெண்ட் செய்யப்பட்ட தகராறுகள், போன்றவைகள்தாம் என்று அறிக்கை கூறுகிறது. கொள்கை அறிக்கையில் நல்ல கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 'மேலும், தொழில் தகராறுகள் ஏற்பட்டதற்குப் பிறகு தலையிடுவதற்குப் பதிலாக, தகராறு சம்பந்தப்பட்ட முறைபாடு, முறையீடு வரும்போதே முதலிலேயே தலையிட்டு முயற்சி செய்தால் தொழில் தகராறுகளைத் தவிர்க்க முடியும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஏற்கெனவே இது சம்பந்தமாக ஒரு க்ரீவியன்சஸ் மெஷனரி ஒன்று சம்பிரதாயத்திற்காக இருந்து வருகிறது. அது எதையும் சரியாகத் தீர்த்து வைக்கவில்லை. ஆகவே, தொழிலாளர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக ஒரு நல்ல க்ரீவியன்சஸ் மெஷனரியை ஏற்படுத்த வேண்டும் என்று அதில் கூறப்பட்டிருந்தது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் எனக்கு ஒரு ஐந்து நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே நீங்கள் மூன்று நிமிடங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். பேசுவதற்கு இன்னும் 17 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : கிட்ட தட்ட கன்சிலியேஷனிலே, 6 மாதம், 8 மாதம், 10 மாதம், 12 மாதம் என்று ஆகிறது. இன்றைக்கும் அதே நிலைமைதான் இருந்து வருகிறது. இதுபற்றி எண்ணற்ற உதாரணங்கள் கூற முடியும். அவைகள் எல்லாம் லேபர்–அட்வைஸரி கமிட்டி கூட்டத்திலும் கூறப்பட்டுள்ளதாலும், நேரமில்லாத காரணத்தாலும் இதைப் பற்றிப் பேசாமல் விட்டுவிடுகிறேன்.

ஆர்பிட்ரேஷனை முதலாளிகள் ஒத்துக்கொள்ளச் செய்வது, ஜாயின்ட் மானேஜ்மெண்ட் கவுன்சில் அமைப்பது போன்ற எந்த விஷயமும் இந்த ஓராண்டு காலத்தில் அமுல்படுத்தப்படவில்லை. மேலும் லீகல் அசிஸ்டெண்ஸ் ஃபார் டிரேட் யூனியன்ஸ் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. சில சட்டங்களை நம அரசு இயற்ற முடியும். சென்னை தொழில் தகராறு விதிகளை தொழிலாளர் நலனுக்குகந்தவாறு மாற்றியமைக்கும் உரிமையும் நம் மாநில அரசுக்கு உண்டு.

தொழில் கொள்கையில் நாம் மாற்றம் காண வேண்டும். மாநில அரசுக்கு உட்பட்ட தொழிற்சங்கச் சட்டங்களைக்கூட நாம் நல்ல முறையில் திருத்தியமைக்க வேண்டும். ஒரு தொழிலாளி சஸ்பெண்ட் செய்யப் பட்டால், அந்தத் தொழிலாளிக்கு சஸ்பெண்ட் காலத்திற்கு நிவாரண உதவி அளிக்கும் வகையில் விதிகளை மாற்றியமைக்க வேண்டும். ஸ்டேட் எவல்யூவேஷன் அண்டு இம்ப்ளிமெண்டேஷன் கமிட்டி நல்ல முறையில் செயல்பட வழி செய்ய வேண்டும். அதற்கான விதிமுறைகளை வகுக்க வேண்டும். மற்றும், ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருந்தார்கள். தொழிலாளர்–முதலாளி ஆகிய இரு சாராரின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவாக அதை மாற்றி அமைக்கப் போவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அடுத்தபடியாக, ஆட்டோமேஷனை அரசு அனுமதிக்காது என்று சொல்லப்பட்டது. பாங்க், ரயில்வேயில் ஆட்டோமேஷன் வருவதற்கு முயற்சிகள் நடைபெற்று, அவைகள் வந்தும் விட்டன. நமது அரசு, அது வராத அளவுக்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சை, கொடுக்கப்பட்டிருக்கும் காலவரையறைக்குள் கண்டிப்பாக முடித்துக் கொள்ள வேண்டும். அடுத்தபடியாக திரு. எம். எஸ். மணி அவர்கள் பேசுவார்கள்.

***திரு. எம். எஸ். மணி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 'தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்' என்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். எனக்கு முன்னால் காங்கிரஸ் உறுப்பினர் பேசிய போது, "திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'தொழிலாளர் கொள்கை' என்ன ?" என்று கேட்டார்கள். நேற்றைய தினம் திரு. கே. விநாயகம் அவர்களும் கேள்வி நேரத்தின் போது 'உங்களுடைய லேபர் பாலிசி என்ன ? உங்களுடைய லேபர் பாலிசி நிலையானது அல்ல' என்று கூறினார். நான் அவருக்குச் சொல்ல விரும்புவது, தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், லேபர் பாலிசி என்ன என்பதைப்பற்றி பத்து ஃபுல்ஸ்கேப் பேப்பரில் டைப் அடித்து எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். இப்போது கூட ஒரு புத்தகம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழில் கொள்கையைப் பற்றி விளக்கும் வகையில் எல்லோருக்கும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகம் ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நண்பர் அவர்கள் அருள்கூர்ந்து அதைப் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றுக் கொடுத்த புத்தகத்தையாவது பார்த்தால் தமிழக அரசின் லேபர் பாலிசி என்ன என்பதுபற்றி தெரிந்துகொள்ள முடியும். தமிழக அரசின் தொழில் கொள்கையைப்பற்றி இங்குள்ள பத்திரிகைகள் மட்டுமல்ல, வட நாட்டுப் பத்திரிகைகளும் பாராட்டி, 'திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழில் கொள்கையில் நல்ல திட்டங்களைப் புகுத்தியிருக்கிறது' என்று கட்டுரையில் எழுதியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட வுடனே, 'லீகல் அட்வைஸரி குரூப்' என்ற கமிட்டியை நியமித்திருக்கிறது. நான் கடந்த ஐந்தாண்டுக் காலமாக இந்த மன்றத்தில் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். நான் தொழிலாளர் மானியத்தின் மீதுகூட என்னு டைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எங்களுடைய ஒரு கருத்தையாவது முன்பு தொழில் அமைச்சராக இருந்தவர் ஏற்றுக் கொண்டதாக இல்லை. எங்களைக் கலந்து ஆலோசனையாவது கேட்டிருக் கிறாரா என்றால் அதுவும் இல்லை எங்களைப்பற்றி அவர் அக்கறை எடுத்துக் கொண்டாரா என்றால் அதுவும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர், எல்லாத் தரப்பு

தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்தது மட்டுமல்ல, எல்லா சங்கங்களையும் அழைத்து இங்கே 'லேபர் அட்வைசரி க்ரூப்' என்ற கமிட்டி ஒன்றை நியமித்திருக்கிறது. குறிப்பாக, பேரறிஞர் அண்ணா அவர்களை எதிர்த்த திரு. குருமூர்த்தி அவர்கள் அந்தக் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துவிடுவேன் என்று சபதம் செய்த திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் ஒரு அங்கத்தினர். மற்றும், ஐ.என்.டி.யூ.சி., ஏ.ஐ.டி.யூ.சி-யில் ரைட்டிஸ்ட், லெப்டிஸ்ட் எல்லோரும், எச்.எம்.எஸ்., டி.எம்.கே. யூனியனைச் சேர்ந்த அங்கத்தினர்கள், அன்–அட்டாச்டு, அதாவது எதிலும் சம்பந்தப்படாதவர்களும் இந்தக் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கிறார்கள்.

முற்பகல் 11-00 எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் அரசியல் பாகுபாடின்றி எல்லாத் தொழிலாளர்களின் தலைவர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்து கொள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்றவுடன் லேபர் அட்வைசரி க்ரூப் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். நான் 25 ஆண்டுகளாக தொழிற்சங்கங்களோடு தொடர்பு கொண்டு வருகிறேன். இருந்தும் நான் அதில் இடம் பெறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 3 இடம் என்றால் 3 இடம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து இடம் என்பதாக தொழில் அமைச்சர் அவர்களால் எந்தவிதமான பாரபட்சமும் காட்டப்படவில்லை என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். தொழில் தகராறு வருகிறபோதெல்லாம் இந்த லேபர் அட்வைசரி க்ரூப் கூட்டப்படுகிறது. உதாரணமாக, கோவையில் மில் தொழிலாளர் பிரச்சினை வந்தபோது இந்த அட்வைசரி க்ரூப் கூட்டப்பட்டிருக்கிறது. உள் இருந்து வேலை நிறுத்தம் செய்யப்படுவது குறித்து உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பு வந்தவுடன் அதன்மேல் எழுகிற பிரச்சினைகளைப் பற்றி தொழிலாளர்களின் தலைவர்களின் கருத்தை அறிவதற்கு இந்த அட்வைசரி க்ரூப் கூட்டப்பட்டிருக்கிறது. இப்படி இந்த அரசு தொழிலாளர்களின்பால் அக்கறை கொண்டிருக்கிற காரணத்தினால்தான் எல்லாத் தரப்பினரையும் சந்தித்துப் பேசுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மே தினத்தை தொழிலாளர் தினமாக அறிவித்து அன்றைக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்று பழைய அரசாங்கத்தைக் கேட்டு வந்தோம். கட்சி வேறுபாடின்றி எல்லாத் தொழிற்சங்கங்களிலும் தீர்மானம் போட்டு அனுப்பி வைத்தோம். பலன் கிடைக்கவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே மே தினத்திற்கு விடுமுறை அளித்திருப்பதில் இருந்தே இது தொழிலாளர் நலத்தில் அக்கறையுள்ள அரசாங்கம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் ஒன்று. தேசியப் பண்டிகை விடுமுறை சட்டம்—1958-இன்படி மொத்தம் 8 நாட்கள் விடுமுறை அளிக்கப்படுகிறது. அதில் தேசிய விடுமுறை என்ற தலைப்பில் குடியரசு தினத்திற்கு ஒரு நாள், சுதந்திர தினத்திற்கு ஒரு நாள், காந்தி ஜயந்திக்கு ஒரு நாள் என்பதாக 3 நாட்கள் விடப்படுகின்றன. மற்ற 5 நாட்கள் பண்டிகைகளுக்காக விடப்படுபவை. அந்தப் பண்டிகை விடுமுறை நாட்களையும் அந்த அந்தப் பகுதிக்கு ஏற்றவாறு முதலாளிகளும், தொழிலாளர்களும் கலந்து பேசி எந்த எந்தப் பண்டிகைக்கு விடுவது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. நமது அரசாங்கம் சென்ற ஆண்டு மே தினத்திற்கு விடுமுறை அளித்தது. பல இடங்களில் மே தினத்திற்கு விடுமுறை அளித்துவிட்டு பண்டிகை நாட்களில் 1 நாளைக் குறைத்து வேலை செய்யும்படி சொல்லிவிட்டார்கள். விடுமுறை நாட்களில் கொடுக்கக்கூடிய ஊதியம் கொடுக்கப்படாமல் போய்விட்டது. ஆகவே நமது அரசாங்கம் ஒன்று செய்ய வேண்டும். முதலில் தேசீய விடுமுறை தினம் என்பதில் குடியரசு தினமும், சுதந்திர தினமும்தான் இருந்தது. அந்தச் சட்டத்தைத் திருத்தி சென்ற அரசு காந்தி ஜயந்திக்கு விடுமுறை தேசீய தினமாக அளிக்க ஏற்பாடு செய்தார்கள். அதுபோலவே இந்த அரசும் அந்தச் சட்டத்தைத் திருத்தி மே தினத்திற்கு தேசீய விடுமுறை தினங்களில் சேர்த்து விடுமுறை அளிக்கச் செய்ய வேண்டும். ஆக, இதன்படி

1968 மார்ச் 19] [திரு. எம். எஸ். மணி]

தேசிய விடுமுறை தினங்கள் என்று நான்கு நாட்களையும், பண்டிகை தினங்கள் என்று 5 நாட்களையும் ஆக 9 தினங்கள் தொழிலாளர்களுக்கு விடுமுறை கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் தகராறுகளைப் பொறுத்த வரையில் வேலை நிறுத்தம், அட்ஜுடிகேஷன் முதலியவற்றைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் பாக்டரி சட்டத்தை ஒழுங்காக முறையாகப் பார்த்துச் செயல்படுத்தினாலேயே பாதித் தொழில் தகராறு தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன். அது அவர்களால் முடியவில்லை. திருச்சியில் லேபர் ஆபீசர் என்று ஒருவர் இருக்கிறார். அவர் 3 ஜில்லாக்களைப் பார்க்க வேண்டிய பொறுப்புடையவர். அவருக்குப் ப்ராசிக்யூஷன் செய்கிற அதிகாரம் கிடையாது. அதன் காரணமாகவே தொழில் பிரமுகர்கள் அவரை லட்சியம் செய்வதில்லை. மதிப்பது கிடையாது. அசிஸ்டெண்ட் லேபர் இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ப்ராசிக்யூஷன் அதிகாரம் இருக்கிறது. என்னைக் கேட்டால் இவர்களை ஒன்றாக இணைத்து ப்ராசிக்யூஷன் அதிகாரம் கொடுத்து, மாவட்டத்திற்கு ஒருவராகப் போட்டுவிட்டால் இவர்களைக் கண்டு அந்த அந்த மாவட்டத்தில் உள்ள தொழில் அதிபர்களுக்குப் பயம் இருக்கும். எந்தவிதமான தகராறும் ஏற்படாது, உடனுக்குடன் நல்ல முடிவும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் சில தொழில்களை எடுத்துக் கொண்டால் பாக்டரி ஆக்டிலும் வருவதில்லை, ஷாப் ஆக்டிலும் வருவதில்லை. குறிப்பாக ரிக்ஷாக்காரர்களை எடுத்துக் கொண்டால்—முதலாளி யார் என்றே தெரியவில்லை. ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது தொழிலாளர்கள் அதைக் கொண்டுவர வேண்டும் என்று இருக்கிறது. முதலாளிகள் தனக்கு வேண்டிய இரண்டுபேரை கொண்டுபோய் லைசென்சு வாங்கி விடுகிறார்கள். தகராறு ஏற்படுகிறபோது லைசென்சைப் பிடுங்கிக் கொண்டு அனுப்பிவிடுகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எனக்கு முன்னால் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொழிலாளர், முதலாளிகள் தகராறு வருகிறபோது அரசாங்கம் சும்மா இருக்கிறது என்ற குற்றச்சாட்டை சாடையாகக் காட்டினார்கள். நான் திருச்சியைச் சேர்ந்தவன் அங்கே ஒரு பஸ் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அது என் தொகுதி. முதலாளிகளிடம் சென்று தகராறுக்கு என்ன காரணம் என்று கேட்டால், "எங்களுக்குத் தெரியாது, தகராறு ஒன்றுமே இல்லை" என்கிறார்கள். தொழிலாளர்களிடம் வந்து உங்களுடைய டிமாண்ட் என்ன, எதற்காகப் போராட்டம் என்று கேட்டால் "எங்களிடத்தில் டிமாண்டு ஒன்றுமே இல்லை" என்கிறார்கள். பின் வேலை நிறுத்தம் என் ? நான் குறிப்பாகச் சொல்வேன். பச்சையாகச் சொன்னால் ஒருசில தொழிலாளர்களுடைய தலைவர்கள் என்பவர்கள் இன்றைய தினம் விலகிவிட்டால் போராட்டம் நடக்காது. பிரச்சினை எதுவுமே இல்லையென்றாலும் இந்தத் தலைவர்கள் தங்களுடைய செல்வாக்குப் போய்விடுமோ என்ற அச்சத்தில் எதை எதையோ சொல்லி போராட்டத்தைத் துவக்கிவிடுகிறார்கள். அதைக் கண்டித்தாக வேண்டும். இன்றைக்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்றிருக்காவிட்டால் இன்னும் எத்தனையோ நூறு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கும். தொழிலாளர்களிடத்தில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிற காரணத்தினால்தான் எவ்வளவு பொறுமையாக இருக்கவேண்டுமோ அந்த அளவுக்குப் பொறுமையாக இருக்கிறது. தொழிலாளர், முதலாளி உறவு நல்ல முறையில் ஏற்பட வேண்டும் என்பதில் நமக்கு அக்கறை இருக்கிறது. அத்தகைய அக்கறையுள்ள ஒருவர் இந்த இலாக்காவுக்கு அமைச்சராக இருக்கிறார். இந்த நிலை நீடித்து, தொழிலாளர்களின் வாழ்வில் நல்ல நிலை ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. என். மருதாசலம்: உதவித் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியத்தின் மீது எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றைக்குத் தொழிலாளர்களிடையே பல குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாகத் தென்னிந்திய மில் முதலாளிகள் ஏப்ரல் முதல் மில்லை மூடிவிட்டுப் போவதாக அபாயச் சங்கு ஊதியிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இதை அக்கறையோடு கவனித்து தொழிலாளர்களைக் காப்பாற்ற மத்திய அரசாங்கத்தினிடத்தில் நிர்ப்பந்தத்தைக் கொடுக்க வேண்டும். அதற்கு அத்தனை மில் தொழிலாளர்களும், முதல் அமைச்சருக்கு உதவியாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இன்றைக்கு பல தொழில் ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் முதலாளிகள் தொழிலாளர்களை ஸ்டரைக் செய்யும் அளவுக்கு பலவிதங்களில் நிர்ப்பந்தப்படுத்துவதுதான். வேலை பளு, ஆட்குறைப்பு, சம்பள வெட்டு என்ற இந்த முறைகளை எல்லா இடங்களிலும் கையாண்டு வருகிறார்கள். குறிப்பாக அளபசால்ட் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் சில தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்கினார்கள். அதன் காரணமாகப் போராட்டம் நடந்தது. அந்த என்குயரி கோர்ட் நடந்து கொண்டிருக்கும்பொழுது மறுபடியும் நேற்று முந்தாநாள் ஸ்டிரைக் செய்யப்பட்டிருக்கிறது. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து செய்திருக்கிறார்கள். அந்த மில் முதலாளி இன்றைக்கு ஆட்குறைப்புச் செய்ததன் காரணத்தால் எல்லாத் தொழிலாளர் சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஸ்டிரைக் செய்து இருக்கிறார்கள். அதை உடனடியாக அரசாங்கம் தலையிட்டுத் தீர்த்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லேபர் கமிஷனர் தொழிலாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். லேபர் கமிஷனர் பஞ்சாயத்துக்காரர் மாதிரித்தான இருக்கிறாரே தவிர அவருக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. ஒரு முதலாளி விசாரணையில் மீறிவிடுவாரானால் அவரைக் கட்டுப்படுத்த அவரால் முடியாது. அதே சமயத்திலே விசாரணையில் தொழிலாளர்கள் மீறிவிடுவாரானால் தொழிலாளர்களுக்குப் பாதகமாக அவர் கூறப்படுகிறார் என்றுப் பேச வேண்டுமென்பதுதான் முறையாக இருக்கிறது. குறைகளை தீர்ப்பதற்கு காலதாமதம் செய்யாமல் அவர் முடித்து வைக்க வேண்டும். அப்படியில்லாமல் பஞ்சாயத்துக்காரர் மாதிரித்தான் இப்பொழுது இருக்கிறார். தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்திவிட்டால் அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அங்கே ஒரு வருஷம் இரண்டு வருஷம் ஆகிறது. அதுவரையில் அந்தத் தொழிலாளர்களுக்கு அரைச் சம்பளம் கொடுப்பதற்கு முதலாளிகளை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் கோர்ட்டுகளில் சீக்கிரமாகத் தீர்ப்பதற்கு முதலாளிகள் ஏற்பாடு செய்வார்கள்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் உடனடியாகக் கூலி நிர்ணயம் செய்து கொடுக்க ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் இப்பொழுது விலைவாசிகள் உயர்ந்திருப்பதற்கு தக்கபடி கூலியை உயர்த்திக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

கோவையிலே எல்லா முனிசிபாலிடிகளிலும் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தினசரிச் சம்பளமாக ஒரு நாளைக்கு 3·2 காசு கொடுக்கப்பட்டு வந்தது. அவர்கள் வருஷக் கணக்கிலே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் 5, 6 வருஷங்கள் வேலை செய்துகொண்டு வருகிறார்கள் அவர்களுக்கு நிரந்தரச் சம்பளம் கிடையாது. 3·2 காசு தினசரி சம்பளமாகக் கொடுத்து வந்தார்கள். ஆனால், அவர்களுக்குப் போன மாதத்திலிருந்து 16 பைசாவைக் குறைத்து 2·86 பைசாதான் கூலி கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன வென்று தெரியவில்லை. எஞ்சினியரைக் கேட்டால் அப்படித்தான் எல்லா முனிசிபாலிட்டிகளிலும் சர்க்குலர் வந்திருக்கிறது, நாங்கள் என்ன

செய்வது என்று சொல்லுகிறார்கள். விலைவாசிகள் ஏறிக்கொண்டே இருக்கிறது தவிர, இறங்கவில்லை. குறைந்த கூலியைக் கூட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டெக்ஸ்டைல் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களும் லேபர் கமிஷனரும் இருந்து முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அந்த முடிவின் அடிப்படையில் 5 ஆயிரம் தொழி லாளர்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் 2,000 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். இன்னும் மூவாயிரம் பேர்களுக்கு சர்வீஸ் போய்விட்டது. வேலை செய்து நின்ற காலங்களுக்கு அவர்களுக்குச் சம்பளமும் கிடையாது. இப்படிப்பட்ட நெருக்கடி காலத்தில் விவசாயம் க்ஷீணித்துக் கிடக்கிற நேரத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிற காலத்திலே இன்னும் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தக்கூடிய போக்கிலே முதலாளிகள் தொழிலாளர்களை நிர்ப்பந்தப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். மத்திய சர்க்காருடைய சட்டம் இதில் குறுக்கிட்டாலும் அந்தச் சட்டத்தை எதிர்த்துப் போராடுவதற்கு சென்னை சர்க்காருடன் சேர்ந்து நிற்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜெயராமன்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் உலகத்தின் முதுகெலும்பாக உழைக்கின்ற தொழிலாளி மக்களைப் பற்றிப் பேசுகின்ற நல்வாய்ப்புப் பெற்றமைக்காக நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய தினம் இருபது, முப்பது ஆண்டுகளாக வெள்ளைக்காரனுடைய ஆட்சிக் காலத்திலிருந்து தொழிலாளி மக்களுக்கு இந்த நாட்டிலே நெசவாளி மக்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், படித்த தொழிலாளர்கள் எல்லாத் தொழிலாளி மக்களும் உரிமையைப் பெற முடியாமல் உரிமைகளை இழந்து நாட்டிலே அனாதைகளாக புழுக்களாக நசுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தக் கொடுமை யிலிருந்து ஏழை மக்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்றும், நாட்டிலே ஜனநாயக ஆட்சியை அமைக்க வேண்டுமென்றும் நல்லதொரு அரசை அமைக்க வேண்டுமென்றும் நல்லதொரு தலைமையைத் தேர்ந் தெடுத்து ஜனநாயகத்தை நிலவச் செய்து, தொழிலாளி மக்களை வாழ வைக்க வேண்டுமென்றும் தொழிலாளர்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற நல் இதயம் படைத்த ஒருவரை அமர்த்த வேண்டும் என்று பல ஆண்டுகளாக எண்ணி எண்ணி ஏங்கி நாட்டிலே மக்களுக்கு நல்லறிவை எடுத்துச் சொல்லி இந்த நாட்டிலே தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகிற ஒரு கட்சி, தொழிலாளர்களுடைய குறைகளை உணர்ந்த ஒரு தலைவர் தொழிலாளர்களின் இன்னல்களைப் போக்கக்கூடிய பண்புள்ள மனதைப் பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்சிதான், அந்தக் கட்சிதான் ஏழை எளிய மக்களை வாழ வைக்க முடியும், மக்களுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்றிக் கொடுக்க முடியும், யாரும் உணர முடியாத கொடுமையை தொழிலாளர்களின் கஷ்டங்கள் அந்தக் கட்சியின் தலைவரான பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் உணர்ந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேதான அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆட்சியை அமைக்க வேண்டுமென்று எண்ணி தொழிலாளி மக்கள்தான் இந்த அரசை அமைத்திருக்கிறார்கள். அரசை அமைத்தவுடனே இந்திய நாட்டிலே ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்கள், தொழிலாளர்களுக்குப் பாடுபடுகிறோம் என்று சொல்கிறவர்கள் மில்கள் மூடப்பட்ட நேரத்தில் அவர்கள் வேலையிழந்து மனைவிமக்களுடன் தெருவிலே பசி பசி என்று கதறுகிற நேரத்திலே அவர்களுக்கு எந்தத் தலைவராவது உபகாரமாக எந்த நிதியாவது கொடுத்து இருக் கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக எவருக்கும் அப்படிப்பட்ட நல்ல இதயம் ஏற்படவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். அப்படி ஏற்பட்ட நேரத்தில் இன்றைய தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு கோவையிலே மில்களை மூடிவிட்ட காரணத்தினாலே நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தெருவிலே பசிக் கொடுமை

தாங்க முடியாமல் வறுமையால்வாடி கண்ணீரை விட்டுக்கொண்டு இருந்த நேரத்திலே தொழிலாளர்களின் இதயங்களிலே குடியேறிய அறிஞர் அண்ணு அவர்களதான் அவர்கள் நிதியிலிருந்து 2 லட்சம் ரூபயை எடுத்துக் கொடுத்து நிவாரணம் அளித்து இருக்கிருர்கள் என்று சொன்னுல் சுதந்திரம் பெற்ற பிறகு அப்படிப்பட்ட நல்ல இதயம் யாருக்காவது இருந்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. தொழிலாளர்களின் வாழ்வுக்காகவும் அவர்களுடைய வேலைக்காகவும் உத்திரவாதம் கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்க வேண்டுமென்ற இதயம் இருக்கிறது. இருந்தாலும் கூட மத்திய சர்க்கார் போடுகின்ற சட்டதிற்குட்பட்டு நடக்க வேண்டுமே தவிர தொழிலாளர் நலன்களுக்கு எந்தவிதமான சட்டத்தையும் இயறறக்கூடிய பொறுப்பு தமிழக அரசுக்கு இல்லையென்பதை நான் உணர்ந்து சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படி இருந்தாலும் இந்த நாட்டின் தொழிலாள மக்களுக்கு என்றைக்கும் தமிழக அரசு உறுதுணையாக இருந்து எந்த அளவுக்கு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முடியுமோ அந்த வழிமுறைகளில் உதவி செய்வதற்குத் தமிழக அரசு என்றைக்கும் பின் வாங்காது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நானும் ஒரு தொழிலாளிதான். மிட்டா மிராசு அல்ல. குடியாத்தத்தில் மில்லில் மேஸ்திரியாக வேலை பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், வெள்ளைக்காரன் ஆட்சியில் தொழிலாளர்கள் சேர்ந்து மகாத்மா காந்தி பிறந்த நாளைக் கொண்டாட வேண்டுமென்று லீவ் கேட்டபோது கொடுக்க முடியாது என்று சொல்லி சிறையிலே தள்ளப்பட்டு பிறகு சுதந்திரம் பெற்றவுடன் காங்கிரஸ்காரர்களாக இருந்தவர்கள் எனனையும் பழிவாங்கிவிட்டு பிள்ளையார் கோயிலுக்கு அபிஷேகம் செய்து விட்டு வந்துவிட்டார்கள் குடியாத்தத்தில் இருந்த காங்கிரஸ்காரர்கள். பாட்டாளியின் பக்கத்தில் அன்றைய அரசு இல்லை யென்பதற்காக இதைச் சொல்லுகிறேன். பணக்காரர்களின் பக்கத்தில், முதலாளிகளின் பக்கத்தில்தான் அன்றைய அரசு இருந்ததே தவிர, ஏழை மக்களை வெறுத்துப் பார்க்கும் நிலையில் இல்லை. அவர்கள் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகிருர்கள். தீண்டாமை பற்றிப் பேசுகிருர்கள், நாட்டைப் பற்றிப் பேசுகிருர்கள். ஆனல் நாட்டு மக்களை வாழ வைக்க வேண்டுமென்ற முறையில் காரியமாற்றியிருக்கிருர்களா என்று பார்த்தால் இல்லை. அவர்கள் தொழிலாளர்களை நசுக்கிப் பிழிகின்ற முதலாளிகளுக்குப் பக்கபலமாக இருந்து தொழிலாளர்களுடைய உரிமையைப் புறக்கணித்து தொழிலாளர்களைக் கண்ணீர் சிந்த வைத்தார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் வாழ்வளிப்பதற்கு இன்றைய தினம் இருக்கின்ற அத்தனை பேரும், சட்ட மன்ற உறுப்பினர்களும் தொழிலாளர்களுடைய உரிமையைப் பாதுகாக்கின்ற முறையில் பணிபுரிய வேண்டுமே தவிர, முதலாளிகளுக்குப் பக்கபலமாக இருக்கக் கூடாது. அந்த முறையில் பணி புரிந்தால் நாட்டின் உயர்வுக்கு வழி தேட முடியும் என்று சொல்லிக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த மன்றத் தலைவருக்கு வணக்கம் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானயத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை யொட்டி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் நாட்டிலுள்ள சமுதாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியினர் என்பதில் ஐயப்பாடு இல்லை. எல்லாக் கட்சி அங்கத்தினர்களும், ஆளும் கட்சி அங்கத்தினர்களும், எதிர்க் கட்சி அங்கத்தினர்களும் ஒன்றுபோல் அதைக் கூறுகின்றனர். ஆனல் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பகுதியினருக்கு நம்முடைய அரசு அளிக்கின்ற ஆறுதல் என்ன ? அளிக்கின்ற சேவை என்ன ? அளிக்கின்ற பாதுகாப்பு என்ன ? இவற்றைப் பற்றியெல்லாம் இந்த மானியத்தின் வாயிலாகச் சற்றுச் சிந்திக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம்.

தொழிலாளர் உழைப்பினுல்தான் நாடு முன்னேறும், நாட்டின் பொருளாதார நிலை சீரடையும் என்பதில் ஐயப்பாடு இல்லை. இவர்களுடைய வாழ்க்கையைச் சீரோடும், சிறப்போடும் வளம் பெறச் செய்யும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கின்றது. இன்றைய அரசைச் சார்ந்தவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, இவர்களுடைய நிலைமையைப் பற்றி, இவர்களுடைய வாழ்க்கையைச் செம்மையுறச் செய்வது பற்றி மிக அதிகமாகக் கூறி வந்தார்கள் என்பது நான் கூருமலே யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். அவர்கள் கூறியது அத்தனையையும் அவர்கள் அமல் நடத்துகிருர்களா என்று பார்த்தால் இல்லையென்று தைரியமாகக் கூற முடியும்.

இந்த நாட்டில் இன்று தொழில் வாய்ப்பு எப்படி இருக்கிறது என்பதைப்பற்றிச் சற்றுச் சிந்திக்க வேண்டும். கழிந்த ஆண்டு இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்—"இந்த அரசின் கொள்கை தொழிற்துறைகளை விஸ்தரிப்பது அல்ல; இருக்கின்ற தொழில்களை நல்ல முறையில் சீரும் சிறப்புமாக நடத்துவதுதான்" என்று சொன்னுர்கள். அந்த நிலையில் தொழிற்துறையில் மேலும் விருத்தியடையும் நிலைமை இல்லை. ஆகவே, புதிதாகத் தொழில் வாய்ப்பு ஏற்பட முடியாத நிலை அரசாங்கத்தின் கொள்கையால் ஏற்பட்டிருக்கிறது.

நமது மாநிலத்தில் எண்ணற்றவர்கள், ஆயிரக் கணக்கில் அல்ல, லட்சக் கணக்கில் வாலிபர்கள் ஆண்டுதோறும் படித்து வெளி வந்து கொண்டிருக்கிருர்கள். ஒவ்வொரு வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திலும் ஆயிரக் கணக்கான வாலிபர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு எப்போது வேலை கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருக்கிருர்கள். என்னுடைய மாவட்டத்தில் எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் 15,000 பேர் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டு வேலை கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிருர்கள். அது மட்டுமல்ல. பட்டதாரிகள், பொறியியல் கல்வி பயின்றவர்கள், பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் வேலை வாய்ப்புத் தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிருர்கள். இவர்களுக்கு இந்த அரசு என்ன சமாதானம் கூறுகிறது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கூறுவார்கள் என்று எண்ணுகிறேன். இவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பளிக்க இந்த அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய பொதுமக்களும் நாமும் ஆவலாக இருக்கிருேம் என்பதைச் சபாநாயகர் அவர்கள் மூலமாக அமைச்சருக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது வேலையில் இருப்பவர்களுக்கே பாதுகாப்பு இருக்கிறதா, செக்யூரிடி-ஆப்-எம்ப்ளாய்மெண்ட் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூற வேண்டும். கழிந்த ஆண்டில் எத்தனை மில்கள் மூடப்பட்டிருக்கின்றன, எத்தனை மில்களில் ஸ்டிரைக் ஏற்பட்டு லாக் அவுட் ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன். அந்தப் பட்டியலைப் படித்துக் காட்ட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் விரும்புவார்கள் என்று நினைக்கவில்லை. பட்டியலை எடுத்துக் கூற காலம் போதாது. முக்கியமாக, பஞ்சாலைகள் எத்தனை மூடப்பட்டிருக்கின்றன? முதல் தேதியன்று எத்தனை மில்களை மூடப் போகிருர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். நம் மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிலாளர்கள், நெசவாளர்கள் வேலை இழந்திருக்கிருர்கள். மதுரையிலுள்ள ஒரு மில் அடைக்கப்பட்டு தொழிலாளர்கள் அங்கே வேலையில்லாமல் தவிக்கிருர்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். செங்கோட்டையில் ஒரு மில் அடைக்கப்பட்டு ஏகதேசம் ஆயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்திருக்கிருர்கள். சங்ககிரியில் சிமெண்ட் தொழிற்சாலையில் வேலை செய்கிற 600 கைண்ஸ் தொழிலாளர்கள் வேலை இழந்து ஸ்டிரைக் செய்கிற நிலைமையில் இருக்கிருர்கள் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இந்த

நிலையில்தான் இருக்கிறது. அரசு முதல் கடமையாக இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலையிலே பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஒருவேளை முதலாளிகள் நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறினாலும், அந்தத் தொழில் நிறுவனங்களைப் பற்றிப் பரிசீலிக்க கமிட்டி அமைக்க வேண்டும். அரசாங்கம் அதை ஏற்று நடத்த வேண்டும் அல்லது தொழிலாளர்களையே அதை ஏற்கச் செய்ய வேண்டும். நஷ்டமாக நடக்கின்ற தொழில் நிறுவனங்களைக் கூட லாபகரமாகத் தொழிலாளர்கள் நடத்திக் காட்ட முடியும். கடந்த காலத்தில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்த அரசு தவறிவிட்டாலும் கூட, வருகிற காலத்திலாவது அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

நமது அமைச்சரவர்கள் 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் 11-ம் நாள் இந்த சபை முன்னர் ஓர் அறிக்கையை சமர்ப்பித்தார்கள். அன்று அந்த அறிக்கையின் வாயிலாகவும் மற்றும் ஓர் அறிக்கையின் வாயிலாகவும் இந்த அரசின் கொள்கையை விளக்கமாகக் கூறியிருந்தார்கள். இந்த நாட்டில் இந்த அரசை "தொழிலாளர் அரசு" என்று சட்டமன்ற அங்கத்தினர் கூறுவது மட்டுமல்ல, தொழிலாளர்களும் இதுவரையில் அவ்வாறுதான் நினைத்துக் கொண்டு இருந்தார்கள். அந்த அறிக்கையில் அமைச்சரவர்கள் முதல் பாராவில்—தொழிற்கூடத்திற்கு வெளியே தொழிலாளர்கள் மனிதர்களாக வளர வேண்டிய அளவுக்கு வளராமல் தடுக்கிற சமூக நெருக்கத்திற்கு அதிக அளவில் உட்படாமல் அவர்கள் முழு அளவில் வளர வேண்டுமென்பதே இந்த அரசின் தொழிலாளர் கொள்கையாகும்—என்று வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இது கொள்கை ஆகத்தான் இருக்கிறது. கழிந்த ஓர் ஆண்டு காலத்தில் இந்த அரசின் கீழ் எத்தனை தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், எத்தனை தொழிற்கூடங்களில் துப்பாக்கி சூடு நடந்தது என்பதை எல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்டத் தேவை இல்லை.

எனக்கு முன்பு பேசிய, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மெம்பர் ஒருவர் காங்கிரஸ் அரசாங்கத்தில் எத்தனை இடத்தில் தொழிலாளர்கள் மீது சுட்டார்கள்; ஆனால் இந்த அரசு எத்தனை தங்கமான அரசு, தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற அரசு என்று கூறினார்கள். அவர்களுடைய ஆட்சியில் இந்த ஓராண்டுக் காலத்தில் பறவைகளை வேடன் சுடுவது போல் மனிதக் கூட்டத்தில் சுடக்கூடிய நிகழ்ச்சி கூட நடந்திருக்கிறதென்று நான் வேதனையுடன் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய திரு. ராமமூர்த்தி அவர்கள் கூறியது தவிர இன்னும் சில குறிப்புகளையும் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த அறிக்கையின் 6-வது பாராவில், பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் கூட்டு நிர்வாக மன்றங்கள் (ஜாயிண்ட் மானேஜ்மெண்ட் கௌன்சில்) அமைப்பது குறித்தும் அரசாங்கம் முனைந்து நாட்டம் செலுத்தும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறையில் கழிந்த ஓராண்டுக் காலத்தில் எத்தனை ஜாயிண்ட் மேனேஜ்மெண்ட் கௌன்சில் அமைக்கப்பட்டன, அந்த அமைப்பினால் எத்தனை தொழிலாளர்கள் நன்மை பெற்றிருக்கிறார்கள் என்பதைக்கூட அமைச்சரவர்கள் பதில் கூறும்போது தெரிவித்தால் நன்றாக இருக்கும். (மஞ்சள் விளக்கு எரிந்தது) தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் 3 பேர்கள்தான் இதில் பங்குகொள்ள இருக்கிறார்கள். ஆகவே எனக்கு இன்னும் சில நிமிஷங்கள் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குச் சட்ட உதவி அளிப்பதுபற்றி அமைச்சரவர்கள் அன்று இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள். அது இந்த அறிக்கையின் 8-வது பாராவில் கூறப்பட்டிருக்கிறது. தொழிற்சங்கங்களுக்கு எவ்வாறு சட்ட உதவி அளிப்பது என்பதை இம் மாநில அரசு பரிசீலனை செய்து

வருகிறது—என்று அமைச்சரவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். சட்ட உதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால் இந்த ஓராண்டுக் காலத்தில எத்தனை லாயர்களை தொழிலாளர்களுக்காக இந்த அரசு நியமித்திருக்கிறது? உயர்நீதி மன்றத்தில் ஒரு லாயரையாவது நியமித்து தொழிலாளர்களுக்கு இந்த அரசு நன்மை அளித்திருக்கிறதா என்பதைக் குறித்து இந்த ஆண்டு அறிக்கையில் காண்பதற்கு இல்லை. ஆகவே, இந்த அரசு கழிந்த ஆண்டு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதைத்தான் இந்த ஆண்டு அறிக்கையின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. சென்ற ஆண்டு அமைச்சரவர்கள் தெரிவித்ததைக் கொண்டு தங்களுக்குச் சட்ட உதவி கிடைக்குமென்று தொழிலாளர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிற அறிக்கையில் கழிந்த ஆண்டு கொடுத்த வாக்குறுதி எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து ஏமாற்றம் அடையும் தன்மைதான் இருக்கிற தென்பதை அமைச்சரவர்களுக்குச் சபாநாயகர் மூலமாகத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, அந்த அறிக்கையின் 14-வது பாராவில் அமைச்சரவர்கள் தங்கள் நுண்ணிய, தெளிந்த உள்ளத்தின் கொள்கையை நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது தொழிலாளர் சட்டங்களை மீறியதற்காகத் தனிப்பட்ட தொழில் அதிபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்போது, பொதுத்துறை தொழில் நிறுவனங்கள் தொழிலாளர் சட்டங்களை மீறுவதை அரசு அனுமதித்து வரும் போக்கே, எதற்கெடுத்தாலும் அரசின் மீது குறைகூறும் நிலைக்கு ஓரளவு பொறுப்பாகும் என்று தெளிந்த எண்ணத்தில் அதை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் இருக்கும் நிலைமையை சற்று சிந்திக்க வேண்டும். தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தால் நடத்தப்படும் நிறுவனங்களும் இருக்கின்றன. அரசாங்கப் போக்குவரத்து நடத்தப்படுகிறது. இன்னும் கன்னியாகுமரியில் சர்க்காரால் நடத்தப்படுகிற ரப்பர் தோட்டம் இருக்கிறது. அங்கே தொழில் சட்டங்கள் ஒன்றுமே நடைமுறையில் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட வேஜ் போர்ட் ரெகமண்டேஷன் கூட இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை என்று நான் அமைச்சரவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே, சபாநாயகர் மூலமாக நான் கேட்டுக்கொள்வது என்ன வென்றால் வேஜ் போர்ட் ரெகமண்டேஷன் அந்தத் தொழிலாளர்களுக்குப் பொது நடைமுறையில் வரும் மற்ற சட்டங்கள் அமல்படுத்தப்படுமா என்பதை பதில் கூறும்போது அமைச்சரவர்கள் தயவுசெய்து கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் அமைச்சரவர்களும் மற்ற எல்லா அமைச்சரவர்களும் இது தொழிலாளர் அரசாங்கம், இது லேபர் கவர்ன்மெண்ட் என்று கூறுகிறார்கள். அந்த எண்ணம் இருந்திருக்குமானால், இந்த மாநிலத்தில் ஒரு சில இடங்களில் கொண்டு வந்துள்ள ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை ஒருவேளை எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க முடியா விட்டாலும் ஆர்கனைஸ்ட் லேபரர்ஸ் என்று சொல்லக்கூடிய வகையில் ஆங்காங்கு தொழிற்கூடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காவது கொடுக்காதிருப்பார்களா? தொழிலாளர்களுக்கு ஒரு படி அரிசி திட்டத்தை இதுவரை கொடுக்கத் தவறியிருந்தாலும் இனிமேலாவது அதை சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Chairman, Sir, at the very outset I would like to clearly enunciate the Swatantra Party's Labour Policy. It was only in the last session when the discussion on the Budget of the Madras State Electricity Board took place, our Hon. Chief Minister intervened and said that if the Swatantra Party was so much trade-union-conscious, "hats off to the

Swatantra Party ". That was the remark he made at that time. Subsequently I had the pleasure of meeting my revered leader, Rajaji. Then Rajaji said, ' Does the Chief Minister really think that we were not so labour-conscious till such time you actually mentioned it in the House '. I said, ' Yes, Sir '. Then Rajaji told me, ' The fault lies not with the Chief Minister but with ourselves because we failed to properly impress upon the people the exact amount of freedom or the exact amount of facilities that the Party wants to be afforded to the factory workers as well as the other workers '. Sir, according to the wish of my leader, I would now like to clearly read out the 18th Principle contained in the Statement of Principles of the Swatantra Party adopted by the All India Convention of the party at Bombay in August 1959. It clearly states—

" The Party stands for a fair deal for labour in fields, factories and shops, and for correlating wages to increased productivity and for the workers' right to organise for the purpose of collective bargaining. It stands for harmonising the interests of capital and labour when they get into conflict. "

This clear-cut policy has already been enunciated by our party. Unfortunately due to the fact that we have not been able to publicise this particular point of view, we have been dubbed as anti-labour or pro-capitalist. Sir, the Swatantra Party is one of the most important parties in the world that essentially stands for labour. It is a labour-oriented party for the following reasons :—

1. Unless the industrial growth outpaces the staggering growth of unemployment and underemployment, labour will not be benefited. This is the fundamental crux of the problem. Unless we have got employment potential, how can labour be benefited?

Now, the number of unemployed persons is much more than the employment potential. Unless the ratio is proper, the rights of the workers will be affected and they will not be benefited. For instance, for every worker who goes out of a factory for some reason or other, there will be 10 persons waiting outside and who are prepared to walk into the factory for a paltry sum. This is the unfortunate situation which the workers are facing. If the workers are united, the capitalists will have to come to their door as is happening in Japan, West Germany and America and to some extent England. In fact labour or trade unions are strong only in countries where our party principles are followed. But are workers allowed to have trade unions in China? Definitely not. Can the trade union leaders go before Chou-en-Lai and demand their rights? If they do so, what will be their fate? They will be simply pulverised or shot. I do not know of any trade unions which have been given recognition in China. Can the trade union leaders go and stand before Chou-en-Lai and demand their wage rights? If they demand, we know what will happen to them. This is matter which everybody must thoroughly analyse and come to a conclusion.

The fundamentals of the Swatantra Party are incentives and bonus, though bonus is termed as old-fashioned and revisionism by the Chinese Communists. In recent times when Khruschev said that he would give incentives to workers, the allegation of his being a revisionist was made against him. People in China say that payment of bonus is revisionism. Our party wants bonus. In fact, we want the workers to get more from the profits of the capitalists.

Labour policy and industrial policy are inter-twined. As long as the number of unemployed is out of proportion to the number of jobs available, labour will always be bought cheaply by the capitalists. In places where there are a number of starving and half-starving unemployed and underemployed people, capitalists will say that they can work for one rupee or eight annas. Can it be done in America and Japan? If the workers do not go to work, what will be the position of the capitalists? They will suffer. Naturally the workers go on demanding as if they have got a right. When there is limited employment and thousands of unemployed, if one worker is ousted, hundreds of unemployed people will walk into the hands of the capitalists.

Swatantra Party is fully aware if the despicable sight of short-sighted and self-seeking permit-licence-quota beneficiaries, who did not hesitate to ape and serve the Westerners during the British regime and later on change to coarse Khadder cloth and penetrate the rank and file of the Congress Party, now trying to sabotage the D.M.K. Party by putting on a black and red attire in recent times. I want this ministry to be very careful and watchful about those who go after these permits and licences. Only the removal of this armoury of permit licence quota will teach a lesson to these self-seekers by bringing in a healthy competition among the capitalists instead of the present unhealthy competition that exists between the labourers in the matter of seeking jobs.

Swatantra Party is against political parties exploiting the labourers. This is a point on which our party has been very much misunderstood. Our Party Leader Rajaji wants that an employee of the State Bank of India only should be the leader of the State Bank Employees Union and an employee of 'The Hindu' to be the leader of the Hindu Office Employees Union. He will be intimately connected with the working of the undertaking, he knows what it is to strike, he knows the difficulties and shortcomings and the demands of the workers. There will be no exploitation of the poor, gullible workers who do not know what is happening behind their back. Political parties exploiting labourers must be put an end to. The United Auto Workers of the United States of America has 1,60,000 employees. There is the Mitsubishi in Japan. The trade unions of these institutions are very strong, and there, leaders are chosen from the rank and file of the workers. The responsibility for driving the labour to self-seeking trade union leaders rests not on the politicians, not

on the workers, but on the capitalists themselves. Capitalists are like the Basmasura. They have brought upon themselves the wrath of the people. Capitalists do not respect the leaders if they come from independent trade unions. I know that an ordinary worker in a factory is not allowed even a chair by these capitalists. So the workers become desperate and they do not know what to do. Workers are not given respect. So they seek some M.L.A. or M.P. and the capitalists respect him. They utilise the M.L.A. or M.P. to further their aims and get what they want. I put the entire blame for making the poor workers to seek outside leadership squarely on the shoulders of the capitalists. As long as capitalists recognise, respect and even fear trade unions with political leadership on the one hand and refuse to recognise and treat with contempt independent trade unions, the workers will be slowly and steadily turning to political parties for trade union leadership. It will thus be seen that these capitalists themselves are responsible for to-day's unfortunate state of affairs, namely the exploitation by political parties of the unfortunate workers.

Trade unions will be strong if secret ballot system is introduced for the election of union leaders and office bearers and for the decision on strikes. I recently read in Western newspaper that an institution in England wanted to have a strike. The wife of an ordinary worker asked: why do you strike? That is the freedom they enjoy. It is not the figment of imagination or the brain wave of a trade union leader to initiate a strike. The labourers must instruct that a strike must be conducted. The best method is that there should be a secret ballot so that every worker will have a say in the matter.

I shall touch very briefly on some more points because the time at my disposal is very limited. Trade unions will be strong only if the trade unions have a good amount of strike fund. This is a most important point.

(The amber light was burning)

I have taken the permission of the Deputy Speaker. I am the only speaker from my party and I shall be grateful if you will allow me some more time. I shall take five more minutes.

I referred to Mitsubishi of Japan and the United Auto Workers in the United States which has 1,60,000 workers. They have got a strike fund of 70 million dollars, so that the workers can withstand even if they strike for three months and see that the capitalists come and fall at the feet of these pepole. To-day if our workers strike for half a dozen days, they have no wherewithal to maintain themselves and their family. Unless they have a good amount of strike fund, they will not be able to teach a lesson to the self-seeking Capitalists.

I would like to sound a note of caution. Extension of the Factories Acts to small industries like petty shops will ruin the poor man. If the Punjab is foremost in the matter of cottage

1968 மார்ச் 19] [Dr. H. V. HANDE]

industries, it is because of a large number of small shops. Let us take a pansupari shop. How much does the owner earn? All these things will have to be borne in mind before the Factories Act is extended.

Strikes should really benefit the workers. Strikes should be without violence because they will ultimately harm the workers themselves. No real Indian who is really interested in workers will incite the workers to acts of violence, incendiarism and arson. My revered leader wants that the fair name of this Ministry should not be sullied by dangerous methods. If this Ministry falls, one cannot expect a Ministry which will be more labour-oriented. So everybody must co-operate with the Ministry.

State enterprise must show a way to private enterprise. In the Ennore Thermal Scheme and the State Transport, the demands of the workers will have to be properly met. I will finish my speech in three more minutes. The Government must be able to tell the capitalists 'We have given these facilities to the workers and you should also provide your workers with these facilities'.

Sir, I now come to the next point, viz., Ennore Thermal Project. There is a serious labour problem there. There is a move to enter into contract with Engineering Companies thereby throwing out of employment a number of persons. Even yesterday 32 persons had been retrenched and I would request the Hon. Minister for Labour to look into the matter.

Now I come to the most important point which my hon. Friend, Thiru D. S. Authimoolam, wanted me to raise. That is with regard to the Beedi workers in Tirunelveli district. In 1958 the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act was enacted by the previous Government but it was not enforced. In 1965 a Committee which went into the matter had submitted a report and that report has not seen the light of the day. One of the main demands of the beedi workers is that the wages which they are normally getting should be protected. Of course, I understand that there is an inter-State problem involved in it and if the wages of the workers are increased, it may be stated that they will not be able to compete with the other States. But I suggest that the State Government should take up the matter with the Centre and see that the rights and privileges of these lakhs and lakhs of workers are protected and the Act is enforced.

Lastly, a word of praise to the Employees State Insurance Hospital. Day in and day out and in season and out of season, I had been complaining about this Hospital because the hospital did not have the required number of specialists. Now I am very glad to know that after all, the request of mine has been complied with and the credit mainly goes to the Hon. Minister for Public Health.

[Dr. H. V. Hande] [1968 மார்ச் 19

Finally a word of praise to the newspaper, 'NAVAMANI' that is run on co-operative lines. For instance, the profit that the 'Navamani' gets is shared by the workers and that is a healthy state of affairs. The labourers must have a direct interest in the prosperity of the company or factory and that is the object of the cut motion given notice of by my hon. Friend, Thiru K. M. Ramaswamy Goundar. With these words and with the hope that this Government with our co-operation will be able to look after the interest of the labourers, I conclude my speech.

* **திரு. எஸ். அக்னிராஜு**: தலைவரவர்களே, இந்த தொழிலாளர் நலன்—தொழிற்சாலைகள் என்ற மானியத்தின்மீது எனது கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தொழிலாளர் நிலைமைபற்றி 52 பக்கங்களிலே நிறுவனங்கள் குறித்தும், ஊதியம், தொழிற் தகராறுகள், சமூகப் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் முதலியவற்றைப் பற்றியும் விரிவாக, பக்கத்திற்குப் பக்கம் நல்ல புள்ளி விவரங்களோடு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொழிற்சாலையும் சரிவர இயங்க வேண்டுமென்றால் அங்கே ஆய்வு செய்ய வேண்டுமென்று கருதியும், அங்கே இருக்கக்கூடிய குறைபாடுகளைக் களையவேண்டுமென்று கருதியும் தகுந்த நடவடிக்கையெடுத்து தொழிற்சாலைகள் சட்டத்தைத் துரிதமான முறையில் நடைமுறைக்குகொண்டு வந்து செயலாற்றியது. கடந்த ஆண்டிலே மற்றைய ஆண்டுகளைவிட அதிகமாகத் தொழிற்சாலைகளை ஆய்வு செய்தும், விதிகளை மீறிய 750 தொழிற்சாலை நிர்வாகங்கள்மீது நடவடிக்கை எடுத்தும் தொழிலாளர்களைப் பாதுகாத்தது. அது தொழிலாளர்களுக்கு நல்ல மன நிம்மதியைத் தருகிறது.

அதே நேரத்தில் கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ், எல்லாமே அந்தச் சட்டத்திற்கு அடங்கவேண்டுமென்று கருதி, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்காக 1966-ம் வருஷம் இருந்ததைவிட 1967, 1968-ஆம் ஆண்டுகளின் கண்ணோட்டத்தைப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு வருடமும் அதிகமாக்கப்பட்டு வருவது தெரிகிறது.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புத்தரவேண்டுமென்று, நாம் நினைக்கும் நேரத்தில் தொழிற்சங்கங்களில் இருக்கக்கூடிய தலைவர்களை அடிக்கடி சந்தித்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னால் அவர்களின் கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, மாநில அளவிலே அனைத்துத் தொழிற்சங்கங்களையும் கொண்டு, கட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு தலைவரைக் கொண்ட கமிட்டி அமைத்துசெயல்பட்டு வருகிறது. பல தொழிற்சங்கங்கள் இருக்கின்ற நேரத்தில் பலதரப்பட்ட கருத்துக்களும் சொல்லப்பட்டாலும், தொழிலாளர்களுக்கு நேரடியாக நன்மை தரக்கூடியது எது எது என்று எந்தெந்தத் தொழிற் சங்கம் சொல்லுகிறதோ அந்தக் கருத்துக்களையெல்லாம் ஒன்று திரட்டி அதை பின்னால் அரசாங்கத்தின் கொள்கையாக மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே, அது எந்தக் கட்சி சார்புடையதாக இருந்தாலும்அவர்களை ஒன்றாகச் சேர்த்து அந்தத் தொழிலாளர் நலக்குழு என்ன முடிவு சொல்லுகிறதோ அதை அமலுக்குக் கொண்டு வருகிறது. அப்படிக் கொண்டுவரும் நேரத்தில் தேசீய பண்டிகைகள் விடுமுறைகள் சட்டத்தைக் கொண்டுவந்தது, எந்தவொரு சிறு நிறுவனமாக இருந்தாலும் அந்த நிறுவனத்திலுள்ள அத்தனை தொழிலாளர்களும் நன்மையடைய வேண்டுமென்று கருதி அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

1968 மார்ச் 19] [திரு. எஸ். அக்னிராஜு]

அடுத்து, மினிமம் வேஜஸ் ஆக்ட் பிரகாரம் ஏறத்தாழ எட்டு தொழிற்சாலைகளை அந்தச் சட்டத்திற்கு உட்படுத்தி, தொழிலாளர்களுக்கு நன்மை விளைவித்திருக்கிறது. குறைந்த ஊதியம் நிச்சயம் இதுதான் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அதற்கு அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

எனக்கு முன் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இழக்கப்பட்ட வேலை நாட்கள் 11,20,517 என்றார்கள். அந்தப் பட்டியலைப் படிக்கும் நேரத்தில் பஞ்சாலைத்தொழில் பற்றி அதிகமாக அதில் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பஞ்சாலைத் தொழிலைப் பார்க்கிற நேரத்தில் 1966-இல், அதாவது காங்கிரஸ் ஆட்சியில், வேலை நிறுத்தத்தில் 51,479 பேர்கள், 5,67,737 நாட்கள் வேலையிழக்கப்பட்டதாகவும் தெரிகிறது. 67-இல் பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரையில் 3,50,007 நாட்கள் வேலையிழக்கப்பட்ட நாட்களாக இருக்கிறது. இதிலிருந்து 1966-ஐக் காட்டிலும் 1967-இல் பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் நாட்கள் குறைக்கப்பட்டிருப்பது தெரியும். இதை அவர்கள் மறந்துவிட்டார் என்று கருதுகிறேன். பெரிய பெரிய தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புத்தர எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவைகளை இந்த அமைச்சரவை செய்துகொண்டு வருகிறது.

அதேபோல் கோவையில் 13 ஆலைகளுக்கு அரசு 1½ கோடி ரூபாய் தர இருக்கிறது, வழிவகை செய்திருக்கிறது. எந்தவொரு நாட்டிலேயும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற ஒரே அக்கறையில் இவ்வாறு செய்ததாகத் தெரியவில்லை, காங்கிரஸ் ஆட்சி உட்பட. அப்படிப்பட்ட நிலையில் இராமமூர்த்தி அவர்கள் அடுக்கிக்கொண்டே போனார்கள்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத்தர வேண்டுமென்று லேபர் யூனியன்களை, 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியில் 1336-ஆக யிருந்ததை 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியில் 1530 தொழிற்சங்கங்களாக உயர்த்தி ஒவ்வொரு சிறு நிறுவனத்திலும் தொழிலாளர்கள் சங்கம் அமைக்க நல்ல அக்கறை காட்டி வருகிறது.

'ஒர்க்மென் காம்பன்சேஷன் ஆக்ட்' என்ற சட்டத்தின்மூலம் தொழிலாளர் இழப்புச் சட்டத்தின்கீழ் தகுதியுடையவர்கள் இழப்பு கேட்கும் நேரத்தில் வழக்காடுவதற்கு ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மின்சார வாரியத்திலே ஏதாவது தவறு ஏற்பட்டு அதிலே விபத்துக்களினால் உயிரிழந்தவர்களுக்கு, மின்சார வாரியத்தைச் சாராதவர்களின் வாரிசுகளுக்கு ஆறு ரூபாய் தரவேண்டுமென்று வகை செய்திருக்கிறது.

எம்பிளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் ஸ்கீமின் அடிப்படையில் புதிய மருத்துவ மனைகள் அமைத்தலிலும், காச நோய் மருத்துவ மனை அமைத்தலிலும், புதிதாக இடங்களைத் தேர்ந்தெடுத்து பணியாளர் குடியிருப்பு கட்டுவதிலும், முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

என்னுடைய கருத்துக்களைச் சிலவற்றைக் கடைசியாகச் சொல்ல விழைகிறேன். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நடக்கக்கூடிய சில தொழில் தகராறுகள் வருஷக்கணக்கில் நடக்கிறது. அப்படி நடக்கும் நேரத்தில் தொழிலாளர்கள் எந்தவிதமான உத்தியோகமும் இல்லாமல் வீட்டிலேயே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எனவே ஒரு தொழிலாளியின்மீது நடவடிக்கை எடுத்து வேலையைவிட்டு நீக்கிவிட்டால் அவருக்கும் சட்டத்திற்கும் இடையில் நீதி வழங்க வேண்டியது இத்தனை மாதங்களுக்குள் கட்டாயம் வழங்கப்படவேண்டுமென்று இருக்கவேண்டும்.

அவ்வாறு வரையறை செய்யவேண்டும். அப்படியிருந்தால்தான் வருஷக் கணக்கில் தீர்க்கப்படாத பிரச்சினைகளைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் முடிக்க ஏதுவாக இருக்கும்.

நண்பகல் 12-00 அடுத்து, சேமிப்பு நிதியிருக்கிறது. பணத்தின் மதிப்புக் குறைந்த காரணத்தால் தொழிலாளர்களுக்குப் பணம் குறைக்கப்படுகிறது. 'டிவேலயூஷ்'னால் ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்ட மத்திய சர்க்கார் மூலம் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்படுகின்ற நேரத்திலே அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்புகின்ற அந்த நாட்களில் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதில்லை. அந்த நாட்களிலும் அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

நிரந்தரத் தொழிலாளி ஒருவரை சஸ்பெண்டு செய்யும்பொழுது சஸ்பெண்டு செய்வதற்கு முன்னால் லேபர் ஆஃபீஸரைச் சந்தித்து அதற்கு உண்டான ஏற்பாட்டை செய்வதற்கு சட்டத்திலே வழிவகை செய்யவேண்டும்.

குடும்பக் கார்டை, ரேஷன் கார்டை தொழிலாளர் குடும்பங்களுக்குத் தரவில்லை. ஆகவே, ரேஷன் கார்டை தொழிலாளர் குடும்பங்கள் எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஒவ்வொரு தொழிற்சாலையிலேயும் லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸர் என்று ஒருவர் இருக்கிறார். அவரை அந்தத் தொழிற்சாலையினுடைய முதலாளி நியமிக்கிறார். அந்த லேபர் வெல்ஃபேர் ஆஃபீஸரை அரசாங்கத்தின் மூலமாக நியமிக்க ஏற்பாடு செய்தால்தான் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புக் கிடைக்கும்.

சில தொழிலாளிகள் தவறு செய்கின்ற நேரத்தில் அதை மிகைப்படுத்தி, அந்தத் தொழிலாளியைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு அந்தத் தொழிலாளியை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாற்றுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால், மதுரையிலே இருக்கிற டி.வி.எஸ். தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழக சங்கம் அமைத்த காரணத்தினால் அங்கேயிருந்த பல தொழிலாளர்கள் பங்களூருக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அந்த தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற முறையிலே, மாநிலத்திற்கு மாநிலம் தொழிலாளர்களை மாற்றக்கூடாது என்ற நிலையை உண்டாக்கவேண்டும்.

சில தொழிலாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கின்றபொழுது, அந்தத் தொழிலாளர்கள் லேபர் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்ற நிலையிலே, அந்த நாட்களில், வழக்கு நடைபெறும் நாட்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில் நிறுவனம் சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற நிலையை உண்டாக்கவேண்டும்.

தொழில் தகராறு சட்டத்தில் சில அடிப்படையான மாற்றங்களைச் செய்தால்தான் தொழிலாளிக்கு நல்ல பாதுகாப்புக் கிடைக்கும். விதி 18, 12 என்று இரண்டு உள்ளது. 18-னுடைய அடிப்படையிலே, ஒரு தகராறு ஏற்பட்டால் தொழிலாளி, முதலாளி இந்த இரண்டு பேரும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருகிறார்கள். அப்படி முடிவுக்கு வரும் போது, அந்தத் தொழிலாளி சேர்ந்த கட்சிச் சங்க பிரதிநிதிகளும் முதலாளி பிரதிநிதிகளும் ஒரு முடிவு செய்யும்போது வேறு கட்சியைச் சேர்ந்த யூனியன்களினுடைய தொழிலாளிகள் அதை எதிர்க்கிறார்கள். ஆனால், விதி 12-லே தொழிலாளி, முதலாளி, அரசாங்கத்தினர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து பேசுகிறார்கள். ஆகவே, விதி 18-க்குப் பதிலாக, 12-ன்படி பேசுவதாக இருந்தால் தொழிலாளிக்கு நல்ல பாதுகாப்பு கிடைக்கும். ஆகவே, 18-க்குப் பதிலாக 12-ஐ அமுல்படுத்த வேண்டுமென்ற நிலையை உண்டாக்கவேண்டும்.

சில தொழிலாளிகளுக்குக் கீழ்க்கோர்ட்டிலே சாதகமான தீர்ப்பு கிடைக்கிறது. ஆனால், அந்த தொழிலாளியிருக்கிற தொழிற்சாலையின் முதலாளி மேலே ஹைக்கோர்ட்டிலே ரிட் போட்டு அந்தத் தொழிலாளியை பழி வாங்குகிற நிலை இருக்கிறது. கீழ்க்கோர்ட்டிலே தொழிலாளிக்குச் சாதகமான தீர்ப்பு கிடைத்தால் ஹைக்கோர்ட்டிலே ரிட் போடுகின்ற நிலை இப்போது இருக்கிறது. அந்த வழக்கு முடிகின்ற வரையிலும் அந்தத் தொழிலாளிக்கு சம்பளம் கொடுக்கக்கூடாத முறையில் ரிட் போடுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, கீழ்க்கோர்ட்டு கொடுத்த தீர்ப்பு பிரகாரம் அந்தத் தொழிலாளிக்குச் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற முறையிலே சட்டம் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலே, சமயநல்லூரிலே ஒரு தெர்மல் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வேலை நிரந்தரமும் இல்லை. ஆகவே, அந்த நிறுவனத்தை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. இ. ராமசாமி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மன்றத்தில் வைத்திருக்கிற தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். நமது பேரறிஞர் அண்ணா அவர்களை தலைவராகக் கொண்டு தமிழக அரசுப் பொறுப்பேற்ற ஓராண்டுக்காலத்திற்குள் நமது அரசு நல்ல பல காரியங்களைத் தொழிலாளர்களுக்குச் செய்திருப்பதை நாட்டு தொழிலாள மக்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இதே நேரத்தில் நமது அரசினுடைய கவனத்திற்கு வராத சில தொழில் தகராறுகள் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக, வால்பாறை மலைப் பகுதிகளிலும் நீலகிரி மாவட்ட பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மாஞ்சோலை மலைப் பகுதிகளிலும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஷேர்வராய மலைப் பகுதிகளிலும் சில தொழிற் சட்டங்கள் அமுலுக்கு வராமல் இருக்கின்றன. அதைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1961-ம் ஆண்டு மத்திய பிரசவ சகாய நிதிச் சட்டம் நமது மாநிலத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வந்து இருக்கிறது. தோட்ட முதலாளிகள் இச்சட்டத்தின் அனுகூலங்களைப் பெண்களுக்கு அளிக்கவில்லை. இதன்பேரில், சர்க்கார் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வேன்.

1947-ம் ஆண்டு தொழில் தகராறு மத்திய சட்டம். அதில் 1958-ம் ஆண்டு மாநில சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த மாநிலச் சட்டத்தின் விதிகளின்படி வேலைக் குழுக்கள் முதலாளிகளால் நியமிக்கப்படவில்லை. அமைந்திருக்கிற தோட்டங்களில் அந்தக் குழுக்கள் சரிவர செயல்படுவ தில்லை. சில இடங்களில் அவர்கள் எடுக்கின்ற முடிவுகளை அமுல் படுத்துவ தில்லை. விதியின்படி அமைக்கப்பட்ட அந்த வேலைக் குழு தலைவரால் மாதா மாதம் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் அனுப்பவேண்டும். அவர்கள் விதிகளின்படி செயல்படவில்லையென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

1951-ம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் அதன் கீழுள்ள 1955-ம் ஆண்டுக்கான விதிகளையும் ஆனைமலைத் தோட்ட முதலாளிகள் அமுல் செய்யவில்லை.

1965-ம் ஆண்டு வேஜ் போர்டு—சம்பளக் குழு—தீர்மானத்தின்படி 1968-ம் ஆண்டு பிறந்தும் காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்கு சரியான முறையில், சட்டப்படி சம்பளம் அளிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

[திரு. இ. ராமசாமி] [1968 மார்ச் 19

1957-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதி கோவையில் சம்பளக் குழுவில் தொழிலில் ஈடுபட்டுள்ளத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிராசுவிட்டி ஆண்டு 30 நாட்கள் கூலி கொடுக்கச் சொல்லியும், 20 நாள் கணக்கிட்டுத்தான் கொடுக்கப்படுகிறது. தொழில் சட்ட விதிகளை 10 ஆண்டு காலமாக முதலாளிகள் சரிவரக் கடைபிடிக்கவில்லை. இதை அமுல்படுத்தாதின் காரணமாக தொழிலாளர்களுக்கு வேலைப்பளு அதிகமாக ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் நிரந்தரத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த 10 ஆண்டுக் காலத்திற்குள் 100-க்கு 30 பேர் வீதம் ஆட்குறைப்புச் செய்யப்பட்டிருப்பதால், நிரந்தர வேலை செய்பவர்களின்மீது அதிக வேலைப்பளு சுமத்தப்பட்டிருக்கிறது. அதே மாதிரி, 18½ மாதங்கள் தற்காலிகமாக வேலை செய்கிற தகுதிவாய்ந்த தொழிலாளர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்று சட்டத்தில் சொல்லியும்கூட, தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்காமல் வைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, அன்றாட கூலிகளை, வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தற்காலிகக் கூலி ஆட்களை வைத்திருப்பதனால்தான் அங்கே வேலைப்பளு அதிகமாகிறது. தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக்காமல், நிரந்தரக் கூலியாட்களுக்கு அதிக வேலைப்பளு கொடுத்து, தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை அரசினுடைய கவனத்திற்குக்கொண்டு வருவதோடு, இந்த சட்ட விதிகளை அமுல்படுத்துவதற்கு ஒரு குழு அமைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன்.

அதேபோல் எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்சூரன்ஸ் திட்டம். ஈ.எஸ்.ஐ. திட்டத்தை தமிழகத்தில் உள்ள தோட்டத்தொழில் அனைத்துக்கும் விரிவுப்படுத்த நமது அரசு தேவைப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது அரசு நடத்துகின்ற சிங்கோனா தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1.75 காசுகள் வீதம் கூலி கொடுத்து வந்தது. ஆனால், தனியார் நடத்துகின்ற தோட்டங்களில் ரூ. 2.25 காசுகள் கொடுக்கப்படுகிறது. நமது கழக அரசு வந்தபின்னால் 25 காசு அதிகமாகக் கொடுத்து, ரூ. 2 கொடுக்கிறது. என்றாலும், நமது அரசு மேலும் 4 அணா அதிகமாகக் கொடுத்தும் தனியார் துறையிலே கொடுக்கின்ற கூலியைவிடக் குறைவாக இருக்கிறது. ஆகவே, தனியார் தோட்டங்களிலே வேலை செய்கின்ற தோட்டத் தொழிலார்கள் எவ்வளவு கூலி பெறுகிறார்களோ அதே அளவு அரசுத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வேன்.

முதலாளிகள் தோட்டத் தொழிலாளிகளை அவர்கள் விருப்பம்போல் டிஸ்சார்ஜ் செய்கிறார்கள். அது தடுக்கப்படவேண்டும். மற்றைய தொழிலாளர்களுக்குக் பிராவிடண்ட் ஃபண்ட் பிடிக்கிறதைப்போல் சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கும் பிராவிடண்ட் ஃபண்ட் பிடிக்கவேண்டுவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த பட்ச போனஸ், லாபம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், கொடுக்கவேண்டும் என்று சட்டத்திலே இருக்கிறது. சிங்கோனா தோட்டத் தொழிலாளிகளுக்கும், நடுவட்டத் தொழிலாளிகளுக்கும், குறைந்த பட்ச போனசாவது கொடுக்கவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டு ஒன்றுக்கு, மழைக் கம்பளி ஒன்றும், குளிர் கம்பளி ஒன்றும் கொடுப்பது வழக்கம். அரசாங்க சிங்கோனா தோட்டத்திலே 1966–67-க்கான கம்பளிகள் இன்னும் கொடுக்கவில்லை. தனியார் தோட்ட முதலாளிகளும் சரியான முறையில் கம்பளிகளைக் கொடுக்க முன்வருவதில்லை. எனவே முதலாளிகளைக் காலாகாலத்தில் கம்பளிகள் கொடுக்கவும், அரசின்

கீழே இருக்கும் தொழிலாளிகளுக்கும் கம்பளிகள் கொடுக்கவும் துரிதமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த அளவிற்கு அந்த தோட்டப்பகுதியிலே தொழிலாளர்கள் அல்லல் படுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பகுதிக்கு—வால்பாறைக்கு—வந்திருந்தபோது, இந்த மலை 5000 அடி உயரத்தில் இருக்கிறது, உங்கள் வாழ்க்கைத்தரம் 5,000 அடிக்கும் கீழே அழுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த அளவிலே தான் அவர்கள் நிலைமை இருக்கிறதே அல்லாமல் உயர்ந்தபாடில்லை. ஆகவே, அந்தத் தோட்டத்தொழிலாளிகளை நமது அரசு முன்னேறச் செய்யும் என்கிற நம்பிக்கை அவர்கள் மத்தியிலே இருக்கிறது. ஆகவே, அந்த வகையில் நடவடிக்கை எடுக்க நமது அரசு துரிதமாகச் செயல்படவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை மலையில் பலவேறு பகுதிகளில் அரசு ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு குளிர்கால அலவன்ஸ் கொடுக்கத்தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வால்பாறையும் 5,000 அடி உயரத்தில் இருக்கிறது. அது பற்றி பேரறிஞர் அண்ணாவிடமும் விண்ணப்பம் கொடுத்துள்ளேன். அதை ஏற்றுக்கொண்டு கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. சி. நஞ்சன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய பல கருத்துக்களையும் சொல்ல முன் வந்துள்ளேன். இன்றைத்தினம் நீலகிரிப்பகுதியில், தேயிலைத் தொழிலாளிகளின் நலன்களை ஒட்டி பேசவேண்டும் என்றால், ஒதுக்கியிருக்கின்ற சமயம் 7 நிமிஷம், இந்த 7 நிமிஷத்தில் தொழிலாளர்களுடைய கஷ்டங்களை எந்த விதத்தில் சொல்ல முடியும் என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொண்டு அதற்காக வேண்டி, குறைந்தது 10 நிமிஷமாவது அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தொழிலாளர்கள் என்றால், அவர்கள்தான் நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். இன்றைக்கு தொழிலாளிகள் இல்லை என்றால், நாம் அனைவரும் எந்த விதத்தில் வாழவேண்டும் என்று கொஞ்சம் சிந்திக்க தக்க விஷயம்- அதுவும் தேயிலைத் தோட்ட தொழிலாளிகள் என்றால், மிக மோசமான வாழ்க்கைத்தரம். 7,500 அடி உயரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அவர்கள். ஒவ்வொரு நாளும் படும் கஷ்டத்தையும், துன்பத்தையும் இந்த அரசுக்கு நன்கு தெரிந்திருக்கும். இதற்கு முந்தி இருந்த காங்கிரஸ் அரசாங்கம் தேயிலைத் தோட்ட தொழிலாளிகளுக்கு, அவரவர்களுடைய நலனுக்காக எவ்வளவோ சலுகைகளை செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு வேண்டிய பல சலுகைகளை இந்த அரசாங்கமும் செய்ய முன்வரவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனவே, இந்த அரசாங்கம் செய்யக்கூடிய சில காரியங்கள் என்னவென்றால், ஒன்று, தேயிலைத் தோட்டத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குடும்பத்திலும் 10 மெம்பர்கள் இருந்தால் அந்த குடும்பத்தில் இரண்டு மூன்றுபேர்கள்தான் வேலை செய்கிறார்கள். மற்றவர்கள், அந்த தேயிலைத்தோட்டத்தில் வேலையில்லாமல் வேறு பல எஸ்டேட்களில் சென்று லோகல் வேலையோ, அல்லது தாற்காலிக வேலையோ செய்து, ஒரு வருஷத்தில் மூன்று மாதந்தான் வேலைக்குப் போகக்கூடிய நிலையில், மற்ற நாட்களில் வேலையில்லாமல் இருக்கும் நிலையில் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இந்த அரசு அந்தக் கஷ்டத்தைப் போக்கவேண்டி, நீலகிரிப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான தரிசு பூமி இருந்தும், அங்கே ஜன்மி என்கிற சட்டத்தை வைத்துக்கொண்டு, எந்த விதமான விவசாயமும் செய்வதற்கு இடையூறாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த ஜன்மி சட்டத்தை ஒழித்துவிட்டு, தரிசு பூமிகளை, ஏழை தொழிலாளர்களுக்கு, பல விவசாயம் செய்ய லாயக்குள்ள பூமிகளை இந்த அரசு அவர்களுக்கு வழங்கினால், பூமியில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களை வைத்துக்கொண்டு, அவர்கள் முன்னேற உதவியாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இந்த என் வேண்டுகோளுக்கு இணங்க இந்த அரசாங்கம் நல்ல ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நடுவட்டப்பகுதியில் அரசாங்கத் தரிசு பூமி, வேஸ்டுலாண்டு என்று சொல்லக்கூடிய பூமி பல ஆயிரக்கணக்கான பூமியிருந்தும், தோட்டத் தொழிலாளிகள், உருளைக்கிழங்கு, மற்ற காய்கறிகள் இவற்றை விவசாயம் செய்கிறார்கள். அப்படிச்செய்தாலும், அதற்குத் தடையாக இருக்கும் ஆக்டை வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். அந்த ஆக்ட்டை ரத்து செய்து விட்டு, அந்தப்பூமிகளில் அவர்கள் விவசாயம் செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலாளிகள் பல குறைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். எப்படியென்றால், தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் எஸ்டேட்டுகளில் ஆங்காங்கே பாடசாலைகள் இல்லை, என்பதால் அல்லல் படுகிறார்கள். அதற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த சமயத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தவிர, 1968 செப்டம்பர் மாதம் அமலுக்கு வந்த பிரசவ அலவன்ஸ் பல எஸ்டேட்டுகளில் இன்னமும் அமுலுக்குக் கொண்டு வரவில்லை. சில எஸ்டேட்டில் கொடுக்கிறார்கள் இன்னும் சில எஸ்டேட்டுகளில் கொடுக்காமல் இருக்கிறார்கள். அப்படி கொடுக்காத எஸ்டேட்டுகளில் அவர்களுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்க மாவட்ட லேபர் ஆபீசர், இன்ஸ்பெக்டர் இவர்கள்தான் அரசாங்கத்திற்கு நிலைமைகளை தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால் எந்த எஸ்டேட்டில் கொடுக்கிறார்கள் எந்த எஸ்டேட்டில் கொடுக்கவில்லை என்பதை ஆராய்ந்து அறிவிக்கவேண்டி, மாவட்ட ப்ளாண்டேஷன் இன்ஸ்பெக்டர், அந்தஅந்த எஸ்டேட்டுக்குச் சென்று, எஸ்டேட்டு கமிட்டி யாரையோ அல்லது அந்த பகுதி சட்ட மன்ற உறுப்பினரையோ அழைத்துக் கொண்டுபோய், இந்தக் குறைகளை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தி, இந்த குறைகளை உடனடியாக நீக்கத்தக ஏற்பாடுகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுகொள்கிறேன்.

மேலும், இன்றையதினம் தேயிலை தோட்டத்தில் ஒரு வித்தியாசம் என்னவென்றால், நாம் கங்காணி ஸிஸ்டத்தை ஒழித்தபிறகு, இப்பொழுது இன்னொரு ஸிஸ்டம், கோல்மேஸ்திரி, என்று வைத்திருக்கிறார்கள். அதோடு புதிதாக சூப்ரவைசர் என்றும் நிர்வாகிகள் வைத்திருக்கிறார்கள். இந்த கோல் மேஸ்திரிக்கும், சூபரவைசருக்கும் என்ன வித்தியாசம் என்றால் இரண்டுபேர்களும் செய்வது என்னவோ ஒரே தொழில்தான். ஆனால், கோல் மேஸ்திரிக்கு கொடுக்கப்படும் சம்பளம் ரூ. 2·43; அதே நேரத்திலே, சூப்ரவைசருக்கு ரூ. 2.73. இந்த வித்தியாசத்தைப் போக்கி, கோல் மேஸ்திரி, சூப்பர்வைசர் இருவருக்கும் வித்தியாசமின்றி ஒரே அடிப்படையில் இருக்கும்வகையில் நிலைமைகளை உருவாக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. எனவே, இந்த விஷயத்திலே அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது ஆள் பதிவு விஷயம். இதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 1·25 என்று வைத்திருந்தார்கள். அதாவது ஒரு ஏக்கருக்கு ஒன்றேகால் ஆள். இன்றைக்கு அந்தக் கணக்கை மாற்றி விட்டார்கள். இஷ்டம் போல் ஆள்வைத்துக் கொள்கிறார்கள். 1·5 அல்லது 1·8 என்று பல விதமான முறையில், ஒவ்வொரு எஸ்டேட்டிலும் ஒவ்வொருவகையில், தங்கள் இஷ்டத்திற்குத் தகுந்தபடி வைத்துக்கொள்கிறார்கள். இந்தக் குறையை நீக்கி நல்ல முறையை ஏற்படுத்த அரசாங்கம் ஏதாவது ஒரு முடிவை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர, கேஷுவல் லேபர் இருக்கிறது. ஒருவருடத்திலே மூன்று மாதமோ அல்லது அதற்குச் சற்று அதிகமாகவோ, அந்தந்த எஸ்டேட்டில் இருக்கும் நிலைக்கு தகுந்தபடி, கேஷுவல் லேபர் வைத்து வேலை வாங்குகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது; கம்பளிகள் கொடுக்கப்படுவதில்லை

1968 மார்ச் 19] [திரு. சி. நஞ்சன்]

வேறு எந்தச் சலுகைகளும் கொடுக்காமல், அன்றாடம் பறிக்கும் இலைக்கு 10 பைசா, 12 பைசா என்று கணக்கு வைத்துக்கொண்டு, ஏமாற்றி விடுகிறார்கள். இது சட்ட விரோதமான செயல். அப்படிச் செய்யாமல் அவர்களுக்கு நியாயமான கணக்கு வைத்துக்கொண்டு, அவர்களுக்கு கொடுக்கவேண்டிய போனஸ், கம்பளி போன்ற சலுகைகளேயும் கிடைக்கச் செய்ய தக்கமுறையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆஸ்பத்திரி பற்றிக் குறிப்பிடும்போது, பல எஸ்டேட்டு களில் ஆஸ்பத்திரிகள் சரிவர இல்லை. அப்படி ஆஸ்பத்திரிகள் இருந் தாலும், அங்கே சரியாக மருந்து வகைகள் இருப்பதில்லை. அதைப் பற்றிக் கேட்பதற்கு யாரும் இல்லை. மானேஜ்மெண்டாரிடம் கேட்டால், அவர்கள், நான் என்னசெய்வது, அது டாக்டர் வேலை என்கிறார்கள். அதே நேரத்திலே டாக்டரை கேட்டால், மருந்து இல்லையே, நான் என்ன செய்வேன் என்கிறார் அவர். ஆகவே, நல்ல முறையில் அங்கே பணிகள் நடைபெறுவதில்லை. இப்படிப்பட்ட குறைகளை மாற்றவேண்டும். அரசாங்கம், அதற்குத் தக்க முறையில் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து, தக்க முடிவுகள் எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வீட்டு வசதி நமது ஸ்டாண்டிங் ஆர்டர் பிரகாரம், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கொடுக்கப்படவேண்டும் என்பதாகத்தான் இருக் கிறது அந்த ஆர்டர். ஆனல், இன்றைக்கு இருக்கும் நிலை என்ன? ஒரே ரூமில் இரண்டு குடும்பங்களும், கிச்சனில் ஒரு குடும்பம், பெட்ரூமில் ஒரு குடும்பம், இன்னும் வராண்டாவில் ஒரு குடும்பம் என்ற முறையில்தான் இருக்கிறது. இப்படி பல குடும்பங்கள் தவிக்கின்றன. இதைத் தவிர்க்க வேண்டும். இதற்காக வேண்டி, ப்ளாண்டேஷன் இன்ஸ்பெக்டர்கள் தான் இவற்றையெல்லாம் கண்காணித்து வருகிறார்கள். சில எஸ்டேட்டுகளில் நிலைமை மிகமோசமாக இருக்கிறது என்பதுதான் என் நம்பிக்கை. இதைப் போக்குவதற்கு அரசாங்கம் யோசித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எனது தொகுதியைப் பொறுத்தவரையில், சோலூர், நஞ்சநாடு பகுதிகளில் சென்ற ஆண்டு மழை இல்லாத காரணத்தால், அங்கே உருளேக்கிழங்கு விவசாயம் பாதிக்கப்பட்டது. அங்கு விவசாயம் செய்யக்கூடிய மக்களின்பேரில் வாங்கிய கடனுக்காக நடவடிக்கை எடுத்து, சொத்தை ஜப்தி செய்வதும், ஏலம் விடுவதும் ஆகிய இப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. இதற்கு முன்பு நான் கனம் முதல் அமைச்சர்களுக்கும் ஒரு மகசர் கொடுத்தேன். அதற்கு அவர் ஒரு பதி லும் கொடுக்கவில்லை. மீண்டும் அவர்களே கேட்டுக்கொள்கிறேன், இந்த வருஷம் அவர்களுடைய கடனை ஓராண்டு தள்ளி வைத்து அவர்களுக்கு உதவி செய்யும்படியாகப் பணிவுடன் கேட்டுகொள்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தை நான் சொல்லவேண்டும். அதாவது தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு, முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் இருந்த சமயத்தில் தொழிலாளர்களுக்கு ஒரு சலுகை செய்திருந்தார்கள். அந்தச் சலுகையை இந்த அரசாங்கம் வந்தவுடனே நிறுத்தி விட்டது. அது என்னவென்றல், தொழிலாளிக்கு 200 கிராம் அரிசி அதிகமாககொடுத்துவந்தார்கள். அதைக்கூட இந்தஅரசாங்கம்நிறுத்தி விட்டார்கள். இது மிகவும் வேதனைதரும் விஷயம். எனவே தொழிலாளர் களுக்கு பழையபடி 200 கிராம் அரிசியை மீண்டும் சேர்த்துக்கொடுக்க வேண்டும். இல்லையென்றால் தொழிலாளர் பகுதியில் ஒருபடி அரிசித் திட்டத்தையாவது உடனடியாக அமலுக்குக் கொண்டுவந்தால் மிக நன்ருக இருக்கும். இன்று ஒரு தொழிலாளிக்கு 1,400 கிராம் அரிசிதான் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழி லாளிக்கு முன்பு 1600 கிராம் அளவிற்கும், மற்றவர்களுக்கு 1,400 கிராம் அளவிற்கும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது பழையபடியே

தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு தினமொன்றுக்கு 1,600 கிராம் அரிசி கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றியைக் கூறிக்கொண்டு இத்துடன் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நான் கூறுவதையெல்லாம் அமைச்சரவையினரின் நல்ல எண்ணத்தைக் கேள்வி கேட்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய நல்ல எண்ணத்தைக் கேள்வி கேட்பதாகவும் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நிலவும் நிலமை, கொள்கை அடிப்படையில் இருக்கும் நிலைமைக்கு முற்றிலும் மாறாக பல அம்சங்கள் இருப்பதை எனக்கு முன்னால் பேசிய எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. கோவிந்தராசன் அவர்கள் விளக்கினார்கள். இன்றிருக்கக் கூடிய ஒரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். தொழிற்சங்க இயக்கம் போராடிப்பெற்ற சில உரிமைகள் சமீபத்தில் உயர்நீதி மன்றங்களிலே பறிக்கப்பட்டிருக்கின்றன. உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, உள்ளேயிருக்கும் சரக்கை வெளியே கொண்டுவரக்கூடாது என்று தடுத்து மறியல் செய்யும் உரிமை ஆகியவற்றைச் சமீப ஹைகோர்ட் தீர்ப்புகள் பறித்திருக்கின்றன.

ஆனால், இந்த இடத்தில் ஒன்றை நினைவூட்டுவது அவசியம். ஹைகோர்ட் தயவில் தொழிற் சங்கம் என்றும் வளர்ந்ததில்லை. மாறாக, அதன் தீர்ப்புகளையும் மீறி போராடித்தான் தொழிற் சங்கம் வளர்ந்தது; இன்னும் வளர்ந்து வருகிறது என்பதையும் நினைவுபடுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். 1921 என்று நினைக்கிறேன். அந்த ஆண்டில், பி. அண்டு சி. மில்லில் பெரிய வேலை நிறுத்தம் தோன்றியது. அங்கேயிருந்தவர்களெல்லாம் ஹைகோர்ட்டுக்குச் சென்று, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள காண்ட்ராக்ட்டைத் தொழிற்சங்கத் தலைவர்கள் முறியடிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள் என்று சொல்லி அந்த தொழிற்சங்கத் தலைவராக இருந்த திரு. வாடியா என்பவர்மீது 7,000 பவுன் தண்டனைவிதித்து, கடைசியில் அவர் இருக்கமுடியாத சங்கடத்தை அன்று ஏற்படுத்தினார்கள். ஆனால், அதற்காக தொழிற்சங்கம் நின்றுவிடவில்லை. அன்று முதல் இன்று வரை தொழிற்சங்கங்கள், உயர்நீதி மன்றத் தீர்ப்புகள் தொழிலாளருடைய உரிமைகளைப் பிடுங்கிக் கொள்ளாத வகையில் பாதுகாப்பாக இருந்தது மட்டுமல்லாமல் அதைப்பற்றி மனம் கலங்காமல், கவலைப்படாமல், உறுதியாக நின்று போராடிப் போராடித்தான் புதிய புதிய உரிமைகளை தொழிலாளிகளுக்குப் பெற்றுத்தந்திருக்கின்றன. அதை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது அவசியம்.

குறிப்பிட்ட வேலைநேரத்தை தவிர, மற்ற நேரங்களில் தொழிலாளிகள் ஆலைக்குள்ளே இருக்கக்கூடாது, வேலை நிறுத்த நேரத்தில் தொழிலாளிகள் ஆலைக்குள்ளே இருக்கக் கூடாது என்று சொல்லக்கூடிய சமீபத் தீர்ப்பு இருக்கிறது. "ஃபினிஷ்டு குட்ஸ்" என்ற வகையில் இருப்பதை ஆலையிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது கொண்டுபோக அனுமதி அளிக்கவேண்டும் என்ற தீர்ப்பு. ஏற்கெனவேயிருந்த நிலையை முற்றிலும் மாற்றியிருக்கிறது இருந்தபோதிலும், இவைகளை எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை என்று நான் இந்த மாமன்றத்தில் தெளிவாக்குகிறேன். அதை எதிர்த்துப் போராடித்தான் ஆகவேண்டும். ஏற்கனவே இருந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக, அதற்கான வேலைகளைச் செய்யத்தான் வேண்டிவரும். அப்படி செய்யும் போது, அதன் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கவும் நேரிடும். அதையும் நாங்கள் ஏற்கத்தான் வேண்டிவரும் என்று உறுதியாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இலாக்காவைப் பொறுத்தவரையில், இலாக்காவினுடைய போக்கில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை ஓரிரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்க விரும்புகிறேன். ஏற்கனவே ஷண்முகசுந்தரம் கமிட்டி என்று, விலைவாசிப் புள்ளிகளைக் கணக்கெடுக்கும் முறைகளைப் பரிசீலித்து முடிவு சொல்ல ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் விஷயம் இன்னும் பெண்டிங்காக இருக்கிறது. போனதடவை கூறினேன். அந்த அறிக்கை இருக்கிறது, பரிசீலித்துச் செய்யலாம் என்று சொன்னார்கள். ஓராண்டுக்குப் பின்னரும் அதைப்பற்றி என்ன என்று தெரியாத நிலைமை இன்றைக்கும் இருக்கிறது.

இன்னொன்று, தொழிலாளர் நலன் ஆலோசனைக் குழுவில் லேபர் கமிஷனர் குறிப்பிட்டார்கள். "மினிமம் வேஜ் நிச்சயிக்கும்போது ஆவரேஜ் மார்க்கெட் ரேட்டுக்குக் குறைவாகத்தான் நிச்சயிக்கிறோம்" என்று. இதைக் கொள்கையாக வைத்திருக்கிறார்கள். அப்பொழுதுதான் அதை அமலாக்குவது சுலபமாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அப்படிக்கொள்கை இருந்திருக்கலாம். இனி அப்படியிருக்க முடியாது இருப்பதைவிட அதிகமாகக் கொடுக்க வைப்பதற்கு இலாக்கா வேலை செய்யப் போகிறதா? அல்லது இருப்பதைவிட குறைத்து கொடுப்பதை ஒரு விதியாக்கி அதை அமல் செய்வதற்கு வேலை செய்யப்போகிறதா என்று எனக்குப் புரியவில்லை. அப்படியென்றால், "ஸ்வெட்டட் லேபர்" என்று இருக்கும் பகுதிகளுக்கு என்ன ஆதாயம் கிடைக்கும்? புதிய அரசு ஏற்பட்டு, புதிய கொள்கையைச் சொன்ன பிற்பாடும், நடைமுறையில் பழைய போக்கிலேயே இலாக்கா இருந்து வருகிறது, என்று உதாரணத்திற்குச் சொல்கிறேன். நான் ஏற்கெனவே தொழிலாளர் நலன் ஆலோசனைக் குழுவில் கூறினேன். அப்பொழுது அவர்கள் குறித்துக் கொண்டார்கள். அதற்குப்பின்னால் மேற்கொண்டு தகவல் கிடைத்திருக்கிறது. பாக்டரி இன்ஸ்பெக்டர், ஸ்தலத்தில் இருப்பவர், ஒரு தொழிற்சாலைக்கு விஜயம் செய்யும்போது, அங்கே இருக்கும் சட்ட விரோதமான நிலையை ஓவர்டைம் செய்தாலும், இரண்டு மடங்கு கூலி தராமல் இருப்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு என்ன பலன்? மேலே இருக்கும் அதிகாரியிடம் சொல்லி, அவரை தன் நிலையிலிருந்து பின் வாங்கி வைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமான அந்த ஸ்தலத்தில் இருக்கும் பாக்டரி இன்ஸ்பெக்டர் நோட்டீஸ் போட்டிருக்கிறார். இது சம்பந்தமான புகார்களை மதுரையில் இருக்கும் அதிகாரிக்கு சொல்ல வேண்டும். என்னிடம் சொல்லக்கூடாது, என்னிடம் அதிகாரம் இல்லை. நான் போய்ப் பார்வையிடவேண்டுமென்றால், மதுரையிலிருந்து உத்தரவு வந்தால்தான் பார்வையிடமுடியும் என்று நோட்டீஸ் போட்டுவிட்டார். நமது கண்ணுக்குத் தெரியாது; பணத்தை வைத்துக்கொண்டு, இஷ்டப்படி ஆட்டிப்படைக்கும் சக்தி என்றைக்கும் முதலாளி வர்க்கத்திற்கு இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணமாக அதை நான் குறிப்பிட்டேன். அந்த ஸ்தலத்தில் இருக்கும் பாக்டரி இன்ஸ்பெக்டர் போய்ப்பார்த்தால் நல்லதா, எங்கோ மதுரையில் இருக்கும் அதிகாரி உத்தரவு வந்தபிறகுதான் போய்ப்பார்க்கவேண்டும் என்று இருப்பதா? திடீர் என்று விஜயம் செய்ய வேண்டும் என்றால், ஸ்தல அதிகாரி போய்ப்பார்த்தால்தான் முடியும். அப்படிப்பட்ட ஒரு சங்கடம் இருக்கிறது. சண்முகசுந்தரம் கமிட்டி அறிக்கை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை, இலாக்காவினுடைய போக்கு எப்படி இருக்கிறது என்று உதாரணத்திற்காக இவற்றை குறிப்பிட்டிருக்கிறேன். இலாக்காவினுடைய போக்கு இலாக்காவினுடைய நடைமுறை மாறுதல் அடையாமல் இருக்கிறது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

இப்படிப் பல உதாரணங்கள் சொல்லிக்கொண்டே போகலாம். நேரமில்லாத காரணத்தால் எல்லாவற்றையும் எடுத்துக்கூற முடியவில்லை. ஆகவேதான் ஓரிரண்டு உதாரணங்களைத்தான் சொன்னேன். இப்போது பல வேஜ் போர்டுகளின் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. ஆனால் அவைகளை அமல்படுத்துவதில்லை. டிரான்ஸ்போர்ட் வேஜ் போர்டு தீர்ப்பு வந்தாகிவிட்டது. என்ஜனீரிங் வேஜ் போர்டு தீர்ப்பு வந்தாகிவிட்டது. எதுவும் அமல் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜெர்னலிஸ்டுகளைப் பொறுத்தவரையில் ஜெர்னலிஸ்ட், நான்-ஜெர்னலிஸ்ட் ஆகிய பிற்பகல் 12·30

இரண்டு பகுதிக்கும் சேர்த்து இதுவரை இரண்டு வேஜ் போர்டுகள் வந்தன. ஜெர்னலிஸ்ட்களுக்கு வேஜ் போர்டு, சம்பள விகிதம் போன்றவை பற்றிய தீர்ப்புகளைக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறியிருக்கிறது. "நான்" ஜெர்னலிஸ்டுகளைப் பொறுத்தவரையில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக வேஜ் போர்டுகளின் தீர்ப்பை அமல் படுத்துவதில்லை என்ற நிலை இருக்கக்கூடாது. நமது மாநில அரசுக்குத் தான் அதிக பொறுப்பு இருக்கிறது. அதைச் செய்யமுடியவில்லை, இதைச் செய்ய முடியவில்லை என்று காரணம் சொல்லக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலே பல ஏடுகள் அநியாயமாக நடந்து வருகின்றன. வேலை செய்யும் ஜர்னலிஸ்டுகளுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதில்லை. சில ஜர்னலிஸ்டுகளுக்கு அன்றாடக் கூலிதான் கொடுக்கப்படுகிறது. அதற்கு வவுச்சர் வாங்கிக் கொள்கிறார்கள். முதலாளிகள் வேஜ் போர்டு தீர்ப்பை அமல்படுத்தவில்லை. "மினிமம் வேஜ்" கமிட்டிகள் தன பரிந்துரைகளை அனுப்பி நான்கைந்து மாதங்களாகியும், பொறுப்புள்ள இலாகா நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. இலாகாக்களின் பழைய எண்ணம், பழைய மனப்பான்மை இன்னும் மாறவில்லையென்பதை இங்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த அரசு, 'தொழிலாளர் நல அரசு, என்ற எண்ணம் தொழிலாளர் நல இலாகாவுக்கு இன்னும் வரவில்லை. பழைய நிலைமையிலே, பழைய கண்ணோட்டத்திலே, பழைய மனப்பான்மையிலே தான் இன்னும் இருந்து வருகிறது என்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டு அமைச்சர் அவர்கள் தங்களைத்தான் குற்றம் சாட்டுகிறார் என்று நினைக்கவேண்டாம். தொழிலாளர் நல இலாகா செயல்படுவதில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டாலொழிய, உண்மையான தொழிலாளர் நல அரசை ஏற்படுத்த முடியாது என்று கூறிக்கொள்கிறேன்.

மற்றும் சினிமா ஸ்டுடியோக்கள் இருக்கின்றன. அவைகள் தொழிலாளர் களுக்கான பிராவிடெண்ட் பண்ட் பணத்தைக்கட்டுவது இல்லை. பிரபல சினிமா அதிபர் என்று இப்பொழுது பத்திரிகைகளில் அதிகமாக பெயர் அடிபடும் திரு. ஏ. வி. மெய்யப்பன் அவர்கள்கூட தொழிலாளர்களுக்காக பிராவிடெண்ட் பணத்தையும் இ. எஸ். ஐ. சி.க்கான பணத்தையும் கட்ட வில்லை. 'ஸ்ரீகண்டன் கமிட்டி' என்று ஒன்று போட்டோம். அது என்ன ஆயிற்று? அதனுடைய ரிப்போர்ட் வந்ததா என்பதைப்பற்றியெல்லாம் ஒன்றும் தெரியவில்லை.

மற்றும் பொதுத் துறையில் விளங்கும் சில தொழில்கள் இருக் கின்றன. அவைகள் எல்லாம் பரிதாபத்திற்குரிய முறையில்தான் இருக் கின்றன. "மெட்ராஸ் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்" கீழ் சுமார் 64, 65 சிறு தொழில்கள் நடத்தப்படுகின்றன. அரசு நடத்தும் தொழில் லாபம் சம்பாதிக்க பிறந்த தொழில் அல்ல. மக்களுக்கு வேலை வாய்ப்புகளை விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காகத்தான் தொழிற்சாலைகளை அரசு நடத்தி வருகிறது. அங்கு நடக்கும் அக்கிரமங்களுக்கு அளவேயில்லை. கூலி விகிதங்கள் மகா மோசம் இன்னும் அரசு நடத்தும் தொழிற் சாலையில் தொழிலாளர்கள் பிராவிடெண்ட் பண்ட் கொடுத்தாலும், கட்டாத நிலைமைதான் இருந்தவருகிறது. போன வருஷம் அந்த நிலைமை இருந்தது. இந்தப் புதிய அரசு வந்தபிறகு நிலைமை எப்படி யிருக்கிறதோ தெரியவில்லை.

பொதுத் துறையிலே நமது தொழிலாளர் நல சட்டங்கள், விதிகள் முதலியவற்றை ஒழுங்குபடுத்தி அமல்படுத்துவதற்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும்.

தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிக்க ரகசிய வோட் எடுப்பு நடத் தப்பட வேண்டும். ஐம்பது சதவிகிதத்திற்கு மேற்பட்டிருந்தால் அந்தச் சங்கத்தை நாம் அங்கீகரிக்க வேண்டும். அப்படி ஐம்பது சதவிகிதம் இல்லாமல் 45 சதவிகிதம், 35 சதவிகிதம் என்று இருந்தால், எந்தச் சங்கத்திற்கு அதிக அளவில் ஆதரவு இருக்கிறதோ அந்தச் சங்கத்தை

1968 மார்ச் 19] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

அங்கீகரிக்க வேண்டும். ஏதாவது நடைமுறை விஷயங்களைப்பற்றி முடிவு எடுக்க முன்வரும்போது இரண்டு சங்கங்களையும் கூட்டி அழைத்துப் பேச வேண்டும். ஆனால் மெஜாரிட்டி உறுப்பினர்களுடைய சங்கத்திற்குத்தான் அங்கீகாரம் அளிக்க வேண்டும். ஐ.என்.டி.யூ.சி.—அல்லது வேறு பெயருடைய சங்கத்திற்குத்தான் அங்கீகாரம் என்று இருக்கக்கூடாது. இந்தக் கட்சி யூனியன், அந்தக் கட்சி யூனியன் என்ற பிரச்சினைக்கே இடமில்லை. சங்கம் என்று இருந்தால் வோட்டெடுப்பு நடத்தலாம். தேர்தல் நடத்தலாம். வெற்றிபெற்ற சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும். ஆனால் சிறுபான்மையாக இருக்கக்கூடிய சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. இதை மாற்றியமைக்க வேண்டும்.

ஜுடிஷியல் என்குயரி அவசியம் என்பதை கொள்கையளவில் ஒப்புக் கொள்வதாக தொழிலாளர் அமைச்சர் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். கொள்கையை நடைமுறையில் அமல்படுத்தும்போது தயக்கம் ஏற்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் தொழிலாளர் பிரச்சினையைப்பற்றிய கொள்கைகளை நல்ல முறையில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சில முதலாளிகளை மேலும் மேலும் கன்சிலியேஷனுக்குக் கூப்பிட்டாலும் வருவதில்லை, எழுதியனுப்பினாலும் வருவதில்லை, டெலிபோனில் கூப்பிட்டாலும் வருவதில்லை. மிகவும் முரட்டுத்தனமாக தொழிலாளர்கள் விஷயத்தில் நடந்துகொள்கிறார்கள்.

அடுத்தபடியாக, திருச்சியிலே உள்ள சுந்தரம் டிரான்ஸ்போர்ட் லாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கும் தொழிலாளர்கள் போனஸ் கேட்கவில்லை. வேறு எந்தக் கோரிக்கையும் கேட்கவில்லை. தொழிலாளர்கள் சில சமயங்களில் வேலை நிறுத்தம் செய்தால் சட்டவிரோதமான போக்கு என்று சொல்லுகிறார்கள். ஆனால் சுந்தரம் டிரான்ஸ் போர்ட்டில் இம்மாதம் 3-ம் தேதியிலிருந்து இன்றுவரை கதவடைப்பு நடைபெற்று வருகிறது. 'இல்லீகல் லாக் அவுட்' நடைபெற்று வருகிறது. தொழிலாளர் நல இலாகா என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரியவில்லை. சட்ட விரோத லாக் அவுட் என்று ஏன் பிரகடனம் செய்யவில்லை. அவர்களுடைய மனப்பான்மை மாறவில்லை. முன் இருந்ததைப்போலத்தான் இருந்துகொண்டு இருக்கிறது. பல உதாரணங்களை நான் தர முடியும்.

இன்று விலைவாசிகள் மேலும், மேலும் ஏறிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் முதலாளிகள் ஆட்குறைப்பு, கதவடைப்பு என்ற நிலைமையை உருவாக்கிக்கொண்டு வருகின்றனர். கோவையிலும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் கதவடைப்பால் அவதிப்படுகிறார்கள். தொழிலாளர்கள் சம்பளப்படி, பஞ்சப்படியைக் குறைக்க முதலாளிகள் இப்படி ஒரு போராட்டம் நடத்துகிறார்கள். தொழிலாளர்கள் யாரும் விரும்பிப் போராட்டத்தை நடத்துவதில்லை. ஆனால் நாம் தொழிலாளர் பிரச்சினையை மிகவும் அனுதாபத்துடன் பார்க்க வேண்டும். தொழிலாளர் நல இலாகவினுடைய மனப்போக்கு மாறாமல் நீடித்து வருகிறது. புதிய அமைச்சரவை நம் மாநிலத்தில் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. இவர்கள் தொழிலாளர்களுக்கு நன்மை செய்கிறார்களா? அவர்களுடைய எண்ணம் என்ன? இவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம் என்ற கருத்தில் தான் தொழிலாளர்கள் தங்களுடைய போராட்டங்களை ஆரம்பிக்காமல் இருக்கிறார்களே தவிர, மற்றவகைகளில் அல்ல. இந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொழிலாளர்கள்பால் நல்லெண்ணம் இருக்கிறது. இதுவரை ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு எந்த அளவுக்குப் போராட்டம் நடந்திருக்க வேண்டுமோ, அந்த அளவிற்குப் போராட்டம் நடக்கவில்லை. காரணம் இந்த புதிய அமைச்சரவைக்கு நன்மை செய்ய வாய்ப்பு கொடுத்திருப்பதுதான். (மணியடிக்கப்பட்டது) நாட்டின் நிலைமை பொருளாதாரம் போன்றவைகளைப்பற்றி தொழிலாளர்களும் நன்குணர்ந்திருக்கிறார்கள். என்னுடைய கட்சி உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன்

கூறியபடி மனிதனின் உழைப்புக்கு விலை கேட்டால் சிலருக்குக் கோபம் வருகிறது. அதற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். அதற்கு தீர்வு காண வேண்டும். எந்தத் தலைவர், எந்த யூனியன், எந்த சங்கம் என்று பார்க்காமல்; தொழிலாளர்களின் கோரிக்கையின், நியாயத்தின் அடிப்படையில் பார்த்து குறைகளுக்குப் பரிகாரம் காணவேண்டும். இந்தத் துறை இலாகா முறையாக செயல்பட வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வி. எஸ். கோவிந்தராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உலகம் உருவானது இயற்கையென்றாலும், அதை உருவாக்கி மக்கள் மன்றமாக மாற்றியது தொழிலாளர் சக்திதான். அத்தகைய தொழிலாளர் நலன் குறித்த இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதில் பெருமை அடைகின்றேன். தொழிலாளர் நலனை முன்னிட்டு நமது அரசு வகுத்திருக்கின்ற கொள்கை, இங்கு நமக்கு வழங்கப்பட்டு இருக்கிற விவர அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழில் கூடத்தில் தொழிலதிபருடன் தொழிலாளிகள் பொறுப்பு மிகுந்த உறவு முறையைக்கொள்வது, தொழிற்கூடத்திற்கு வெளியே தொழிலாளர்கள் மனிதர்களாக வளர வேண்டிய அளவிற்கு வளராமல் தடுக்கிற சமூக நெருக்கத்திற்கு அதிக அளவில் உட்படாமல், அவர்கள் முழு அளவில் வளர வழிவகை செய்வது, தொழிற் சங்கத்தில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களும், அவர்களுக்காகப் பாடுபடுகிற அவர்களுடைய தலைவர்களும் இந்தக் கொள்கையை வரவேற்பார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. ஆனால் இந்த விவாதத்தை துவக்கிவைத்துப் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்கள் ''இதைக் கொள்கை அளவில்தான் எழுதியிருக்கிறார்கள். நடைமுறையில் இப்படி நடப்பதில்லை'' என்கிற குற்றச்சாட்டைச் சொல்லி அதற்குக் காரணம் கழகத்தவர்களுக்கு இந்தக் கொள்கையிலேயே நம்பிக்கை இல்லை என்ற குற்றச்சாட்டையும் சாட்டினார்கள். இப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுக்கு அவர்கள் வகுக்கிற கொள்கையிலேயே நம்பிக்கை இல்லை என்று காங்கிரஸ்காரர் குற்றம் சாட்டுவது இது முதல் தடவை அல்ல. கழகம் தோன்றிய காலத்தில் இருந்தே, அதில் எங்களுக்கே நம்பிக்கையில்லை என்று மக்களிடத்தில் சொல்லிவந்தார்கள். கழகம் எடுத்துக் கூறிய கொள்கைகள் எங்களுக்கு மாத்திரம் நம்பிக்கை உடையவை அல்ல, மக்களுக்கும் நம்பிக்கையுடையவை என்பதை கடந்த பொதுத் தேர்தலிலே மக்கள் நிரூபித்துவிட்டார்கள். அதன் காரணமாகத்தான் நாங்கள் இங்கேயும், அவர்கள் அங்கேயும் இருக்கிற நிலை ஏற்பட்டது.

தொழிலாளர்களின் நலனில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவேதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தொழில் தகராறு ஏற்படுகிற போதே அமைச்சர்கள் நேரிடையாகத் தொழிலாளர் பிரதிநிதிகளையும், முதலாளிகளையும், அதிகாரிகளையும் உடன்வைத்து சட்டத்தை மீறாதவகையில் சுமுகமான முறையில் பேசி உடன்பாடு காண முயன்று வந்திருக்கிறார்கள். இதைப்பற்றி காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசும்போதும் அதிகாரிகளுடைய இந்த நடைமுறை இடைஞ்சலாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தொழில் தகராறு ஏற்படுவதற்கு முக்கியமான காரணமே பெரும்பாலான இடங்களில் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளாதது தான். இப்படி அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரை ஒன்றுகூடிப் பேசுவதற்கு வாய்ப்பளிப்பதானது பிரச்சினையை உடனே தீர்த்துவிடுகிறது. இதனால் அதிகாரிகளுடைய வேலை எதற்கும் சந்தேகம் ஏற்படுவதில்லை. சட்டத்தின் அடிப்படையை ஒட்டித்தான் இப்பேர்ப்பட்ட பிரச்சினை தீர்க்கப்படுகிறது. இதில் முதலாளிகளுக்கு ஒரு சங்கடம் ஏற்படுவது அதற்குக் காரணம் இந்தப் பிரச்சினை முறைப்படி கீழே இருந்து வருமானால் வரிசையாக வருவதில் காலதாமதம் ஏற்படும். மேலே வந்து சேர்வதற்கு நீண்டகாலம் பிடிக்கும். இந்த நீண்டகால இடை

TRUTH ALONE TRIUMPHS

1968 மார்ச் 19] [திரு. வி. எஸ். கோவிந்தராஜன்]

வெளி முதலாளிகளுக்கு அனுகூலமாக இருக்கிறது. ஆனால் தொழிலாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். இப்படி அமைச்சரே நேரிடையாகப் பேச்சுவார்த்தை ஏற்படுத்திவிடுவதன் மூலம் காலதாமதம் தவிர்க்கப்படுவதை சில முதலாளிகள் எதிர்க்கிறார்கள். அந்த அடிப்படையில் தான் காங்கிரஸ் கட்சியினர் சார்பிலும் இது எதிர்க்கப்படுகிறது என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆட்சியில்தான் வேலை நிறுத்தம் அதிகம் என்று சொன்னார்கள், வேலை நிறுத்தம் என்பது யாரால் ஏற்படுகிறது? எந்தச் சூழ்நிலையில் ஏற்படுகிறது என்பதை நாம் அறிய வேண்டும். நான் இதைப்பற்றி கொஞ்சம் வெள்ளையாகச் சொல்ல விரும்புகிறேன். ஓர் பக்கம் முதலாளிமார்களாலும் மற்றொரு பக்கம் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஒருசில தலைவர்களாலும் தான் இந்தச் சூழ்நிலை உருவாக்கப்படுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்களை சஸ்பெண்டு செய்வது, வேலையைவிட்டு எடுப்பது, வேஜ் போர்டிலே கொடுக்கப்பட்ட தீர்ப்பை அமுலாக்காமல் இருப்பது ஆகியவை வேலைநிறுத்தத்திற்குக் காரணம் என்பது ஒருபக்கக் கணக்கு. இன்னொரு பக்கத்தில் தொழிலாளர்களின் நன்மைக்காகவே பாடுபடுகிறோம் என்று சொல்லி ஒரு சில தலைவர்கள் தொழிலாளர்களை அனாவசியமாக வேலை நிறுத்தத்திற்கு தூண்டிவிட்டு வெளிப்படையாகவே தங்கள் இயக்கத்திற்கு அதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தங்களுடைய அரசியல் ஆதிக்கத்திற்காகவே செய்யப்படுகிறது என்று சொல்ல வேண்டிய துர்பாக்கியம் ஏற்படுகிறது. இது மகிழ்ச்சியான நிலை அல்ல. வருந்தத்தக்க நிலைதான். ஒருசில தலைவர்கள் அப்படிச் செய்கிறார்கள். நான் எல்லோரையும் குறிப்பிடவில்லை. நான் அந்த ஒரு சிலரின் பெயரைச்சொல்ல விரும்பவில்லை. கடந்த ஓராண்டு காலத்தில் எந்த எந்த இடங்களில் பல வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பார்த்து அவர்களுடைய தொழிற்சங்கத் தலைவர் யார் என்று பார்த்தாலே நான் சொல்வது தெரியும். நிச்சயமாக இந்த செயல் தவிர்க்கப்பட்டாக வேண்டும். அமைச்சர்களிடத்தில் வந்து அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் பேசுவது உடனே வெளியேபோய் தொழிலாளர்களிடத்தில் அமைச்சர்கள் சொன்னவற்றுக்கு மாறாக கருத்துக்களைச் சொன்னதாகச் சொல்லிஅவர்களுக்கு ஆத்திரமூட்டுவது,தொழிலாளர்களுடைய உணர்ச்சியை திசைமாற்றிவிட்டு வேலை நிறுத்தங்களுக்கு தூண்டுவது நல்லதல்ல. இதற்கு இந்த அரசு நல்ல மாற்றம் காணவேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு பேசிய நெல்லிக்குப்பம் தொகுதி உறுப்பினர் திரு. C. கோவிந்தராசன் அவர்கள் தொழிலாளர் நலன் இலாக்கா என்றால் தொழிலாளர்களுடைய நலன்களைப்பற்றி மட்டுமே பேசவேண்டும். மற்ற விவரங்கள் பேசக்கூடாது என்றார்கள். தொழிலாளர் நல இலாக்கா தொழிலாளர்களுக்காகவே இருக்கவேண்டும். அவர்களுக்காகவே பணியாற்றவேண்டும் ஆனால் நியாய அடிப்படையில் சில விதிமுறைகளுக்குட்பட்டு செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவறான முறையில் செல்லக்கூடாது. அதனால் அபாயகரமான விளைவுகள் ஏற்படக் கூடும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்ன கொள்கையை எடுத்துச் சொன்னார்கள். உண்மையில் அது நல்ல கருத்துத்தான். ஆனால் இதை சில தொழிலதிபர்கள் தொழிலாளர்களை ஏமாற்றத்தான் பயன்படுத்துகிறார்கள். எனக்குத் தெரியும். ஒரு இடத்தில் குறிப்பிட்ட ஐ.என்.டி.யு.ஸி. சங்கம் மைனாரிடியாக இருக்கிறது. வெளியில் இருக்கிற, எனது தலைமையில் உள்ள சங்கம் மெஜாரிட்டியாக இருக்கிறது. ஆனால் தொழிலதிபர்கள் உங்கள் அமைச்சரே ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்றுதான் சொல்கிறார் என்று எடுத்துக்காட்டப்பட்டு எங்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. தொழிற்சங்கங்கள் அகில இந்திய அடிப்படையில் கட்சிகளின் ரீதியில் அமைந்து செயல்படுகிறபோது எப்படி இந்தக் கொள்கை பொருந்தும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதை எண்ணிப்பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில்

[திரு. வி. எஸ். கோவிந்தராஜன்] [1968 மார்ச் 19

நான்கு மையத் தொழிற்சங்கங்களும் தனித்தனி அரசியல் கட்சியுடன் தொடர்புள்ளவையாதலால், அரசியல் கட்சிகளிடையே ஒரே சமயத்தில் இவ்வகையில் ஓர் உடன்படிக்கை காண்பது அவசியமாகும் என்று குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு இப்படிப்பட்ட நல்ல தேவையான கொள்கைகளை வகுத்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற புரசைவாக்கம் தொகுதி ஒரு தொழிலாளர் பகுதி. இங்கு தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. ஆஸ்பத்திரிகளும், ஆஸ்பத்திரிகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களும் இருக்கிறார்கள். இங்கேதான் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. பெயரில் ஒரு தொழிலாளர் காலனி இருக்கிறது. தொழிலாளர்களுடைய வீட்டு வசதிக்காக வீட்டுவசதி போர்டு காரியங்களைச் செய்கின்றன. ஆனால் இந்தப் பகுதியில் தண்ணீர் வசதிதான் இல்லை. புழலேரி தண்ணீர் கிடையாது. பட்டேமடு என்ற பகுதியில் இருந்து வண்டல் கலங்கின நீர் கொடுக்கப்படுகிறது. இந்தப் பகுதிக்கு நல்ல குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் தென் ரயில்வே காலனியும் இருக்கிறது. 600 குடும்பங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர் பெருமக்களால் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், அந்தக் காலனிக்கு எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. அந்தக் காலனிக்குள்ளே ஓர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. மண் தரையில் மாணவர்களை உட்காரவைத்து பாடம் நடக்கிறது. வகுப்புக்கு வகுப்பு இடையிலே ஒரு தட்டி, அதில் தாரைப் பூசி அதையே கரும் பலகையாக உபயோகிக்கிறார்கள். இன்னும் வேதனைப்படவேண்டிய விஷயம் கக்கூஸ் வசதி கிடையாது. மாணவர்கள் அந்த ரயில்வே காலனியில் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போய்விட்டுதான் வரவேண்டும்.

அவர்களுக்கு லேபரட்டரி ரூம் கிடையாது. ஹெட்மாஸ்டர் இருக்கக் கூடிய சிறிய அறையிலே அது போட்டு அடைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசைக் குறை சொல்வதாக இதை சொல்லவில்லை, மத்திய அரசு பொறுப்பிலேதான் அது இருக்கிறது. ஐ.சி.எப். காலனி இருக்கிறது அந்தப் பகுதியோடு இந்தக் காலனிப் பகுதியையும் சேர்த்து வருங் காலத்திலே ஒரு முனிசிபல் டிவிஷனாக ஆக்கப்பட இருக்கிறது. 100 டிவிஷன்களாக இருப்பதை 120 டிவிஷன்களாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே அப்படி ஆகும் பொழுது அந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்து ஒரு வார்டு ஆகப்போகிறது. அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றவர் எப்படி பணியாற்றுவார்கள்? என்ன பணியாற்றுவார்கள்? ஓட்டுபோட்டு அவரை மன்றத்திற்குத்தேர்ந்தெடுத்து அனுப்புவார்களே தவிர அவர்களுக்காக அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதி அவர்களுக்கு ஒன்றும் செய்யமுடியாத நிலைதான் இருக்கும். ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிகவும் விரும்பி வேண்டி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மத்தியசர்க்காரிடத்திலே இதை எடுத்துச் சொல்லி அந்த பொறுப்பை மாநகராட்சியையே ஏற்றுக்கொள்ளச் செய்து அதற்கான மேம்பாட்டுச் செலவை மத்திய அரசாங்கத்திலிருந்து மான்யமாக பெறுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மனநோய் மருத்துவமனை இருக்கிறது. அங்கேயும் காலனியொன்று இருக்கிறது. ஆனால் அங்கேயுள்ள வீடுகள் குனிந்து செல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது, பாழடைந்த கட்டடங்களாக இருக்கிறது, சுற்றியிருக்கிற நிலப்பரப்புகள் எல்லாம் சுகாதார வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. மென்ட்டல் ஆஸ்பத்திரியில் வேலை செய்கிற தொழிலாளர்கள் வீட்டு வசதியில்லாமல் இருக்கிறார்கள். மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி போர்டு மூலம் தொழில் அமைச்சர் அவர்கள் வீடுகள் கட்டுவதற்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் பிள்ளைகளுக்கென அங்கே ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1968 மார்ச் 19] [திரு. வி. எஸ். கோவிந்தராஜன்]

ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் தொழிலாளர்களுக்கு 56 நாட்கள் சம்பளத்துடன் லீவு கொடுக்கிறார்கள். டி.பி., புற்று நோய் போன்ற நோய்களுக்கு எவ்வளவு காலம் லீவில் இருந்தாலும் சம்பளம் தரப்படுகிறது. ஆனால், பிராங்கடீஸ் ஆஸ்துமா என்னும் இழுப்பு நோய்களுக்கும் அதைப் போன்றே எவ்வளவு காலம் லீவில் இருந்தாலும் சம்பளம் தரப்பட வேண்டும். ஏன் என்றால் அது க்ஷயரோகத்திற்கு எந்த வகையிலும் குறைந்த நோய் அல்ல. ஆகவே அவர்களுக்கும் அந்த வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மொத்தத்தில் விடுமுறை நாட்கள் தரப்படுவதில் மூன்று நாட்கள் ஒன்று சுதந்திர தினம், மற்றொன்று குடியரசு தினம், மூன்றாவது காந்தி ஜயந்திக்கு என்று மூன்று நாட்கள் தேசிய விடுமுறை கொடுக்கப் படுகிறது. ஆனால், இந்த மூன்று நாட்களையும் சாதாரண மற்ற விடுமுறைகளோடு சேர்த்து விடுகிறார்கள். அப்படியில்லாமல் இந்த மூன்று விடுமுறை நாட்களையும் தனியாக ஒதுக்கிவிட்டு மற்ற விடுமுறைகள் 8 அல்லது 10 என்று விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொதுவாக இப்படிப்பட்ட பல நன்மைகள் தொழிலாளர்களுக்கு நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற அக்கறையோடு திறமையைப் பணியாற்றுகின்ற அவர்கள் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் பேரிலே சில வார்த்தைகளைச் சொல்ல எனக்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு தொழிலாளர்களுடைய கொள்கையைப் பொறுத்து ஓரளவுக்கு அணுகுகின்ற முறைகளிலே தீர்வு காணுகின்ற முறையிலே இருக்கின்றது என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும்கூட, பழைய முறைகளிலிருந்து முதலாளி-தொழிலாளி தகராறுகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். போராடினால்தான் தொழிலாளர்களுடைய பிரச்னை தீரும் என்ற நிலைமை இன்னும் நாட்டிலே இருந்து நீங்கிவிடவில்லை. எந்த சிறு பிரச்னையாக இருந்தாலும் தொழிற்சாலைகளிலே ஒரு நிர்பந்தமான சூழ்நிலையை உருவாக்கினால்தான் தீர்வு காணமுடியுமென்ற துர்பாக்கியமான நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. 1947-ஆம் ஆண்டு தொழில் ஒழுங்குவிதிச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அது தொழிற் சங்கங்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் அல்ல. பொதுவாக அரசாங்கமும் முதலாளிகளும் அந்தச் சட்டத்தை உருவாக்கித் தொழிலாளர்களின் மேல் அது திணிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். வருடம் என்ன ஆகிறது? அதை மாற்றுவதற்கு ஏதாவது முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும். தொழில் தகராறுகள் ஏராளமாக தொழிற்சாலைகளில் ஏற்பட்டு அதன் மூலம் வேலை நிறுத்தங்கள்கூட அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமைக்குக் காரணம் முதலாளிகளுக்கு நேரடியாகப் பேசித் தீர்வுகாணும் நோக்கம் கிடையாது. லாப நோக்கம் ஒன்றுதான் அவர்களுடைய குறிக்கோளாக இருக்கிறதே தவிர தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளில் கவனம் செலுத்துகின்ற மனப்பான்மை அவர்களிடம் கிடையாது. சமரஸ அதிகாரிகளின் முன்னிலையிலேகூட முதலாளிகள் வருவது கிடையாது. வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட் என்று வைத்துக் கொண்டு அவர்களை வைத்து அதிகாரிகள் மத்தியிலே அவர்கள்தான் வருகிறார்கள், ஆலை அதிபர்கள் என்ன சொல்கிறார்களோ அதைத்தான் அவர்களுடைய கருத்தாகச் சொல்கிறார்கள். சமரஸ அதிகாரிகள் தொழிற்சங்கங்கள் ஏதாவது சொன்னால் அதைக்கூட சரியான முறையில் அவர்கள் முதலாளிகளிடம் சொல்வது இல்லை. சமரஸ அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாகப் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கு வேல்பேர் ஆபீஸர்கள் முயற்சிப்பது கிடையாது. அதன்மூலமாகத்தான்

தொழில் தகராறுகள் கிளப்பப்படுகின்றன. சமரஸ அதிகாரிகள் சொல்லியும்கூட கேட்காத நிலையில் முதலாளிகள் இருக்கிறார்கள். தொழிற் கொள்கையிலே சமரஸம் காண்பதிலேதான் லாபம் இருக்கிறது என்று தொழிற்சங்கம் கருதுகிறது. அப்படிச் செய்தால் அதைக் கடைப்பிடிக்க காத்திருக்கிறது. ஆனால் அதை எதிர்த்து முதலாளிகள் செய்தால் அதைத் தடுப்பதற்குச் சட்டத்தில் எந்தவிதமான வசதியும் கிடையாது. 1966-ஆம் ஆண்டில் கதவடைப்புகள் உட்பட 176 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இவற்றின் காரணமாக 7,54,612 மனித வேலை நாட்கள் இழக்கப்பட்டன. இதிலே 32 சதவீத தகராறுகளில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன எனத் தெரிகிறது. ஒருதலைப்பட்சமான முடிவை ஏற்றுக் கொண்டு டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள். அதற்குத் தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை தொழிலாளர்களுக்குக் கிடையாது. ஒருதலைப்பட்சமான விசாரணை செய்து அதைக்கொண்டு டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள், அது தவறான போக்கு என்றுதான் வேலைநிறுத்தம் செய்கிறார்கள். டிஸ்மிஸ் செய்தது செய்ததுதான் என்று சொல்லி கோர்ட்டுவரைக்கும் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிற நிலைமை இருக்கிறது. உயர் நீதி மன்றம் வரைக்கும் போவதற்கு 3, 4 வருஷங்கள் இழக்கப்பட்டுவிடுகிறது என்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே டிஸ்மிஸ் செய்யப்பட்டால் அப்படிச் செய்தது சரியா தவறா என்று மூன்று மாதங்களுக்குள் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தால்தான் இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்க முடியும். ஒவ்வொரு தொழிலிலும் முறையான சம்பளம் கிடையாது. 1956-லே வேலை செய்வதற்கு கொடுக்கவேண்டிய சம்பளத்திற்காக செய்யப்பட்ட ஒப்பந்தங்கள்தான் இருந்துவருகின்றன.

பிற்பகல் 1–00 மத்திய சர்க்கார் வேஜ் போர்டு நியமித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை உடன்பட்ட சம்பளப் பிரச்சினை அமலில் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. இன்று இருக்கின்ற விலைவாசிகளுக்குத் தக்கபடி தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோருகின்ற நேரத்தில் ஆலை முதலாளிகள் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். இந்த நிலை பற்றிப் பரிசீலிக்க வேண்டும். கோவையில் பல ஆலைகள் மூடப்பட்டு லோகநாதன் கமிட்டியை அரசாங்கம் அமைத்து 18 மில்களுக்குப் பாங்குகள் கடன் வழங்க அரசாங்கம் காரண்டி கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு மூன்று மில்கள் அதற்குப் பிறகு திறக்கப்பட்டாலும் இன்னும் மூன்று நான்கு ஆலைகள் திறக்கப்படாமலே இருக்கின்றன. லோகநாதன் கமிட்டி சிபார்சு செய்தும் சர்க்கார் காரண்டி கொடுத்தும் பாங்குகள் கடன் கொடுக்க முன்வரவில்லை. என்ன செய்வது என்ற நிலையில் அவை மூடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. அத்தகைய ஆலைகளைத் தமிழக அரசாங்கமே ஏற்று நடத்த முன் வருவதற்கான நிலைமையை உருவாக்கவேண்டும். அல்லது மத்திய அரசாங்கச் சட்டத்தைத் திருத்தச் செய்து ஆலைகளை ஏற்று நடத்தும் சந்தர்ப்பத்தை அரசு உண்டாக்கி இருக்கவேண்டும். இந்த இரண்டிலும் கடந்த மூன்றாண்டுகளாக எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மூன்றாண்டுகளாக ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னதில் இரண்டு ஆண்டுகளை நீக்கிவிட்டு இந்த ஓராண்டில் நம்முடைய கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு முறைகளிலும் இந்த அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். மூடப்பட்ட ஆலைகளை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கான உரிமையோ, சட்டமோ மாநில அரசுக்கு இல்லை. மூடப்பட்ட ஆலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் மத்திய அரசு அதற்காக ஒரு கமிட்டியை நியமித்து, எதனாலே மூடப்பட்டிருக்கிறது அவற்றை எடுத்துக் கொள்ள முடியுமா என்பதையெல்லாம் ஆராய்ந்து அதன்பிறகுதான் எடுத்துக் கொள்ளுகின்ற பிரச்சினை எழும். அதிலே, நீண்ட கால்தாமதம் ஆகும் என்ற நிலை இருக்குமானால் மூடப்படுகிற நேரத்தில் மாநில அரசு அவற்றுக்கு ஏதாவது பண உதவி ஏற்படும்படியாகச் செய்து அவற்றைத்

1968 மார்ச் 19] [திரு. சி. என். அண்ணாதுரை]

திறக்கவேண்டுமென்ற முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது. நண்பர் அவர்கள் அதையும் சேர்த்துச் சொல்லியிருப்பார்களேயானால் இந்த அரசு அனுதாபத்தோடு கவனித்து வருகிறது என்பதற்குக் கொஞ்சமாவது ஆதாரம் கிடைக்கும்.

திரு. கே. என். குமாரசாமி : கால தாமதம் ஏற்படும் என்ற நிலைமையில் சிறிது காலம்கூட நின்றிருக்கவேண்டிய அவசியம் இல்லாமல் ஏதாவது தொழில் சட்டத்தின் பெயரால் அந்த ஆலைகளை எடுத்து நடத்துவதற்கு 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்திருக்கலாம். ஆனால் பண நெருக்கடியின் காரணமாகத்தான் இந்த மாதிரி ஆலைகள் நின்று கொண்டிருக்கின்றன என்று சொல்ல முடியாது. பங்க விலாஸ் ஆலையில் அந்த முதலாளிக்குப் பண நெருக்கடி என்ற பிரச்சினை கிடையாது. அவர்களுக்குள்ளே இருக்கும் போட்டியின் காரணமாக அந்த ஆலையை அநியாயமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதைக் கூடச் சரி செய்ய முடியாத அளவுக்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லாத நிலை இருக்கிறது. இந்த மாதிரி மத்திய அரசிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருக்குமானால், மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாத நிலைமையில் தொழில் இந்த தேசத்தில் வளரும் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. அதற்கான அதிகாரத்தைத் தமிழக அரசு பெறுவதற்கு மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், தொழிற்சாலை என்ற மானியத்தின்மீது நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இன்று நாட்டிலே தொழிற்சாலைகளிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் பெரிய நெருக்கடியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தங்களுடைய சிறு சிறு கோரிக்கைகளுக்குக்கூட பெரிய போராட்டத்தில் ஈடுபட்டுத்தான் அந்தக் கோரிக்கைகளைப் பெறவேண்டிய நிலை இருக்கிறது. பஞ்சாலைத் தொழிலை எடுத்துக்கொண்டால் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து 15 மில்களை மூடப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதோடு 50 மில்களைப் 15 தினங்கள் மூடி வைக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். செங்கோட்டையில் பாலராமவர்மா என்ற மில் ஒரு வருஷ காலமாக மூடப்பட்டு அங்குள்ள சுமார் 700 தொழிலாளர்கள் பஞ்சம் பட்டினியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மில்லைத் திறக்கவேண்டுமென்று போராட்டம் நடத்திய 200-க்கும் அதிகமான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மானேஜ்மெண்டுக்குள்ளாகவே ஏற்பட்ட தகராறின் காரணமாகத்தான் மில்லை நடத்தாமல் மூடிவிட்டார்கள். மானேஜ்மெண்ட் மாறிய பிறகும்கூட பேச்சுவார்த்தைக்காக கமிஷனரோ கலெக்டரோ கூப்பிட்டாலும் கூட அந்த முதலாளிகள் வருவதில்லை. அந்த தொழிலாளர்களைப் பட்டினிபோட்டு வதைக்கிறார்கள். ராஜபாளைய ஜானகிராம் ஸ்பின்னிங் மில் என்று இருக்கிறது. அதிலே 350 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தந்த மாதச் சம்பளம் அந்தந்த மாதமே கொடுக்கப்படுவதில்லை. மூன்று மாதம் கழிந்த பிறகுதான் சம்பளத்தைக் கொடுக்கின்ற பழக்கம் இருந்து வருகிறது. மாதா மாதம் கொடுக்கும்படி கேட்டால் கொடுப்பதில்லை. இதற்காக நடவடிக்கை எடுக்க தொழிலாளர்கள் முயன்றால் இவைகள் எல்லாம் கோர்ட்டுக்கு வந்து தீர்ப்புக் கிடைக்க எத்தனை மாதம் ஆகுமோ தெரியாது. இந்த மாதிரி நெருக்கடிகளைப் போக்கவேண்டுமென்று சொன்னால் தொழிலாளர்கள் பக்கம் தைரியமாக நின்று முதலாளிகளை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். மில்களை மூடிவிடுவதால் முதலாளிகளுக்கு பாதகம் இல்லை. தொழிலாளர்கள்தான் தங்களுடைய வாழ்க்கைக்கு வழி இல்லாமல் தவிக்கிறார்கள். யாருடைய தூண்டுதலாலோ தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை. போராட்டத்தில் ஈடுபட்டால் தங்களுடைய வாழ்க்கை நிலை பாதிக்கப்படும் என்பதைப் பற்றியெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்து வேறு வழி இல்லாமல் நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் போராட்டத்தில் இறங்குகிறார்கள். பிறர் தூண்டி

விடுவதன் காரணமாகப் போராடமாட்டார்கள், போராட முடியாது. இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் அரசாங்கம் சீக்கிரமாகத் தலையிட்டு அந்தத் தகராறுகளை உடனுக்குடன் தீர்க்க முயற்சிக்கவேண்டும்.

இன்னும் சில தொழிற்சாலைகளில் இடைக்கால நிவாரணம் அமல் நடத்தப்படாமல் இருக்கிறது, இன்ஜினியரிங் தொழிற்சாலைகளில் பல முதலாளிகள் இடைக்கால நிவாரணம் கொடுக்கவேண்டுமென்பதை அமல் நடத்தாமல் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளின்போது போலீஸ் தலையிட்டு துப்பாக்கிப் பிரயோகம் வரை ஏற்படும் நிலைமை இருக்கிறது இந்த நிலை அறவே கூடாது. எதிர்காலத்திலே இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்த இடத்தில்கூட நீதிபதியை நியமித்து விசாரணை நடத்துவதோடுகூட சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று மில்களில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நேரத்தில் அது முதலாளிகளுக்கு ஏற்பட்ட நெருக்கடி என்று சொல்வது சரியல்ல. தகராறு செய்யக்கூடிய நிலையில் உள்ள முதலாளிகள் நடத்துகின்ற மில்களை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றி அதை மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து பஞ்சாலைகளை மூடுவது என்று முடிவு செய்திருக்கும் நிலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள், முதலாளிகள் இரு தரப்பினரையும் கூட்டி வைத்துப் பேசி மில்களை மூடுவதை நிறுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மோட்டார் தொழிலாளர்களுக்கு $12\frac{1}{2}$ ரூபாய் இடைக்கால நிவாரணம் கொடுக்கவேண்டுமென்ற சம்பள போர்ட் தீர்ப்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை நம் அரசும் ஒப்புக்கொண்டு அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஹைகோர்ட் தீர்ப்பு பற்றி பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அத்தீர்ப்பு தொழிலாளர்களுக்கு விரோதமான தீர்ப்புதான். தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யும் பண்டங்களை அவர்களுக்குள் உள்ள தகராறு தீராதபோது வெளியில் எடுத்துச் செல்வது நியாயமில்லை. தகராறு தீராத நிலையில் அப்பண்டங்களை வெளியில் எடுத்துச் செல்லும்போது மறியல் செய்ய அல்லது போராட்டம் நடத்த அவர்களுக்கு உரிமை உண்டு. அந்த ஹைகோர்ட் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அதை மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்களும் மற்ற தொழிற் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசும்போது அப்பீல் செய்வது என்பது சரிதான், செய்யவேண்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஐ. என். டி. யு. சி. தலைவர் மட்டும் அதை ஒத்துக்கொள்ளவில்லை என்று அறிந்தேன். அத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். தோல் பதனிடும் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள் இவர்கள் பற்றிய அறிக்கை வந்தும் அது கெஜட்டில் பிரசுரிக்கப்படாமல், அதன் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அது பற்றியும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் சம்பள ஆக்டில் பல விதிகள் அமல் செய்யப்படாமல் இருக்கின்றன. அதையும் செய்யவேண்டும். கைத்தறித் தொழிலாளர்களுக்கு நெருக்கடி அதிகமாக இருக்கிறது.

ஏப்ரல் 1-ம் தேதியில் இருந்து பரமக்குடியில் நெசவாளர்கள் மத்திய அரசாங்கத்தின் ரெயில்வே காரியாலயங்கள் போன்றயிடங்களில் மறியல் போராட்டம் நடத்த திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. பெரிய பாக்டரிகள் வைத்து நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் பாக்டரி முதலாளிகள் கூட மிக மிகக் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான வேலையும் கொடுப்பதில்லை. அவர்களுக்கு வேறு வசதிகளும் செய்து கொடுப்பதில்லை. ஆகவே கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வந்து அவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கும் வகையில் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

கடைசியாக, லேபர் கமிஷனர் ஆபீசிலிருந்து லேபர் கெஸட் என்று வெளியிடுகிறார்களாம். 1967 ஜனவரியில் போடப்படும் கெஸட் 1968 ஜனவரியில்தான் வருகிறது. 1967 பிப்ரவரியில் போடப்படும் கெஸட் 1968 பிப்ரவரியில்தான் வருகிறது. ஆகவே அந்த அந்த மாத கெஸட் அந்த அந்த மாதத்தில் வெளிவரும் வகையில் ஒரு திருத்தத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். இந்த அரசு பொறுப் பேற்றுக்கொண்ட ஓர் ஆண்டுகாலத்தில், இந்த அரசு பொறுப் பேற்பதற்கு முன்னால் கோவை மாவட்டத்தில் மூடிக் கிடந்த பஞ்சாலைகளைத் திறப்பதற்காக இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் அதன் காரணமாக இன்று அந்த ஐந்து பஞ்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதற்காக இந்த அரசை அங்குள்ள அத்தனைத் தொழிலாளர்களும் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு—எதிர் வரிசையில் உள்ள ராமமூர்த்தி அவர்கள் இங்கு பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டார்கள்—தொழிலாளர்களுக்கு நல்லமுறையில் உதவி செய்யவில்லை என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு தொழிற்சங்கத் துறையில் எந்தளவிற்குத் தொடர்புண்டு என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தொழிற்சங்கங்களுடன் நல்ல தொடர்புள்ள கோவைப் பகுதியில் பணியாற்றுகிற ஒரு காங்கிரஸ் தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர் அவர்களுடன் சென்ற ஞாயிற்றுக்கிழமை பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் தெரிவித்தார்கள், காங்கிரஸ் அரசு இருந்த காலத்தில் ஒரு தொழில் தகராறை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்று அன்று கேட்கப்பட்டும்கூட காங்கிரஸ் அரசு அனுப்பாத வழக்கைக்கூட இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறது என்ற கருத்தை என்னிடத்தில் தெரிவித்தார்கள். இதை நான் குறிப்பிடக் காரணம் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பின்னர் தொழிலாளர்கள் பிரச்னையில் உள்ள நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கும் நீதிமன்றத்தில் அவர்கள் தங்கள் நியாயத்தை எடுத்துச் சொல்வதற்கும் உரிமை பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதிலிருந்து இந்த அரசு மிகச் சிறந்த முறையில் பணியாற்றுகிறது என்பது தெரிய வரும், அதற்காக இந்த அரசைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதும், அதன் காரணமாக உயிர் துறக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையும் குறைந்திருப்பதைக் காணலாம். 1966-ல் விபத்துக்கள் காரணமாக இறந்தவர்கள் 42 பேர்கள் என்றால், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 1967-ல் தொழிற்சாலைகள் பெருகியிருந்தாலும் கூட, அதிகப்படியான பேர்கள் தொழிற்சாலைகளில் ஈடுபட்டிருந்தபோதிலும், இறந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக குறைந்

திருக்கிறது என்பதிலிருந்தே இந்த அரசு தொழிற்சாலைகளில் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம். இதுபோல் இன்னும் பல நல்ல காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கின்றன.

திரு. ராமமூர்த்தி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பல துறைகளில் தொழிற்சங்கங்களைத் துவக்குவதாகக் கூறினார்கள். அவர்களுக்கு 30 அல்லது 32 வயது இருக்கலாம். அவர்கள் பிறந்திருப்பாரோ என்று எனக்குத் தெரியாது, அதற்கு முன்னால் நமது ஒப்பற்ற பெரும் தலைவர் இந்த மாநிலத்தின் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்களிடம் ஈடுபட்டு அத் தொழிலாளர்களோடு நெருங்கிப் பழகும் அளவிற்கு அவர்கள் ஒரு தொழிற்சங்கப் பொறுப்பில் அன்று அமர்த்தப்பட்டார்கள். அந்தக் காலத்திலிருந்து வழிவழியாக அவர்கள் வழியில் பலர் பல்வேறு தொழிற்சங்கங்களில் பணியாற்றி வந்திருக்கிறார்கள். அந்த இயக்கம் தான் இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக அமைந்திருக்கிறது. நம் அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள இந்த அறிக்கையில் மத்தியஸ்தத்திற்கு விடுவது சம்பந்தமாக முதலாளிகள் 67 சத விகிதம் பேர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்றும், தொழிற் சங்கங்கள் 5½சத விகிதத்திற்குத்தான் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்ற குறிப்பையும் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று நான தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற் சங்கங்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறவேண்டுமானால் நீண்ட கால தாமதமாகிறது. ஆகவே வேலை நீக்கம் போன்ற முக்கியமான பிரச்னைகளில் கண்டிப்பாக மத்தியஸ்தத்திற்கு ஒத்துக்கொள்ளக்கூடிய முறையில் ஒரு வழி முறையைக் கொண்டு வந்தால் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் இன்று தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி மிகக் குறைந்த அளவில்தான் இருக்கிறது.

இன்று மத்திய அரசு இந்த வீட்டு வசதிக்காக கொடுத்து வந்த உதவியைக் குறைத்திருக்கிறார்கள். அப்படிக் குறைத்ததன் பலனாக நம் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது பெருமளவில் தடைப்பட்டிருக்கிறது. ஆகவே நம் அமைச்சரவை மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி நம் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க பெரும் அளவில் நிதி உதவி பெற்று அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பல பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் ஒப்பந்த முறை இருக்கிறது. காண்ட்ராக்ட் முறை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஈரோடில் கந்தசாமி ஸ்பின்னிங் மில் என்று ஒன்றிருக்கிறது. அதில் இரண்டு பிரிவுகள் வைத்து ரீலிங் பிரிவு ஒன்றை வைத்து அதை காண்ட்ராக்ட் முறையில் நடத்தி வருகிறார்கள். அந்த காண்ட்ராக்ட் முறை நிச்சயமாக ஒழிக்கப்பட வேண்டும். அதற்காக சட்டத்தின் மூலம் எந்த அளவிற்கு பாதுகாப்பு தேட முடியுமோ அந்த அளவிற்கு பாதுகாப்பு தேடவேண்டும்.

திருப்பூர் நகரத்தில் பனியன் தொழிலாளர்களுக்கு *குறைந்தபட்ச கூலி அடிப்படையில் கடந்த ஆகஸ்ட் மாதம் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் பேரில் அந்த முதலாளிகள் உயர்நீதிமன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள். இதனால் அங்குள்ள 7000 பனியன் தொழிலாளர்கள் தங்கள் உரிமையைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்திற்கு வழக்குகள் செல்வதால் காலதாமதம் ஆகிறது, ஆகவே தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் விரைவில் முடிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1968 மார்ச் 19] [திரு. சு. துரைசாமி]

கைத்தறி, பவர்லூம் துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கப்பட வேண்டும். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் என்ற பெயரால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு அலுவலகம் இருக்கிறது. அங்கு பல குறைபாடுகள் இருப்பதாக சொல்கிறார்கள். அதை போக்கக்கூடிய முறையில் அங்குள்ள சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் இன்ஷூரன்ஸ் சம்பந்தமாக திருப்பூர், உடுமலைபேட்டையில் ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கான இடங்களை விரைவில் பார்த்து அவற்றைக் கட்டி முடிக்கவேண்டும். பல்லடம், புஞ்சை புளியம்பட்டி போன்ற பகுதிகளில் அதை விரைவுபடுத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ஒரு முக்கியமான காரியத்தைக் கூற விரும்புகிறேன். அது பொதுவாக இந்த மன்றத்தில் இருக்கும் அத்தனை பேருக்கும் சம்பந்தப்பட்டது. இன்று எதிர்க் கட்சியிலிருக்கின்ற அத்தனைபேரும், தொழிற்சாலைகளில் வேலையிழப்பு ஏற்பட்டு விட்டது, உழைக்கக்கூடிய சக்தி குறைந்துவிட்டது, அது இந்த அரசாங்கம் பொறுப்பையேற்றுக் கொண்ட பிறகு ஏற்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு அடிப்படைக் காரணத்தை நீங்கள் தயவு செய்து மறந்துவிட வேண்டாம். சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று நான் கோயம்புத்தூருக்குச் சென்று வந்தேன். மன்றத்தில் பேசிய எல்லாக் கட்சிக்காரர்களும், ஒரு கட்சிக்காரர் என்று குறிப்பிட்டுக் கூறவில்லை, அத்தனை பேரும் சேர்ந்து, தமிழகத்தில் மூடிக் கிடக்கும் பஞ்சாலைகளைத் திறப்பதற்குப் பல நடவடிக்கைகளை எடுத்து நல்ல பல காரியங்களைச் செய்திருந்தும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்ட அத்தனைபேரும், கோயமபுத்தூர் கம்போடியா மில் திறக்கப்படவில்லையென்றால் 27-ஆம் தேதி கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னால் மறியல் செய்வோம் என்று இன்று அறிவித்திருக்கிறார்கள். நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக்கழகம் இந்த மாநிலத்திலே பொறுப்பேற்றிருக்கிறது. நாங்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்க எங்களுக்கிருக்கும் எல்லா அதிகாரங்களையும் பயனபடுத்தியிருக்கிறோம். அதிகாரத்திற்கு உட்படாத காரியங்கள், எங்களால் செய்ய முடியாத காரியங்கள் ஆகியவைகளைத்தான் எங்களால் செய்ய முடியவில்லையே தவிர மற்றெல்லாவற்றையும் செய்திருக்கிறோம். எங்களுக்கு இருக்கும் அதிகாரத்திலிருந்து இந்தக் காரியத்தை இப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னால் அந்தக் காரியங்களை நாங்கள் செய்யாமல் இருக்கிறோமா என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லவேண்டும். நம்மைப் பார்த்து காங்கிரஸ்காரர்கள், முதலாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். காங்கிரஸ் ஆளுகின்ற மகாராஷ்டிரத்திலும், மைசூரிலும், கூட்டணிக் கட்சி ஆளுகின்ற கேரளாவிலும் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகள் இன்று நேற்று அல்ல, இரண்டாண்டு காலமாக மூடப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு அந்த அரசாங்கம் உதவிப்பணம் என்னும் முறையில் ஒரு பைசாகூட கொடுக்கவில்லை. ஆனால் இன்று தொழிற்சாலைகள் மூடியதால் தொழிலாளர்களுக்கு வாழ்வு தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இருக்கும் அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தான். தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவிப்பணம் கொடுக்கக்கூடிய அரசாங்கம் இந்திய நாட்டிலே இருக்குமானால் இந்த இருபதாண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைத் தவிர வேறு எந்தக் கட்சி அரசாங்கமும் கிடையாது, வேறு எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி, தொழிற்சாலைகளை மூடிய நேரத்தில் உதவி செய்தது? திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தான் உதவி செய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக்கூடிய அரசு என்று சொல்லத்தக்க வகையில் முதலமைச்சரவர்களும்,

தொழிலாளர் அமைச்சர் அவர்களும் மிகச் சிறந்த முறையில் பணியாற்று கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் உதவி சபாநாயகரவர்களே, இப் பொழுதிருக்கும்படியான தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியத்திற்கு என்னுடைய கட்சியைச் சார்ந்த திரு. இராம மூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான வெட்டுப்பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

இதுவரையில் பேசிய அங்கத்தினர்களெல்லாம் அவர்களுடைய கட்சி நோக்கத்தையும், இப்பொழுதிருக்கும்படியான ஒரு சூழ்நிலையையும் எடுத்துக்காட்டினார்கள். ஆனால் இப்பொழுது தமிழகத்தில் இருக்கும் படியான சூழ்நிலை அவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்று கூற முடியாது. இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு இப்பொழுது சூழ்நிலையை நாங்கள் ஏற்படச் செய்திருக்கிறோம் என்ற பெருமையை திராவிட முன் னேற்றக் கழக சர்க்கார் கூறிக்கொள்ளலாம். ஏனென்றால் இதுவரை யில்லாத தொழில் இன்மை, அமைதி யில்லாத நிலை ஆகிய இந்தப் பெரிய காரியத்தை இப்பொழுது இந்த வருஷத்திலே செய்து கொண் டிருக்கும்படியான பெருமைக்காக அவர்களை நாம் பாராட்டலாம். இவ் வளவு நாளாக இல்லாத அளவிற்கு இவ்வளவு தொழிலின்மை, பாதுகாப்பு இல்லாது தொழிலாளர் இருக்கும்படியான நிலைமை இருக் கிறது என்பதற்குப் பலவற்றை எடுத்துக் காட்டலாம். ஆனால் பொது வாக இந்தத் தொழில் முறையிலே எந்த நிலை இருக்க வேண்டும், எப்படி நடைபெற வேண்டும் என்று பார்த்தால் ஒரு விஷயத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்கள் நலன் பூரணமாகப் பாதுகாக்கப்பட்டு அவர்கள் மகிழ்ச்சியுடன் நல்ல நிலைமையி லிருந்தால்தான் முதலாளிகள் நன்றாகயிருக்க முடியும் என்பதை எல்லோரும் உணர்ந்தாக வேண்டும். முதலாளிகள் பூரணமாக நன்றாக யிருக்கவேண்டுமானால் அவர்களிடத்திலே பாடுபட்டு உழைக்கக்கூடிய தொழிலாளர் நலன் சிறப்பாக இருக்க வேண்டும். அதே நிலையில் தொழிலாளர்கள் உரிமைகளைக் கேட்கும்பொழுது கடினமான உழைப்பைக் காட்டி சீரிய முறையிலே யிருக்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது நிலை அப்படியில்லை. அவர்களது உரிமைகளை மட்டும் கேட்கிறோமே தவிர, கடமையில் ஈடுபடச் சொல்லும் அளவிற்கு அவ்வளவு தூரம் பொறுப்பை உணர்கிறோமா இல்லையா என்றால் எந்த அரசியல் கட்சித் தலைவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவர்களிடமிருந்து வரும்படியான ஆதரவு கிடைக்காமல் போய்விடுமோ என்று நினைக்கக்கூடிய அளவில் தொழிற்சங்கங்கள் எல்லாம் துரதிருஷ்டவசமாக இயங்கிக்கொண்டு வருகின்றன என்றால் அது மிகையாகாது. தொழிலாளர்களுடைய நலன் பாதிக்கும்படியான நிலையிலே சர்க்கார் இந்தச் சட்டத்தைப் போட்டோ அல்லது வேறு ஏதாவது சட்டம் இயற்றியோ வற்புறுத்துவதால் அந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியாது. நம்முடைய மனப்பான்மை, மக்களுடைய மனப் பான்மை, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இருக்கும்படியான தொடர்பு, நல்லெண்ணம் இவைகள் மூலமாகத்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியுமே தவிர வேறொன்றால் முடியாது. தொழிற்சங்கங் களிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் ஒரு வகை. விவசா யத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகள் வேறு வகை. இப்பொழுது அந்தந்த நிலையிலே அரசியல் கட்சிகள் அங்கே ஒரு பாதகமான நிலையை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, கம்யூனிஸ்டுகள் கிராமங்களிலே விவசாயத் தொழிலாளர்களிடையே பரப்பி வருகிறார்கள். இப்பொழுது பட்டணத்திலே தொழிற் சங்கங்களிலே இருக்கும்படியான நிலையை கிரா மங்களிலே பரப்பி வருகிறார்கள். சில இடங்களில் வெற்றிபெறுகிறார்களோ இல்லையோ, குழப்பம் காட்டி வருகிறார்கள். சில இடங்களில இவர் களது எண்ணம் ஈடேறாமல் இருக்கிறது. குறிப்பாக கோயம்புத்தூர், சேலம் பகுதிகளில் எடுத்துப் பார்த்தால் இவர்கள் சொல்வதை ஏற்றுக்

கொள்ளாத நிலையில் அங்கு இருக்கிறார்கள். காரணம், அங்கே விவசாயத் தொழிலாளர்களும், முதலாளிகளும் ஒன்று சேர்ந்து விளங்கும்படியான தன்மையிருக்கிறது. குறிப்பாக, என்னைப் பொறுத்தவரையில், என்னோடு போட்டியிட்ட இடதுசாரி கம்யூனிஸ்ட் அபேட்சகர் எவவளவோ சொல்லிப் பார்த்தார். ஒன்றும் முடியவில்லை. கிராமத்திலே எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படுகிறது. குடியானவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. நேர்மையான முறையில், நியாயமான முறையில் போனஸ் கொடுக்கப்படுகிறது. ஃபேக்டரியிலே கொடுப்பதுபோல் மூன்று மாத போனஸ், நான்கு மாத போனஸ் என்று சட்டத்திற்கு கட்டுப்பட்டு கொடுப்பதில்லை, அன்பாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் குடும்பத்தில் எந்தக் காரியம் நடந்தாலும் முதலாளி வீட்டு ஆண, பெண, குழந்தைகள் எல்லோரும் சென்று சமமாக நடத்தும்படியான நிலை ஏற்படுகிறது. ஆகவேதான் கோயம்புத்தூர், சேலம் பக்கத்திலேயுள்ள பகுதிகளில் விவசாயத் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்குமிடையே தகராறு கிடையாது. தஞ்சாவூரிலே என்ன நிலமையென்றால் அங்கு தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் சம்பந்தம் கிடையாது. ஆனால் என்னுடைய பகுதியில் தொழிலாளர்கள் எவ்வளவுதூரம் செய்தாலும் கூட முதலாளிகளே தொழிலில் இறங்கி விடுவதால் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாது.

இப்பொழுது ஒரு சின்ன கதை சொல்ல விரும்புகிறேன். மேடையிலே பிரசங்கம் செய்து கொண்டிருந்த ஒருவர், எனக்கு 100 வீடுகள் இருந்தால் ஒவ்வொரு ஏழைத் தொழிலாளிக்கும் ஒரு வீடு கொடுப்பேன, எனக்கு 100 ஏக்கரா பூமியிருந்தால் அரிஜனத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் கொடுப்பேன் என்று சொல்லிக்கொண்டிருந்தார். கூட்டத்தில் ஒருவர் அவரைப் பார்த்துக் கேட்டார், உங்களுக்கு என்ன இருக்கிறது என்று. அதற்கு அவர், எனக்கு ஒன்றும் கிடையாது, இரண்டே இரண்டு ஆட்டுக்குட்டிகள்தான் இருக்கின்றன என்றார். உடனே அவரைப் பார்த்துக் கேட்டவர், அதில் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியைக் கொடுத்து விடுங்கள் என்று கேட்க, அதைத் தர முடியாது என்று அவர் பதில் சொல்லிவிட்டாராம். அதுபோல பிறரிடத்திலேயிருப்பதை பங்கு போட்டுக் கொடுக்க வேண்டுமென்று பேசும்படியானவர்கள், அவரிடத்திலேயிருக்கும்படியானதைக் கேட்டால் தரமுடியாது என்று சொல்வார்கள். ஆகவே இப்பொழுதிருக்கும்படியான நிலையில் நம் நாட்டில் நிலையான உற்பத்தி பெருக வேண்டுமானால் கடினமாக உழைக்க வேண்டும.

திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியின் ஆதரவுடன்தான் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறது. இப்பொழுது அவர்களுடைய கொள்கையைப்பற்றியெல்லாம் புத்தகத்திலே எழுதியிருக்கிறார்கள். எனக்கு இதில் எது திடமான பகுதி என்று புரியவில்லை. ஒரு பக்கத்திலே தொழிலாளர் நலன்தான் எங்கள் கொள்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே பாதுகாப்புப் போடவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்த ஒரு வருஷ காலத்திலே, போலீஸை, சர்க்காருடைய சலுகையைப் பயன்படுத்தி கட்சிச் சங்கங்களை—தொழிற்சங்கங்களை—வளர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அவர்களாவது பயன்படுத்திக்கொள்ளட்டும், பரவாயில்லை. இடையிலே, இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் புகுந்து, இவர்களைத் தலைவர்களாக வைத்து, பொம்மைகளாக வைத்து, இடையிலே ஈடுபட்டு, குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும்படியான நிலையற்ற தன்மைகளுக்குக் காரணம் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அமைச்சர்களுக்கும் தெரியும். இப்பொழுது இருக்கும்படியான நிலை, கடிக்கவும் முடியவில்லை, தொடவும் முடியவில்லை என்பதுதான். அந்தமாதிரி நிலையிலே இடதுசாரி கம்யூனிஸ்டுகள் உரிமை உரிமை என்று சொல்லும் நிலையிலே குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே வந்தால் சர்க்காரை ஆதரிக்கிறமாதிரிப் பண்ணுகிறார்கள். அங்கே, வெளியே போனால் இவர்கள் பண்ணும்படியான அட்டகாசங்கள் சொல்லமுடியாது. இன்றைக்கு பாக்டரிகளை மூடும்படியான

பிற்பகல் 1–30

நிலே அவர்களுடைய திட்டத்தின் காரணமாகத்தான் ஏற்பட்டது. கடைசியிலே, எனக்கிருக்கிற பயமெல்லாம், திராவிட முன்னேற்றக்கழக ஆதிக்கத்தில் இவர்கள் வந்து குட்டையைக் குழப்பி பெரிய நாசகரமான சக்திகளைக் கொண்டுவந்து தமிழகத்தினுடைய அமைதியைக் குலைப்பார்கள் என்பதுதான். அந்த துரதிருஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையிலே இரண்டுவிதமான நிலைகளிலே இவர்கள் இருக்கிறார்கள். ஒரு பக்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. காரணம் போலீஸை எடுத்துக்கொண்டால் அவர்கள் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். எங்கே பாதுகாப்பு கொடுக்கிறார்கள். அதற்கு ஹைக்கோர்ட்டிலே உத்திரவு போடவேண்டும். ஷெல்பார்க் கம்பெனியிலே தகராறுகள் ஏற்பட்டபொழுது, இவர்கள் போலீஸ் பாதுகாப்பு கொடுக்கமுடியாத நிலையிலே அவர்கள் ஹைக்கோர்ட்டுக்கு வந்து அங்கு ஜட்ஜ் அவர்கள் இந்தமாதிரி விஷயங்களில் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது சர்க்காரினுடைய கடமை என்று சொன்னதற்குப் பிறகு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். இந்த நிலையிலே இவர்கள் எங்கே சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் நிலையிலே தொழிற்சங்கத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலே இருக்கிறேன்.

அண்மையிலே நடந்த ஒரு குழுவில், சர்க்காரினுடைய தலையீடு எவ்வளவுதூரம் இருக்கிறது; எவ்வளவுதூரம் தொழில் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். இதை நான் சொன்னால் காங்கிரஸ்காரர்கள் அரசியல் காரணமாகச் சொல்லுகிறார்கள் என்று சொல்லலாம்.

Study team of the National Commission on Labour.

"constant and continuous interference to reinstate the level in labour disputes;

Ministerial pressure on management to reinstate the dismissed workers without even examining the merits of the case."

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையிலே அமைதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள், அவர்களுடைய அறிக்கை சொல்லுகிறது. இது எந்தக் கட்சியினுடைய சார்பாகவும் இல்லை. நடுநிலைமையாக அவர்கள் விசாரித்து தொழிலமைப்பிலே இருக்கிற சூழ்நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இவர்கள் மேல் குற்றச்சாட்டு சொல்லுவதற்காக அல்ல; குற்றச்சாட்டு சொல்லுவதற்காக நான் சொல்லுவதாக அமைச்சரவை எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்த நிலையிலே நாம் இப்பொழுது இருக்கிறோம்; அதைத் திருத்துவதற்கு வழிவகைகளைக் காண வேண்டுமென்ற முறையிலே அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்பது தான் என்னுடைய கோரிக்கை. ஆகவே, இன்றிருக்கும் நிலையிலே இன்னும் அதிகமான அளவு தொழில் அமைதிக்குப் பங்கம் உண்டாகுமேயானால் நம்முடைய தேசத்திலே இருக்கும்படியான, நாட்டிலே இருக்கும்படியான தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அதாவது தொழில்கள் மிகவும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

தொழில் தகராறு நடைபெறாத முறையிலே கோவையில் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுத்தார்கள். கொடுத்தது வரவேற்கத் தக்கதுதான். ஆனால், அது எந்த நிலையிலே போய் முடிந்தது 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று சொல்லுகிறமாதிரி முதலமைச்சர் அவர்கள் இரண்டு நான்கு ஆலைகளைத் திறக்க, அங்கிருக்கிற முதலாளிகள் 14 மில்களை மூடுவதற்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள். காரணம் என்ன? நூல்கள் தேங்கிருக்கின்றன, அவைகள் விற்பனையாகவில்லை; ஆகவே மூடப்போகிறோம்

என்று சொல்கிறார்கள். இதற்கும் மத்திய சர்க்கார்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். அப்படியே வைத்துக்கொள்வோம். ஆனால், மேல்சபையில் எஸ். ஆர். பி. பொன்னுசாமி அவர்கள் ஏற்கனவே மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இந்த நிலையிலே தொழிலாளர்களுடைய நிலையை நாம் நன்றாக பாதுகாக்க வேண்டியது அவசியம். தொழிலாளிகள் நன்றாக இருக்கவேண்டுமென்ற நிலையிலே யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. ஆனால், அதே சமயத்தில் இப்பொழுது செய்யவேண்டிய வேலை என்ன? மூடிவிட்டார்கள் என்று சொல்லுகிற நேரத்தில் மத்திய சர்க்காரை குறை சொல்லி பிரயோஜனம் கிடையாது. மத்திய சர்க்கார் காட்டும் படியான உதவியைப் பெறுவதற்கு நாம் தயங்கக் கூடாது. இதற்கு முன்னால் ஒரு முக்கூட்டுக்கூட்டம் போட்டு, முதலாளிகள், தொழிலாளிகள், சர்க்கார் மூவரும கூடி, இதைத் திறப்பதற்கு என்ன வகை செய்தாக வேண்டும், யார் யார் விட்டுக் கொடுக்கவேண்டும், யார் யார் தியாகம் செய்தாக வேண்டும், என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டும். இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே அதிகமான உரிமை பெற வேண்டுமென்பதல்ல பிரச்சினை. எவ்வளவு தூரம் நாம் கடினமாக உழைக்கவேண்டும் எவ்வளவுதூரம் தியாகம் செய்ய வேண்டும், எவ்வளவுதூரம் முதலாளிகள் விட்டுக்கொடுக்கவேண்டும். இந்த மூன்று காரியங்களையும் நாம சிந்திக்கவேண்டும். அப்படியில்லையென்றால் தொழில் வளர்ச்சி குன்றிப்போய்விடும். 20,000 தொழிலாளர்கள், 30,000 தொழிலாளர்கள் முதலமைச்சருடைய வேண்டுகோளுக்கு இணங்கியிருக்கிறார்கள். அவர்கள் நன்கு இருக்கக்கூடிய நிலையில் தொழில் ஊதியத்தைக் கொடுத்தார்கள் பேச்சு வார்த்தைகளின் மூலம். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை என்ன? எல்லோரும் இதுமாதிரி உட்கார்ந்து பேசுகிறார்களா? யார் யார் எவ்வளவு வேலை செய்கிறார்களோ அதற்கேற்ற ஊதியம் தருகிறோம் என்னும் நிலை வரவேண்டும். தொழிலாளர்கள் அதிகமாக நாங்கள் வேலை செய்வோம் என்னும்படியான நிலைக்கு வரவேண்டும். அப்படி வந்தால் தான் இந்தப் பிரச்சினை இருமே தவிர வேறுவிதத்தில் தீராது. அவ்வளவையும் சிந்தித்துப் பேசும் நிலையிலே நாம் நம்முடைய உற்பத்தித் திறனைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

இப்பொழுது, 'ரெசஷன்' என்று சொல்லுவார்கள், 'பொருளாதார மந்தம்' என்று சொல்வார்கள், அந்த நிலைதான் இருக்கிறது. ஆனால் பொருளாதார மந்தத்திலே தொழிலாளர்களுக்கும் ஒரு கடமையிருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது எத்தனையோ பாக்டரிகள் மூடி இருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? மெட்டல் பாக்ஸ் பாக்டரி மூடப்பட்டிருக்கிறது. அங்கு தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டபோது யாரும் தடுக்கவில்லை. போலீஸ்காரர்களை அழைத்தால் என்ன சொல்லுகிறார்கள்? மண்டை உடைந்து இரத்தம் வந்தால்தான் நாங்கள் வருவோம் என்று சொல்லுகிறார்கள். சர்க்காரிடமிருந்து அந்தமாதிரி உத்திரவு போட்டிருக்கிறார்களோ என்னவோ தெரியாது. இந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று என் செய்யக்கூடாது? விம்கோ பாக்டரி மூடப்பட்டது. டன்லப் பாக்டரி மூடப்பட்டது. 7-ம் தேதி சிக்கல் ஏற்பட்டது, 9-ம் தேதி பாக்டரி மூடப்பட்டது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதிலே அரசியல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கட்சி சார்பாக இருக்கிற தொழிற்சங்கம் இருக்கிற காரணத்தினால் அதற்கு ஒரு நியதி. இன்னொரு கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கம் இருந்தால் அதற்கு ஒரு நியதி என்னும்படியான நிலையிலே டிமாண்டைக் கொடுக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே வேலைக்குச் செல்லவில்லை. போய் வேலைசெய்கிறேன் என்று செல்பவர்களையும் தடுக்கப் போகிறார்கள். இதையும் சிந்தித்துப் பார்த்து நல்ல முறையிலே நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தொழிலாளர்கள் சீராக வேண்டுமென்று லெனின், ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்கள். அவர்கள் தேசத்திலேயிருந்து, தொழிலாளர் புரட்சியைப் பார்த்த அந்த தேசத்திலேயிருந்து வந்து நமது தேசத்திலே இருக்கும்படியான நிலையைப் பார்த்து என்ன சொல்லுகிறார்கள் என்ற குறிப்பை நான் சொல்ல விரும்புகிறேன். "U. S. S. R Experts' view" ரஷியாவிலிருந்து வந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

"Inexperienced management and lack of discipline among labour are the two major contributory factors for the poor performance of India's Public Sector undertakings."

அதாவது, ஒழுக்கம் இல்லாத தொழிலாளர்கள். . . (திரு. இராம. அரங்கண்ணல்: மானேஜமெண்ட் பற்றி சொல்லுங்கள்). மானேஜமெண்ட்பற்றிச் சொல்கிறேன். (குறுக்கீடு) சென்ட்ரல் கவர்ன்மெண்டைச் சொல்லி பிரயோஜனம் இல்லை. அவர்களும் மனிதர்கள் தான், இவர்களும் மனிதர்கள்தான். அமராவதி பாக்டரி 1½ வருஷமாக மூடப்பட்டிருக்கிறது. அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். மானேஜ்மெண்ட் பற்றி பிரத்தியேகமாகப் பேசுகிறார்கள், அதற்காக நன்றி. சர்க்கார் இருக்கும்படியான நிலையிலே அதிகாரிகளைப் போடுகிறார்கள். அவர்களுக்கு என்ன அனுபவம் இருக்க முடியும்? நிச்சயமாக இருக்க முடியாது. முதலாளிகள் பண்ணுகிறார்கள் அக்கிரமம் என்று அதிகாரிகளைப்போட்டால் . . (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: படித்ததை முடித்துவிடுங்கள்). . . அந்த யூ. எஸ். எஸ். ஆர். நிபுணர்கள். . . .

"Proper system of excellence in work has been stressed by the team."

இரண்டு நிலை இருக்கிறது. என்னவென்றால், உழைப்பு இருக்கவேண்டும்; உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இருக்கவேண்டும். ஊதியம் தரவேண்டுமானால் அதற்குத் தகுந்த 'அவுட்டர்ன்' பயன் சரியாக இருக்கவேண்டும். பயனில்லாமல் இருக்கும்படியான நிலையினை இப்பொழுது நாம் பார்க்கிறோம். போனஸ் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறோம். இலாபம் வரும்படியான நிலையிலே தொழிலாளர்களுக்கு ஒரு அடிப்படையில் போனஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். ஒவ்வொரு ஆண்டும் போனஸ் பெறவேண்டியதைப் பற்றி தீபாவளிக்கு ஓரிரண்டு நாட்களுக்கு முன்னால் பேசும்படியான நிலைதான் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்களுக்கு, நான்கு மாதங்களுக்கு முன்னாலே அதைப் பற்றி திட்டம் போட்டு, அவர்களுக்குத் தரப்பட வேண்டும். இலாபம் இருந்தால் போனஸ் கொடுக்க வேண்டும், இலாபத்தில் ஒரு பகுதி கொடுக்கவேண்டும், இலாபம் இருக்கிறதோ இல்லையோ அதைப் பற்றி அக்கறை இல்லை, முன்னாலே 3 மாதங்களுக்கு போனஸ் கொடுத்தால் திரும்பவும் 3 மாதங்களுக்கு போனஸ் கேட்கின்ற நிலையிலே சூழ்நிலை ஏற்படுகிறது.

பாக்கி இருக்கும்படியான இடங்களில்கூட தொழிலாளர்களுடைய உழைப்பு குறைந்திருக்கிறது, தரம் குறைந்திருக்கிறது. போனஸ் கொடுக்கப்படவேண்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. உழைத்து உற்பத்தியைப் பெருக்கி, அதிலிருந்து வரும்படியான லாபத்தில் கொடுக்கவேண்டும். இப்பொழுது இருக்கும்படியான நிலையிலே, அமைதி பாதுகாக்கப்படாமல் இருக்கும்படியான நிலையிலே, அதனால் நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு சுந்தகம் ஏற்படும் என்ற நிலையிலே, தொழில்கள் பாதிக்கப்படும் என்ற நிலையிலே, இந்தத் தொழில்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு, உற்பத்தி பெருகுவதற்கு சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்து, பாதுகாப்பு கொடுத்து, சர்க்காரிடத்தில் ஒரு நம்பிக்கை ஏற்படும்படியான நிலையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுடைய நிலை எந்த நிலையிலே இருக்கிறது என்பது திட்டவட்டமாகத் தெரியவேண்டும்.

திறமை அதிகரிக்கவேண்டும் என்று சொல்லும்படியான நிலையில், தொழிலாளர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நிலையில், இந்த தொழிலாளர் கொள்கை பற்றிய விவர அறிக்கையிலே ஒன்றை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதைச் சொன்னால் உடனே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை எதிர்த்துப் பேசுகிறார்கள் என்று கூறுவார்கள். ''கணக்கிடுதல் போன்ற பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தும் போக்கினை இந்த அரசு எதிர்க்கிறது'' என்று சொல்லியிருக்கிறார்கள். இது நல்லது தான். பல பேர்களுக்கு வேலை கொடுக்கும்படியான நிலை ஏற்படுகிறது என்று சொல்லலாம். அதே நிலையில் இன்னொன்றையும் யோசித்துப் பார்க்கவேண்டும். இப்பொழுது விவசாயத்தை எடுத்துக்கொண்டால், டிராக்டர்களை உபயோகப்படுத்துகிறோம். டிராக்டரை உபயோகப்படுத்தினால், 10, 20 உழவர்கள் உழும்படியான நிலை பாதிக்கப்படும், உழவர்கள் வேலையை இழப்பார்கள், வேண்டாம் என்று சொல்ல முடியுமா? உழவர்கள் வாயில்லா பூச்சிகள். 'டிராக்டர்களை' உபயோகப்படுத்தினால் 50 குடும்பங்களின் வயிற்றில் மண்ணைப் போடுகிறீர்கள் என்று சொன்னால், உடனே டிராக்டர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா? கணக்கிடும் இயந்திர முறை இருக்கவேண்டும், அதே மாதிரி தொழிலாளர்களும் இருக்கவேண்டும். அமெரிக்கா தேசத்தில், எபிஷியண்டு அட்மினிஸ்டிரேஷன் இருக்க வேண்டும் என்று கம்ப்யூடர் வைத்திருக்கிறார்கள். அதே சமயத்தில் தொழிலாளர்களை எடுத்துவிடும்படியான நிலையும் இல்லை. ஆடோமேஷனை கண்டிப்பாக வேண்டாம் என்று சொன்னால், பின்னாலே எதிர்காலத்தில் நாம் கஷ்டப்படுவோம் என்பதைத் தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கணக்கு இயந்திரங்களை கொண்டுவரக்கூடிய நிலையில் பாக்கி இருக்கும்படியான தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடாது. ஆனால் வேலையை மேலும் எபிஷியண்டாகச் செய்யவேண்டும் என்ற ஒரு நிலையிலே அது வரவேண்டும். இப்பொழுது லாரியில் குப்பையை எடுத்துக் கொண்டு வயலில் போடுவதைவிட, கூடையில் எடுத்துக்கொண்டுபோய் போட்டால் 100 பேர்களுக்கு வேலை தரமுடியும் என்று சொல்லக்கூடிய வாதம் சரியான வாதமாகாது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், மத்திய சர்க்கார் இதுமாதிரி ஆடோமேஷன் கொண்டுவரப்போகிறது, அவர்களுக்கு ஒரு எதிர்ப்பு தெரிவித்தாக வேண்டும் என்ற ஒரு நிலையிலே, அரசியல் காரியத்திற்காக இதைச் செய்யவேண்டும் என்ற நிலையிலே அவர்கள் இப்படிச் சொல்கிறார்கள். வருவது ஓரளவுக்கு நல்லது, பூரணமாக வேண்டாம் என்று சொல்வதற்கில்லை என்ற ஒரு நிலையிலே இருக்கும்படியான ஒரு சூழ்நிலையில் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற தகுந்த ஊதியம் கொடுப்பதற்கு நாம் சட்டம் இயற்றிக்கொடுக்க வேண்டும்.

இடதுசாரி கம்யூனிஸ்டு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் எல்லா விலையும் ஏறிப்போய்விட்டது என்று. நெல்லுக்கு விலை ஏற்றிக்கொடுங்கள் என்று என்ன நிலையை வைத்து நான் சொல்கிறேன என்றால், நெல்லுக்கு விலையை ஏற்றிவிட்டு, விவசாயத் தொழிலாளிக்கு இவ்வளவு தான் கூலி என்று நிர்ணயம் செய்யுங்கள், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இவ்வளவு விலை தான், விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாயத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்கு இவ்வளவு கூலி, இவ்வளவு பங்கு என்று போடுங்கள். இவ்வளவு மணி நேரத்திற்கு இவ்வளவு வேலை செய்து கொடுக்க வேண்டும், இவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யுங்கள். நான் அதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுடைய நிலையைப் பார்த்தால், தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படியான தொழிலாளர்களுடைய நிலையில் பாதி கூட கிடையாது. விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முதலாளிகள் தயவில் இருந்துகொண்டிருக்கிறார்கள். தஞ்சாவூர் போன்ற இடங்களில் பார்த்தால் அவர்களுக்கு குடியிருப்பதற்குக் கூட இடம் கிடையாது. நான் அதிகமான விலை கொடுக்க வேண்டுமென்றால், என்னவோ மிராசுதார்களுக்காக, முதலாளிகளுக்காக நான் வாதாடுகிறேன் என்பது அல்ல, நிச்சயம் அந்தத் தவறான கருத்தை வைத்துக்கொள்ளவேண்டாம்

என்று கேட்டுக்கொள்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால், நெல்லுக்கு இன்ன விலை, விவசாயத் தொழிலாளர்களுக்கு இவ்வளவு மணி நேரத்திற்கு இவ்வளவு வேலை செய்தால் இவ்வளவு கூலி கொடுத்தாகவேண்டும் என்று ஒரு அடிப்படையை நிர்ணயம் செய்யுங்கள். நிச்சயம் அதை நிறைவேற்றுவதற்கு சட்டத்தை வேண்டுமானாலும் செய்யுங்கள். நிச்சயம் நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இத்தனை பகுதி, 100-க்கு 60 விளைவதில் கொடுக்கவேண்டும் குத்தகைக் காரர்களுக்கு என்று உத்தரவு போடுங்கள், ஒரு நாளைக்கு விவசாயத் தொழிலாளிக்கு இவ்வளவு கூலி, உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் என்று நிர்ணயம் செய்யுங்கள், ரூ. 4, ரூ. 5 என்று கூட நிர்ணயம் செய்யுங்கள், ஆட்சேபணை கிடையாது. அதற்குத் தகுந்தமாதிரி விலை நிர்ணயம் செய்யவேண்டும். ஒரு படி அரிசித் திட்டம் கொண்டுவந்து விட்டோம் என்று அவர்களுக்கு கூலி உயர்வு கொடுக்கவேண்டாம் என்று நினைக்கிறார்களா? அப்படியிருந்தால் அவர்கள் என்ன தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று நான் ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் நான் சொல்கிறேன், ஏழை விவசாயத் தொழிலாளிகளும் நன்றாக இருக்கவேண்டும், அவர்களுக்கு ஒரு அடிப்படை ஜீவாதார ஊதியம் கிடைக்கவேண்டும், ஊதியம் என்றால் வாயளவிலே இருக்கக்கூடாது, உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இருக்கவேண்டும், அமைதி இருக்கவேண்டும் என்ற நிலையில் சர்க்கார் நியாயமான முறையில் நடந்து, நீதியை நிலைநிறுத்தி, எல்லாவிதமான உழைப்பாளிகளுக்கும் தகுந்த பாதுகாப்பு கொடுத்து, தொழில் அமைதியைப் பாதுகாப்பதற்கு நல்ல நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நினைத்து, என் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, நம்முடைய தொழிலாளர் அமைச்சர் அவர்கள், இங்கு எடுத்துக்கூறப்பட்ட பல விஷயங்களுக்கு பின்னாலே விளக்கம் கூற இருக்கிறார்கள். என்றாலும், சில பொதுப்படையான பிரச்னைகள் இங்கே எழுப்பப்பட்டிருப்பதாலே அவைகளுக்கு மட்டும் சில கருத்துக்களைச் சொல்லி, பிறகு அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தொழிலாளர் நலனைப்பற்றிய இந்த விவாதத்தில், எந்த மானியக் கோரிக்கையாக இருந்தாலும், இந்த அரசு, இந்த அரசை நடத்துகிற கட்சி எதையுமே சரியாகச் செய்யவில்லை என்று எடுத்துச் சொல்வதற்கு பயன்படுகிற முறையிலே எடுத்துச்சொன்ன கருத்துக்களை நான் அவ்வளவாக கவனிக்கத் தேவையில்லை என்பதை நான் சொல்லாமலேயே நன்றாக அறிவார்கள். இங்கே அந்த முறையிலே கருத்துக்கள் சொல்லப்பட்டன அவைகளை நான் ஆராயவேண்டும் என்பது அவசியமில்லை என்பதை அவர்களே நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு வகையான கருத்துக்கள் என்னவென்றால், சில அடிப்படையான மாறுதல்கள், மாறுதல்களுக்குத் தேவையான சட்ட திட்டங்கள் இவைகளைப் பற்றி தொழிலாளர் தலைவர்களாக இருப்பவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் உடனுக்குடன் கேட்டு, உடனுக்குடன் சட்டங்களாக ஆக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதை அவர்களும் அறிவார்கள். அவைகளெல்லாம் மிகவும் அக்கரையோடு கவனிக்கத்தக்க கருத்துக்கள் என்ற அளவில் நான் அந்தக் கருத்துக்களை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

இன்னொரு வகையான கருத்து இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அந்தக் கருத்துதான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது பேசிய சில அடிப்படையான கருத்துக்கள். 'நெல் விலையை ஏற்றினால் நான் விவசாயக் கூலிக்கும் அதிகமாக பணம் தருவேன்' என்று அவர்கள் சொல்கிறார்கள். அதிலே இருக்கிற பொருளாதார

தத்துவத்தை கொஞ்சம் அவர்கள் ஆராயவேண்டும். ஒருபுறத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலியை ரூ. 2, ரூ 3 என்று ஆக்கிவிட்டு, அவர்கள் வாங்கிச் சாப்பிடவேண்டிய உணவுப் பண்டங்களின் விலையையும், நெல்லுக்கு அதிக விலை கொடுப்பதன் மூலம், ஏற்றிவிடுவார்களே யானால், அது பாரி பறித்த பரி என்று சொல்வார்களே, அதைப்போல கொடுக்கின்றதைத் திருப்பி பறித்துக்கொள்வதிலே போய் முடியுமே தவிர, உண்மையிலேயே தொழிலாளர்களுக்கு நிரந்தரமான பலனைக் கொடுப்பதாக இருக்காது. ஆகையினால் நெல் விலையைக் கூட்டினால் அந்த அளவுக்கு கூலியும் உயரும் என்று எடுத்துச் சொல்லப்படுகிற அந்த நிலையை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆராய்வார்களேயானால், ஒரு வண்டி நெல்—எங்கள் பக்கத்தில் வண்டிக் கணக்கில்தான் சொல்வார்கள்—ரூ. 25, 30-க்கு விற்றுக்கொண்டிருந்தபொழுது விவசாயக் கூலிகளுக்கு எவ்வளவு பணம் தரப்பட்டுவந்தது என்பதையும், இப்பொழுது படிப்படியாக நெல்லினுடைய விலை ஏறியானபிறகு அதற்குத் தகுந்தபடி விவசாயக் கூலியும் உயர்ந்திருக்கிறதா என்பதையும் அவர்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை, அவர்களே எண்ணிப்பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே 15 வருஷங்களுக்கு முன்னால் 8 அணா கூலி பெற்றுக்கொண்டு வந்தபொழுது அவர்கள் வாழ்க்கை நடத்த முடிவதற்கு கிடைத்த வாய்ப்புகளையும், வசதிகளையும், இன்றையதினம் ரூ. 3 கூலி கிடைத்தாலும் அதே அளவுக்கு வாழ்க்கையை நடத்த முடியாதது பற்றியும் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, கூலியை உயர்த்துவதினாலேயோ அல்லது நெல்லின் விலையை உயர்த்துவதினாலேயோ மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது.

இந்தப் பிரச்னைகள் மாநில அரசின் அதிகாரங்களுக்கு உட்பட்ட பிரச்னைகள் மட்டுமல்ல. அதைப்பற்றி சொல்கிறேன் என்றால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'ஆகா! நீங்கள் உடனே மத்திய சர்க்காரைப் பற்றி சொல்லிவிடுவீர்கள்' என்று கூறிவிடுவார்கள். ஆனால், அவர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் பலமுறை இப்படிப்பட்ட பிரச்னைகள் வந்தபொழுது, "இவைகளெல்லாம் எங்கள் அதிகாரத்தில் இல்லை, மத்திய சர்க்காரின் அதிகாரத்தில் இருக்கிறது" என்பதை அவர்கள் சொல்லத் தவறியதில்லை. ஆகையினால், மத்திய சர்க்கார் மேற்கொள்ளவேண்டியவை யாவை, மாநில சர்க்கார் மேற்கொள்ளவேண்டியவை யாவை, அப்படி மாநில அரசு மேற்கொள்ளக் கூடியவைகளில், இந்த அரசுப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்ட பிறகு எதிலாவது எங்களுடைய கடமையைச் செய்வதிலே நாங்கள் தவறி இருக்கிறோமா என்று அந்த அளவுகோலை வைத்துத்தான் இந்த மானியத்தைப் பரிசீலிக்க வேண்டும். ஆனால், அந்த அளவுகோலை வைத்துத்தான் பரிசீலிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஏனென்றால் இன்றையதினம் அரசியல் அமைந்திருக்கிற நிலையில் அவரவர்கள் தங்கள் தங்களுக்கு எது உசிதமான அளவுகோல் என்று படுகிறதோ அந்த அளவுகோலை வைத்துக்கொண்டுதான் அளந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளை நான் அளக்கிறபோது, அந்த அளவுகோலை வைத்துத்தான் பார்க்கிறேன்.

இன்னொரு பெரிய குற்றச்சாட்டு சொன்னார்கள். 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்றார்கள். பல ஆலைகளை மூடிவிட்டார்கள் என்றார்கள். என்னிடத்தில், 1965-66, 1966-67 ஆகிய இரண்டு ஆண்டுகளில் இங்கே தொழில் நல மானியத்தின் மீது நடந்த விவாதக் குறிப்புக்கள் இருக்கின்றன. அப்பொழுது, கனம் உறுப்பினர் திரு. சேங்காலியப்பன்—அப்பொழுது உறுப்பினராக இருந்தவர்—ஆலைகள் மூடப்பட்டிருப்பது பற்றி மிக உருக்கமாகக் கேட்டார்கள். அதற்கு, அப்பொழுது முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் என்ன பதில் அளித்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். அதைப்பற்றி ஒரு வரி கூட இல்லை. கட்சிக் கூட்டத்தில் சொல்லியிருப்பாரோ என்னவோ, இந்த இடத்தில் பேசாமல் விட்டு விட்டார்கள்.

அந்தமாதிரி பிரச்சினைகளை ஊறுகாய்ப்பானையில் போடும் அளவிற்கு நாங்கள் இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலேயே கோயம்புத்தூரில் ஆலைகள் பலவேறு காரணங்களால் மூடப்பட்டுக் கிடந்தன. அப்பொழுது ஆலைகள் சிலவற்றைப் பார்த்து நான் அங்கே கூட்டம் போட்டேன். அதைப் பற்றிக்கூட திரு. சேங்காலியப்பன் பேசியிருக்கிறார்கள். "நாங்கள் கூட்டம் போட அனுமதிகேட்டபோது அண்ணாதுரை மட்டும் கூட்டம் போட அனுமதித்திருக்கிறீர்களே, அது நியாயமா?" என்று கேட்டிருக்கிறார்கள். நான் இல்லாத வேளையில் கூட என்னைப்பற்றிய கவனம் இங்கே இருந்திருப்பதை இன்றைக்குத் தெரிந்துகொண்டேன். அந்தக் கூட்டம் நடத்தப்பட்டபோது, அந்த ஆலைத் தொழிலாளர்கள், தலைவர்கள் அவர்களை எல்லாம் கேட்டபோது "முதல் அமைச்சரைப் பார்த்துக் கேட்டோம், அவர், 'மில் முதலாளிகள் ஆலைகளை மூடிவிட்டார்கள் 'நான் என்ன செய்ய?' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள்" என்றார்கள். முந்தைய அரசாங்கம் அந்த மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. நாங்கள் ஆட்சிப் பொறுப் பேற்றுக் கொண்ட பிறகுதான் எங்களை அதைச் செய்ய வேண்டும் என்று திரு. கருத்திருமன், முக்கூட்டுப் பேச்சுப் பேச வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன் ஆலை முதலாளிகள், பிரதிநிதிகள், தொழிலாளர் தலைவர்கள், அரசுத் தரப்பைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் கூடிப்பேசி, மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கு வழிவகை கண்டு கலந்து பேசவேண்டும் என்று இந்த முக்கூட்டுக் கூட்டம் வேண்டும் என்று இதற்கு அவர்கள் நல்ல பெயர் கொடுத்துச் சொன்னார்கள். தொழில் அமைச்சர் அந்தப் பெயரிட்டார்களோ என்னவோ. ஆனால் இந்த நல்ல பெயரோடு பேச்சு நடந்து முடிவு காணமுடியாது என்று, பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, இந்த ஆலைகள் எந்த எந்த அளவிற்கு உதவி கொடுத்தால் பிழைக்க முடியும், எவற்றை மறுபடியும் நடத்த முடியும் என்பதைப் பற்றி ஆய்வு நடத்தி அறிக்கையும் வெளியிட்டு, இன்னின்ன ஆலைகளுக்கு பண உதவி அளித்தால் இன்னின்ன ஆலைகள் திறக்கப்படும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன்படி அவைகளுக்கு பாங்குகள் கடன் கொடுக்க சர்க்கார் 'காரண்டி' கொடுத்து ஒன்றரைக் கோடி அளவிற்கு ஆலைகளுக்கு பண உதவி தரப்பட்டு இருக்கின்றது.

பேசுகிறபோது—உறுப்பினர் பெயர் கவனம் இல்லை—சர்க்கார் பணம் கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அது சர்க்கார் கொடுத்த பணம் இல்லை. பாங்குகளுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறது. எந்த நேரத்தில் மில்முதலாளிகள் பணத்தைக் கட்டத் தவறினாலும், சர்க்கார் பொறுப்பு என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறது. அந்த உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டு, உதவி பெற்று, சில ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் உத்தரவாதம் கொடுத்ததால் பாங்குகள் பணம் கொடுத்தும் இன்னும் சில ஆலைகள் திறக்கப்பட இல்லை. சரியான முறையில் நடக்காது என்ற காரணத்தால் சில ஆலைகளுக்கு பாங்குகள் பணம் கொடுக்க மறுத்துவிட்டன. அந்த நிலையில் திறக்கப்பட வேண்டிய ஆலைகளும் இருக்கின்றன. இதை நான் சொல்வதற்குக் காரணம், சென்ற அரசுக்கும் இந்த அரசுக்கும் என்ன வித்தியாசம் என்று காட்டத்தான் ஆராயாமலே, சென்ற அரசு மில் முதலாளிகள் மூடிவிட்டால் நாம் என்ன செய்ய என்பதோடு கடமையை முடித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், அதைவிட அதிகமான கடமை இருக்கிறது என்று உணர்ந்து, திறக்கப்படுவதற்குத் தன்னாலான முயற்சி எடுத்துக்கொண்டது இந்த அரசு.

திரு அழகர்சாமி என்று கருதுகிறேன், மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்தியிருக்க வேண்டும் என்று சொன்னார்கள் மத்தியசர்க்காரிடத்தில் நானும் வலியுறுத்தினேன்; அதிகாரிகளும் வற்புறுத்தினார்கள். சரியாக வலியுறுத்துகிறேனா என்பதைப் பற்றி நேரிடையாகப் பார்க்க தொழில் தலைவர், இடதுசாரி கம்யூனிஸ்டு தலைவர்களில் ஒருவரான திரு. ராமமூர்த்தி அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு சென்று அந்த

இலாகா அமைச்சரிடத்தில் நான் பேசினேன். அவர்கள் எனக்குச் சொன்ன பதில், நாங்கள் இப்படிப்பட்ட ஆலைகளையெல்லாம் சரியான முறையில் இயங்கச் செய்வதற்கு தனி மசோதா கொண்டு வந்திருக்கிறோம், அதன் கீழ் பார்த்துக் கொள்ளுகிறோம் என்பதுதான். அது மட்டுமல்ல. கம்போடியா மில்லைப் பொறுத்தவரையிலாவது பண உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டதற்கு ஒரு தனி அதிகாரியை அனுப்புவதாக ஒப்புக்கொண்டு, அவர்களும் வந்து பரிசீலனை செய்து சென்றார்கள். இதை நான் சொல்வது, இந்த அரசுக்கும், முன்னால் இருந்த அரசுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நோக்கத்தில், நடவடிக்கையில், நடவடிக்கையின் விளைவுகளில், என்கிற காரணத்தற்காகத்தான்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்றார்கள். பாட்டுக்காக வரப்பட்டதல்ல. உற்பத்தி செய்திருக்கிற நூல் விலை போகவில்லை. ஆறு கோடியிலிருந்து ஒன்பது கோடி வரை நூல் விற்பனை ஆகாமல் தேங்கியிருக்கிறது என்பது மில் முதலாளிகள் தரப்பில் சொல்லும் வாதம். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சொல்வது அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, அவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை, வெறுமனே நஷ்டம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். யார் சொல்வது உண்மை, யார் சொல்வது உண்மையில்லை என்பது இருக்கட்டும். இன்றையதினம், நூல் விற்பனை ஆவதில் தேக்கம் ஏற்பட்டிருக்கின்ற ஆலைகள் இயங்கிக் கொண்டிருப்பதால், இன்னும் நூல் உற்பத்தி செய்தால் நஷ்டம் நேரிடும் என்பது மில் முதலாளிகளுடைய வாதம். அதற்காக அவர்கள் 10 நாட்களுக்கு ஆலைகளை மூடிவைத்துவிட்டு, பின்னால் திறப்பது என்பது நோக்கம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல், அடியோடு மூடிவிடுவது என்பதல்லை. பத்து நாட்கள் மூடுவதும் கூட தொழிலாளிகளைப் பாதிக்கும் என்று தொழிலாளர் தலைவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். அதற்காக அவர்களையும், மில் முதலாளிகளுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசுவதற்கான ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி பேச்சு நடப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை தொழிலாளர் தலைவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பதில் ஒத்துழைக்க வேண்டும். நல்ல மனப்பான்மையை வளர்க்கவேண்டும். இன்னதேதியிலிருந்து கலெக்டர் ஆபீஸ் முன்னால் நாங்கள் மறியல் செய்யப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த அரசு ஏற்பட்ட பிறகு, இந்த அரசுக்கு ஏற்படக்கூடிய சங்கடங்கள் பற்றி, நண்பர் ராமமூர்த்தி சொல்லும்போது, ‘இவர்கள் ஜாதகம் அப்படியிருக்கிறது’ என்றார்கள். ஜாதகம் அப்படியோ என்னவோ, இருக்கின்ற எதிரிகளின் நோக்கம் அது. யார் யார் செய்த கேடுகளுக்கெல்லாம் எங்கள் பேரில் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். என்றோ இந்தி ஆதிக்கத்தைப் புகுத்தினார்கள்; அதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் நாங்கள். இவர்கள் விவசாயத் துறையைச் சரியாகக் கவனிக்காமல் உணவு நெருக்கடியை ஏற்படுத்திவிட்டுச் சென்றார்கள், அதற்குப் பதில் அளிக்கவேண்டியவர்கள் நாங்கள். நூல் விற்பனை ஆவது தவ கஷ்டப்படுவதற்கு மிக முக்கியமான காரணம், நம்முடைய நாணய மதிப்பு குறைக்கப்பட்டவுடன், ஏற்றுமதி மார்க்கெட்டைச் சரியான முறையில் அவர்கள் செம்மைப்படுத்தியிருக்க வேண்டும். அதிலே தவறிவிட்டார்கள், மத்திய அரசினர். அதற்கும் பதில் சொல்ல வேண்டியவர்கள் நாங்கள். ஆகவே நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காலம்—உண்மையிலேயே திரு. கருத்திருமன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும், இப்பொழுது அவர்கள் ஆட்சியில் இல்லை என்பதிலே சில வேளைகளில் வருத்தம் இருந்தாலும், சில வேளைகளில் சந்தோஷம் கூடத்தான். ரொம்பப் பாரம் ஏறியிருக்கிற நேரத்தில் சரியான ஆட்கள் கிடைத்தார்கள், அவர்கள் தலையில் தள்ளிவிட்டுவிடுவோம் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பார்கள். இப்பொழுது நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு சொல்வது அல்ல. இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் ராஜாஜி அவர்கள் பேசுகிறபோது, தேர்தல் கூட்டத்திலேயே சொன்னார்கள். ‘‘இந்த ஆட்சிப் பொறுப்புக்கு நாம் வருவதிலே கூட எவ்வளவோ சங்கடங்கள் இருக்கின்றன. இருபது வருஷங்களாக ஏற்பட்டுவிட்டிருக்கிற

பிற்பகல் 2–00

பல்வேறு வகையான சேடுபாடுகளையெல்லாம்கூட நாம்தான் தாங்க வேண்டியிருக்கும். கடினமான காரியம்" என்று அவர்கள் அன்றைய தினம் சொன்னது என்னுடைய நினைவிற்கு வருகிறது. அந்தப்படி யாகத்தான், இன்றையதினம் மத்திய சர்க்கார் செய்யத் தவறியிருக்கும் காரியங்களுக்கு மாநில சர்க்காரிடத்தில் போரிட வேண்டும் என்று தொழிலாளர் தலைவர்கள் கருதுவது தேவையற்றது என்பதை அவர் களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள், "இடதுசாரி கம்யூனிஸ்டுகள் உங்களோடு சேர்ந்து உங்களைக் கவிழ்த்துவிட்டு, அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளுவார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

நாங்களும் யோசிக்கிறோம். அவர்களோடு சேர்ந்தால் அவர்கள் ஆதிக்கம் பெறுவார்கள் என்கிறீர்கள். அதற்காக உங்களை வளர விட்டால் நீங்கள் ஆதிக்கம் பெறுகிறீர்கள். எங்களுக்கு உங்கள் இரண்டு பேரில் யார் ஆதிக்கம் பெறுவதானாலும், எதிலே நஷ்டம் எதிலே லாபம் என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் எங்களுக்குத் தெரிகிறது. காங்கிரஸ் ஆட்சி இந்த இருபது வருஷங் களில் முதலாளிகள் பக்கத்திலேதான் இருந்திருக்கிறது என்பதற்கு எங்களுக்குத் திட்டவட்டமான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அவர்கள் முதலாளிகளை வளரவிட்டிருக்கிறார்கள் என்பதை அவர் களுடைய உறுப்பினர்களே சோஷலிஸ்டு ஃபோரம் என்பதில் அடிக்கடி பேசிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால், எதிரிலே கொள்ளைக்காரன் வருகிறான், கொள்ளைக்காரன் வருகிறான், இருப்பதையெல்லாம் என்னி டத்தில் கழற்றிக் கொடுத்துவிடு என்று கேட்டு வாங்கிக்கொள்வதைப் போல, காங்கிரசில் உள்ளவர்கள், "இடதுசாரி, ஜாக்கிரதை ஜாக்கிரதை" என்று சொல்லி "காங்கிரசை வளரவிடுங்கள்" என்று கேட்பதாகக இதைச் சொல்வதாக இருந்தால், நான் ஜாக்கிரதையாக இருக்கக் கூடியவன் என்பதை நீங்களும் நன்றாக அறிவீர்கள், அவர்களும் மிக நன்றாக அறிந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்)

இன்னும் ஒன்று. இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் மற்ற தொழிலாளர் தலைவர்களும், "அதிகார வர்க்கம் சரியான முறையில் இதிலே நடவடிக் கையில் ஈடுபடவில்லை" என்று சொன்னார்கள். அதிகாரிகள், ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் எந்த நோக்கத்தோடு ஆட்சி நடத்த வேண்டும் என்று சொல்லுகிறார்களோ, அதற்கு ஏற்றபடி தங்க ளுடைய போக்குகளை மாற்றிக்கொள்ளுவதில் மிகவும் வல்லவர்கள். ஆகையால் அவர்கள் அந்தப் போக்கை மாற்றிக்கொள்வதில் ஏதாவது தாமதங்கள் இருக்குமானால், அந்தத் தாமதங்களை நம்முடைய தொழிலா ளர் தலைவர்கள் ஒரு பெரிய காரணமாகக் காட்டத் தேவை இல்லை. ஆனால், அதே நேரத்தில், அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்ளுவேன். மிகுந்த தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிற நேரம் இது. அதைப்பற்றி கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் முழுக்கமுழுக்க வரவேற்கிறேன். இந்த நேரத்தில், தொழில் அமைதி இருந்தாலொழிய நாம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு தேடிக் கொடுக்கின்ற காரியத்தில் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கப்பட்டுவிடுவோம். தொழிலாளர்களுக்கு நலன் கிடைக்க வேண்டுமானால் தொழில் நடத் தப்பட வேண்டும். அவர்கள் நடத்துகிற கிளர்ச்சிகள், போடுகின்ற கோரிக்கைகள், எடுத்துக்கொள்ளுகிற முயற்சிகள் இவைகள் அத்த னையும் தொழிலைக் கெடுக்காத முறையில் அமையவேண்டும் என்பதில் நான் மிகவும் கவலையோடு இருக்கிறேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர்களில் சிலர் சொன்னபடி, பத்து இருபது வருஷங்களுக்கு முன்னே வேலைநிறுத்தங்கள் (ஸ்டிரைக்ஸ்) நடந்ததையும் நாம் பார்த்திருக்கிறோம், இப்பொழுது நடத்தப்படுகிற வேலைநிறுத்தங்களையும் நாம் பார்க்கிறோம். இந்த இரண்டுக்கும் இருக்கும் வித்தியாசத்தை நம்முடைய தொழிலாளர் தலைவர்களும் மிக நன்றாக அறிவார்கள். முன்னாலெல்லாம் வேலைநிறுத்தம் நடக்கிறது என்றால், அந்தத் தொழிற்சாலைப் பிரதேசம் சூனியமயமாகிவிடும். தொழிலாளர் நடமாட்டமும் இருக்காது. தொழில் நடமாட்டமும் இருக்காது. அதைக் கண்டு முதலாளிமாரிடிலும், தங்கள் லாபம் குறைகிறது என்று அவர்கள் படிப்படியாகப் பேச்சுக்கு வருவார்கள். இன்றைய தினம் வேலைநிறுத்தம் உடனடியாக கிளர்ச்சியிலும், அதற்கு அடுத்த கட்டத்தில் பலாத்காரத்திலும், இதற்கிடையில், உள்ளபடி யாரும் பேசத்தகாத, யாரும் கேட்டுக்கொள்ள முடியாத, சகிக்கத்தகாத தூற்றல் வார்த்தைகளை மிக அதிகமான அளவுக்குப் பேசுவதிலே, அது இருக்கின்றது. இதற்கு தொழிலாளர் தலைவர்கள்தான் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால், அந்தத் தொழிலாளர் தலைவர்கள் சிலரிடத்தில் நான் பேசியபோது, "இது எங்களுக்குத் தெரியாமல் நடந்து விட்டது. நாங்கள் இதைக் கண்டிக்கிறோம்" என்றுகூடச் சொன்னார்கள்.

நம்முடைய நண்பர், செல்பார்க் கம்பெனியைப் பற்றிச் சொன்னார்கள். இந்த செல்பார்க் கம்பெனியின் தொழிலாளர்கள், வேலை செய்யவந்த சில தொழிலாளர்களையும், மானேஜ்மெண்டைச் சேர்ந்தவர்களையும் தாக்கிவிட்டார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்தவுடன், அந்தத் தொழிற்சங்கத்திற்குப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற தலைவரை அழைத்து நான் பேசவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். நான் அவர்களை அழைப்பதற்கு முன்னாலேயே, அவரே என்னிடத்தில் வந்தார்கள். வந்து சொன்னார்கள்—"இன்னும் ஒரு விஷயம் நீங்கள் கேள்விப்படப் போகிறீர்கள். அதற்கு முன்னால் நான் சொல்லிவிட்டுப் போகவே வந்திருக்கிறேன். செல்பார்க் கம்பெனியில் நடந்தது அக்கிரமம்தான். அதை யாரோ செய்துவிட்டார்கள். அதை நான் சொல்லி அவர்கள் செய்யவில்லை அல்லது, எங்கள் சங்கம் செய்யவில்லை" என்று சொன்னார்கள். அப்பொழுதுகூட, நான் ஒரு யோசனை சொன்னேன். "எப்படி அரசியல் கட்சிகளில், கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக அந்த அரசியல் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஏதாவது வரம்பு மீறிச் செய்வாரானால், அவர் போல் அந்த அரசியல் கட்சி நடவடிக்கை எடுக்குமோ அதைப்போல, உங்களுடைய சங்கத்தைச் சார்ந்த யாராவது பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டால், அல்லது, கேவலமான தூற்றல் பிரசாரத்தை நடத்தினால், அது உள்ளபடியே உங்களுக்கு விருப்பம் இல்லை என்பது உண்மையாக இருக்குமானால், நீங்கள் சொல்லித்தான் அது நடக்கவில்லை என்று நீங்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால், 'அவரை அந்தச் சங்கத்திலிருந்து நாங்கள் நீக்கிவிட்டோம்' என்று அறிவிப்பீர்களானால், நான் உங்களுடைய நிலைமையைப் போற்றுவேன், பாராட்டுவேன்" என்று சொன்னேன். அவர்கள் அப்படி நடந்ததாக இன்னும் தகவல் இல்லை. ஆகையால் அவர்களை நான் கேட்டுக்கொள்வது—வேலை நிறுத்தம், தொழிலாளர்களுக்குள்ள உரிமைகளில் மிக முக்கியமான உரிமை அந்த வேலைநிறுத்த உரிமை பலாத்காரமற்ற முறையில், தூற்றலற்ற முறையில், அமைதி கெடுக்கப்படாத முறையில் நடத்தப்படுவதை இந்த அரசு தடுக்காது; ஆதரவாகவும் இருக்கும். ஆனால், வேலைநிறுத்தத்தில் துவங்கி, அது சட்டத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் போகுமானால், அப்படிப்பட்ட கிளர்ச்சிகளை, அப்படிப்பட்ட பலாத்கார நடவடிக்கையை இந்த அரசு விட்டுவைக்க வேண்டும் என்று கருதுவார்களானால், முழுக்க முழுக்க கம்யூனிஸ்டுகள் அதிகமாகவுள்ள அரசு என்ன செய்கிறது என்பதைப் பார்ப்பதிலிருந்து, அந்த அரசே விட்டுவைக்கவில்லை என்பதைப் பார்க்கின்றபோது, அதனிடமிருந்து எதிர்பார்ப்பதைவிட அதிகமாக என்னிடம் எதிர்பார்க்கவேண்டியதில்லை என்று நான் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இன்னொரு பொதுப்படையான பிரச்சனை—கம்ப்யூடர்பற்றி எதிர் கட்சி தலைவர் அவர்கள் சொன்னார்கள். ரொம்பக் கற்பனையாகவுள்ள புத்தகங்களெல்லாம் படித்தவர்கள். ஆகையால் இந்த வாதங்களிலேகூட சுவையான கற்பனையைச் சொன்னார்கள், "இன்றைக்கு கம்ப்யூடருக்கு வந்தது, நாளைக்கு டாக்டருக்கு வராதா?" என்று அதைப்போல மேலேயுள்ள 'ஃபான்'க்கும் வரலாம், பனை மட்டையினால் செய்யப் பட்ட விசிறிகளை வைத்துக்கொண்டு நின்றால் எத்தனையோ பேருக்கு வேலை கொடுக்கலாமே என்றும் சொல்லலாம். இதே மன்றத்தில் இந்த மின்சார விசிறி இல்லாமல், நம்முடைய பஜனை மடங்களிலோ, கோயில் ஊர்வலங்களிலோ பெரிய விசிறி வைத்துக்கொண்டு விசிறு கிறார்களே, அப்படிச் செய்வதனால் நூறு பேருக்கு வேலை கிடைக்கும். ஆனால், அவ்வளவு விபரம் தெரியாமல் கம்ப்யூடரை யாரும் எதிர்க்க வில்லை. கம்பியூடரை எதிர்ப்பதற்குக் காரணம், விஞ்ஞானக் கருவிகளே கூடாது என்பதால் அல்ல. விஞ்ஞானக் கருவியாகிய கம்ப்யூடர் போன்ற கருவிகளை ஒரு நாடு எந்த கட்டத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும்? வேலை செய்வதற்கு ஆட்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் நாட்டில் அது தேவை. ஆனால், வேலைவாய்ப்பைத் தேடி அலை அலையாகத் தொழிலாளர்கள் அலைந்துகொண்டிருக்கிற நாட்டில் இந்தக் கட்டத்தில் அந்தக் கம்ப்யூடர் தேவை இல்லை என்பதுதான் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்னாலிருந்தே நான் சார்ந்திருக்கும் கழகம் வைத்துக்கொண்டிருக்கிற கருத்தாகும். அதை அவர்கள் சொன்னபடி சொன்னால், "வேலைவாய்ப்பைக் குறைக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்; கம்ப்யூடர் இருக்கட்டும்" என்று சொன்னார்கள். அது எல்லாமே அர்த்தமற்றது. கம்ப்யூடரும் இருக்கட்டும், வேலை வாய்ப்பும் குறையக்கூடாது என்றால், ஆயிரம் பேர்களை நாங்கள் வேலைக்கு வைத்துக்கொண்டிருப்போம், கம்ப்யூடரும் வரும் என்றால், அது அனாவசியமான செலவு. ஆகையால், பொருளாதாரத் துறையில் உள்ளவர்கள் அதை வரவேற்கவே மாட்டார்கள். ஆகையால், விஞ்ஞானக் கருவியை நாம் வைத்துக்கொள்ள வேண்டிய கட்டம் ஒன்று வரலாம். நிரம்பத் தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டு, வேலைவாய்ப்புகள் நிரம்பக் கிடைத்து, படிப்படியாக விஞ்ஞானத்தில் நாம் முன்னேறும்போது, கம்ப்யூடர்கள் இருக்கலாம். ஆனால், இந்தக் கட்டத்தில் அந்தக் கம்ப்யூ டர்கள் தேவையில்லை. உதாரணத்திற்குச் சொல்லுகிறேன்—இப்பொழுது மாற்று இதயத்தை அவர்கள் பொருத்தினார்கள். மாற்று இதயத்தைப் பொருத்தினார்களே என்பதற்காக, நாம் ஒவ்வொருவரும், "எனக் குக்கூட இருப்பதை எடுத்துவிட்டு இன்னொன்று பொருத்துங்கள்" என்று கேட்கமாட்டோம். அதைப்போலத்தான் அமெரிக்காவில் கம்ப்யூடர் இருக்கிறது. இங்கும் இருக்கட்டுமே; ஜெர்மனியில் கம்ப்யூடர் இருக்கிறது, இங்கும் இருக்கட்டுமே என்று கேட்பது. அமெரிக்காவில் சராசரி வருமானம் உயர்ந்து, ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தி, வேலை வாய்ப்பு அதிகமான அளவுக்குக் கிடைத்ததால், அங்கே கம்ப்யூடர் தேவைப்படுகிறது. துரதிருஷ்டவசமாக, நம்முடைய நாட்டில் அப்படிப் பட்ட, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கு மானேஜ் மெண்டில் உள்ளவர்களுக்கு எவ்வளவு சம்பளம் தரப்படுகிறதோ, அவ்வளவு சம்பளம் தொழில் மானேஜருக்குத் தரப்படுகிறது. அங்கே இருக்கிற விஞ்ஞானக் கருவிகள் இங்கேயும் வைக்கப்படுகின்றன. ஆனால் அங்கேயிருக்கும் தொழிலாளிக்குத் தரப்படுகிற அளவுக்கு இங்கேயுள்ள தொழிலாளிக்குத் தரப்படுவதில்லை. அதற்குக் காரணமாக என்ன சொல்லுவார்கள்? மானேஜ்மெண்ட் செலவு அதிகம், அல்லது உற்பத்திச் செலவு அதிகம் என்று சொல்லுவார்கள். ஆகையால், கம்ப்யூடர் என்பது இப்போதைக்கு, வேலைவாய்ப்பு தேடித் தரவேண்டிய இந்த நாட்டில் தேவை இல்லை என்பது இந்த அரசை நடத்துகிற கழகத்தின் கருத்து, அதை முன்னாலேயும் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக் கிறோம். இந்த அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும் அந்தக் கருத்திலிருந்து நாங்கள் மாறவில்லை.

நம்முடைய உறுப்பினர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள்—"கிளர்ச்சி நடத்தாமல் தொழிலாளர்கள் எந்தக்

கோரிக்கையும் பெற முடியாது. நாங்கள் நடத்திக்கொண்டுதான் இருப்போம்'' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதோடுகூட அவர்கள் மனத்திலேயே எண்ணிப்பார்த்துக்கொள்ளவேண்டும். அந்தக் கிளர்ச்சிகள் அமைதியான முறையில் நடக்கிற வரையில் இந்த அரசுக்கு எந்தவிதமான தாவாவும் இல்லை ஆனால், அந்தக் கிளர்ச்சிகள் பலாத்காரத்தில் கொண்டுபோய் விடுமானால், என்ன செய்வது என்பதை, அவர்களை என்னுடைய நண்பர் என்ற முறையில், யோசித்துப் பார்த்துப் பதில் சொல்ல வேண்டும். கிளர்ச்சியின் மூலமாகத்தான் உரிமையைப்பெறமுடியும் என்பது எப்படி தொழிலாளர் இயக்கத்திற்குத் தேவையோ, அதைப்போலவே, பலாத்காரத்தை அடக்கினால்தான் ஒரு அரசு நடத்தப்பட முடியும் என்பது அரசினுடைய இலக்கணம் என்பதையும் அவர்கள் மறந்துவிடமாட்டார்கள். ஆகையால், நடத்தப்படுகிற கிளர்ச்சிகள் பலாத்காரத்தில் போய் முடியாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை தொழிலாளர் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு ஒரு தலைவர் ஒரு யோசனை கூறினார். 'தொழில் தகராறுகள் தலையெடுப்பதற்கு முன்னமேயே முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். துரதிருஷ்ட வசமாக தொழிலாளர் தலைவர்களில் பலர், தாங்கள் இம்மாதிரியான கோரிக்கைகளை எழுப்புகின்றபோது அரசிடத்திலோ அல்லது என்னிடத்திலோ தொடர்பு கொள்வதில்லை. இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவரிடத்திலும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களில் ஒருவரை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை என்னிடம் வந்து, இன்னின்ன தொழிற்சாலைகளில், இன்னின்னவிதமான தொழில் தகராறுகள் இருக்கின்றன என்று கூறுங்கள், தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறோம் என்று கூறினேன். அதற்காக இடதுசாரி கம்யூனிஸ்டு தலைவர்கள் ஒருவரைக் குறிப்பிட்டார்கள். அவர்களால் குறிப்பிடப்பட்டவரை சென்னையிலே இருக்கவிடாமல் டெல்லிக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வேறு யாரையாவது ஏற்பாடு செய்வார்கள் என்று கருதுகிறேன். அதேபோல முதலாளிகளையும் கூப்பிட்டு, 'உங்களுடைய பிரதிநிதி ஒருவரை இரண்டு வாரத்திற்கு ஒரு முறையா. இருமுறையோ வந்து இன்னின்ன தொழிற்சாலைகளில், இன்னின்னவிதமான தொழில் தகராறுகள் ஏற்படும்போல இருக்கின்றன' என்று கூறினால், உடனுக்குடன் தகராறுகளைத் தீர்க்க தொழிற்சங்கத் தலைவர்களையும், முதலாளிகளையும் கூப்பிட்டுப் பேசி சமரச ஏற்பாடு செய்ய வாய்ப்பு இருக்கும் என்று கூறியிருக்கிறேன். ஆகவே, இதுதான் சென்ற அரசுக்கும் இந்த அரசுக்கும் இருக்கின்ற வித்தியாசங்கள்.

நண்பர்களில் சிலர், 'சென்ற அரசைப்போல்தான் இந்த அரசும் துப்பாக்கியினால் சுட்டது' என்றார்கள். துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுதான் சரி, அதுதான நியாயம் என்று வாதாட, மனிதத்தன்மையை இழக்க நான் தயாராக இல்லை. அது நடைபெறாமல் தடுக்க என்னாலான சகல முயற்சிகளையும் இன்றும் எடுத்துக்கொள்வேன், என்றும் எடுத்துக் கொள்வேன். நம்முடைய காங்கிரஸ் தலைவர்கள் 'போலீஸை வைத்துக் கொண்டு சும்மா இருக்கிறாயே, சும்மா இருக்கிறாயே' என்று மேடை தவறாமல் பேசுகிறார்கள். போலீஸ்காரர்களைப் பார்த்துக்கூட இப்படிப் பேசிவருகிறார்கள். காங்கிரஸ் தலைவர்கள் என்று நான் குறிப்பிடும் போது, இந்தச் சட்டமன்றத்திலே இருக்கக்கூடியவர்களை அல்ல, காங்கிரஸிலுள்ள வேறு தலைவர்களைச் சொல்லுகிறேன். ஒன்று, அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு இவர்கள் கட்சியில் இடம் பெறாமல் இருக்கலாம். மற்றொன்று 'நான் இப்படிப் பேசுகிறேன், நீ அப்படிப் பேசு' என்று ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கலாம். இவற்றில் எது உண்மையோ, தெரியவில்லை. 'போலீஸ்காரர்கள் கையைக் கட்டிக் கொண்டிருப்பதா?' என்று இருபதாண்டுக்காலம் அரசாண்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வது, நம்மைப் பார்த்துக் கேட்பது, 'இது ஒரு மறைமுகமான தூண்டுதல்' என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். துப்பாக்கிப் பிரயோகம் அதனால்தான் ஏற்பட்டது என்று சொல்லவில்லை. எங்களோடு நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டுமென்ற

மனப்பான்மையைக் கொண்டால் அவர்களும் தொழிலாளர்களிடத்திலே எடுத்துச் சொல்லி நல்ல தீர்வு காணலாம். பலாத்காரமற்ற கிளர்ச்சிகள் நடத்துவதை யாரும் ஆட்சேபிக்கவில்லையென்று சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக, துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிர்நீத்த குடும்பத்தாருக்கு நஷ்டஈடு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்நீத்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு தர இந்த அரசு முடிவு செய்திருப்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்) நஷ்டஈடு அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்குமா, எந்த அளவில், எந்த முறையில் நஷ்டஈடு தரப்படும் என்பதற்கான விவரங்கள் எல்லாம் சேகரிக்கப்பட்டு வருகின்றன. உயிர்நீத்த குடும்பங்களுக்கு நஷ்டஈடு தரப்பட வேண்டுமென்ற கருத்தை, நல்ல தத்துவத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

மற்றபடி பொதுவாக இந்த ஓராண்டுக் காலத்தில் நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, இந்த அரசினுடைய நடவடிக்கைகளைப் பார்த்து, சில உறுப்பினர்கள் எழுப்பியுள்ள ஐயப்பாடுகளுக்குத் அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்கள் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: முதலமைச்சர் அவர்கள் பேசியபோது, 'நான் ஆட்டோமேஷனைப் பற்றித் தெரியாமல் பேசிவிட்டேன்' என்ற கருத்தும் தெரிவித்தார்கள். எனக்குத் தெரியாத நிலைமை அல்ல. இந்தப் ஃபேனை எடுத்துவிட்டு எல்லாம் கைவிசிறியை வைத்துக் கொள்ளலாம் என்று நானும் எடுத்துப் பேசியிருக்கலாம். சில கணக்குகள் போடுவதற்கு சில மெஷின்கள் இருக்கின்றன. வேறு வகையில் மனித சக்தியை விரயம் செய்யக்கூடாது என்றேன்.

இரண்டாவதாக, காங்கிரசில் எந்தத் தலைவர் போலீஸ் கையைக் கட்டிக்கொண்டிருக்கிறது என்று கூறினார்? அவர்கள் கட்சியைச் சேர்ந்த, அவருக்கு ஆசியளித்த திரு. ராஜாஜி அவர்களே, போலீஸ் எந்த நிலையில் நடந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றித் தன்னுடைய பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: திரு. ராஜாஜி அவர்களே சொல்லிவிட்டார்கள் என்பதால் காங்கிரசிலுள்ள சிலருக்கு ரொம்ப சந்தோஷம். சிலவேளைகளில் காங்கிரஸ் கட்சிக்கும், சுதந்திராக் கட்சிக்கும் வித்தியாசம் தெரிவதில்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, கிளர்ச்சிகள் நடக்கும் என்று நான் சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன் நடக்கும் என்று. நான் வன்முறையில் கிளர்ச்சிகள் நடக்க வேண்டுமென்று சொல்லவில்லை. வன்முறை கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு பல உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் வகையில் அமைய வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக்கூறி இந்தத் துறை மேலும் செம்மையாகச் செயல்படத்தக்க வழிவகைகளைக் கூறிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் முதலிலே அரசாங்கத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் சொன்ன பிரச்சினைகளை

யெல்லாம் இந்தத் துறையினர் கவனித்து ஆவன செய்வார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரிய அளவிலே மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் பல விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள்.

பொதுவாக புதிய அரசாங்கம் ஏற்பட்டு, அந்த அரசாங்கத்திலே தொழிலாளர்களுக்கு இதுவரை கிடைக்காத பல நன்மைகள் கிடைக்க வேண்டும், புதுச் சட்டங்கள் நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்றுதான நாங்கள் எண்ணி வருகின்றோம். தொழிலாளர் பிரிவு பொதுமக்கள் மத்தியில் வீசகர் செக்ஷனாகவே இருந்து வருகிறது. ஆகவே, தொழிலாளர்களுக்காக இந்த அரசு பரிந்து பேச வேண்டுமென்ற கருத்தை எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். இதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், கொள்கைப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர் கொள்கையைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு வார்த்தையாவது தொழில் முதலாளிகளுக்கும் கடமையுணர்ச்சி இருக்க வேண்டும் என்று பேசுவாரா என்று எதிர்பார்த்தேன், ஒரு வார்த்தையும் வரவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அதைத்தான் நான் வற்புறுத்திச் சொன்னேன். முதலாளி—தொழிலாளி உறவு நல்ல முறையில் இருந்தால்தான் தொழில் வளரும் என்று கூறினேன்.

மாண்புமிகு திரு. செ மாதவன்: 'இருந்தால்தான்' என்று கூறுகிறீர்கள். இப்பொழுது இருக்கிறதா? அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைத்தான் சுதந்திராக் கட்சி அங்கத்தினர் விளக்கமாகச் சொன்னார்கள். அவர்கள் பேசும் பேச்சையெல்லாம் கேட்டபிறகு அவர்களும் தொழிலாளர்களுக்குப் பரிந்துபேச வருகிறார்கள் என்று எண்ணிக்கொண்டேன். ஆகவே எல்லா கட்சிகளும் இந்த விஷயத்தில் ஒரே கருத்தைத் தெளிவாகப் பேசுவதைப் பற்றி நான் மனமாரப் பாராட்டுகிறேன். இதுவரை இருந்த எண்ணத்தை மாற்றியமைத்த டாக்டர் ஹாண்டே அவர்களுடையக் கட்சியினுடைய கொள்கையும் தொழிலாளர்களுக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது. இந்த எல்லா தலைவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

பொதுவாக, இன்றைக்கு நாட்டிலே சமுதாயத்திலே, பொருளாதாரத் துறையிலே ஏற்பட்டிருக்கும் பிரச்சினை தொழில் துறையிலும் ஏற்பட்டிருக்கிறது. தொழில் துறையில் ஏற்பட்டிருக்கும் சமரசத் திட்டப் போகினால் தொழிலாளர்களுக்குச் சில சாதக-பாதகங்கள் ஏற்படுகின்றன. அரசாங்கம் இதை ஆராய்ந்து எந்த அளவிற்குத் தலையிட்டு செய்ய வேண்டுமோ, அதை இன்று செய்து வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டப்படி இந்த அரசாங்கம் என் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார்கள். ஆனால் அவரே, 'தொழிலாளர் பிரச்சினையை அரசாங்கம் சட்டப்படி தீர்க்க முடியாது' என்று சொன்னார்கள். ஆகவே இரண்டு கருத்துக்களையும் அவரே சொன்னார். உண்மைதான், சட்டப்படி அரசாங்கத்தினால் எதையும் செய்ய முடியாது. நம்மிடத்தில் அதற்கான அதிகாரம் எதுவும் இல்லை. நமக்குள்ள அதிகாரம் எல்லாம், எந்த அளவுக்கு இரு தரப்பாரையும் அழைத்துப் பேசி ஆலோசனை செய்து நன்மை செய்ய முடியுமோ அந்த அளவுக்குத்தான் நாம் செய்ய முடியும். இரு தரப்பாருக்கும் மன நிம்மதி ஏற்படும் வகையில நாம் சட்டங்கள் இயற்ற முடியாது. தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரக்கூடிய சட்டங்கள் அத்தனையும் நம்மிடத்தில் இல்லை. கன்க்கரண்ட லெஜிஸ்லேஷன் போன்றவை எல்லாம் மத்திய அரசிடத்திலேதான் இருக்கின்றன. அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசிடத்தில், ஆனால் பொறுப்பு மட்டும் நம்மிடத்திலே தரப்பட்டிருக்கிறது. சட்டங்களை மாற்றக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்திலே இருக்கிறது. இந்த நிலைமையினால்தான் தொழிலாளர் பிரச்சினை பல இடர்ப்பாடுகளை ஏற்படுத்துகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த எல்லோரும், எதிர்க்கட்சித் தலைவர் தவிர மற்ற எல்லோரும், அருமையான கொள்கை இந்த அரசாங்கத்தின் கொள்கை. மிக உயர்ந்த கருத்துக்களை, நல்ல தத்துவங்களை உடையதாயிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். என்னுடைய நன்றியை இந்த மன்றத்தின் சார்பாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஏன் அந்தக் கொள்கையை நிறைவேற்றவில்லை, எப்போது நிறைவேற்றுவீர்கள், அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதில் விரைவு காணவேண்டும் என்று நான் இங்கே வேண்டுகோள் வைத்தார்கள். அவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நிறைவேற்றக்கூடிய அதிகாரம் சட்டத்திலும் இல்லை, சட்டத்தைக் கொண்டு வரக்கூடிய அதிகாரமும் நம்மிடத்தில் இல்லை. அதன் காரணத்தினால் தான் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில்—சட்டப்படி என்று பார்க்காமல் இப்பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்தில் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம் முன்னே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று நூற்பாலைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதைப் பற்றி மிக விரிவாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். இன்னொன்று வேஜ் போர்டு சம்பந்தமானது. வேஜ் போர்டையும் மத்திய ஆட்சியினர் அமைக்கிறார்கள். வேஜ் போர்டினர் கொடுக்கிற சிபாரிசுகளை அமல் நடத்துகிற பொறுப்பை நம்மிடத்தில் தருகிறார்கள். அதே சமயத்தில் அந்த அமல் நடத்துகிற அதிகாரம் நம்மிடத்தில் இல்லை. வேஜ் போர்டு சிபார்சை அமல் நடத்த இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்பதாக இங்குள்ள உறுப்பினர்கள் கேட்பது போலத்தான் மத்திய ஆட்சியினரும் கேட்கிறார்கள். அதை அமல் நடத்த வேண்டுமானால் அதற்குத் தக்க அதிகாரம் எங்களிடத்தில் இல்லையே, அந்த அதிகாரத்தைக் கொடுங்கள் என்று கேட்டால் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். இன்றைக்கு வேஜ் போர்டு சிபார்சுகள் காரணமாகத்தான் பல தகராறுகள் ஏற்படுகின்றன என்பது உண்மை. மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் இந்த அரசு எந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை விளக்க விரும்புகிறேன்.

உதாரணமாக, பத்திரிகைத் துறையில் பணியாற்றக்கூடிய 2 பிரிவினருக்கு வேஜ் போர்டு சிபார்சு வந்திருக்கிறது. அதைச் சட்டபூர்வமாக இல்லாவிட்டாலும், சட்டத்திற்குப் புறம்பாக இல்லாத வகையில் அமல் படுத்துவது என்றால் இன்றைக்கு அது பற்றி உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அந்தச் சிபார்சு வந்தவுடன் நம் அரசாங்கம் கொஞ்சங்கூட காலதாமதம் செய்யாமல் பத்திரிகைத் துறையில் உள்ளவர்களை எல்லாம் அரசாங்க மட்டத்திலேயே அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி, அந்தச் சிபார்சுகளை அமல் நடத்த வேண்டுமென்று சொன்னோம். சிலபேர் உடனே ஒத்துக்கொண்டார்கள். சிலபேர் கொஞ்சம் கொஞ்சம் ஒத்துக்கொண்டார்கள். சிலர் எங்களுக்கு உரிமை இருக்கிறது, நாங்கள் கோர்ட்டுக்குப் போகப் போகிறோம் என்று சொல்லிச் சென்றார்கள். அது பற்றி உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அப்போது தொழிலாளர் தலைவர்கள் ஒரு யோசனையைச் சொன்னார்கள். வேஜ் போர்டு ரெக்கமெண்டேஷன் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், இது பற்றி நமக்குள்ளேயே ஒரு முத்தரப்பு மகாநாடோ, இருதரப்பு மகாநாடோ கூட்டி ஒரு சமரச ஏற்பாட்டைக் காண முயற்சிக்கலாம் என்று தொழிலாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை இந்த அரசாங்கமும் வலியுறுத்தி, வேஜ் போர்டு சிபார்சு என்னவாக இருந்தாலும் பரவாயில்லை, நமக்குள் ஒரு உடன்பாடு காணவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் பிரச்சினையில் சட்டம் ஒழுங்கைப்பற்றிச் சொன்னார்கள். சட்டம், ஒழுங்கை இந்த அரசு நிலைநாட்டவில்லை, போலீஸ் துறையினர் சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று

1968 மார்ச் 19] [திரு. செ. மாதவன்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அடுத்து போலீஸ் துறையினர் சுட்டுவிட்டார்கள்—அதனால் யாரும் மாண்டார்களோ இல்லையோ—தொழிலாளி மாண்டுவிட்டான் என்று இரக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி நலனுக்காக இப்படிச் சொல்லக்கூடிய உரிமை உண்டு. அதை மறுப்பதற்கும் எங்களுக்கு உரிமை உண்டு. மக்கள் தீர்ப்பளிக்க இருக்கிறார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு என்ற அடிப்படையில் அமைதியாக நடக்கக்கூடிய கிளர்ச்சிகளில் தலையிட்டு தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என்ற நிலைமைக்கு கொண்டுபோய் விட்டுவிடுவது தவறு. அதே சமயத்தில் போராட்டம், கிளர்ச்சி என்ற பெயரால் பலாத்காரம் தலைவிரித்தாடப் பார்த்துக்கொண்டிருப்பதும் தவறு. இந்த இரண்டையும் தவிர்ப்பதற்காகத்தான் நாங்களே மேல்மட்டத்திலேயே தலையிட்டு பேச்சு வார்த்தைகளின் மூலம் தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்து வைக்க எங்களாலான முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டு வருகிறோம். இது கூடத் தவறு என்று சொல்லப்படுகிறது என்பதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒருசிலவற்றை வாசித்துக் காட்டிவிட்டுப் போய்விட்டார். இப்படி ஒரு குற்றச்சாட்டை சுமத்துகிறபோது அது நியாயம்தானா, அது பற்றி காங்கிரஸ் கட்சியின் கொள்கை என்ன, தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு நடந்து கொள்ள வேண்டிய முறை என்ன என்று சொன்னால் அது நன்றாக இருக்கும். அவருக்கு அப்படிச் சொல்ல முடியாத நிலையில் உள்ள கஷ்டங்களை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. யாரோ ஒரு கருத்தைச் சொன்னார், அது பத்திரிகையில் விளம்பரமாகிவிட்டது என்பதற்காக நாம் அந்தக் கருத்தை ஏற்கவேண்டியதில்லை. அந்தக் கருத்து எவ்வளவு தூரம் நியாயமானது என்பதை நாம் பரிசீலித்தாக வேண்டும். தொழிலாளர்களுடைய பிரச்சினையை ஆராய்வதற்காக மத்திய அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்கீழ் பல பல தனிப்பட்ட பிரச்சினைகளை ஆராய குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அமைக்கப்பட்டுள்ள ஒரு குழுவுக்கு இந்த மாநிலத்தைச் சேர்ந்த, இந்த நகரத்தைச் சேர்ந்த ஒரு முதலாளி தலைவராக இருக்கிறார். சில தொழிலாளர்களின் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அவற்றைப்பற்றித்தான் நான சொல்ல வருகிறேன்.

முதலாவது கருத்து போலீஸ் துறையினரைப் பற்றி. இவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதே இல்லை என்று பொதுவாகச் சொல்லி விடலாம். இதுபற்றி ஆராயவேண்டும் என்பதற்காகத்தான் நான் ஒவ்வொரு மாவட்ட அதிகாரிகளும் அறிக்கை அனுப்பி அவர்கள் எத்தனை இடங்களில் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்கிற விவரங்களைச் சேகரித்தேன். அதைப் போன ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, செல்பார்க் கம்பெனியைப்பற்றி என்று சொன்னார்கள். என்ன நடந்தது என்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியுமோ தெரியாதோ, எனக்குத் தெரியும். முதல் அமைச்சர் அவர்கள் உட்பட அத்தனை பேர்களுமே உயர்மட்ட அளவில் அந்தத் தகராறைத் தீர்த்துவைக்க இரவு பகலாக பேச்சுவார்த்தை நடத்தினோம் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கே தொழிலாளர்களுடைய கோரிக்கை எதுவுமே இல்லை. சில தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். அதுதான் தகராறு. உயர்நீதி மன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள். உயர்நீதி மன்றம் சொல்வது எல்லாம் சரி என்று ஒப்புக்கொள்ள முடியாது. நம்முடைய கொள்கைக்கு எந்த அளவு ஏற்றதோ அந்த அளவு ஏற்றுக்கொள்கிறோம். குறிப்பாக அவர்கள் ஒரு வழக்கு சம்பந்தமாகத் தீர்ப்புக் கொடுத்துவிட்டால் அந்தத் தீர்ப்பை அமல்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்டே-இன்-ஸ்ட்ரைக்கைப்பற்றி சொன்னார்கள். 150 ஆண்டுகால வரலாறு அதற்கு உண்டு. அதைப் பற்றி உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. அதுபற்றி நமக்குள்ள கருத்து வேறுபாடு இப்போது பிரச்சினை அல்ல. உயர்நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பை நாம் செயல் படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. செ. மாதவன்] [1968 மார்ச் 19

எதிர்க்கட்சித் தலைவர் செல்பார்கைப் பொறுத்தவரை வழக்குப்போட வில்லை என்றார்கள். கொலை செய்ய முயற்சி என்ற அளவில் வழக்கு போடப்பட்டிருக்கிறது. போடவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல. தொழில் அமைதி இன்மை என்பது வேக் டேர்ம். வேலைநிறுத்தம் போன்ற எதுவும் நடைபெறவில்லை என்றால் தொழில் அமைதி இருப்பதாகக் கொள்ளமுடியாது. போராட்டம், கிளர்ச்சி நடப்பதன் காரணமாக தொழில் அமைதி போய்விட்டது என்றும் கொள்வதற் கில்லை. அதைக்கூட நான் ஆராய்ந்து பார்த்தேன். 1965-66-இல் 1,141 வழக்குகள் முந்திய ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அதிகமாயிருக்கின்றன. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிற்பாடு 293 வழக்குகள் அதிகப்பட்டிருக்கின்றன. வழக்குகளின் எண்ணிக்கையைக்கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று சொல்லவில்லை. தொழில் அமைதி என்பது இந்த அரசினால் நல்லமுறையில் நிலைநாட்டப்பட்டு வருகின்றது என்பதையே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் "மினிஸ்ட் டீரியல் இண்டர்பியரன்ஸ்" இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கீழ்மட்டத்தில் இருந்து படிப்படியாக தகராறுகளை வளர விடுவ தற்குப் பதிலாக தகராறு என்று ஏற்படுகிறபோதே மேல்மட்டத் திலேயே நான் முன்பு சொன்னதுபோல சமாதானம் செய்துவைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. முதலாளிகள் அதை எதிர்க்கிறார்கள். தொழிலாளர்களின் நலனில் அக்கறை இல்லாதவர்கள் எதிர்க்கி றார்கள் என்றால் புரிந்துகொள்ள முடியும். எதிர்க் கட்சித் தலைவர் எதிர்த்திருக்கிறார். அப்படி அந்தக் குழுவினர் குற்றம் சாட்டியிருக்கிறார்களே என்றாலும் பரவாயில்லை, இவரே குற்றம் சாட்டியிருக்கிறார். அந்தக் குழு சொல்லலாம். அதற்கு உரிமை இருக்கிறது. அதிலே பலதரப் பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

பிற்பகல் 2-30.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். முதலிலே சொல்லும் பொழுது பேசிவிட்டு ஓடிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் ஓடவில்லை இங்கேதான் உட்கார்ந்திருக்கிறேன். அவர்கள் அப்படி அபிப் பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பார்த்துத் திருத்திக் கொள்வதற்கு சர்க்காருக்கு உரிமை இருக்கிறது என்றுதான் சொன்னேன். என்னுடைய பேச்சை குறிப்புகளிலிருந்து பார்த்துக்கொள்ளலாம். இது மாதிரிப் புகார்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன, அதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இது எதிர்க்கட்சித் தலைவருடைய அபிப்பிராயம் இல்லை என்பது மட்டுமல்ல, குறிப்புகூட யாரோ கொடுத்திருக்கிறார்கள், அதைத்தான் இங்கே காட்டியிருக் கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கருத்தை நான் ஆதரிக்கவில்லை என்று சொல்லி விட்டு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொன்னார்கள்......

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஆதரிக்கவில்லையென்று சொல்ல முடியாது. அதில் இருப்பதைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறேன். எங்களைப் போன்றவர்கள பொதுமக்கள்தான் அப்படிச் சொல்லியிருக் கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைக் குறிப்பிடாமல் சொல்லி விட்டதால்தான் நான் ஓடிவிட்டார்கள் என்று சொன்னேன். குறையாகச் சொல்லவில்லை. அடுத்ததாக கன்சிலியேஷன் பற்றிச் சொன்னார்கள். அரசாங்கத்திற்குள்ள அதிகாரத்தை வைத்துத்தான் அதைச் செய்கிறோம்.

இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் கோர்ட்டுக்கு அனுப்பலாமா வேண்டாமா என்பது. இரண்டு தரப்புகள் இருக்கின்றன. தொழிலதிபர்கள் ஓடோடி வந்து உடனடியாக நீதி மன்றத்திற்கு அனுப்பவேண்டுமென்று ஒருமுறை சொல்கிறார்கள். இன்னொருமுறை நீதி மன்றத்திற்கு அனுப்பாதீர்கள் என்று சொல்கிறார்கள். அதைப்போலத்தான் தொழில் சங்கத்தினரும் சொல்கிறார்கள். இந்தக் கருத்திலே இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு மக்களுடைய நன்மைக்காக எதைச் செய்ய வேண்டுமென்று பார்த்து செய்யப்படுகிறது; சமூகத்தில் யாருக்கும் சாதகபாதகம் செய்ய வேண்டுமென்று செய்யவில்லை.

டன்லப் கம்பெனியைப்பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர்களின் நன்மைக்காக 3½ லட்சத்திலிருந்து 7½ லட்சமாக தரக்கூடிய அளவுக்குப் பேச்சு வார்த்தை நடைபெற்று அதிலே வெற்றியும் கண்டிருக்கிறோம். அதற்குப் பின்னாலே வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதைத் தடுக்க வேண்டுமென்று கூறப்பட்டது. சட்டப்பூர்வமாக அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மெட்டல் பாக்ஸ் கம்பெனியைப் பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருப்பதாகச் சொன்னார்கள். கட்சிக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. நான்கு தொழிலாளர்களை மறுபடி எடுத்துக்கொள்ள மறுக்கிறார்கள். ஆர்பிட்ரேஷனுக்கும் ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் இதைச் செய்யவேண்டுமென்று யாரையும் வற்புறுத்தமுடியாது.

ஓடிவிட்டார்கள் என்று நான் தவறாகச் சொல்லவில்லை. பின்னால் இருந்ததைப் படித்துப் பார்க்காமல் விட்டுவிட்டார்கள். அதிலே எவ்வளவு தவறான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன்.

"Ministerial pressure on management to reinstate the dismissed workers."

என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களை பழிவாங்குவது கூடாது, எப்படியாவது அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதைக்கூட இந்தக் குழு கண்டித்திருக்கிறது, பண்பாடு மனிதாபிமானத்திற்குப் பொருந்துமா இல்லையா என்பது வேறு விஷயம். வேறு ஏதாவது தண்டனை கொடுங்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பாழாக்கி விடக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கன்சிலியேஷன் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியினர் அரசாங்கம் தொழிலாளருக்குச் சாதகமாக உத்தரவு பிறப்பித்தது என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் அப்படித்தான் உத்தரவு போட்டு விட்டது, ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள்தான் செய்தோம் அதைப்பற்றி முதலாளிகள்கூட நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றத்திலேயும் செய்தது சரி என்று தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. எதிர்க் கட்சித் தலைவர் அதைத் தவறாகக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் கட்சிகள் கட்சி நலன்களுக்காக தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதைத்தான் எங்களுடைய கட்சி வற்புறுத்துகிறது. அவர்களுக்கு இடதுசாரிக் கட்சியைப் பற்றி சொல்ல உரிமை இருக்கிறது, இடதுசாரி கட்சியினருக்கு அவர்களைப் பற்றிச் சொல்ல உரிமை இருக்கிறது. எல்லாத் தரப்பினர்களும் தங்களுடைய கட்சி நலன்களுக்காக அவற்றைப் பயன்படுத்தாமல் நாட்டின் நன்மைக்காக சமுதாயத்தின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றுதான் வற்புறுத்தப்படுகிறது. அதற்குத்தான் நான் முதலிலேயே சொன்னேன், ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்று. அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டு அது இருக்க வேண்டும் ஒவ்வொரு கட்சியும் தாங்கள் வைத்திருப்பதைத்தான் ஒத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கேதான் அரசியலுக்கு அப்பாற்பட்டு அணுகவேண்டுமென்று சொல்கிறேன்.

இடதுசாரிக் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சங்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தலைமையில் நடத்துகிறார்கள் என்று ஜாடையாகச் சொன்னார்கள். பாரபட்சமாக நடத்துகிறார்கள் என்று சொன்னால் அதைக் கவனிக்க முடியும். இதிலே பல சட்டப் பிரச்னைகள் இருக்கின்றன. நாங்கள் சொல்வது எல்லாம், எல்லாக் கட்சியினரும் கட்சி நலனுக்குத் தொழில் சங்கத்தைப் பயன்படுத்தமாட்டோம், எந்தக் கட்சியையும் அதோடு இணைத்துக்கொள்ளமாட்டோம், அந்த நிலையிலே இந்த சமுதாயத்தை மாற்றப்போகிறோம் என்றும் அதற்காக உழைக்கப்போகிறோம் என்றும் சொல்லி முன்வருவார்களானால் என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி உறுதிகொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில் அங்கீகரிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக சங்கம் என்று எந்த இயக்கமும் நாங்கள் நடத்தவில்லை. இதற்கு முன்னால் இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால் எத்தனையோ ஆண்டுகளாக அப்படிப்பட்ட சங்கங்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஆகவே கட்சிக்கு அப்பாற்பட்ட எண்ணத்துடன் அவற்றை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பீடித் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். இந்த விவாதத்தைத் துவக்கி வைத்தவர் மாறி மாறிச் சொன்னார்கள், சரியென்றும் சொன்னார்கள். தொழிலாளர்களுக்காக அவர் பேசியதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்கள் சரியானவையல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கம் சொன்னார்கள். 1958-ஆம் ஆண்டு பீடிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. கொண்டுவந்த பிற்பாடு சட்டத்தை அமல்படுத்தாமல் என்ன என்ன செய்ய வேண்டுமோ அதுவும் செய்யப்பட்டது. அதுவும் நாங்கள் செய்யவில்லை. அதன் காரணமாக பீடித் தொழிலிலே நலிவு ஏற்பட்டது. அது முழுக்க முழுக்கத் தவறு என்று நான் காங்கிரஸ் கட்சி அமைச்சர்களைக் குற்றஞ்சாட்டவில்லை. பல மாநிலங்களின் தொடர்பாக அது இருக்கிற காரணத்தாலேதான் அப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்பட்டன. இதைப்பற்றி மத்திய அரசிடத்திலே கூறி சட்டத்தை இயற்ற மத்திய அரசு சட்டத்திற்கான விதிகளையெல்லாம் நாம் பிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். இறுதிக்காலம் எப்ரல் மாதத்தோடு முடிகிறது. முடிந்தவுடன் தொழிலாளர் தரப்புத் தலைவர்களையெல்லாம் சந்தித்து இதைப்பற்றிய முடிவை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேலை நிறுத்தங்கள், லாக் அவுட் வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றிப் பார்க்கும்பொழுது வேலை நிறுத்தம் இல்லாமல் லாக் அவுட் இல்லாமல் அரசாங்கம் நடக்கவேண்டுமென்றால் அது நல்ல கருத்துத்தான். ஆனால் அப்படிச் செய்யக்கூடாது என்று தொழிலாளர்களுக்கு இருக்கிற உரிமையை பறிக்க முடியாது; அவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்கக்கூடாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை எப்படித் தவிர்க்கலாம் என்பதைத்தான் பார்க்கவேண்டும். அரசாங்கத்தினுடைய நிர்வாகத்திலே காலதாமதம் ஏற்படுகிறது என்றும் அமைச்சர்களுடைய தலையீடு இருக்கிறது என்றும் சொன்னார்கள். எதிர்க்கட்சியினர் அப்படித்தான் பேசவேண்டும். ஆனால் அது உண்மையல்ல. அரசாங்க இலாகாவுக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ அதைத்தான் பயன்படுத்துகிறது. இரண்டு பேர்களையும் கூப்பிட்டு பேசலாம். இரண்டு பேர்களும் வரமுடியாது என்று சொல்லிவிட்டால்—அப்படிச் சொல்லலாம், அதற்கு உரிமை இருக்கிறது—உடனடியாக நீதி மன்றத்திற்கு அனுப்பலாம். அதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அது இயற்கை, எதுவும் செய்ய முடியாது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டுமென்றால் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டுமென்றால் காலதாமதம் ஏற்படத்தான் செய்யும். சட்டமே வேண்டாமென்றால் அது வேறு பிரச்சினை. வேறு சமுதாயம் உருவாக வேண்டுமென்றால் அது வேறு பிரச்சினை. சட்டத்திற்கு உட்பட்டு வந்தால் நம்முடைய அரசாங்கமும், இலாகாவும் தன்னாலான உதவிகளைச் செய்ய முன்வரும் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

செங்கோட்டை மில்லைப் பற்றிச் சொன்னார்கள். யாருக்கு அது சொந்தம் என்பதிலே பிரச்சினை அதற்காக தாலுகா ஆபீஸ் முன்னால் மறியல் நடத்தினார்கள் எதிர்க் கட்சியினர். அரசாங்கம் அதிலே என்ன செய்ய முடியும்? மக்களுடைய பிரச்சினை என்ற முறையில் பேசிப் பார்க்கிறோம். இப்போது அந்தப் பிரச்சினை அடங்கிவிட்டது. அதற்குப் பிறகு எப்படி இந்தத் தொழிற்சாலையை நடத்துவது, எத்தனை பேரைக் குறைப்பது என்பது மறு பரிசீலனைக்கு வந்திருக்கிறது. அரசாங்க அளவிலும் கலெக்டர் அளவிலும் தலையிட்டு அதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அந்த முறையிலே ஒவ்வொரு பிரச்சினையிலும் அணுகுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறேன்.

இதிலே, காலதாமதத்தைத் தவிர்ப்பது பற்றிச் சொன்னார்கள் கால தாமதம் வேண்டுமென்று சொல்லுகிற தொழிற் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். காலதாமதம் செய்தால்தான் பிரச்சினை தீரும் என்று சொல்லக்கூடிய தொழிற் கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். காலதாமதத்திற்குக் காரணமாக அரசாங்க இயந்திரத்தைச் சொல்வது சரியல்ல; அரசாங்க இயந்திரத்தை இன்னும் விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லும் கருத்தை ஆதரிக்கிறேன். ஆனால், அரசாங்கத் துறையினால் தான் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

பொதுவாக, தனியார் துறையைவிட பொதுத் துறை தங்களுடைய நல்ல சட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. ஒரு உண்மையை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். தனியார் துறைக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றனவோ அவையெல்லாம் பொதுத் துறைக்கும் உண்டு. பொதுத் துறை வரை வரை தொழிலாளர்கள் குறை குறையும். தனியார் துறையைப் பொறுத்தவரை பேசத் தயார் இல்லை என்று சொல்லும் நிலை இருந்தாலும் பொதுத் துறையைப் பொறுத்த வரை எத்தனை மணி நேரம் வேண்டுமென்றாலும் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேசத் தயாராக இருக்கிறோம். நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட துறை தொழிலாளர் பற்றி எத்தனை மணி நேரம் வாதாடியிருக்கிறார்கள். லாபத்தைக் காண்பியுங்கள், தரத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த ஒரு நல்ல எண்ணத்தைக் கொண்டிருக்கும் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டுமே தவிர, ஒரு சங்கத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசாங்கத்தைக் குறை சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல.

துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள். எந்தவிதமான துப்பாக்கிப் பிரயோகத்தையும் இந்த அரசாங்கம் ஆதரிக்கவில்லை. அதற்காக வேதனைப்படுகிறோம். நிவாரணங்கள் எல்லாம் தரத் தயாராக இருக்கிறோம். மருத்துவ விடுதியில் சம்பந்தப்பட்ட அமைச்சரே பக்கத்தில் இருந்து நல்ல மருத்துவ உதவி கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட வேண்டும், அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர்கள் விரும்பினால் அதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. ஒரு இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஒருவருக்குக்கூட பெரிய காயம் ஏற்படவில்லை, யாரும் சாகவில்லை, ஆனால் பல பேருடைய உயிர்கள் பறிக்கப்பட்டன என்று அறிக்கை விட்டார்கள். போஸ்டர்களை போட்டார்கள். பிரசாரத்திற்காகச் செய்கிறார்கள். அதைப் பற்றி நாங்கள் வருத்தப்படவில்லை. அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்குவதற்காக மட்டும் இந்தப் பிரச்சினைகளைப் பயன்படுத்திக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவையெல்லாம் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் பற்றிய விவரங்கள்.

தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதிலே நாம் எல்லாம் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரை தொழிலாளர்களுக்காக வீடு கட்டும் திட்டத்தில் பெருமுயற்சி

எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கும் மத்திய அரசு நிதி கொடுக்க வேண்டும். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்திலிருந்துதான செய்ய வேண்டும். இந்த அரசாங்கம் வந்த பிறகு, மத்திய அமைச்சரை அழைத்து. தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க தனித் திட்டம் வகுக்க வேண்டும் என கூறினோம். அதற்கான நிதியைநாமே திரட்டிக் கொள்ள, வீட்டு வசதி வாரியம் திரட்டிக்கொள்ள உரிமை பெற்று. தொழில் உரிமையாளர்களிடத்தில் இருந்து நிதி பெற்று, தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசு முயற்சிகளை மேற் கொண்டு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. மத்திய அமைச்சர் அவர்கள் அது நல்ல கருத்துதான், ஆனால் திரு. மொரார்ஜி அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கூறினார்கள். நம்முடைய அரசாங் கம் தொடர்ந்து அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கும் வகையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல் பல திட்டங்களை உரு வாக்கி பல மாவட்டங்களிலும் தொழிலாளர்கள், அவர்களுடைய குடும் பங்கள் பயன்பெறும் வகையில் திட்டம் தீட்டி, அதிலே அரசாங்கம் வெற்றி கண்டிருக்கிறது. அந்தத் துறையிலே அதிகாரிகள் நல்ல முறை யிலே கவனம் செலுத்தி தொழிலாளர்களுக்கு நன்மை செய்து வரு கிறார்கள். எல்லாத் தரப்பினரும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். யாரும் தொழிலாளர் நன்மையைத் தவிர வேறு எதையும் நாட்டிலே விரும்ப மாட்டார்கள். இந்தத் துறையிலே நாங்கள் கோரியிருக்கும் மானியம் தொழிலாளர் நன்மைக்காகக் கேட்டிருக்கிறோம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகிற காரணத்தால் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அவ்வாறு வலியுறுத் தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள் கிறேன்.

திரு. எ. பாலசுப்பிரமணியன்: உயர்நீதி மன்றத் தீர்ப்பிலே குறிப் பிட்ட காலத்திற்குப் பிறகு உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமானது என்ற தீர்ப்பைப் பொறுத்தவரை தொழிலாளர் தரப்பில் இருந்துதான் அப்பீலுக்குப் போகவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் முன்பே கூறியிருக்கிறார்கள். அதே சமயத்தில் அதிலே ஒரு சட்ட ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அரசு கவனிக்க வேண்டும். அந்தத் தீர்ப்பின் காரணமாக போலிஸ் கமிஷனர் அபிடவிட் நிலையில் ஒரு சட்ட ஒழுங்குப் பிரச்னை இருப்பதை அரசு யோசிக்க வேண்டும். அதிலே சட்டம், ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும். அந்த உரிமையைப் பாதிக்கக்கூடிய வகையில் உயர்நீதி மன்றத் தீர்ப்பு இருப்பதால் அதை எதிர்த்து அப்பீல் செய்யக்கூடிய கருத்து அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாலேயே குறிப்பிட்டேன். உயர்நீதி மன்றம் பல கருத்துக்களைச் சொல்லுகிறது எந்தக் கருத் துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அதை ஏற்றுக் கொள்ளுகிறோம். ஏற்றுக்கொள்ள முடியாதவற்றுக்கு சட்டபூர்வமாக மாற்ற வேண்டு மென்று சொன்னால் இந்த மன்றத்திற்கு உரிமை இருக்கிறது. இந்தத் தீர்ப்பைப் பொறுத்தவரை அரசாங்கம் பரிசீலித்து அப்பீல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறோம். இந்த அரசாங்கம் உயர்நீதி மன்றம் நல்ல கருத்துக்களை நாட்டு நன் மைக்காகச் சொன்னால் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதிலே ஏதேனும் உரிமையை நிலைநாட்ட வேண்டுமென்று சொன்னால் தொழிலாளர்கள் சார்பில்தான் அப்பீல் கொடுக்க வேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை.

1968 மார்ச் 19]

திரு. சி. கோவிந்தராசன் : ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்க வேண்டுமென்பது எல்லோரும் வரவேற்கக் கூடியதுதான். அதை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது அரசியல் தலையீடு குறுக்கிட்டு இருக்கிறது என்ற கஷ்டத்தையும் குறிப்பிட்டார்கள். எங்கள் கட்சியின் கருத்து வெளியார்கள் தலையீடு தொழிற்சங்கத்தில் குறைக்கப்பட வேண்டுமென்பதுதான். அந்த அளவுக்குப் படிப்படியாகக் குறைக்கும் முயற்சியையும் செய்து வருகிறோம். மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது போல் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் முதலாளிகள் தொழிலாளியே தலைவராக இருக்கக்கூடிய தொழிற் சங்கத்தை மதிப்பது கிடையாது என்ற உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் ராயல் கமிஷன் ஆன் லேபர் அதைப் பற்றிச் சொல்லும்போது கூட, இந்தியாவில் இருக்கும் பல முதலாளிகள் அந்தத் தொழிற்சங்கங்களுக்கிடையே பகையை உருவாக்குவதற்காகத்தான் அவ்வாறு செய்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது ஒரு பெரிய பிரசங்கமே பண்ணுகிறீர்களே.

திரு. சி. கோவிந்தராஜன் : எனவே, இவ்வாறு பல்வேறு விதமான தொழிற்சங்கங்கள் ஏற்பட்டிருப்பதையெல்லாம் இணைக்கும்போது, ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற நிலை வரும்போது ரகசிய பாலட் மூலமாகப் பெருவாரியான தொழிலாளர்கள் அந்தச் சங்கத்தை ஆதரிக்கிறார்கள் என்ற நிலையும் இருக்கிறது. ஆகவே, நடைமுறைப்படுத்துவதில் அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நேஷனல் கமிஷன் ஆன் லேபர் முக்கியமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் கட்சி ஆட்சியைப் பொறுத்தவரையில் அரசியல் கட்சிகள் இல்லாத தொழிற்சங்கம் இருந்தால் பல குறைபாடுகள் நீங்கும் என்பது எங்களுடைய கருத்து. அவர்கள் கருத்து வேறாகயிருக்கலாம். அதற்கு நான் பதில் சொல்லமுடியாது. எங்கள் கட்சிக் கொள்கை இதுதான். எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்டால் அதை நிறைவேற்ற முடியும். எங்கள் கட்சி இருக்கலாம், ஆனால் இன்னொரு கட்சி வரக்கூடாது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் கட்சிப் பிரச்னையில் கருத்து வேறுபாடு இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து முடிவு கட்டினால்தான் இது வரும். உதாரணமாக, அமைச்சரிடம் பேசுகிறார்கள் தொழிற் சங்கத் தலைவர்கள். மிக நன்றாகப் பேசுகிறார்கள். எதையாவது வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வாங்கிக் கொடுத்தவுடன் கீழே இறங்கி தொழிலாளர்களிடம் தலைவர்கள் பேசுவது 'தி. மு. க. அரசு ஒழிக' என்று. என்ன காரணம்? தொழிலாளர்களுடைய எண்ணத்தை இங்கு வந்து பேசுகிறார்கள். வெளியே போனவுடன் கட்சிக் கண்ணோட்டம் வந்துவிடுகிறது. அரசாங்கத்திற்கு எதிராகத் திருப்ப வேண்டுமென்ற நிலை வருகிறது. இதைத் தடுக்க நாங்கள் சொல்லும் பரிகாரம் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்று கட்சி சார்பற்று சொல்கிறோம். எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறோம், நாட்டுக்கு இது நன்மை என்று ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடப்படும். வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்த உறுப்பினர்கள் அவைகளை வற்புறுத்துகிறார்களா என்ற கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. செ. பாலசுப்பிரமணியன், திரு. க. இராமமூர்த்தி, திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவைகள் பேரவையின் அனுமதியுடன் திருமபப் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். சுரேந்திரன் இருப்பிடத்தில் இல்லையாதலால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

அவையின் முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 24—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,38,31,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்துடன் பேரவையின்
பிற்பகல் 2-52 இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக்
காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

*106. Notification issued with G.O. P. No. 2132, Revenue, dated the 7th December 1967, making an amendment to rule 3 (1) of the Madras Inams (Supplementary) Rules, 1965, published at pages 63–69 of Part V of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 15th February 1965. [Laid on the Table of the House under section 18 (1) of the Madras Inams (Supplementary) Act, 1963 (Madras Act XXXI of 1963).]

107. Notification issued with G.O. Ms. No. 3277, Home, dated the 30th November 1967, making an amendment to the Madras Chloral Hyderate Rules, 1959, published at pages 136–145 of the Rules Supplement to Parft II of the *Fort St. George Gazette*, dated the 13th May 1959, as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]

B. Reports, Notifications and Other Papers.

62. The Third Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Police.

* Laid on the Table of House on 18 March 1968.

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 243 at page 561.]

Percolation tanks and major check dams have been constructed in the forest areas of North Arcot district (between 1962 to 1966). Particulars are given in the statement below. No percolation tanks have been constructed in the hilly and forest areas in other districts.

Statement.

Serial number.	Name of the district.	Name of the taluk.	Name of the village.	Name of the percolation tanks or major Check dams constructed.	Name of the forest areas in which the percolation tanks or the major check dams have been constructed.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	North Arcot ..	Gudiyatham ..	Sendathur ..	Akkamakuttai ..	Pallakuppam Extension Reserved Forest.
2	Do.	Do. ..	Ramalai	Goundankuttai ..	Kallapadi Reserved Fosest.
3	Do.	Wallajah	Neelagandavarayanpet.	Veerappankuttai ..	Ambur Panchayat forest.
4	Do.	Gudiyatham ..	Pallalakuppam ..	Two major check dams.	Fringes of Pallalakuppam forest.
5	Do.	Do. ..	Karkoor ..	One major check dam.	Do.
6	Do.	Do. ..	Kothamallikuppam.	Do.	Fringes of Pallalakuppam Extension Reserved Forest.
7	Do.	Do. ..	Pallalakuppam ..	Four major check dams.	Do.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

கசிவு நீர்க்குளங்களும் பெரிய தடுப்பு அணைகளும், வட ஆர்க்காடு மாவட்டத்தின் காட்டுப் பகுதிகளில் (1962–1966-ம் ஆண்டுகளுக்கிடையில்) அமைக்கப்பட்டுள்ளன. கீழே கண்டுள்ள விவர அறிக்கையில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் கசிவு நீர்க்குளங்கள் எவையும் அமைக்கப்படவில்லை :—

விவர அறிக்கை.

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	வட்டத்தின் பெயர்.	கிராமத்தின் பெயர்.	அமைக்கப்பட்ட கசிவு நீர்க்குளங்கள் அல்லது பெரிய தடுப்பு அணைகளின் பெயர்.	கசிவு நீர்க்குளம் அல்லது பெரிய தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டுள்ள காட்டுப் பகுதியின் பெயர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	வட ஆர்க்காடு ..	குடியாத்தம்	செந்தூர்	அக்கமக்குட்டை	பல்லாலக்குப்பம் விரிவு—ஒதுக்கக்காடு.
2	டிை ..	டிை	ராமாலை	கவுண்டன்குட்டை	கல்லபாடி—ஒதுக்கக் காடு.
3	டிை	வாலாஜா	நீலகண்டவ ராயனபேட்டை.	வீரப்பன் குட்டை	ஆம்பூர் பஞ்சாயத்துக் காடு.
4	டிை ..	குடியாத்தம்	பல்லாலக் குப்பம்	இரண்டு பெரிய தடுப்பு அணைகள்.	பல்லாலக் குப்பம் காட்டின் ஓரப் பகுதிகள்.
5	டிை ..	டிை	கார்சூர்	பெரிய தடுப்பு அணை (ஒன்று)	டிை
6	டிை ..	டிை	கொத்தமல்லிக் குப்பம்.	டிை	பல்லாலக்குப்பம் விரிவு ஒதுக்கக்காட்டின் ஓரப் பகுதிகள்.
7	டிை ..	டிை	பல்லாலக்குப்பம்	நான்கு பெரிய தடுப்பு அணைகள்.	டிை

இணைப்பு II

[572-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக் குறியிட்ட வினா எண் 252-க்கான விடையைக் காண்க.]

தென்னார்க்காடு மாவட்டத்து, சிதம்பரம் கோட்டத்தில் உபரி என அறிவிக்கப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பு:—

	புன்செய்.	நன்செய்.	மொத்தம்.
	(சாதாரணமான எக்கர்களில்.)		
1. தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் கோட்டத்தில் உபரி என அறிவிக்கப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பு.	119	336	455
2. (1) இனத்திலுள்ள நிலங்களை வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	22 நபர்கள்.		
3. (1) இனத்தில் கண்டுள்ள நிலங்களிலே ரிட் மனுக்களுக்கும் மேல் முறையீடுகளுக்கும் உட்பட்ட நிலப் பரப்பளவு (10 வழக்குகள்).	45	235	280
4. உண்மையில் கைவசப்படுத்திய நிலத்தில் நிகரப் பரப்பு (12 வழக்குகள்).	74	101	175
5. நில ஒப்படை செய்யப்படும் வரை குத்தகைக்காரர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் பரப்பளவு.	52	100	152
6. (5) இனத்தில் குறிப்பிட்டபடி குத்தகைகளினால் பயன்பெற்றோர் எண்ணிக்கை.	94 (ஹரிஜனங்கள் 31).		
7. 1966-67-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட குத்தகைத் தொகை.	ரூ. 19,580.		
8. நில நடுவர்மன்றம் தடைஅனுமதித்துள்ள முடிவுறா வழக்குகளில் அடங்கும் நிலப் பரப்பளவு.	30	113	143

Total extent notified as surplus in Chidambaram taluk of the South Arcot District.

	Dry.	Wet.	Total.
	(In Ordinary Acres.)		
(1) Total extent of lands notified as surplus in Chidambaram taluk in South Arcot district.	119	536	455
(2) Number of persons from whom the lands in item (1) were notified.	22 persons.		
(3) Extent covered by writs and appeals out of item (1) (10 cases).	45	235	280
(4) Net extent actually taken possession of (12 cases).	74	101	175

	Dry.	Wet.	Total.
	(In Ordinary Acres.)		
(5) Extent leased out to tenants, pending assignment.	52	100	152
(6) Number of persons benefited by leases mentioned in item (5).	94 (Harijans 31.)		
(7) Amount of lease rent collected for 1966—67.	Rs. 19,580		
(8) Extent covered by pending cases in which Land Tribunal has granted stay.	30	113	143

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[574-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் தொழிலாளர் நிலைமை, 1967-68.

ஆய்வுரை.

1. தொழிலாளர் நிலைமை குறித்த சட்டங்கள் இந்த அறிக்கையில் விவரிக்கப்படுகின்றன. இச்சட்டங்கள் அடியிற்கண்ட வகைப்பாட்டில் அடங்கும் :—

I. நிறுவனங்கள் குறித்த சட்டங்கள்.

II. ஊதியம் குறித்த சட்டங்கள்.

III. தொழில் தகராறுகள் குறித்த சட்டங்கள்.

IV. சமூகப் பாதுகாப்பு குறித்த சட்டங்கள்.

V. தொழிலாளர் நல ஏற்பாடுகள்.

இவை தவிர, எடைகள், அளவைகள் சட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும், வேலை வாய்ப்புப் பயிற்சி பணி குறித்தும் தனித்தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

I. பணிமனைகள் குறித்த சட்டம்.

2 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.—ஆண்டுத் தொடக்கத்தில 6,994 தொழிற்சாலைகள் பட்டியலில் இருந்தன. இந்த ஆண்டில் 467 தொழிற்சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. 284 தொழிற்சாலைகள் பட்டியலில இருந்து அகற்றப்பட்டன. இதனால் ஆண்டு இறுதியில் இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 7,177 ஆகும்.

சென்ற ஆண்டில் ஆய்வாளர்கள் 11 763 ஆய்வுகளே செய்திருக்க இந்த ஆண்டில் 11,235 முறையான ஆய்வுகள் செய்யப்பட்டன; மேலும் இந்த ஆண்டில் 1,190 சிறப்பு ஆய்வுகளும், 585 பணிமனைகளில் ஞாயிற்றுக் கிழமையன்றும், 231 பணிமனைகளில் திடீர் ஆய்வும், 334 பணிமனைகளில் இரவு நேர ஆய்வும் செய்யப்பட்டன. சென்ற ஆண்டில் இத்தகைய ஆய்வுகள் 2,550 பணிமனைகளிலேயே செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டில் தொழிற்சாலைகள் சட்டம், பிற தொடர்பான சட்டங்கள் ஆகியவற்றின் விதித்துறைகளை மீறிய 859 தொழிற்சாலை நிர்வாகங்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. சென்ற ஆண்டில் 750 தொழிற்சாலை நிர்வாகங்கள் மீதே வழக்குத் தொடரப்பட்டது.

1966-67-ம் ஆண்டுகளில் நிகழ்ந்த விபத்துக்கள் குறித்த விவரங்கள் வருமாறு:—

ஆண்டு.	சாதாரண விபத்துக்கள்.	மரண விபத்துக்கள்.
(1)	(2)	(3)
1966	18,884	42
1967	19,268	25

[1968 மார்ச் 19

இது வரையில், 264 தொழிற்சாலைகளில் காப்பு ஏற்பாடு குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு இறுதியில் 234 குழுக்களே செயல்பட்டு வந்தன.

3. **தமிழ்நாடு 1947-ம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்.**— இந்த ஆண்டில் இச்சட்டம் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மதுக்கூர் பேரூராட்சியில் நீட்டிக்கப்பட்டது.

1966 முதல் 1968 வரையுள்ள மூன்றாண்டுக் கால தொடக்கத்தில் இச் சட்டத்தின் கீழ் வந்த கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கை, அவற்றில் பணியாற்றியவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டுத் தொடக்கத்தில்.	சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்கள்.	பணியாளர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1966	187,770	208,162
1967	187,869	209,281
1968	188,843	209,424

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்கள் 1967-ம் ஆண்டில் 225,999 நிறுவனங்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.

இச் சட்டத்தின் விதித் துறைகளையும் இச் சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் மீறிய 157 நிறுவன உரிமையாளர்கள் மீது வழக்கு தொடரப் பட்டது. சென்ற ஆண்டில் 456 நிறுவன உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

	1966.	1967.
ஆண்டுத் தொடக்கத்தில் நீதி மன்றங்களின் விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை.	33	27
இந்த ஆண்டில் வழக்கு தொடர அனுமதிக்கப்பட்டுள்ள நேர்வுகளின் எண்ணிக்கை.	456	157
தண்டனை விதிக்கப்பட்டவை	461	165
வசூல் செய்யப்பட்ட அபராதத் தொகையின் மொத்தம்.	ரூ. 7,970	ரூ. 2,184

மேற்படி சட்டத்தின் 41-வது பிரிவின் கீழ் 1967-ம் ஆண்டில் தொழிலாளர்த் துறைத் துணை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு அவரால் முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் குறித்த விவரங்கள் தருமாறு :—

1967 ஜனவரி 1-ம் தேதியன்று முடிவு செய்யப் படாமலிருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	303
இந்த ஆண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	430
மொத்தம் ..	733
முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.	512
ஆண்டின் இறுதியில் முடிவு செய்யப்படாமல் உள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை,	221

1968 மார்ச் 19]

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இச் சட்டத்தின் 51-வது பிரிவின் கீழ் 7 மனுக்கள் முடிவாகாமல இருந்தன. 6 மனுக்கள் இவ்வாண்டில் பெறப்பட்டன. 7 மனுக்கள் இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்டன.

இவ்வாண்டில் அரசாங்கம் மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. கடைகள், நிறுவனங்களில் பணிபுரிப வர்களும் அவர்கள் வேலே காரணமாக, அடிக்கடி பயணம் மேற் கொள்ள வேண்டியவர்களுமான பணியாளர்களுக்கு VI, VII IX X, அத்தியாயங்களில் விதித்துறைகள் பொருந்துமென்று அரசாங்கம் மேற் சொன்ன அறிவிப்பு மூலம் ஆணையிட்டது. இவ் விதித்துறைகள் ஊதியத் துடன் கூடிய விடுமுறை நாட்கள், ஊதியங்கள், குற்றங்களுக்கான தண் டனைகள், பல்வகை ஏற்பாடுகள் ஆகியவை குறித்தவையாகும்.

கடைகள்—அளவைகள் துறை தொழிலாளர்கள் துறையுடன் இணைக் கப்பட்டதன் காரணமாக அரசாங்கம் இச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்த் துறைத் துணை ஆய்வாளர்களையும் ஆய்வாளர்களாக நியமித்துள்ளனர்.

இந்த ஆய்வாண்டில் மேற்படி சட்டத்தில் 6, 52-வது பிரிவுகளின் கீழ் அரசாங்கம் 11 தற்காலிக விலக்குகளையும், தொழிலாளர்த் துறை ஆணையாளர் 8 தற்காலிக விலக்குகளையும் வழங்கியுள்ளனர். தொழி லாளர்த் துறைத் துணை ஆணையாளர் 101 நேர்வுகளில் தற்காலிக விலக்கு களை வழங்கினர்.

4. தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்.— இந்த ஆய்வாண்டில் இச் சட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அம்பத்தூர் நகரியத்திற்கு நீட்டிக்கப்பட்டது.

1968-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் தேதியன்று உள்ளபடி 21,021 நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில் 7,738 நிறுவனங்களில் பணியாளர்கள் இல்லை. இந்த நிறுவனங்களில் 63 037 பணியாளர்கள் செயல்பட்டு வந்தனர். 1967 ஜனவரி 1-ம் நாளன்று 19,986 ஓட்டல் நிறு வனங்களில் 67,835 பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர் எனபது குறிப் பிடத்தக்கது. 1966 ஜனவரி 1-ம் தேதியன்று டிசம்பர் 31-ம் தேதி வரையிலுள்ள கால அளவில் பதிவுக் கட்டணமாக ரூ. 1,54,437·50 வசூலாகியிருக்க 1967 ஜனவரி 1-ம் தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதி வரையில் பதிவுக் கட்டணமாக ரூ. 1,28,480·50 வசூலாகியது.

ஆய்வாளர்கள் சென்று பார்வையிடுங்கால் கண்டறிந்த பல்வேறு குறைபாடுகளுக்காக இந்த ஆய்வாண்டில் 303 நேர்வுகளில் வழக்குகள் தொடர ஒப்புதல் வழங்கப்பட்டது. 1966-ம் ஆண்டில் 835 நேர்வுகளில் வழக்குகள் தொடர அனுமதிக்கப்பட்டது. இவற்றில் 277 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. 1966-ம் ஆண்டில் ரூ. 14,323·50 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டிருக்க இந்த ஆண்டில் அபராதத் தொகை யாக ரூ. 3,393 வசூலிக்கப்பட்டது.

1967-ம் ஆண்டில் தொழிலாளர்த் துறை அதிகாரிகள் வேலேயிலிருந்து நீக்கப்பட்டது குறித்து அல்லது அகற்றப்பட்டது குறித்து செய்துகொள்ளப் பட்ட 458 மேல் முறையீடுகளை மேற்படி சட்டத்தின் 19 (2) பிரிவின்கீழ் விசாரித்து முடிவு செய்தனர். 1966-ம் ஆண்டில் 424 மேல் முறையீடுகளே செய்து கொள்ளப்பட்டன.

1967-ம் ஆண்டில் அரசாங்கம் இரண்டு தாற்காலிக விலக்குகளை வழங்கி யது.

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் குறித்த விதிகளின் 27-வது விதியின்கீழ் முடிவு செய்யப்பட்டுள்ள ஆண்டு விவரக் கணக்குகளைச் சேகரிக்கவும் சரிபார்க்கவும் புள்ளி விவர ஆய்வாளர்களையும் ஆய்வாளர் களாக அரசாங்கம் நியமித்துள்ளது.

றும் மாநிலத்தில் ஓட்டல் தொழிலாளர்களது வேலை நிலைமையைக் குறித்து ஆராயுமாறு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தனி அதிகாரி தமது அறிக்கையை அனுப்பியுள்ளார். இந்த அறிக்கையை தொழிலாளர்த் துறை ஆணையாளர் தொழிலதிபர்களின் பிரதிநிதி ஒருவருடனும் தொழிளாலர் பிரதிநிதி ஒருவருடனும் விவாதித்தார். ஆணையாளரின் பரிவுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

5. **1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்ச் சட்டம்.**—1967-ம் ஆண்டுத் தொடக்கத்தில் 291 மலைத் தோட்டங்கள் இருந்தன. இந்த ஆண்டில் 17 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 7 மலைத் தோட்டங்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. இந்த ஆண்டின் இறுதியில் 301 மலைத் தோட்டங்கள் செயல்பட்டு வந்தன. 84,764 மலைத் தோட்டத் தொழிலாளர்கள் இம்மலைத் தோட்டங்களில் பணி புரிந்து வந்தனர்.

மலைத் தோட்ட ஆய்வாளர்கள் 511 முறை, முறையான ஆய்வுகள் செய்தனர். தவிர, 451 முறை சிறப்பு ஆய்வுகளையும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆய்வு செய்ததன்றி திடீரென்றும் சோதனையிட்டனர். மேலும் அவர்கள் பதிவு செய்யப்படாத 223 மலைத் தோட்டங்களையும் சென்று பார்வையிட்டனர். இவற்றையும் இச்சட்டத்தின்கீழ்க் கொண்டுவருவதே இதன் நோக்கமாகும்.

அரசாங்கம் மலைத் தோட்டங்களில் பணிபுரியும் மருத்துவமனை மருத்துவப் பணியாளர், வீட்டு வேலையாட்கள், காவலர், கால்நடைகளைப் பாதுகாப்பவர்கள், அப்புறவுத் தொழிலாளர்கள் ஆகியவருக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்ச் சட்டத்தின் 19, 20, 21, 22-வது விதிகளினின்றும் விலக்கு அளித்தது. 1948-ம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 13, 14-வது பிரிவின்கீழ் இதே மாதிரியான விலக்குகள் எல்லா மலைத் தோட்டங்களுக்கும் வழங்கப்பட்டன.

மலைத் தோட்ட உரிமையாளர்கள் அனைவருக்கும் 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளச் சட்டத்தின் 19, 20-வது பிரிவுகளின் விதித்துறைகளினின்றும் 1967-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 10-ம் தேதி வரை அரசாங்கம் விலக்கு அளித்துள்ளது. மலைத் தோட்ட தொழிலாளர் வாராந்திர விடுமுறை நாட்களில் வேலை செய்து அந்து விடுமுறை நாட்களுக்குரிய ஊதியத்தை தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாக வழங்க இயல்வதற்காகவே இத்தகைய விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

1955-ம் ஆண்டு தமிழ் நாடு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகளைச் சேர்ந்த 48 (3) விதியினின்றும் விலக்கு பெறவிழையும் மலைத் தோட்டங்களுக்கு அரசாங்கம் விலக்களித்துள்ளது. ஆனால் இந்த விலக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

மருத்துவ வசதிகள்.—19 எஸ்டேட்டுகளின் மருத்துவத் திட்டங்களுக்கு அரசாங்கம 1967-ம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. இதனுடன் சேர்த்து அரசாங்கம் 262 எஸ்டேட்டுகளுக்கான மருத்துவத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு 1967-ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் தேதியன்று நடந்த அதன் கூட்டத்தில் 1955-ம் ஆண்டு தமிழ் நாடு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளைச் சேர்ந்த 25 (b) விதியில் ஒரு திருத்தம் செய்யப்பட வேண்டுமென அரசாங்கத்திற்குப் பரிவுரை செய்ய வேண்டுமென்று முடிவு செய்தது. எஸ்டேட் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் உள்நோயாளிகளுக்கு சீருடைகள் வழங்க வகை செய்யும் வகையில் இத் திருத்தம் செய்யவேண்டுமென மேற்சொன்ன குழு பரிவுரை செய்தது.

1968 மார்ச் 19]

தொகுதி மருத்துவ மனைகளை நிறுவுவதற்கான கால வரையரையை 1967-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை அரசாங்கம் நீடித்துள்ளது. எல்லா எஸ்டேட்டுகளிலும் இத்தகைய மருத்துவ மனைகள் இன்னும் நிறுவப்படாததே இதற்குக் காரணமாகும்.

வீட்டு வசதி.—மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி வாரியத்தின் பரிவுகளின் மேல் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகள் குறித்த குறிப்பீடுகளை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்ச் சட்டத்தின் கீழ் 5,247 தனிப்பட்ட தொழிலாளர்களும் 33,313 தொழிலாளர் குடும்பங்களும் மலைத் தோட்டங்களில் வசித்து வந்தனர். 34,625 தர வீடுகள் கட்டப்படவேண்டுமென விதிக்கப்பட்டிருக்க 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதியுடன் முடிவடையும் அரையாண்டில், 28,050 வீடுகள் முடிவு செய்யப்பட்டுள்ள தரங்களையொட்டிக் கட்டப்பட்டுள்ளன. மூன்றுவதுத திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட கடன் உதவியைக் கொண்டு மலைத்தோட்ட உரிமையாளர்கள் 190 வீடுகளைக் கட்டி முடித்தனர். செயற்குழு பரிவுரை செய்துள்ளபடி மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு உதவித் தொகை வழங்குவது குறித்து இந்திய அரசு முடிவு செய்யும் வரை இந்த ஆண்டில் புதிதாக எக்கடனகளும் வழங்கப்படவில்லை. மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான உதவித் தொகை, வீட்டுவசதித் திட்டத்தினை இந்திய அரசு இப்பொழுது அனுப்பியுள்ளது. இத்திட்டம் மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு இப்பொழுது அனுப்பப்பட்டுள்ளது. கடன்-உதவித் தொகை குறித்த வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

குழந்தைகள் காப்பகம்.—குழந்தைகள் காப்பகங்களைப் புதிதாக கட்டுவது குறித்த எட்டு திட்டங்களுக்கும் தற்போதுள்ள குழந்தைக் காப்பகங்களைப் புதுப்பிப்பதற்கான இரண்டு திட்டங்களுக்கும் மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளர் 1967-ம் ஆண்டில் ஒப்புதல் வழங்கினார்.

1967-ம் ஆண்டில் எட்டு நேர்வுகளில் வழக்குகள் தொடர அனுமதி வழங்கபட்டது, இவற்றில் இரண்டு வழக்குகளில் தண்டனை விதிக்கப் பட்டது. எஞ்சிய 6 வழக்குகளும் நீதி மன்றங்களில் விசாரணையில் இருந்து வருகின்றன.

மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம்.—மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவை அரசாங்கம் மாற்றியமைத்துள்ளது. மாற்றியமைக்கப்பட்ட இக்குழுவின் முதற் கூட்டம் கோவையில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் தேதியில் நடைபெற்றது. 1955-ம் ஆண்டு தமிழ் நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளைத் திருத்த வேண்டுமென்று இக்குழு அரசாங்கத்திற்குப் பரிவுரை செய்ய முடிவு செய்தது. எஸ்டேட் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு ஒரே மாதிரியான உணவு வழங்கவும் சிகிச்சை பெறும் அகத்தேயுள்ள நோயாளிகளுக்கு உடுப்பு வழங்கவும் எஸ்டேட் மக்களுக்குத் தூய குடிநீர் வழங்குவது குறித்துத் தக்க பரிவுரை வழங்குவதற்காக சிறிய துணைக் குழு ஒன்றை அமைக்கவும் வகை செய்யும் அளவில் இவ் விதிகள் திருத்தப்பட வேண்டுமென இக்குழு பரிவுரை செய்தது.

1967-ம் ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கம்பளி ஒன்றும் போர்வை ஒன்றும் தொழில் துறை மூலமாக வழங்கப்பட்டன.

1953-ம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளைச் சேர்ந்த 25 (b) (i) (ii) விதியை அரசாங்கம் திருத்தியுள்ளது. மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் மரபு, வழக்கம், கடந்த கால நடைமுறை காரணமாக எங்கெங்கு இலவச உணவு வசதி

[1968 மார்ச் 19

அவர்களுக்கு இருந்து வந்ததோ அந்தந்த இடங்களில் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் இலவச உணவு வழங்குவது இயலும் வகையில் இவ்விதிகளை அரசாங்கம் திருத்தியுள்ளது.

மேலும், அரசாங்கம் 27-வது விதியையும் திருத்தியுள்ளது. மலைத் தோட்ட உரிமையாளர்கள் தங்களது தொழிலாளர்களுக்காக மருத்துவ வசதிகளை ஏற்படுத்தத் தவறினால் மிக அண்மையிலுள்ள தோட்ட மருத்துவ மனை அல்லது மருந்தகம் அல்லது ஊராட்சி ஒன்றிய மருந்தகம் அல்லது அது போன்ற மருத்துவ மனை அல்லது மருந்தகத்தில் மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மலைத் தோட்டத் தொழிலாளர் தலைமை ஆய்வாளருக்கு இதனால் அதிகாரமளிக்கப்படுகிறது. மருத்து வசதிகளைத் தம் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கத் தவறிய மலைத் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததற்கான செலவை வசூலிக்கவும் அவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

71 (i) விதியையும் அரசாங்கம் திருத்தியுள்ளது. வயது வந்த தொழிலாளர்கள் (ஆணாயினும் பெண்ணாயினும்) நோய்வாய்ப்பட்டு அது குறித்த சான்றிதழ் அனுப்புங்கால் நாளொன்றுக்குக் குறைந்த அளவு ரூ. 1 ஊதியம் பெற இதனால் வகை செய்யப்பட்டுள்ளது.

1961-ம் ஆண்டு பேறு கால உதவிச் சட்டத்தின் கீழ் மாநில அரசாங்கம் விதிகள் இயற்றியுள்ளது. அவை 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதியில் முதற்கொண்டு செயலுக்கு வந்தன. தோட்டத் தொழிலாளர்களுக்குப் பேறு கால உதவி வழங்கப்படுவது 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு இம் மத்தியச் சட்டத்தினாலும் மாநில விதிகளினாலும் முறைப்படுத்தப்படுகின்றது.

மலைத் தோட்டத் தொழில் குழுவின் 12-வது கூட்டம் சென்னையில் 1967, ஆகஸ்டு திங்களில் நடைபெற்றது. இந்திய அரசைச் சேர்ந்த தொழிலாளர் துறை அமைச்சர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. மலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்பு நிலையை ஆராய்வதற்கான தனி மனிதர் குழுவின் பரிவுரைகளையும் தொழிலாளர்கள் நோய்வாய்படுங்கால் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய வசதிகள் பற்றிய விதி முறைகளைத் திருத்துவதற்காக அமைக்கப்பட்ட துணைக் குழுவின் பரிவுரைகளையும் இக் குழு ஏற்றுக்கொண்டது. மேலும் தொழிலாளர்களுக்கு இன்றியமையாப் பொருள்களை நியாய விலைகளில் வழங்குவதற்கு நியாய விலைக் கடைகள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய எஸ்டேட்டுகளில் நிறுவப்பட வேண்டுமெனவும் முடிவு செய்தது.

6. **தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பீடித்தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம்.**—தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1966-67, 1967-68 கால அளவில் உரிமம் வேண்டி விண்ணப்பித்துக் கொண்ட பீடித்தொழில் வளவுகளின் எண்ணிக்கை குறித்த விவரம் வருமாறு :—

	1966-67.	1967-68
உரிமம் வேண்டி மனுச் செய்துகொண்ட பீடி தொழில வளவுகளின் எண்ணிக்கை.	2,932	2,226
எவ்வளவு தொழிலாளர்களை நியமிக்க உரிமம் வேண்டப்பட்டது என்பது.	46,487	33,190

உரிமம் பற்றிய விதித்துறைகள் சட்டத்தின் எப்பகுதியில் உள்ளனவோ அப்பகுதி மட்டும்தான் இம்மாநிலத்தில் செயல் படுத்தப்படுகிறது. இத் தகைய சட்டம் அண்டையிலுள்ள மாநிலங்களில் இன்னும் செயல்படுத்த

1968 மார்ச் 19]

படாமையே இதற்குக் காரணமாகும். 1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமை) சட்டம் (மத்தியச் சட்டம் 32/1966) என்னும் சட்டமொன்றை இந்திய அரசு இயற்றியுள்ளது. இம் மத்தியச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட விருக்கும் விதிகளின் வரைவு இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து பொது மக்கள் அனுப்பும் மறுப்புரைகளையும் கருத்துரைகளையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்ட பிறகு இவ்விதிகள் முடிவாக வெளியிடப்படும். மூன்றாவது பிரிவைத் தவிர, இச்சட்டத்தின் விதித் துறைகள் அனைத்தும் 1—4—1968 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்படலாமெனவும் இச்சட்டத்தின் 3-வது பிரிவு 1—5—1968 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்படலாமெனவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அரசு இன்னும் இறுதியான முடிவு எதையும் எடுக்கவில்லை.

பீடித் தொழில் வளவுகள் அனைத்துக்கும் தமிழ்நாடு 1958-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தின் விதித்துறைகளினின்றும் விலக்கு அளிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பெண் தனது இல்லத்தில் நடத்திவரும் பீடித் தொழில் வளவுகள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு 20-6-1967 முதற்கொண்டு ஓராண்டுக் கால அளவுக்கு இச்சட்டத்தின் 3, 4-வது பிரிவின் விதித்துறைகளினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

1967-ம் ஆண்டு பீடித் தொழிலாளர் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவதன் மூலம் மொத்தம் ரூ. 35,611 வசூல் செய்யப்பட்டது. 1966-ம் ஆண்டில் ரூ. 52,677.50 வசூலிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் நான்கு நேர்வுகளில் வழக்குகள் தொடர அனுமதி வழங்கப்பட்டது. நான்கு வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. இவற்றின் மூலம் ரூ. 85 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. 1966-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 131 வழக்குகளில் அபராதம் அளிக்கப்பட்டதன் மூலம் ரூ. 1,164 வசூலிக்கப்பட்டது.

தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமங்கள் வழங்குகையில் உரிமம் வழங்கும் அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடுகளை அரசாங்கம் 1967, செப்டம்பரில் வெளியிட்டது.

1967, ஜனவரியில் பீடித் தொழில் வளவுகளுக்கு மேற்படி சட்டத்தின் 18, 21, 26, 27, 31-வது பிரிவுகளின் விதித்துறைகளினின்றும் 30-11-1966 முதற்கொண்டு ஓராண்டுக் கால அளவுக்கு விலக்களிக்கப்பட்டது. மேற் சொன்ன விலக்கு 30-11-1967 முதற்கொண்டு மேற்கொண்டும் ஆறு மாத கால அளவுக்கு இப்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.

தொழில்—தொழிலாளர் துறைத் துணை ஆய்வாளர்களும் புள்ளி விவரத் துறை ஆய்வாளர்களும் 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

7. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் 1961.— சென்னை, தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர் 1967-ம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் தலைமை ஆய்வாளராகத் தொடர்ந்து செயலாற்றினார். இச்சட்டத்தின் விதித் துறைகளை 140 உதவித் தொழிலாளர் ஆய்வாளர்கள், 18 துணைத் தொழிலாளர் ஆய்வாளர்கள், 10 தொழிலாளர் ஆய்வாளர்கள் ஆகியோர் செயல்படுத்தி வந்தனர்.

1967-ம் ஆண்டு ரூ. 2,997.50 பதிவுக்கட்டணமாக வசூலிக்கப்பட்டது. ரூ. 35,714·75 பதிவுகளைப் புதுப்பிப்பதற்கான கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் 190 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. இதனால் ஆண்டு இறுதி வரை பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 1,120 ஆக அதிகரித்தது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலையில் வைத்துக் கொண்டதாக மெய்ப்பிக்க முடியாமலும், சில நேர்வுகளில் நிறுவனங்கள் மூடப்பட்டமையாலும் 47 தொழில்நிறுவனங்கள் பெயர்கள் இவ்வாண்டில் பதிவேடுகளிலிருந்து அகற்றப்பட்டன. 1967-ம் ஆண்டு இறுதியில் 1,073 நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன.

1967, அக்டோபர் திங்களில், அரசாங்கம் மூன்று பேர் அடங்கிய நிலைக் குழு ஒன்றை அமைத்தது. இதில் தொழிலாளர்களின் மூன்று பிரதிநிதிகளும் தொழில் உரிமையாளர்களின் மூன்று பிரதிநிதிகளும் உறுப்பினர்கள் ஆவர். தலைமை ஆய்வாளர் இக்குழுவின் தலைவராவார். இக்குழுவின் முதல் கூட்டம் 25-11-1967 அன்று சென்னையில் நடைபெற்றது. மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வாளர் இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

8. உழைக்கும் பத்திரிகையாளர்கள் (வேலை நிலைமைகள்—பல்வகை ஏற்பாடுகள்) சட்டம் 1955,—1955-ம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் (வேலை நிலைமை பல்வகை ஏற்பாடுகள்) சட்டம், 1967-ம் ஆண்டில் தொடர்ந்து செயலில் இருந்தது. தொழிலாளர் துறை ஆய்வாளர்கள் பத்திரிகை நிறுவனங்களின் ஆய்வாளர்களாகத் தொடர்ந்து செயல்பட்டனர். இம்மாநிலத்தில் 256 பத்திரிகை நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இந்த ஆய்வாண்டில் 238 ஆய்வுகள் இந்த ஆய்வாளர்களால் செய்யப்பட்டன.

அரசாங்கம் மேற்படி சட்டத்தின் 17-B பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தொழிலாளர் துறைத் துணை ஆய்வாளர்களையும் இச்சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களாக நியமித்துள்ளனர்.

9. தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம், 1946.—1967-ம் ஆண்டு 38 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகள் குறித்து சான்றளிக்கப்பட்டன. இதனால் சான்றளிக்கப்பட்ட நிலை ஆணைகளின் மொத்த எண்ணிக்கை 4,433 ஆக அதிகரித்தது. ஐந்து நேர்வுகளில் நிலை ஆணைகளுக்கான திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன.

10. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம், 1958.—இந்த ஆய்வாண்டில் மூன்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலையில் வைத்துக்கொண்டுள்ள 17,877 கடைகளும் நிறுவனங்களும் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்தன. இக் கடைகளிலும், நிறுவனங்களிலும் பணி செய்துகொண்டிருந்த பணியாளர்களின் எண்ணிக்கை, 1,70,809 ஆகும். இச்சட்டத்தின் விதித் துறைகளை மீறியதற்காக 16 நேர்வுகளில் வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் 16 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. 1966-ம் ஆண்டில் அபராதமாக ரூ. 1,053 வசூலிக்கப்பட்டிருக்க இந்த ஆண்டில் ரூ. 200 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

II. ஊதியங்கள் வழங்குதல் குறித்த சட்டம்

11. 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.—ஆய்வு ஆண்டில், தங்க நகைகள் செய்யும் தொழிலும், முந்திரித் தொழிலும் மேற்படி சட்டத்தின் விவர அட்டவணையைச் சேர்ந்த I-ம் பாகத்துடன் சேர்க்கப்பட்டன.

1968 மார்ச் 19]

1967-68 ஆண்டில் அட்டவணையில் கண்ட கீழ்க்கண்ட தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியங்கள் முடிவு செய்யப்பட்டன/மாற்றியமைக்கப்பட்டன :—

(1) பின்னல் சட்டை வேலை (மாற்றியமைக்கப்பட்டன).

(2) மூக்குத்தூள் தயாரிப்புத் தொழில் வேலை.

(3) எண்ணெய் ஆலையில் வேலை (மாற்றியமைக்கப்பட்டன).

(4) தீப்பெட்டி, பட்டாசு தொழில்களில் வேலை.

பின்னல் சட்டைத் தொழிலுக்கான குறைந்த அளவு ஊதியங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று 1967 ஆகஸ்டில் ஆணையிடப்பட்டது. ஆனால், அதற்கெதிராக சென்னை, உயர்நீதி மன்றத்தில் பின்னல் சட்டை நிறுவனங்கள் சில ரால் கொடுத்துக்கொள்ளப்பட்ட ரிட் மனு விசாரணையில் இருப்பதால், குறைந்த அளவு ஊதிய வீதங்களை மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மூக்குத்தூள் தயாரிப்புத் தொழில் குறித்து முடிவு செய்யப்பட்ட குறைந்த ஊதிய வீதங்களும், சில தொழில் உரிமையாளர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் கொடுத்துக் கொள்ளப்பட்ட ரிட் மனு விசாரணையில் உள்ளதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வெட்டுமரத் தொழிலில் குறைந்த அளவு ஊதியங்களை முடிவு செய்வதற்கென 1967 மார்ச்சு திங்களில் ஒரு குழு அமைக்கப்பட்டது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும், தோல் தொழிற்சாலைகளிலும் குறைந்த அளவு ஊதிய வீதங்களை முடிவு செய்வதற்காக 1967 ஜூனில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

அட்டவணையில் சேர்க்கப்பட்ட கீழ்க்கண்ட வேலைகளுக்காக தமிழ்நாடு 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 5 (i) (அ) பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை அக்குழுக்களின் தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது :—

(1) பருத்தி விதை நீக்கு—அழுத்தல்—பருத்திக் கழிவு குறித்த தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டிருத்தல்.

(2) கயிற்றுத் தொழில்.

(3) வெட்டுமரத் தொழில்.

கீழ்க்கண்ட தொழில்கள் குறித்து குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குழுத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அக்குழுத் தலைவர்களிட மிருந்து கூடுதலான சில விவரங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது :—

(1) செங்கல்—ஓடுகள் தயாரிக்கும் தொழில் (மாற்றியமைக்கப்படல்).

(2) சலவைச் சாலைகள், துணிகளை வெளுத்தல் (கம்பளி ஆடைகள் உட்பட உடைகள்).

(3) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும், தோல் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருத்தல் (மாற்றியமைக்கப் படல்).

குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் தொழிலாளர் துறைத் துணை ஆய்வாளர்களும், புள்ளி விவர ஆய்வாளர்களும் நியமிக்கப்பட் டிருக்கின்றனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1968 மார்ச் 19

கீழ்க்கண்ட தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியங்களை மாற்றி அமைப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது :—

(1) புகையிலை (பீடி தயாரிக்கும் தொழில் உட்பட).

(2) உப்பளங்கள்.

ஏதேனும் ஒரு தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள மருத்துவ மனைப் பணியாளர், மருத்துவப் பணியாளர், வீட்டு வேலைக்காரர் முதலியோருக்கு 20—12—1967 வரையில் 1948-ம் ஆண்டுக் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் சட்டத்தின் 13, 14-வது பிரிவுகளைச் சேர்ந்த விதித்துறைகளினின்றும் விலக்களிக்கப்பட்டது.

வாராந்தர விடுமுறைகள் வழங்குவது குறித்து பீடித் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் அனைவருக்கும் 29—11—1967 வரையில் உள்ள கால அளவுக்கு, குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 13, 14-வது பிரிவில் இருந்து விலக்களிக்கப் பட்டது.

தொழிற்சட்டம் முதலிய சட்டங்கள் பொருந்தும் தொழிலாளர்களைத் தவிர, 1,43,695 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டுள்ள 6,311 நிறுவனங்களுக்கு இச் சட்டம் பொருந்தும்.

ஆய்வாண்டில் 31 வழக்குகள் தொடரப்பட்டன. முந்திய ஆண்டில் விசாரணையில் இருந்த வழக்கு உட்பட 32 வழக்குகள் குறித்து அபராத தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. மொத்தம் ரூ. 845 அபராதம் வசூலிக்கப்பட்டது. முந்திய ஆண்டில் 77 வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 81 வழக்குகள் குறித்து அபராத தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. மொத்தம் ரூ. 2,495 அபராதம் வசூலிக்கப்பட்டது. தொழிலாளர் துறை ஆய்வாளர்களும், உதவி ஆய்வாளர்களும் ஆய்வுரை ஆண்டில், 8,635 ஆய்வுகள் செய்தனர். 1966-ல் 15,079 ஆய்வுகள் செய்யப்பட்டன.

தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்களும், புள்ளி விவர ஆய்வாளர்களும் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

12. 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.—1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற நிறுவனங்கள் நீங்கலாக ஏனைய எல்லா நிறுவனங்கள் குறித்தும் தொழிலாளர் பிரிவு இச்சட்டத்தை நிறுவகிக்கின்றது. தொழிற்சாலைகள் உட்பட, 35,563 நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்துகிறது. 1967-ல் இந்த நிறுவனங்களில் பணியாற்றிய 6,84,683 தொழிலாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தியது. முந்திய ஆண்டில் 5,74,589 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டிருந்த 31,108 நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தியது.

நாற்பத்தைந்து தேர்வுகளில் தொழில் நிறுவன நிர்வாகத்தினர்மீது வழக்குத் தொடரப்பட்டது (தொழிற்சாலைகள் உட்பட) அவற்றில், ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணையில் இருந்த வழக்குகள் உட்பட 50 வழக்குகள் குறித்து அபராத தண்டனை விதித்துத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ரூ. 841 அபராதமாக வசூலிக்கப்பட்டது. ஆய்வாண்டில் ஊதியங்கள் வழங்கப் படவில்லை என 503 உரிமை மனுக்கள், தொழிலாளர் இழப்பீட்டுக் கான கூடுதல் ஆணையாளர்களுக்குக் கொடுத்துக் கொள்ளப்பட்டன. 1966-ல் 522 உரிமை மனுக்கள் கொடுத்துக் கொள்ளப்பட்டன.

அவற்றைத் தவிர ஆய்வாண்டின் தொடக்கத்தில், 434 உரிமை மனுக்கள் விசாரணையில் இருந்தன. 937 உரிமை மனுக்களில், 558 உரிமை மனுக்கள் குறித்து ஆய்வாண்டில் தீர்வு காணப்பட்டது. 1966-ல் 902 உரிமை மனுக்களுக்குத் தீர்வை காணப்பட்டது.

III. தொழில் தகராறுகள் குறித்த சட்டம்

13. 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.—தொழில் தகராறுகளை சுமுகமான முறையில் தீர்த்து வைக்க சமரச அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

அதன் விவரம் வருமாறு :—

	1966.	1967.
(அ) புலன் ஆய்வு செய்யப்பட்ட முறையீடு களின் எண்ணிக்கை.	7,880	8,173
(ஆ) சமரச முயற்சிகள் மூலம் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை.	1,208	1,194
(இ) தீர்ப்புக்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகள் எண்ணிக்கை.	315	334
(ஈ) தனிப்பட்ட முறையில் தீர்வு காண்பதற் கென அனுப்பப்பட்ட தொழில் தகராறு களின் எண்ணிக்கை.	64	81

(ஆ), (இ), (ஈ) இனங்களின்கீழ் வராத நேர்வுகள் தனிப்பட்ட முறையில் தீர்த்து வைக்கப்பட்டன. அல்லது அவற்றைக் குறித்துத் தீர்ப்பு அளிக்கப்படுவதற்கென விடுவது அவசியம் இல்லை என்று கருதப்பட்டது.

14. வேலை நிறுத்தங்கள்.—ஆய்வுரை ஆண்டிலும் சென்ற ஆண்டிலும் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	1966.	1967.
கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்கள்.	175	305
இழக்கப்பட்ட வேலை நாட்கள்	7,54,612	11,20,517

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்து தொழில்வாரியான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1966.

தொடர் எண்ணும், தொழிலும்.	வேலை நிறுத் தங்கள், கத வடைப்பு களின் எண்ணிக்கை.	வேலை நிறுத் தத்தில் பங்கு கொண்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை.	இழக்கப்பட்ட வேலை நாட்கள்.
(1)	(2)	(3)	(4)
1 துணி ஆலைத் தொழில் ..	104	51,479	5,67,737
2 பொறியியல்	10	4,832	65,906
3 தோல் பதனிடும் தொழில் ..	23	1,564	18,019
4 புகையிலை, பீடி	7	1,882	43,841
5 தோட்டங்கள்	2	2,779	16,590
6 ஏனையவை	29	6,774	42,519
மொத்தம் ..	175	69,310	7,54,612

[1968 மார்ச் 19

(1)	1967. (2)	(3)	(4)
1 துணி ஆலைத் தொழில் ..	167	62,671	3,50,007
2 பொறியியல்	44	14,373	4,95,601
3 தோல் பதனிடும் தொழிற் சாலை.	13	1,881	11,465
4 புகையிலை, பீடித்தொழில்.	14	694	2,004
5 தோட்டங்கள்	1	1	6
6 ஏனையவை	66	38,231	2,61,394
மொத்தம் ..	305	1,17,151	11,20,517

1967-ம் ஆண்டு வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் தீர்த்து வைக்கப்பட்ட முறை :—

(அ) நேரடிப் பேச்சுவார்த்தை	24
(ஆ) தொழிலாளர்கள் தாங்களாகவே வேலைக்கு வருதல்.	25
(இ) தொழிலாளர் துறையைச் சேர்ந்த அதிகாரி களால் சமரச ஏற்பாடுசெய்து தீர்த்து வைக்கப் பட்டவை.	248
(ஈ) தீர்ப்பு அளிக்கப்பட்டவை	..
(உ) புதிய தொழிலாளர்களை வேலைக்கமர்த்திக் கொள்வது.	..
(ஊ) ஆண்டின் இறுதியில் விசாரணையில் உள்ளவை ..	8
மொத்தம் ..	305

கோவையில் உள்ள டெக்ஸ்டூல் நிறுவனத்தில் வேலை நிறுத்தமும், கதவடைப்பும் சுமார் 4 திங்கள்களுக்கு நடந்தது. மூடப்பட்ட துணி ஆலை களை மீண்டும் திறக்க வேண்டும் என்றும் உணவுப் படியை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னிட்டும் 1967 ஆகஸ்டில் கோவை பகுதியில் உள்ள பெரும்பாலான துணி ஆலைகளில் வேலை நிறுத்தம் நடந்தது. இவற்றின் காரணமாக வேலை நடப்பது பெருமளவுக்கு தடைப் பட்டதுடன் வேலை நாட்கள் இழப்பு அதிகரித்தது. பூரிப்பூதியத்தை வழங்க வேண்டும் என்று கோரியும், பொறியியல் தொழிலுக்கான மத்திய ஊதிய வாரியத்தின் இடைக்கால பரிவுரைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று கோரியும் தகராறுகள் எழுந்ததன் விளைவாக, சில நேர்வுகளில் வேலை தடைப்பட்டது.

இத் தொழில் தகராறுகளை சமரச அதிகாரிகள் தலையிட்டுத் தீர்த்து வைத்ததைத் தவிர, அரசாங்கமும் சில முக்கிய நேர்வுகளில் அவற்றில் குறுக்கிட்டு அவற்றுக்குத் தீர்வு கண்டு வேலை மீண்டும் தொடங்க உதவியது.

1968 மார்ச் 19]

புதுடெல்லி, நடைமுறைப் பொருளாதார ஆய்வு குறித்த தேசீயக் கழகத்தின் தலைமை இயக்குநராகிய டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட முக்கூட்டுக்குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில், 18 ஆலைகள் குறித்து ரூ. 144·63 லட்சம் அளவிற்கு உத்திரவாத உதவி அளிக்க ஒப்புக்கொண்டு அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்துள்ளது. பின்னர், 5 ஆலைகள் குறித்து அரசாங்க உத்தரவாத உதவி நிறுத்தப்பட்டது. தற்போது 13 ஆலைகளுக்கு மட்டுமே உத்தரவாத உதவி கிடைக்கின்றது. இந்த அரசாங்கத்தின் உத்தரவாத உதவியின் மூலம் மூடிவிடப்பட்ட கீழ்க்கண்ட ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டன:—

(1) காவிரி நூற்பு–நெசவு ஆலைகள், காவிரி நகர், திருச்சிராப் பள்ளி மாவட்டம்.

(2) ஜனார்த்தன ஆலைகள், சிங்காநல்லூர், கோயம்புத்தூர்.

(3) அம்பாள் ஆலைகள், ஒட்டர்பாளையம், கோயம்புத்தூர்.

(4) பழநி ஸ்ரீமுருகன் துணி ஆலைகள், பழநி.

(5) கீதாஞ்சலி ஆலைகள், சங்கரன்கோயில்.

15. **தனிப்பட்ட முறையில் தீர்த்து வைக்கப்பட்ட தொழில் தகராறுகள்.**—தொழிலாளர்களை வேலையிலிருந்து தள்ளிவிடுதல், நீக்கிவிடுதல், எடுத்து விடுதல் குறித்து எழும் தகராறுகளைத் தனிப்பட்டமுறையில் தீர்த்துக் கொள்ள ஒப்புக் கொள்ளும்படி இருதரப்பினரையும் தூண்ட இந்த ஆண்டில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1967-ல் 81 தொழில் தகராறுகள் தனிப்பட்ட முறையில் தீர்வு காணபதற்கென அனுப்பப்பட்டன. தொழிலாளர்களை வேலையிலிருந்து தள்ளிவிடுதல், நீக்கி விடுதல், எடுத்து விடுதல், ஊதியங்கள் பூரிப்பூதியம், வேலைப்பளு, முதலியவை குறித்து அத்தகராறுகள் ஏற்பட்டன.

16. **தொழில் தகராறுகளின் தீர்ப்பு.**—சென்னை தொழில் நடுவர் மன்றத்திற்கும், சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் உள்ள தொழில் நீதிமன்றங்களுக்கும் தீர்வு காண்பதற்கென அனுப்பப்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கை, அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை குறித்த 1966, 1967 ஆண்டுகளுக்கான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.		தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	
	1966.	1967.	1966	1967.
	(1)	(2)	(3)	(4)
தொழில் நடுவர் மன்றம், சென்னை.	76	91	57	65
தொழில் நீதிமன்றங்கள் ..	257	380	250	235
மொத்தம் ..	333	471	307	300

மேற்சொன்னவற்றிற்குக் கூடுதலாக, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (c) (2) பிரிவின்கீழ் தொழிலாளர்கள் அனுப்பியுள்ள 2,467 விண்ணப்பங்களை தொழில் நீதி மன்றங்கள் பரிசீலித்து அவை குறித்துத் தீர்வு கண்டன. சென்ற ஆண்டில் 3,162 விண்ணப்பங்களுக்குத் தீர்வு காணப்பட்டது.

17. தொழில்கள் பொதுப்பயன் பணிகளாகும் என அறிவித்தல்.—பொதுப்பயன் பணிகளென ஏற்கனவே அறிவிக்கபபட்டுள்ள எல்லாத் தொழில்களும் ஆய்வாண்டில் அவ்வாறே தொடர்ந்து அறிவிக்கப் பட்டுள்ளன. அவற்றிற்குக் கூடுதலாக, ஆய்வாண்டில் கீழ்க்கண்ட தொழில்களும் பொதுப்பயன் பணிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன :—

(1) பெட்ரோலியம் பொருள்களைத் தயாரித்தல், விற்பனை செய்தல், பங்கிடுதல்.

(2) பெரிய துறைமுகம் அல்லது சரக்குத்துறை செயல்படுவது குறித்த பணி.

18. வழக்குகள்.—தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக (தீர்ப்புகளைச் செயல்படுத்தாததற்காக) கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்களுக்கு எதிராகத் தொழில் தகராறுகள் சட்டத்தின் 29-வது பிரிவின்கீழ் வழக்குகள் தொடர அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது :—

(1) திரு கணபதி மோட்டார் சர்வீஸ், நாகர்கோயில்.

(2) சுவர்ணாம்பிகை மோட்டர் சர்வீஸ், சேலம்.

(3) ஈரோடு சர்வீஸ், கோயம்புத்தூர்.

(4) வி. ராஜமாணிக்கம் பிள்ளை போக்குவரத்து (தனியார்) லிமிடெட், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

(5) லெனக்ஸ் போட்டோ மவுண்ட் தயாரிப்பு நிறுவனம், மதுரை.

19. தொழிலாளரின் ஊதிய நிலுவை வசூல்கள்.—ஆய்வாண்டில் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (c) (i) பிரிவின்கீழ் 177 நேர்வுகளில் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலிக்க அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்தது—அவ்வாறு வசூலிக்க ஆணையிடப்பட்ட தொகை மொத்தம் ரூ. 2,41,920·71 ஆகும்.

20. ஊதிய வாரியங்கள்.—மத்திய ஊதிய வாரியங்களின் இடைக்கால, இறுதியான பரிவுரைகளின் மேல் இந்திய அரசு பிறப்பித்த ஆணைகளைச் செயல்படுத்த ஆய்வாண்டின்போது மும்முர நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. பொறியியல் தொழிலுக்கான மத்திய ஊதிய வாரியம் செய்த இடைக்காலப் பரிவுரைகளைப் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் ஆய்வாண்டில் செயல்படுத்தின. தோல் சரக்குகள் தொழிலுக்கான ஊதிய வாரியம் செய்த இடைக்காலப் பரிவுரைகளைப் பொறுத்த வரையில், ஆய்வாண்டில் தொழிலாளர் துறை ஆணையாளர் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரது பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். அதில் செய்யப்பட்ட முடிவுகளை ஒட்டி, இடைக்காலப் பரிவுரைகளைச் செயல் படுத்த வேண்டும் என்று நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். சர்க்கரைத் தொழிலுக்கான இரண்டாவது ஊதிய வாரியமும், ரசாயனத் தொழிலுக்கான ஊதிய வாரியமும் செய்த இடைக்காலப் பரிவுரைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சாலைப்போக்குவரத்துக் கான மத்திய ஊதிய வாரியத்தின் இடைக்கால பரிவுரைகள் அண்மையில் பெறப்பட்டுள்ளன. அவை விரைவில் செயல்படுத்தப்படும். மின்சார வாரிய நிறுவனங்களுக்கான ஊதிய வாரியத்தின் இடைக்காலப் பரிவுரை கள் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான ஊதிய வாரியம், பத்திரிகை நிறுவனங்களின் பிற பணியாளர்களுக்கான ஊதிய வாரியம் ஆகிய வற்றின் இறுதிப் பரிவுரைகளின்மீது இந்திய அரசு ஆணைகள் பிறப்பித் துள்ளது. முதல் ஆணை சட்டப்படிக்கான ஆணையாகும். இரண்டாவது ஆணை பரிவுரையின் தன்மை கொண்டதாகும். இந்தப் பரிவுரைகளைத் தாமதிக்காமல் செயல்படுத்த தொழில் அதிபர்களைக் கட்டாயப்

படுத்துவதற்கென, சில பத்திரிகை நிறுவனங்களில் ஊழியர்கள் 24—1—1968 அன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கான பத்திரிகைத்தொழில் ஊதிய வாரியத்தின் தீர்ப்புக்கு எதிராக வடஇந்தியாவைச் சேர்ந்த சில தொழிலதிபர்கள் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இதுவரை, இம்மாநிலத்தில் உள்ள பெரும்பாலான பத்திரிகை நிறுவனங்களில் இப்பரிவுரைகள் செயல்படுத்தப்படவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

சிமிட்டித் தொழிலுக்கான இரண்டாவது ஊதிய வாரியத்தின் இறுதிப் பரிவுரைகள்மீது இந்திய அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இவற்றையும் நமது மாநிலத்தில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

21. **தொழிற் சங்கங்கள்.**—1—1—1967 அன்று இம்மாநிலத்தில் 1,336 பதிவான தொழிற் சங்கங்கள் இருந்தன. இந்த ஆண்டில் 225 சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 31 சங்கங்களில் பதிவு ரத்து செய்யப்பட்டது. ஆண்டு இறுதியில் மொத்தம் 1,530 சங்கங்கள் செயல்பட்டு வந்தன.

22. **தொழிலில் ஒழுங்கு நெறிமுறை விதிகள்.**—தொழிலில் ஒழுங்கு நெறிமுறை விதிகளைச் செயல்படுத்தும் பணி மாநில ஆய்வு செயல் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழிலில் ஒழுங்குநெறிமுறை குறித்த விதித்துறைகள் தொழிலதிபர்களுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அச்சிட்டு வழங்கப்பட்டன. தொழிலாளர் நல அதிகாரிகளும், தொழிற்சாலை ஆய்வாளர்களும் எந்த ஒரு மத்திய அமைப்புடனும் இணைக்கப்பட்டிராத பல்வேறு தொழிலதிபர்களுடனும் தொழிலாளர் சங்கங்களுடனும் உள்ளாட்சி மன்றங்களுடனும் தொடர்பு கொண்டு, தொழில் ஒழுங்குநெறி முறை விதிகளை உறுதிப்படுத்துமாறு அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என்று கட்டளை இடப்பட்டுள்ளது. 260 நிர்வாகங்களும் 1,410 தொழிலதிபர் சங்கங்களும், 26 உள்ளாட்சி மன்றங்களும் 31—12—1967 வரையில் ஒழுங்கு நெறிமுறையை ஏற்றுக்கொண்டுள்ளன:

1—1—1967 அன்றைய நிலவரப்படி 107 நேர்வுகளில் தொழிலாளர் சட்டங்களின் விதித்துறைகள் மீறப்பட்டன. 31—12—1967 வரையில் தொழிலாளர் குறித்த சட்டங்கள் 1,370 நேர்வுகளில் மீறப்பட்டதாகத் தெரிய வருகிறது. 1,477 முறையீடுகளில் 1,035 அறிவுரை வழங்குவதன் மூலம் தீர்க்கப்பட்டன. 105 நேர்வுகள் குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 61 நேர்வுகளில் விசாரணை செய்ததன்மேல் அவற்றை மெய்ப்பிக்கக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. 276 முறையீடுகள் 31—12—1967 அன்று விசாரணையில் இருந்தன.

ஒழுங்கு நெறிமுறைவிதிகளை மீறியதாகவும், தொழில்மன்றத் தீர்ப்புகளைச் செயல்படுத்தாமல் இருந்ததாகவும், தொழிற்சங்கங்களை ஏற்காமல் இருந்ததாகவும், 85 நேர்வுகளில் முறையீடு செய்து கொள்ளப்பட்டது. (1—1—1967 அன்று 27 முறையீடுகள் விசாரணையில் இருந்தன. 1967-ல் 58 முறையீடுகள் அனுப்பப்பட்டன). அவற்றில் 46 குறித்து ஆய்வாண்டில் தீர்வு காணப்பட்டது. ஆண்டு இறுதியில் 39 விசாரணையில் இருந்தன.

மாநில ஆய்வு-செயல்குழு 1967 பிப்ரவரியில் மாற்றி அமைக்கப் பட்டது. தொழிலாளர்துறை ஆணையாளர் அதன் தலைவராவார். தொழிலாளர்துறை தனித் துணை ஆணையாளர் அதன் செயலாளராவார். 1967-ம் ஆண்டில் 6—5—1967 அன்றும் 28—10—1967 அன்றும் குழு அவைகூடி, தொழில் ஒழுங்கு நெறிமுறை விதிகள் மீறப்பட்டதாகச் செய்து கொண்ட முறையீடுகள் குறித்தும் சங்கங்களையும் ஏற்பது குறித்தும் ஆய்வு-செயல் பணி குறித்த ஏனையவை குறித்தும் விவாதித்தது.

23. 1965-ம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கல் சட்டம்.—பூரிப்பூதியம் வழங்கல் சட்டம் இந்த ஆண்டில் தொடர்ந்து செயலில் இருந்தது. மேற்படி சட்டத்தின் 34(2) பிரிவு அரசியல் அமைப்பில் வழங்கியுள்ள அதிகாரங்களை மீறியதாகும் என்று தலைமை நீதிமன்றம் செய்துள்ள தீர்ப்பை ஒட்டி, அச்சட்டத்தில் மேற்கொண்டும் திருத்தங்கள் செய்வது குறித்து இந்திய அரசு பரிசீலித்து வருகின்றது.

மேற்படி சட்டத்தின் 19-வது பிரிவில் வகை செய்துள்ளபடி பூரிப்பு ஊதியத்தை வழங்குவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கு அனுமதி அளிக்கும் அதிகாரியாக தொழிலாளர்துறை ஆணையாளரை அரசாங்கம் நியமித்துள்ளது. ஆய்வாண்டினபோது (கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த ஒன்பது நேர்வுகள் உட்பட) 34 நேர்வுகளில் கால நீட்டிப்பு வழங்கபபட்டது. 1966-ல் 44 கால நீட்டிப்பகள் (கூட்டுறவு நிறுவனங்கள் குறித்த எட்டு நேர்வுகள் உட்பட) வழங்கப்பட்டன.

1965-ம் ஆண்டு பூரிப்பு ஊதியம் வழங்கல் சட்டத்தின் 3 (b) பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டிய 2 (i) பிரிவில் வகை செய்துள்ளபடி நிர்வாகத்தினர் தங்களது கணக்கு ஆண்டை மாற்றிக் கொள்ள அனுமதி அளித்து ஒரு நேர்வில் ஆணைகள் இந்த ஆண்டில் பிறப்பிக்கப்பட்டன.

இந்த ஆண்டில் பூரிப்பூதியம் வழங்கல் சட்டத்தின் விதித்துறைகளி லிருந்து மாநில வீட்டுவசதி வாரியத்திற்கு 1964-65 முதற்கொண்டு மூன்றாண்டுகளுக்கு அரசாங்கம் விலக்களித்தது.

IV. சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

24. 1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடுச் சட்டம்.—இந்த ஆண்டில் 968 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 1966-ல் 870 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றைத் தவிர, இந்த ஆண்டு தொடக்கத்தில் 501 வழக்குகள் விசாரணையில் இருந்தன. மொத்தம் 1,469 வழக்கு களில் 918 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது. 1966-ல் 964 வழக்கு களுக்குத் தீர்வு காணப்பட்டது.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு கேட்கிற தகுதி யுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவரைச் சார்ந்துள்ளவர் களுக்கு வழக்காடும் உதவிக்கென அரசாங்கச் செலவில் ரூபாய் 1,000 தொகையை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளரின் ஆணைகளுக்கு எதிராக நிர்வாகம் முறையீடு செய்து கொள்ளும்போது, காயமுற்ற தொழிலாளர்களுக்கும், மரணம் அடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து உள்ளவர்களுக்கும் உயர்நீதி மன்றத்தில் எதிர் வழக்காட உதவி அளிக்கப்படுகிறது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளருக்கு முன்பு நடக்கும் சட்ட நடவடிக்கைகள் குறித்து அத்தகைய உதவி வழங்கப்பட்டது. 1967-ல் இரண்டு நேர்வுகளில் வழக்காடுவதற்கான உதவியாக மொத்தம் ரூ. 80 வழங்கப்பட்டது.

1967-ம் ஆண்டு டிசம்பரில் முந்திய ஆணைகளை மாற்றி அமைக்கும் வகையில், அரசாங்கம், தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த மின் பொருத்தங்களால் ஏற்படும் விபத்துக்களில் உயிரிழந்தவர்களும், மின்சாரத் துறையைச் சாராதவர்களுமான மக்களின் சட்ட சம்மதமான வாரிசுகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க கூட்டுத் தலைமைப் பொறி யாளருக்கு/தலைமைப் பொறியாளருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது. மேலும் அந்த இழப்பீட்டை தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணை யாளர்கள் வழங்குவதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் வழங்கவும் அரசாங்கம் அனுமதித்தது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு

1968 மார்ச் 19]

ரூ. 300-க்கு மேற்படாத தொகையைச் செலவிட 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதி வரையில் மூன்றாண்டுகளுக்கு அரசாங்கம் 1967-ம் ஆண்டு ஆகஸ்டில் ஒப்பளிப்பு வழங்கியது. அவர்கள் அத்தொகையைக் கொண்டு வழக்காடும் தொழிலாளர்களுக்கு உதவி செய்வர். அத்துடன தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 100 என்ற வீதத்தில் செலவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1923-ம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கேட்கும காயமுற்ற தொழிலாளருககு அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க அத்தொகை பயன்படுத்தப்படும்.

25. **1961-ம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டம்.**—1961-ம் ஆண்டு பேறுகால உதவிச் சட்டத்தின் கீழ்ச் செய்துள்ள விதிகளை மாநில அரசாங்கம் 1967-ம் ஆண்டு ஆகஸ்டில் உறுதிப்படுத்தியது. 1967-ம் ஆண்டு முதற்கொண்டு அந்த விதிகள் செயலுக்கு வந்தன.

26. **1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்காலவைப்பு நிதிச் சட்டம்.**—1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் சட்டம் 1967-ம் ஆண்டில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு/வகை நிறுவனங்களுக்கு, அவற்றிற்கெதிராகக் குறிப்பிட்டுள்ள தேதிகள் முதல் மேற்கொண்டும் நீட்டிக்கப்பட்டது.

தொழில்களின்/வகை நிறுவனங்களின் பெயர். (1)	பொருந்திய தேதி. (2)
1 லினோலியம்	1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 30-ம் தேதி.
2 இண்டோலியம்	ஷை
3 வெடி மருந்துகள்	1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் தேதி.
4 சணலைச் சுருளாக்குதல் அல்லது அழுத்துதல் தொழில்.	1967-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி.
5 பட்டாசுகள், பெர்குஷன் கேப் தயாரிக்கும் தொழில்.	1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி.
6 கூடாரம் தயாரிக்கும் தொழில்	1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் சட்டம் தற்போது 112 தொழில்களுக்கும் பிறவகை நிறுவனங்களுக்கும் பொருந்துகின்றது.

(2) **தமிழ்நாட்டில்** 4,979 நிறுவனங்களுக்கு/தொழிற்சாலைகளுக்கு 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகள் சட்டம் பொருந்தும்படிச் செய்யப்பட்டுள்ளது. இச் சட்டம் பொருந்துகிற தொழில் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையும் அந்த நிதிக்குச் சந்தா செலுத்துபவர்களின் எண்ணிக்கையும் முறையே 5,35,790-ம், 4,63,160-ம் ஆகும்.

(3) **தொகைசெலுத்தும் வீதங்கள்** —சட்டப்படி நோக்கின் சம்பளத்தில் 6¼ சத வீதம் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தப்படவேண்டும். ஆனால், 73 தொழில்கள்/வகை நிறுவனங்கள் குறித்துச் சம்பளத்தில் 8 சத வீதம் வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்தவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

(4) வருங்கால வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகைகள்/நிர்வாகச் செலவுகள்/ஆய்வுக் கட்டணங்கள் முதலியன குறித்து கேட்பு/வசூல்/நிலுவைத் தொகைகள் பற்றிய புள்ளி விவரம் :—

பாக்கிகளின் தன்மை.	கேட்பு.	வசூல்.	1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி யன்று நிலுவை
(1)	(2)	(3)	(4)
1 நடப்பு செலுத்துத் தொகைகள்.	8,60,27,791·39	7,93,74,224·53	66,53,586·66
2 நிர்வாகச் செலவுகள்.	20,25,327·62	18,89,487·55	1,35,840·07
3 ஆய்வுக்கான செலவுகள்.	2,50,077·61	2,48,189·90	1,887·71
4 முன்பு சேர்ந்து வந்திருந்த தொகைகள்.	66,25,581·95	64,20,594·06	2,04,967·89

வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகை நிலுவைகளும், நிர்வாகச் செலவுகளும் முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் பெருமளவிற்கு அதிகரித்துள்ளன. துணி ஆலைகள் நூல் சந்தையில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாகவும், உண்மையான நிதிப் பற்றுக்குறை காரணமாகவும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை வழங்காததே அதற்கு முக்கிய காரணமாகும். தமிழக அரசு, டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் தலைமையில் நியமித்த முக்கூட்டுக் குழுவின் பரிவுரைகளின் விளைவாக நிதிப் பற்றுக்குறையால் மூடப்பட்ட 13 துணி ஆலைகளுக்கு உத்திரவாத உதவி வழங்கியுள்ளது. வங்கிகள் வழங்கும் கடனிலிருந்து சட்டப்படிக்கான பொறுப்புகள் குறித்துச் செலுத்தப்படவேண்டிய தொகையைக் கழித்துக்கொண்டு எஞ்சியுள்ள தொகை ஆலைகளுக்கு வழங்க வேண்டுமென அரசு குறிப்பான ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இந்த ஆலைகளிடமிருந்து நிலுவைத் தொகைகளை வசூல் செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துணி ஆலைகள் நீங்கலான நிறுவனங்களிடமிருந்து சேரவேண்டிய நிலுவைகளை வசூலிக்க மும்முர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(5) வட்டி வீதம்.—1967–68 நிதி ஆண்டில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிகளில் தனித்தனி கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 5 சத வீதமாகும். முந்திய ஆண்டில் வரவு வைக்கப்பட்ட வட்டி வீதம் 4·75 சத வீதமாக இருந்தது.

(6) முன் பணங்கள்.—கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு ஆய்வு ஆண்டில் ரூ. 77,66,075·01 அளவிற்குத் திரும்பச் செலுத்தத்தக்கதாய் இராத முன் பணங்கள் வழங்கப்பட்டன.

	நேர்வுகளின் எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3) ரூ.
(அ) ஆயுள் காப்புறுதி தவணைத்தொகை செலுத்துதல்.	26,618	21,12,187·61

1968 மார்ச் 19]

(1)	நேர்வுகளின் எண்ணிக்கை. (2)	தொகை. (3)
		ரூ.
(ஆ) உறைவிடங்கள்/வீட்டு மனைகள் வாங்குதல்.	1,247	11,92,176·60
(இ) ஒரு தொழிற்சாலை அல்லது நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டதன் காரணமாக வேலை இழந்தவர்களுக்கு சிறப்பு முன்பணம்.	18,455	34,67,143·25
(ஈ) பயன் கொள்வோர் கூட்டுறவு சங்கங்களின் பங்கு/பங்குகளை வாங்குவதற்காக.	972	29,080·00
(உ) மருத்துவக் காரணங்களுக்காக.	6,160	9,65,487·55

(7) **வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாகத் தீர்த்து வைத்தல்.**—1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் உள்ள கால அளவில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாகத் தீர்ப்பதை முன்னிட்டு ரூ. 2,20,26,515·30 தொகையை வழங்கியது. 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை உள்ள கால அளவில் ரூ. 1,72,30,484·11 வழங்கப்பட்டது. இதைத் தவிர மரணமடைந்த உறுப்பினர்களின் நியமனதாரர்களுக்கு/வாரிசுகளுக்கு மரண உதவி நிதியிலிருந்து கூடுதல் உதவித் தொகையாக ரூ. 94,526·86 தொகையும் வழங்கப்பட்டது.

(8) **கணக்குகள் குறித்த ஆண்டு அறிக்கையை வழங்குதல்.**—1966–67-ம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டியிருந்த 3,69,035 ஆண்டுக் கணக்குச் சீட்டுகளில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் 3,36,636 சீட்டுகள் அனுப்பப்பட்டன.

(9) **தொழிலாளர் வருங்கால சேமிப்புநிதி—வட்டாரக்குழு—சென்னை வட்டாரம்.**—சென்னை வட்டாரத்தைச் சேர்ந்த வட்டாரக் குழு, ஆய்வாண்டில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியன்று கூடி 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டம் செயல்படுவது பற்றி அவசர முக்கியத்துவம் வாய்ந்த பல பொருள்களைக் குறித்து விவாதித்தது. குழுவின் பரிவுரைகள் உயர் அதிகாரிகளின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டன.

(10) **ஆய்வாண்டில் 1952-ம்ஆண்டு தொழிலாளர் வருங்காலச்சேமிப்பு நிதித் திட்டத்தில் செய்யப்படவேண்டிய முக்கியமான திருத்தங்கள்.**—

(1) **தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டத்தின் 69 (6) பாரா.**—இத் திட்டம் தொழிற்சாலையில்/நிறுவனத்தில் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் பணிக்கால இடையீடுகள் எவையேனும் இருப்பின் அவை நீங்கலாக மொத்தப் பணிக் காலத்தையும் சேர்த்து முறைப்படுத்தி 69 (3) பாராவின்படி எவ்வளவு தொகை பறிமுதலாகுமென்பதை நிச்சயிப்பதற்கு அவருடைய நிதியில் உறுப்பினராகச் சேர்ந்த கால அளவை கணக்கிடுவதற்காக 69-வது பாராவின் (6) துணைப் பாராவைச் சேர்ந்த (a) விளக்கத்தில் "முன்பு" என்னும் சொல்லுக்குப் பிறகு "அல்லது பின்பு" என்னும் சொற்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

(2) **இத் திட்டத்தைச் சேர்ந்த 68-G பாரா.**—1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால சேமிப்பு நிதித் திட்டத்திலுள்ள 68-G பாராவுக்குப் பிறகு 68-G (G) என்னும் புதிய பாரா சேர்க்கப்பட்டுள்ளது. சிறப்பான

[1968 மார்ச் 19

பல மாடிக் கட்டிடம் ஒன்றில் அங்கணம் ஒன்றைப் பெறுவதற்கு நிதி உறுப்பினர் ஒருவர் விரும்பினால் அவர் அதன் முழு உரிமையையும் பெறவில்லை என்பதாலோ அல்லது அந்த மனை அரசாங்கம்/உள்ளாட்சி/மன்றம்/கூட்டுறவுச் சங்கம் அல்லது வீட்டு வசதி நிதிக் கழகம் ஆகிய வற்றின் பொறுப்பில் உள்ளது என்பதாலோ 68-B, 68-C அல்லது 69-G பாராவின்கீழ் அவருக்கு முன் பணம் வழங்குவதற்கு தடையாக இருக்காது என்று வகை செய்வதற்கென இப்புதிய பாரா சேர்க்கப் பட்டுள்ளது.

(3) **தொழிலாளர் வருங்கால சேமிப்பு நிதித் திட்டத்தின் 68-வது பாரா.**—உறுப்பினர் ஒருவர் வீடு ஒன்றை வாங்குவதற்கு/கட்டுவதற்குத் தேவைப்படும் முன்பணத்தை கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும் அந்த உறுப்பினரின் கணக்கில் நேரடியாக அச்சங்கத்திற்கே தொகையைச் செலுத்திவிடுவதற்கும் வட்டாரக் கமிஷனர் அனுமதியளிப்பதற்கு அதிகாரமளிக்கும் வகையில் 68-B (i) (a) புதிய துணைப் பாரா ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

(4) **திட்டத்தின் 60-வது பாரா.**—1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித்திட்டத்தின் 60-வது பாராவின் (2) துணைப் பாராவில் (b) பகுதியைச் சேர்ந்த வரம்பு நிபந்தனையில் உள்ள "செலுத்தப்படத்தக்கதாகும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதிகாரமளிக்கப்பட்டுள்ள" என்னும் சொற்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

(5) **திட்டத்தின் 2-வது பாரா.**—"சணல் கட்டும் தொழில் அல்லது சணல் அழுத்தும் தொழில்", "வாணங்கள் முதலானவற்றைச் செய்யும் தொழில்" ஆகியவை 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டத்தின் (2) பாராவைச் சேர்ந்த (KK) பகுதியின்கீழ் பருவகால நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டன.

(6) **திட்டத்தின் 68-H-வது பாரா.**—இப்பாராவிலுள்ள "முப்பது நாட்கள்" என்னும் சொற்களுக்கு முன் "வேலைநிறுத்தமல்லாத ஏனைய பிற காரணங்களுக்காக" என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வாண்டின் இறுதிவரையில் தொழிலாளர் வருங்கால சேமிப்பு நிதிச் சட்டம்/திட்டத்தின்கீழ் 112 தொழில்கள்/வகைகள் ஆகியவற்றின் நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களில் 31 தொழில்கள்/வகைகள் குறித்தவற்றின் நன்கொடை வீதங்கள் உயர்த்தப் பட்டன. இச் சட்டத்தை மேலும் 29 வகைத் தொழில் நிறுவனங் களுக்கும் நீட்டிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அரசாங் கத்தின் கருத்தில் உள்ள இத்தகைய தொழில் நிறுவனங்கள் வருங்காலச் சேமிப்பு நிதித்திட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய நிதிச் சுமையை ஏற்கும் திறன் வாய்ந்தவை எனக் கருதத்தக்க தொழில்கள் இச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

27. **தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம்.**—தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் தேதி முதல் செயலில் உள்ளது, இத்திட்டத்தில் ஈட்டுறுதி செய்துகொண்டவர்கள், 1,07,000 பேரும் 2,23,300 குடும்பப் பிரிவுகளும் அடங்குகின்றன :—

(1) சென்னை மாநகரமும் அதன் புற நகர்களும்.

(2) கோயம்புத்தூரும் அதன் எல்லைப் பகுதிகளும்.

(3) மதுரையும் அதன் புற நகர்களும்.

(4) தூத்துக்குடி.

(5) அம்பாசமுத்திரம்.
(6) திருப்பூரும் அதன் எல்லைப் பகுதிகளும்.
(7) சேலம்.
(8) உடுமலைப்பேட்டை.
(9) மேட்டூர் அணை.
(10) சிவகாசி.
(11) ராஜபாளையம்.
(12) பீலமேடு.
(13) பெரியநாய்க்கன்பாளையம்.
(14) டால்மியாபுரம்.
(15) ராணிபபேட்டை.
(16) திருச்சிராப்பள்ளி.
(17) காவிரி நகர்.
(18) திண்டுக்கல்.
(19) திருநெல்வேலி.
(20) கும்பகோணம்.
(21) புதுக்கோட்டை.
(22) ஈரோடு.
(23) பொள்ளாச்சி.
(24) ஆவடி, பட்டாபிராம், பாடி, வீரராகவபுரம்.
(25) திருவான்மையூர் உட்பட புழலேரி.
(26) வாணியம்பாடி.
(27) குடியாத்தம்.
(28) விருதுநகர்.
(29) மேட்டுப்பாளையம்.
(30) செங்கோட்டை.
(31) நாகர்கோயில்.
(32) வேலூர்.
(33) நாகபபட்டினம்.
(34) திருநகர் (மதுரை).
(35) பேரூர் செட்டிபாளையம்.
(36) திருமங்கலம்.
(37) வரகநேரி (திருச்சி).
(38) மயிலேரிபாளையம் (கோயம்புத்தூர்).
(39) பரவை, தேனூர், சமயநல்லூர் (மதுரை).

இத் திட்டத்தின்கீழ் 37 அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களும், 8 இயங்கும் மருந்தகங்களும், 12 தொழிலதிபர் பயன்படுத்தும் மருந்தகங்களும், 53 மருந்து நிலையங்களும் செயல்படுகின்றன. இவை தவிர, மூன்று பகுதி நேர மருத்துவ அதிகாரிகளும், 95 பகுதி நேர வல்லுநர்களும் இததிட்டத்திறகென நியமிககப்பட்டுள்ளனர். சென்னையிலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையில் 23 முழு நேர வல்லுநர் பதவிகளை ஏற்படுத்தியதன் விளைவாக, இப்பணிக்கு கவனித்துவந்த பகுதி நேர வல்லுநர்கள 1—2—1968 தேதியிலிருந்து நீக்கப்பட்டனர்.

மேட்டூரில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கு 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம 28-ம் தேதி முதல் மருத்துவ வசதி அளிக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் மருத்துவமனை வசதி உட்பட மருத்துவ வசதி 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் தேதி முதல்

சென்னை நகரிலும் அதன் புற நகர்களிலும் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் நீட்டிக்கப்பட்டது. இம் மாநிலத்தில் மருத்துவ மனை வசதியும் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூரிலும் சிலைமானிலும் உள்ள அரசாங்கத் தொழிலாளர் ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களுக்கும் இயங்கும் மருத்துவமனை மூலம் மருத்துவ வசதியை நீடிக்க அரசாங்கம் எற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இயங்கும் மருத்துவ வண்டி கட்டப்பட்டு வருகிறது. இயங்கும் மருத்துவ வண்டி கட்டி முடிக்கப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டம் கீழ்க்கண்ட நிலையங்களிலும் செயல்படுத்தப் பட்டுள்ளது :—

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள வரகனேரி.

(2) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மயிலேரிபாளையம், ஊத்துக்குளி.

(3) மதுரை மாவட்டத்திலுள்ள பரவை, தேனூர், சமய நல்லூர்.

கீழ்க்கண்ட புதிய பகுதிகளிலும் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல்படுத்த அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. இந்தப் பகுதிகளில் உள்ள ஈட்டுறுதி செய்துகொண்டவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இத்திட்டத்தில் அடங்குவர்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரிசல்குளம்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆரணி.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஓடப்பள்ளி, பள்ளப்பாளையம்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பல்லடம்.

இந்தப் பகுதிகளில் இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். 1967–68-ல் கீழ்க்கண்ட பகுதிகளில் வாழும் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி செய்து தருவதற்காக புதிய தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்கள் எழு அமைக்கப் பட்டன.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம்-II, தண்டையார் பேட்டை.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம்-II, கீழ்ப்பாக்கம்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம்-II, பெரம்பூர்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம்-II, திருவொற்றியூர்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம்-III, திருவொற்றியூர்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம்-II, எழும்பூர்.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகம், சைதாப்பேட்டை.

ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கும் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகளை கோயம்புத்தூர், மதுரை, விக்கிரமசிங்கபுரம், தூத்துக்குடி பகுதிகளுக்கும் நீட்டிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இப்பகுதிகளில் கட்டப்பட்டுவரும் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனைகளும் மருந்தகங்களும கட்டி முடிக்கப்பட்டவுடன், இப்பகுதிகளிலும் மருத்துவ வசதி வழங்கப்படும். சென்னை மாநகரிலுள்ள வணிக நிறுவனத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தை நீட்டிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

1968 மார்ச் 19]

மருத்துவமனை.—தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் வரும் நோயாளிகளுக்கென்றே சென்னை அயன்புரத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு மருத்துவமனை 1962 ஏப்ரல் முதல் செயல்பட்டுவருகிறது. சென்னை மாநகரிலும் அதன் புறநகர்களிலும் ஈட்டுறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி நீட்டிக்கப்பட்டுள்ளதால் இந்த மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. படுக்கைகளின் எண்ணிக்கை விரைவில் 625 ஆக மேலும் உயர்த்தப்படும். தென் சென்னைப் பகுதியிலும் மற்றொரு தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனை கட்டப்படும். கோயம்புத்தூரில் 500 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையொன்று கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மதுரையில் தற்பொழுதுள்ள தொத்துநோய் மருத்துவமனையை இரண்டு அறுவைக் கூடங்களுடன் 66 படுக்கைகள் கொண்ட வார்டும் கூடுதல் கட்டிட அமைப்பும் போடப்பட்டு தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனையாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. கட்டிட வேலை விரைவில் நிறைவுறும். தற்பொழுதுள்ள தொத்துநோய் மருத்துவமனையை வேறிடத்திற்கு மாற்றியவுடன் மருத்துவமனை செயல்படத் தொடங்கும்.

அரசாங்கம் கீழ்க்கண்ட இடங்களில் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனைகளை அவற்றிற்கெதிரில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கை கொண்ட படுக்கை வசதிகளுடன் அமைக்க எண்ணியுள்ளது :—

		படுக்கைகளின் எண்ணிக்கை.
1.	திருச்சிராப்பள்ளி	100
2.	திருப்பூர்	100
3.	விக்கிரமசிங்கபுரம்	100
4.	திருநெல்வேலி	50
5.	தூத்துக்குடி	50
6.	ராஜபாளையம்	50
7.	உடுமலைப்பேட்டை	50
8.	சேலம்	50
9.	மேட்டூர் அணை	50

மேற்படி மருத்துவமனைகளைக் கட்டுவதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட இடங்களில் காசநோய் நலம்பேண் மருத்துவ மனைகள் கட்ட எண்ணியுள்ளது. கட்ட எண்ணியுள்ள மருத்துவ மனைகளில் அவற்றுக் கெதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையுள்ள படுக்கை வசதிகள் செய்து தரப்படும்:—

		படுக்கைகளின் எண்ணிக்கை.
1.	சென்னை மாநகர் (தாம்பரம்)	225
2.	செங்கற்பட்டு மாவட்டம்	225
3.	கோயம்புத்தூர்	300
4.	மதுரை (தோப்பூர்)	156

இதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

வார்டும் இணைப்பு மருத்துவமனைகளும்.—தாம்பரம் காச நோய் நலம் பேண் மருத்துவ மனையில மொத்தம் 52 படுக்கைகளுடன் கூடிய நிலையான தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி வார்டுகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. சிவகாசி அரசாங்க மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி பிரிவு ஒன்று கட்டப்பட் டுள்ளது. லால்குடி அரசாங்க மருத்துவ மனையில் தொழிலாளர் ஈட் டுறுதி நோயாளிகளுக்காக 10 படுக்கைகளுடன் கூடிய ஒரு வார்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கோயில்பட்டி அரசாங்க மருத்துவ மனையில் 32 படுக்கைகளுடன் கொண்ட தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிப பிரிவு ஒன்று கட்டப்பட்டுள்ளது. நாகர்கோயில காச நோய் அரசாங்க மருத்துவ மனையில் 26 படுக்கைகளுடன் கூடிய காச நோய் வார்டு ஒன்றைக் கட்டுவதற்கும் வட ஆர்காடு மாவட்டத்தில் பெண்ணாத்தூர் காசநோய் அரசாங்க மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கட்டுவதற்கும் அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. காவிரி நகரிலும் உசிலம்பட்டியிலும் உள்ள தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகத் திலும் பத்து படுக்கைகள் கொண்ட ஒவ்வொரு வார்டு கட்டுவதற்கும் அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள 13 அரசாங்க மருத்துவமனைகளிலும் 10 படுக்கைகளுடன் கூடிய வார்டு ஒவ்வொன்று கட்டுவதற்கும் அரசாங்கம் இசைவளித்துள்ளது.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்கள்.—படிப்படியான ஒரு திட்டத்தின்கீழ் இம்மாநிலம் முழுவதும் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப கீழே குறிப்பிட்டுள்ள 16 இடங்களில் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந்தகங்களை ரூபாய் 86·88 இலட்சம் மொத்தம் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவை ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன:—

1. பெரம்பூர்-I.
2. தண்டையார்பேட்டை.
3. செம்பியம்.
4. உப்பிலிபாளையம்.
5. ஒண்டிப்புத்தூர்.
6. சிங்கநல்லூர்.
7. சௌரிபாளையம்.
8. வேலூர்.
9. விக்கிரமசிங்கபுரம்-I.
10. மேட்டூர் அணை (கீழ் அணை).
11. மேட்டூர் அணை (மேல் அணை).
12. ராஜபாளையம்.
13. சிவகாசி.
14. காவிரி நகர்.
15. ராம்ஜி நகர்.
16. தூத்துக்குடி.

இரண்டாவது நிலை வேலைத் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட இடங்களில், பணியாளர் குடியிருப்புகளுடன் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருந் தகக் கட்டிடங்களை ரூ. 77·21 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டுவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது:—

1. கொண்டித்தோப்பு.
2. கீழ்ப்பாக்கம்.
3. எழும்பூர்.

1968 மார்ச் 19]

4. திருவொற்றியூர்.
5. ஆவடி.
6. அம்பத்தூர்.
7. புழலேரி.
8. பொன்னகரம்.
9. பழங்காநத்தம்.
10. திருநகர்.
11. பரவை.
12. உடுமலைப்பேட்டை.

மேற்கூறியவற்றில் 12 இடங்களில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுவிட்டன. பதினோரு இடங்களில் மருந்தகங்கள் செயல்படு கின்றன.

இத் திட்டத்தின் மூன்றும் நிலையில் ரூபாய் 45·17 இலட்சம் மொத்தச் செலவில் கீழ்க்கண்ட எட்டு இடங்களில் மருந்தகக் கட்டிடங்கள் கட்டு வதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

1. சூளை.
2. முனிச்சாலை ரோடு.
3. கும்பகோணம்.
4. பல்லாவரம்.
5. திருப்பூர்–I.
6. விக்கிரமசிங்கபுரம்.
7. திருவல்லிக்கேணி.
8. கோயில்பட்டி.

பெரும்பாலும் எல்லா இடங்களிலும் கட்டிட வேலை தொடங்கப்பட்டு விட்டது.

தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் மருந்தகக் கட்டிடங்கள் கட்டு வதற்காக கீழ்க்கண்ட இடங்களில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வரு கின்றன:—

1. பெரம்பூர்–II.
2. மலைச்சாலை–I.
3. எழும்பூர்.
4. மயிலாப்பூர்.
5. சைதாப்பேட்டை.
6. கும்பகோணம்.
7. வேலூர்.
8. வாணியம்பாடி.
9. குடியாத்தம்.
10. சேலம்.
11. திருப்பூர்–II.
12. ஈரோடு.
13. பொள்ளாச்சி.
14. மேட்டுப்பாளையம்–I.
15. மேட்டுப்பாளையம்–II.
16. S. V. புரம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

17. புலங்கிணறு.
18. குறிச்சிக்கோட்டை.
19. பெரியநாயக்கன் பாளையம்.
20. துடியாலூர்.
21. போதனூர், குறிச்சி, சுந்தராபுரம்.
22. குனியாமுததூர்.
23. பாப்பாநாயக்கன் பாளையம்.
24. ராமநாதபுரம் (கோயம்புத்தூர்).
25. கணபதி (காந்திபுரம் பகுதி).
26. பீளமேடு.
27. காட்டூர்.
28. R. S. புரம்.
29. ராஜா தெரு.
30. கணபதி.
31. சூளூர்.
32. உறையூர்.
33. நாகப்பட்டினம்.
34. திண்டுக்கல்.
35. மணியநகரம்.
36. பழனி.
37. நெய்க்காரப்பட்டி.
38. விருதுநகர்.
39. செங்கோட்டை.
40. தூத்துக்குடி-II.
41. விக்கிரமசிங்கபுரம்-II.
42. நாகர்கோயில்.

கீழ்க்கண்ட இடங்களில் தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் கட்டிடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன:—

1. தாம்பரம், தல்லாகுளம், துறைமுகம், மலைச்சாலை–II, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் மருந்தகக் கட்டிடங்கள் (நிலையானவையும், சுற்றி இயங்கக்கூடியவையும்).

2. சென்னை தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனையில் X–கதிர் பிரிவு.

3. சென்னை தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனையில் கூடுதல் காசநோய்த் தொகுதி.

4. சென்னை தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனையில் கூடுதல் பணியாளர் குடியிருப்பு (195 பிரிவுகள்).

5. சென்னை தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனையில் சிறப்புப் பணியாளர்களில் புறத்துள்ள நோயாளிகளுக்கு சிறு அறைகள் கட்டுதல்.

6. வேலூர், குடியாத்தம், லால்குடி ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி தொகுதிகள் இணைப்பு மருத்துவமனை கட்டுதல்.

1968 மார்ச் 19]

7. கோயம்புத்தூரிலுள்ள (தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி) மைய மருத்துவப் பண்டசாலைக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

8. சென்னையிலுள்ள மைய மருத்துவப் பண்டசாலைக்கும் மையப் படிவங்கள் கிடங்கிற்கும் கட்டிடங்கள் கட்டுதல்.

செலவினம்.—தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகளை வழங்குவதற்கான செலவு முதற்கண் மாநில அரசாங்கத்தால் செய்யப்பட்டு, தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிக் கழகம், மாநில அரசாங்கம் இவற்றிற்கிடையே பகிர்ந்து கொள்ளப்படும். ஈட்டுறுதி செய்து கொண்ட பணியாளர்களும், அவர்களின் குடும்பத்தினரும் இத் திட்டத்தின் கீழ்வரும் இடங்களில் 7 : 1 என்ற விகிதத்திலும் ஈட்டுறுதி செய்து கொண்டுள்ளவர்கள் மட்டுமே இத் திட்டத்தின்கீழ் வரும் இடங்களில் 3 : 1 என்ற விகிதத்திலும் பகிர்ந்து கொள்ளப்படும். கட்டிட வேலைக்கான மொத்தச் செலவு முழுவதும் தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிக் கழகத்தினால் செய்யப்படும். 1967-ம் ஆண்டில், மருத்துவ வசதிகளுக்காக செய்யப்பட்ட செலவு தோராயமாக ரூ. 145 லட்சமாக இருக்கும்.

1967 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் உள்ள கால அளவில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கு ரொக்கத் தொகையாக வழங்கப்பட்ட பல்வேறு உதவிகள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் வருமாறு :—

உதவிகளின் வகை. (1)	கொடுத்த தொகை. (2) ரூபாய்.	காசு.
1967 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் ரொக்கமாக வழங்கப்பட்ட உதவித் தொகைகள் :—		
(அ) நோய்க்கால உதவி	88,09,326	70
(இ) நீட்டிக்கப்பட்ட நோய்க்கால உதவி ..	6,94,633	87
தொழில் செய்கையில் காயம் பட்டதற்கான உதவி—		
(அ) வேலை செய்ய தாற்காலிகமாக இயலாமைக்கான உதவி.	7,00,993	17
(இ) வேலை செய்ய நிலையாக இயலாமைக்கான உதவி.	6,31,329	36
(உ) சார்ந்துள்ளவர்களுக்கு உதவி	75,547	73
பேறுகால உதவி	5,90,377	62

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்.—அயன்புரத்திலுள்ள தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதி மருத்துவமனை மும்முரத்திட்டத்தின்கீழ் கருத்தடை செய்து கொள்வதற்காக ஏற்பளிக்கப்பட்ட அறுவை சிகிச்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் ஈட்டுறுதித் செய்து கொண்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி நீட்டிக்கப்பட்டுள்ள இடங்களில் அமைந்துள்ள மருந்தகங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு சிறு மருத்துவச் சாலைகள் அமைப்பதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

சென்னை மாநகரில், தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதித் திட்டம், திட்டத்தில் சேராத வேலைத்திட்டமாகத் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

V. தொழிலாளர் நலப் பணிகள்.

28. ஈடுசெய் விலையில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம்—அரசாங்கத் திட்டம்.—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அரசாங்க, தனியார், கூட்டுறவுத் துறைகளுக்காக 150 இலட்சம் ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1966–67-ம் ஆண்டிலும், 1967–68-ம் ஆண்டிலும் செய்த முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1966–67-ம் ஆண்டில், 10·30 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 159 வீடுகள் (அம்பத்தூரில் 99 வீடுகள், திருப்பூரில் 60 வீடுகள்) கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத் துறையில் வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, நடப்பு ஆண்டில் (1967–68) வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 31—12—1967 வரையில் ரூபாய் 92,270 செலவு செய்யப்பட்டுள்ளது. அம்பத்தூரில் 54 வீடுகள், காட்பாடியில் 12 வீடுகள், திருச்சிராப்பள்ளியில் 12 வீடுகள், கிண்டியில் 54 வீடுகள், மதுரையில் 24 வீடுகள், திண்டுக்கல்லில் 12 வீடுகள் ஆகியவற்றைக் கட்டும் வேலையை தொழில் துறை மேற்கொண்டுள்ளது.

தனியார் துறை தொழிலாளர்கள் திட்டம்.—1967–68-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூபாய் 2·50 இலட்சமாகும். சென்னையில் உள்ள குமுதம் அச்சக நிர்வாகத்தினர் ரூபாய் 13·37 இலட்சம் மொத்தச் செலவில் தங்களுடைய தொழிலாளர்களுக்காக 132 வீடுகள் கட்டுவதற்கான உதவிக்காக மனு செய்துகொண்டுள்ளனர். இத் திட்டத்திற்கான ஒப்பளிப்பு ஆலோசனையில் உள்ளது.

தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.—தமிழ்நாடு 1958-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்ட விதிகளுக்கிணங்க, தோட்ட அதிபர்கள் தங்களுடைய தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு உதவ இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்தின்கீழ், தோட்ட அதிபர்கள் தங்களுடைய தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக, வீடு ஒன்றுக்கு ரூபாய் 3,000 என்ற வீதத்தில் 1—4—1966 முதல் அவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இவ்வேலைத் திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 5 இலட்சமாகும். தேசிய நெருக்கடி காரணமாக கடன் வழங்குவது தடை செய்யப்பட்டதால், தோட்ட அதிபர்களுக்குக் கடன் வழங்குதற்காக 1966–67-ம் ஆண்டில் எத் தொகையும் செலவிடப்படவில்லை. நடப்பு ஆண்டில் வரவு (1967–68) செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 1 இலட்சமாகும். இந்த ஆண்டில் இது வரையில் எத்தொகையும் செலவிடப்படவில்லை. தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்திற்கு 1—4—1966 முதல் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

29. தோட்டத் தொழிலாளர் நலன்—(i) காப்பி வாரிய மானியம்.—தோட்டத் தொழிலாளர்களுக்குக் கல்வி உதவித் தொகை, மருத்துவ வசதி போன்ற நலப் பணிகளை மேற்கொள்வதற்காக 1967–68-ல் காப்பி வாரியம் ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கியது. கல்வி உதவித் தொகை அளித்த பிறகு எஞ்சியுள்ள தொகை மருத்துவ வசதிக்காக அளிக்கப்படும். நிலுவைத் தொகை, மைசூர், சென்னை, கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு முறையே 55 : 30 : 15 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும். இம் மாநிலத்திற்கு ஒதுக்கக் கூடிய தொகை பற்றிக் குறிப்பிடப்பட்டவுடன், அத்தொகையைப் பயன் படுத்துவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

1968 மார்ச் 19]

(ii) தேயிலை வாரிய மானியம்.—தேயிலை வாரியம் அளிக்கும் மானியத்திலிருந்து (1) தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு குன்னூர் பாதுகாப்பு நிலையத்தில் பயிற்சி அளிப்பது. (2) தேயிலை எஸ்டேட்டிலிருந்து 9 மாணவர்களுக்குத் துணைச் செவிலியர்-மருத்துவச்சி படிப்பில் கோயம்புத்தூர் தலைமையிட மருத்துவமனையில் பயிற்சியளிப்பது ஆகிய நல நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

1967–68 தேயிலை வாரியம் மானியம் எதையும் ஒதுக்கவில்லை.

(iii) ரப்பர் வாரிய மானியம்.—கோட்டயம் ரப்பர் வாரியம், நாகர்கோயிலிலுள்ள அரசாங்கக் காசநோய் மருத்துவ மனையில் 4 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டுவதற்காக ரூபாய் 18,900 ஒதுக்கியுள்ளது. ரப்பர் வாரியம் கொடுக்க முன் வந்துள்ள ரூபாய் 18,900-க்காக ரூபாய் 21,500 செலவில் 4 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கட்டுவதற்காக சென்னை மருத்துவப் பணி இயக்குனர் திட்டமொன்றை அனுப்பியுள்ளார். ரூ. 18,900 தருமாறு ரப்பர் வாரியத்தை அரசாங்கம் கேட்டுள்ளது. மேலும் மேற்கூறிய திட்டத்திற்காக எஞ்சிய செலவுத் தொகையாக ரூ. 2,600-ஐ அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளது. 1967–68-க்கான திருத்த மதிப்பீட்டில் அரசாங்கத்திற்கு செலுத்தத்தக்க மானியமாக ரூ. 18,900 ஒதுக்கப்பட்டுள்ளதாக ரப்பர் வாரியச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

30. தொழிலாளர்களின் கல்வி.—நமது நாட்டின் திட்ட வல்லுநர்கள், உலக நாடுகள் தொழிலாளர் நிறுவனம் ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்த தொழிலாளர் கல்வித் திட்டம் இந்திய அரசினால் நாடு முழுவதும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டு, 1967–68-ம் ஆண்டிலும் தொடர்ந்து வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. சென்னை, மதுரை, கோயம்பத்தூரிலுள்ள வட்டார நிலையங்கள் தொழிலாளர்-ஆசிரியர்களுக்காக கீழே குறிப்பிட்டபடி பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றன :—

	சென்னை.	மதுரை.	கோயம்பத்தூர்.
முடிவடைந்த தொழிலாளர்-ஆசிரியர் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை.	6	3	5
பயிற்சி பெற்ற தொழிலாளர்-ஆசிரியர் எண்ணிக்கை.	125	92	104
பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை.	4,103	5,751	1,620

ஆசிரியர்-தொழிலாளர் பயிற்சி வகுப்புகளையும், பிரிவு நிலை வகுப்புகளையும் நடத்துவதற்கு கூடுதலாக, வட்டார நிலையங்கள் மூன்றும், இந்த ஆண்டில் (குறுகிய கால) ஒரு நாள் பள்ளித் திட்டத்தை நடத்தியுள்ளன. அண்மைக் காலத்தில் மூன்று நாள் கருத்தரங்குகளையும், படிப்பு வட்டங்களையும் நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

மதுரை நிலையத்தில், மதுரையில் உள்ள மதுரை மில் லிமிடெட்டில் முதல் முழு நேர வகுப்புகளை தமிழ் நாட்டு முதலமைச்சர் தொடங்கி வைத்தார். இதனால் தொழிலாளர்கள் தங்கள் பிரிவு நிலை வகுப்புகளை ஒரு திங்களுக்குப் பதில் (பகுதி நேர வகுப்பு) 15 நாட்களுக்குள் முடித்துவிட முடியும்.

31. பயன் துய்ப்போர் கூட்டுறவுப் பண்டசாலைகளும் நியாய விலைக் கடைகளும்.—முன்னூற்று ஒன்று தொழில் நிறுவனங்களும், 250 பணியாளர்களோ, அதற்கு மேற்பட்ட பணியாளர்களோ உள்ள அறுபத்து எட்டு மலைத்தோட்ட எஸ்டேட்டுகளும், அங்கு பணிபுரியும் தொழிலாளர் நலனுக்காக பயன் துய்ப்போர் கூட்டுறவு பண்டசாலைகளையும், நியாய விலைக்

கடைகளையும் அமைக்கும்படிக் கேட்கப்பட்டுள்ளன. இதுவரையில் அமைக்கப்பட்டுள்ள பயன் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றிற்காகும் சராசரி மாதச் செலவு ரூ. 2·16 கோடியாகும்.

32. **தமிழ்நாடு தொழிலாளர் அரசாங்க இதழ்.**—தமிழ்நாடு தொழிலாளர் அரசாங்க இதழ், பணியாளர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் திங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. இதில் தொழில் தகராறுகள், வேலை நிறுத்தங்கள், தொழிற் சங்கங்கள், முக்கியமான ஒப்பந்தங்கள், சென்னை தொழிலாளர் நீதிமன்றம், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புச் சுருக்கங்கள், உயர்நீதி மன்றம், தலைமை நீதி மன்றம் ஆகியவற்றின் முடிவுகள், பணிபுரியும் வகுப்பிற்கான பயன் நுகர்வோர் பண்ட விலைக் குறிப்பீடுகள் ஆகியவை குறித்த பயன் தரும் தகவல்களும் புள்ளி விவரங்களும் இதில் வெளியிடப்படுகின்றன. மேலும் தொழிலாளர் சிக்கல்கள், தொழில் நிர்வாகம் ஆகியவை குறித்த சுவையான கட்டுரைகளையும் இது வெளியிடுகிறது. இதைத் தவிர உலக நாடுகள் தொழிலாளர் நிறுவனம், இந்தியத் தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக் குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு முதலியவற்றின் தீர்மானங்களையும், பரிந்துரைகளையும் இது வெளியிடுகின்றது. புள்ளி விவரங்களில் பெரும்பாலானவற்றைத் தமிழில் அச்சிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

33. **பொது—(i) நுகர்பொருள் விலைவாசிக் குறியீட்டு அட்டவணை.**—நுகர்பொருள் விலைவாசிக் குறியீட்டு அட்டவணைப் புதிய தொகுதிகளைத் தயாரிப்பதற்கான சிறப்புக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பார்ப்பதற்காகசென்னைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத் துறைத் தலைவரும் பொருளாதாரப் பேராசிரியருமாகிய திரு. டாக்டர் வி. ஷண்முக சுந்தரம் அவர்களை அரசாங்கம் நியமித்தது. அவருடைய அறிக்கை வரப்பெற்றுள்ளது.

(ii) தொழிலாளர் ஆலோசனைக் குழு.—தொழிலாளர்க்குத் தொடர்புடைய எல்லாவற்றைக் குறித்தும் தொழிலாளர் துறை அமைச்சருக்கு ஆலோசனை கூறும் பொருட்டு, தொழில் சங்கத் தலைவர்களைக் கொண்ட தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளது. ஆயவுரா ஆண்டில இக்குழுவின் இரண்டு கூட்டங்களும் ஒரு சிறப்புக் கூட்டமும் இதுவரை நடைபெற்றுள்ளன.

தொழிலதிபர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை இப்போது அமைக்கவும் அரசாங்கம் செயற் குறிப்புகளை ஆராய்ந்து வருகின்றது.

(iii) தொழிலாளர் பற்றிய தேசீய ஆணைக் குழு.—இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் P. B. கஜேந்திரகட்கரின் தலைமையில் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட தொழிலாளர் பற்றிய தேசீய ஆணைக் குழு தொழிலதிபர்கள், தொழிலாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமிருந்தும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளிடமிருந்தும் வாய்மொழிச் சான்றுரைகளைப் பதிவு செய்வதற்காக 1968 பிப்ரவரித் திங்களில் இம்மாநிலத்திற்கு வந்தது.

தொழிலாளர் சட்டங்களின் பலன் குறித்தும் அவை செயல்படுவது குறித்தும் ஆராய்வதற்காக தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக் குழுவினால், ஆந்திரப் பிரதேசம், தமிழகம், மைசூர், கேரளம் ஆகியவற்றின் தொழிலாளர்த் துறை ஆணையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட (தென்பகுதி) தொழிலாளர் நிர்வாகம் பற்றிய மண்டலச் செயற்குழு தனது கூட்டமொன்றை 1968 பிப்ரவரித் திங்களில் சென்னையில் நடத்தியது.

1968 மார்ச் 19]

(iv) தொழிலாளர் நலக் குழு.—இந்திய அரசின் முன்னாள் தொழிலாளர் துறை துணை அமைச்சர் திரு R. K. மாளவியா அவர்களின் தலைமையில் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட தொழிலாளர் நலக் குழு தொழிலதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் மற்றுமுள்ள ஏனையவர்களிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் வாய்மொழிச் சான்றுரைகளைப் பதிவு செய்வதற்காக 1967, நவம்பர் திங்களில் தமிழகத்திற்கு வந்தது.

(v) திரைப்படத் தொழில் குறித்த முக்கூட்டுத் துணைக்குழு.—திரைப்படத் தொழிலில் உள்ள தொழிலாளர்களுடைய பணிகள் குறித்தும் பணி நிலைமைகள் குறித்தும் ஆராய்வதற்காக இந்திய அரசினால் அமைக்கப்பட்ட முக்கூட்டுத் துணைக் குழுவும் ஆய்வுரை ஆண்டில் தமிழகத்திற்கு வந்தது.

VI. எடைகள் அளவைகள்.

முன்பு எடை அளவைத் துறையினால் மெட்ரிக் எடை-அளவைகள் முறை செயல்படுத்தப்பட்டு வந்தது. இப் பணி, 1967-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ம் தேதி முதல் தொழிலாளர் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இம் மாநிலத்தில் தொழில்நுட்ப வகையைச் சேராத தொழிலாளர் சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு வகித்த தொழிலாளர் துறையின் அதிகாரிகளே ஆய்வுரை ஆண்டில் தமிழக 1958-ம் ஆண்டு எடை அளவைச் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகளையும் செயல்படுத்தினர். ஆய்வாளர் அலுவலகத்தின் பணியாளர்த் தொகுதி மாநில எடை அளவுக் கட்டுப்பாட்டு அதிகாரியுடன், 140 தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்களையும் 18 துணை ஆய்வாளர்களையும், 10 ஆய்வாளர்களையும் கொண்டிருந்தது. தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள், உற்பத்தியாளர்களும் வணிகர்களுக்கும் கொடுக்கின்ற புதிய எடைகளையும் அளவைகளையும் சரிப்பார்த்து முத்திரையிடுவதோடல்லாமல், மாநிலத்தின் எடை அளவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் ஏற்பளிக்கப்பட்ட மண்டலத் திட்டத்திற்கிணங்க, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை (தொழிற்சாலைகளில் உள்ள பழைய எடை அளவைகள் நீங்கலாக) உற்பத்தியாளர்களாலும் வணிகர்களாலும் கொடுக்கப்படுகின்ற பழைய எடைகளையும் அளவைகளையும் மறுமுறை சரிபார்க்கும் பணியைக் கூடச் செய்து வர வேண்டியிருந்தது. தொழிற்சாலைகள், தொட்டி லாரிகள் பெட்ரோல் பம்புகள் ஆகியவற்றின் எடைகளும் அளவைகளும் எடைமேடைகளும் 12 மாதங்களுக்கு ஒரு முறை முத்திரையிட வேண்டியனவாகும்.

மெட்ரிக் எடை அளவை முறையை மாநிலம் முழுவதற்கும் மற்றும் பல்வேறு வாணிகங்களுக்கும் தொழில்களுக்கும் விரிவுபடுத்தியதையொட்டி பழைய தமிழக 1958-ம் ஆண்டு எடை அளவைச் (செயல்படுத்துதல்) விதிகளைத் திருத்த வேண்டிய அவசியம் நேரிட்டது. திருத்தம் செய்யப்பட்ட விதிகள் 1967, மார்ச் திங்களில் பிறப்பிக்கப்பட்டு (இவை 1–5–1967 தேதிய தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டது. 1–5–1967 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. எடைகளையும் அளவைகளையும் சரி பார்த்து முத்திரையிடுவதற்காக குறிப்பிடப்பட்டுள்ள முத்திரைக் கட்டணங்களும் தமிழக எடை அளவைச் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படத்தக்க உரிமக் கட்டணங்களும் ஆந்திரப் பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்களில் நடப்பிலுள்ள கட்டணங்களுக்கு ஒப்பாக இருக்கச் செய்யும் பொருட்டு அவற்றை மாற்றியமைத்தமை இவ் விதிகளில் உள்ள குறிப்பிடத்தக்க முக்கியக் கூறுகளில் ஒன்றாகும். ஆய்வாளர்கள் எளிதாகச் சரி பார்க்க வசதியளிக்கும் பொருட்டு சில இனங்களைச் சேர்ந்த எடைகள் அளவைகளுக்கும் எடைக் கருவிகள் அளவைக் கருவிகளுக்கும் இந்தியத் தர நிலை நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்ட குறிப்பீடுகளும் இந்த விதிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

[1968 மார்ச் 19

உரிமங்கள்.—1967-ம் ஆண்டின்போது, எடை அளவைச் சட்டத்தின் கீழ், 126 உற்பத்தியாளர்களுக்கும், 64ர் வணிகர்களுக்கும், 220 எடைகள் அளவைகள் பழுது பார்ப்போருக்கும் எடை அளவுக் கட்டுப்பாடு அதிகாரியால் உரிமங்கள் வழங்கப்பட்டன. இதில், புதிய உரிமங்கள், பழைய உரிமங்களைப் புதுப்பித்தல், ஆகிய இரு வகையும் அடங்கும். இதற்கு நிகரான முந்திய இரண்டு ஆண்டுகளில் இருந்த புள்ளி விவரம் வருமாறு:

	1965.	1966.
உற்பத்தியாளர்கள்	98	116
வணிகர்கள்	537	640
பழுது பார்ப்போர்	141	203

வரவுகள்.—எடை அளவைத் துறை 4-1-1967-ல் தொழிலாளர் துறையுடன் சேர்க்கப்பட்ட பின்னர் முதல் மூன்று திங்களின்போது, தமிழக 1958-ம் ஆண்டு எடை அளவைச் (செயல்படுத்துதல்) சட்டத்தின்கீழ் முத்திரைக் கட்டணங்கள், உரிமக் கட்டணங்கள், ஆகிய வகையில் 3,01,682·80 ரூபாய் வசூலாகியது. நடப்பு நிதியாண்டின் ஒன்பது திங்கள்களில் முத்திரைக் கட்டணங்கள் வகையிலும் உரிமக் கட்டணங்கள் வகையிலும் 11,83,029 ரூபாய் வசூலாகியுள்ளது. முந்திய 2 ஆண்டுகளின் போது எடை அளவைத் துறைக்குக் கிடைத்த வரவு விவரம் கீழே கொடுக்கபடுகின்றது:—

	1965-66.	1966-67.
	ரூ.	ரூ.
சரிபார்த்தல் முத்திரைக் கட்டணங்களும் உரிமக் கட்டணங்களும்.	10,98,097·41	9,67,047·20

1967-ல் இந்தூரில் நடைபெற்ற அனைத்திந்திய எடை அளவைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவைப் பின்பற்றி தமிழக எடை அளவைச் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் செலுத்தப் படத் தக்க முத்திரைக் கட்டண வீதங்கள் ஒரே சீராக இருக்க வேண்டும் என்பதற்காக 1-1-1968-ம் நாள் முதல் இந்த வீதங்கள் மாற்றியமைக்கப் பட்டன.

பணியின் முன்னேற்றம்.—இம் மாநிலம் முழுவதிலும் 1-12-1966-ம் நாளிலிருந்து மெட்ரிக் முறை எடைகளையும் அளவைகளையும் மட்டுமே பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்படுத்தப்பட்டது. மற்ற எடைகளையும் அளவைகளையும் பயன்படுத்துவது சட்டத்திற்குப் புறம்பானது என்னும் காரணத்தினால் வணிகர்கள் பொதுவாகவே, இந்தப் புதிய முறையைப் பயன் படுத்தத் தொடங்கியுள்ளனர். பொதுமக்களும் இப் புதிய முறையான எடைகளையும் அளவைகளையும் பயன்படுத்தும் பழக்கத்திற்கு வந்துள்ளனர். உணவு தானியங்கள், பருப்புகள், கடலைகள், சிறு தானியங்கள் ஆகியவை சென்னை மாநகரிலும் உப்பையும், உணவு எண்ணெய்களையும் இம் மாநிலம் முழுவதிலும் எடையிட்டு நிறுத்து விற்பனை செய்யும் முறை இவ்வாண்டின் போதும் தொடர்ந்து வழக்கில் இருந்தது. சில்லறை விற்பனையில் உணவு எண்ணெய்களை நிறுத்து விற்பனை செய்வதில் சில வணிகர்களுக்கு நேரிட்ட இடர்ப்பாடுகளை அரசாங்கம் கருத்தில் கொண்டு, அதற்கேற்ப முந்திய ஆணையை மாற்றி, ஒரு நேரத்தில், ஒரு கிலோவுக்கு மேற்பட்டு விற்பனை செய்யும் உணவு எண்ணெய்களைப் பொறுத்தவரை மட்டும் எடை மூலம் நிறுத்து விற்பனை செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. உணவு தானியங்கள் முதலியவற்றை எடை மூலம் நிறுத்து விற்பனை செய்யும் ஏற்பாட்டை இம் மாநிலத்தின் மற்றப் பகுதிகளுக்கும் விரிவு படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. அரசினால் அமைக்கப்பட்ட மாநில மெட்ரிக் எடை அளவை முறை விளம்பர ஆலோசனைக் குழு 1967, நவம்பரில் கூடி, உணவு தானியங்கள் முதலியவற்றை நிறுத்து விற்பனை செய்வதற்கு இப்போது சென்னை மாநகரில் செயலில் உள்ள முறையை இம் மாநிலத்தில் உள்ள நகராட்சிகள் அனைத்திற்கும் விரிவு படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

1968 மார்ச் 19]

இதுவரை மெட்ரிக் முறையை எவ்வளவிலும் பயன்படுத்தத் தொடங்காமல் உள்ள நிலப்பரப்பு அளவைகள், வெட்டு மரங்கள் வாணிகம், பருவநிலை அளவுகள் போன்ற புதிய துறைகளில் இந்த முறையைப் பயன்படுத்த ஏற்பாடு செய்து இதனைப் பெரு வழக்கில் கொண்டுவருவதற்காகவும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலப் பரப்பை அளவெடுப்பதில் மெட்ரிக் யூனிட்டுகளைக் கட்டாயமாகப் பயன்படுத்தும் முறை 1-10-1965-ம் நாள் முதல் செயலில் வந்தது. நிலப் பரப்புகளை அளவெடுப்பதில் மெட்ரிக் யூனிட்டுகளைப் பயன்படுத்துமாறு பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை சர்வேத் துறை ஆகியவற்றுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. இந்த வகையில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து 1967 நவம்பரில் உதகமண்டலத்தில் ஆய்வு செய்யப்பட்டது மறு சர்வே செய்கின்றபோது நிலப்பரப்பை அளவிடுவதில் இதனை மேற்கொள்வதை விரைவு படுத்த வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இம் மாநிலத்தில் நிலங்களை சர்வே செய்வதில் மெட்ரிக் யூனிட்டுகளைப் பயன்படுத்துவதற்கு வசதியாக இருக்கும் வகையில் சர்வே நிலவரி ஏற்பாட்டின் பொருட்டு நிலப்பரப்புகளுக்கான அளவை மாற்று அட்டவணைகள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன.

வெட்டு மரங்கள் வாணிகத்தில் மெட்ரிக் யூனிட்டுகளைப் பயன்படுத்தும் முறை 1—4—1965 முதல் கட்டாயமாகச் செயலுக்கு வந்தது. இருந்த போதிலும், இதுவரை குறிப்பிடத்தக்க அளவிற்கு எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதற்காக இம் மாநிலத்தின், அரசாங்கத் துறைகள், அனைத்தினுடைய ஒத்துழைப்பும், பொறியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக்கலைஞர்கள் ஆகியோருடைய ஒத்துழைப்பும், கட்டளைகள் மூலமாகவும் கூட்டங்கள் மூலமாகவும் பெறப்பட்டது. வெட்டு மரங்களின் அளவுகள் சம்பந்தமான அளவு மாற்றுகை அட்டவணைகள் இல்லாமை, வெட்டு மர அளவுகளின் பருமன்களைக் கணக்கிடுவதற்கான அட்டவணைகள் இல்லாமை போன்ற சில இடர்ப்பாடுகள் மர வாணிகர்களுக்கு நேரிட்டதால் முதல் தடவையாக அவர்களுக்கு 1—4—1967 வரை இதுகுறித்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மரங்களின் வெட்டு அளவுகளுக்கான மாற்றுகை அட்டவணைகளையும் வெட்டு மர அளவுப் பருமன்களைக் கணக்கிடுவதற்கான அட்டவணைகளையும் இந்தியத் தரநிலை நிறுவனம் இப்போது தயாரித்து முடித்து வெளியிட்டுள்ளது. இதனால், அகற்றுவதற்கு இயலாமல் இருந்த இடர்ப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளன. மைசூர், கேரளம், மகாராஷ்டிரம், ஆகிய மற்ற மாநிலங்களிலிருந்து மரங்களை அனுப்புவோர் அவர்களுடைய பட்டியல்களில் பழைய யூனிட்டுகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்ற காரணத்தால் மெட்ரிக் முறைக்கு மாற்ற இயலாமல் உள்ளது என்று வணிகர்கள் மறுபடியும் குறை தெரிவித்தனர். இது குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. மரங்களைப் பயன்படுத்துகின்ற அதிகாரிகள் உற்பத்தி செய்கின்ற அதிகாரிகள் அனைவரும் மெட்ரிக் யூனிட்டுகளில் சீரமைத்த வெட்டு மர அளவுகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய அரசு அவர்களுக்குக் கட்டளை பிறப்பித்தது. மரங்களுக்காக மர வணிகர்களிடம் கொடுக்கின்ற தேவை கோரிக்கைகளை மெட்ரிக் அளவுகளில் மட்டுமே கொடுக்குமாறு இம் மாநிலத்தின் அரசாங்கத் துறைகள் அனைத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மர வாணிகத்தில் மெட்ரிக் முறையை மேற்கொள்வது இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்பு பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவ வெப்ப மானிகளில் மெட்ரிக் யூனிட்டுகளை கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டுமென்கிற ஏற்பாடு 1—12—1967 முதல் செயலுக்கு வந்தது. சென்டி கிரேடிலிருந்து ஃபாரன்ஹீட்டுக்கு மாற்றுவதற்கான அட்டவணை அடங்கிய துண்டு வெளியீடுகள் எல்லா மருத்துவ நிலையங்களுக்கும் மருத்துவப் பணி இயக்குநருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் உள்ள மருத்துவ மனைகள் மருந்தகங்கள் ஆகிய அனைத்திலும் இந்த மாற்றத்தைச் செயல்படுத்துமாறு பொதுச் சுகாதாரத் துறை இயக்குநரும் மருத்துவக் கல்வி இயக்குநரும் வேண்டிக் கொள்ளப்பட்டனர்.

[1968 மார்ச் 19

வாடகைக் கார் மீட்டர்கள் உட்பட எடை அளவைக் கருவிகளைச் சோதிப்பதில் எடை அளவைத் துறைப்பிரிவின் ஐந்து அதிகாரிகள் புது டெல்லியில் உள்ள தேசிய பௌதீக ஆய்வுக்கூடத்திலும் பம்பாயிலுள்ள இந்திய அரசின் அக்கசாலையிலும் (Mint) இவ் வாண்டின்போது சிறப்புப் பயிற்சி பெற்றனர்.

வாடகைக் கார் மீட்டர்கள், நீர் மீட்டர்கள், சாராய அளவைகள் ஆகிய வற்றைச் சரி பார்க்கும் பணி இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இப் பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இரயில்வே துறையிலும் அஞ்சல் தந்தித் துறையிலும் பயன் படுத்தப்படுகின்ற எடைகளையும் அளவைகளையும் சரிபார்ப்பது குறித்து இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடைபெறுகின்றது; இந்தப் பணியையும் விரைவில் மேற்கொள்ளக்கூடும்.

இரட்டை அளவுமுறை.—தோல்கள், உரிவைகள், தேயிலை முதலிய சில வாணிகங்களில் அயல் நாடுகளுக்கு "பவுண்டு" யூனிட்டுகளில் மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது. பவுண்டு முறையில் நிறுப்பதற்கு வசதி யளிப்பதற்காக மெட்ரிக் யூனிட்டுகளிலும் "பிரிட்டிஷ் யூனிட்டுகளிலும்" குறிகள் உள்ள எடை இயந்திரங்களைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட் டுள்ளது. இத்தகைய அனுமதி, உண்மையான ஏற்றுமதியாளர்களுக்கு மட்டுமே மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றது. 1967-ம் ஆண்டின் போது 38 பேர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது; முந்திய ஆண்டில் 42 பேர்களுக்கு இத்தகைய அனுமதி வழங்கப்பட்டது.

செயல்படுத்துதல்.—வணிக நிறுவனங்கள் அனைத்தும் சரியான எடைகளை யும் அளவைகளையும் பயன்படுத்துகின்றனவா என்று சரிபார்ப்பதற்காக மட்டுமல்லாமல் "அளவு குறைத்து" விற்பனை செய்தல் முதலியவை போன்ற ஊழல்களைத் தடுப்பதற்காகவும் ஆய்வாளர் அலுவலகத்தினால் அவை அனைத் தும் ஆய்வு செய்யப்பட்டு வந்தன. ஆய்வாளர்களுடைய பணியும் தொழி லாளர் துறைத் துணை ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் போன்ற மேலதி காரிகளால் சோதித்துப் பார்க்கப்பட்டது.

இவ் வாண்டின்போது தமிழக 1958-ம் ஆண்டு எடை அளவைச் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகளை மீறியதற்காக 89 வழக்கு கள் தொடரப்பட்டன. அவற்றில் 60 வழக்குகளில் தண்டனை கொடுக்கப் பட்டது. எஞ்சிய வழக்குகள் நீதி மன்றங்களில் விசாரணையில் உள்ளன.

விளம்பரம்.—மெட்ரிக் முறையை விளம்பரப்படுத்துவது குறித்து அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக எட்டு உறுப்பினர்களைக் கொண்ட மாநில எடை அளவை முறை விளம்பர ஆலோசனைக் குழு ஒன்றையும் அரசாங்கம் அமைத்துள்ளது. இந்தப் புதிய அளவைகளைப் பரப்புவதற்காக விளம்பரம் செய்வது குறித்து மேற்கொள்ளப்படும் எந்த முடிவும் பொதுவாக இக்குழு செய்கின்ற பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1962-63 முதல் 1966-67 வரை, 1967 டிசம்பர் முடியவுள்ள நிதியாண்டுகளுக்கான வரவுகள், கட்டணங்கள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

ஆண்டு.	வரவுகள்.	கட்டணங்கள்.	பற்றுக்குறைகள் அல்லது உபரிகள்.
(1)	(2)	(3)	(4)
	ரூ.	ரூ.	ரூ.
1962-63	7,77,967·68	8,96,594·77	(—) 1,18,627·09
1963-64	8,81,048·28	7,07,276·74	(+) 1,23,771·54
1964-65	9,04,868·44	6,73,771·32	(+) 2,31,097·22
1965-66	10,98,097·41	8,02,175·30	(+) 2,85,922·11
1966-67—			
1—4—1966 முதல் 3—1—1967 வரை	6,65,364·40	6,30,732·00	(+) 34,632·40
4—1—1967 முதல் 31—3—1967 வரை	2,06,517·00	4,25,170·00	(—) 2,18,653·00
1967-68—			
1—4—1967 முதல் 31—12—1967 வரை	12,78,194·00	15,51,353·00	(—) 2,73,159·00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எடை அளவைத் துறையை தொழிலாளர் துறையுடன் சேர்த்துவிட்டதன் காரணமாத் தொழிலாளர்துறை உதவி ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியவர்களுக்குரிய சம்பளம், படிகள் ஆகிய அனைத்தும் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம தேதி முதல் இந்தக் கணக்குத் துணைத் தலைப்பிற்கே பற்று எழுதப்படுகினறன.

வரவுகளுக்கு மேலாகச் செலவு யாதேனும் கூடுதலாக ஏற்படுமானல் அதில் பாதியை மானியமாகவும் பாதியைக் கடனாகவும் இந்திய அரசு வழங்கும்.

VII. தேசிய வேலைவாய்ப்புப் பணி

I. வேலை வாய்ப்புகள்.—தேசிய வேலை வாய்ப்புப் பணியின் கீழ் தமிழகத்தில், 15 வேலை வாய்ப்பு அலுவலகங்களும் தொழில்—நிர்வாகப் பணி அலுவலகம் ஒன்றும், ஊனமுடையோர்க்காக சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒன்றும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒன்றுமாகப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகங்கள் இரண்டும் செயலாற்றி வருகின்றன. சேலம், இராமநாதபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டு இயங்கும் பதிவுப் பிரிவுகள் கோடிப் பகுதிகளில் உள்ள விண்ணப்பதாரர்களுக்குத் தொடர்ந்து பணியாற்றி வந்தன.

இந்தக் கால அளவின்போது பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் வேலையில் அமர்த்தப்பட்டவர்கள், அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்பு ஏற்பாட்டு அலுவலகத்தின் பணியைப் பயன் படுத்திக் கொண்ட வேலையளிப்போர் ஆகியவர்களின எண்ணிக்கையும் இவ் வகையில் 1966–67-ம் ஆண்டிற்கான எண்ணிக்கையும் கீழே கொடுக்கப் படுகின்றன :—

	ஆய்வுக் காலத்தின்போது (1967 ஏப்ரல் முதல் 1967 நவம்பர் வரை). (1)	1966–67 வரவு-செலவுத் திட்ட ஆண்டின்போது (1966 ஏப்ரல் முதல் 1966 நவம்பர் வரையுள்ள கால அளவிற்கு). (2)
1 பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதார் கள்.	2,38,738	2,31,345
2 வேலையில் அமர்த்தப்பட்டவர்கள்.	31,149	38,548
3 வேலை வாய்ப்பு ஏற்பாட்டு அலுவல கங்களைப் பயன்படுத்திக் கொண்ட வேலை வாய்ப்பளிப்போர்களின் சராசரி எண்ணிக்கை—		
(அ) அரசாங்கம் (பொதுத் துறை)	1,028	1,204
(ஆ) ஏனையோர் (தனியார்த் துறை).	233	296
4 இந்தக் கால அளவின் முடிவில் இருந்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை.	2,31,804	2,14,378

(30—11—1967-ல் கண்ட நிலவரப்

1968 மார்ச் 19].

II. ஊனமுடையோர்க்கான வேலை வாய்ப்பு ஏற்பாட்டு அலுவலகம்.—இந்த அலுவலகம் ஊனமுடைய விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து கொண்டு தகுந்த வேலை வாய்ப்பு உதவியை அளிக்கின்றது. இந்த உதவி இம் மாநிலம் முழுவதற்கும் பயன்படும் வகையில் இந்த அலுவலகத்தின் பணி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உடல் ஊனமுள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலைகளில் அமர்த்தும் பொருட்டு தனியார்த் துறையில் வேலையளிப்போரிடமும், அரசாங்கத்தில் வேலையளிப்போரிடமும் இந்த அலுவலகம் நெருங்கிய முறையில் தொடர்பு கொண்டு பணியாற்றி வருகின்றது.

1967–68-ம் ஆண்டின்போது (1967 ஏப்ரல் முதல் 1967 நவம்பர் வரை) இந்த அலுவலகம் 241 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து கொண்டு அவர்களில் 74 பேர்களை வேலையில் அமர்த்தியது.

III. தொழில் நிர்வாகப் பணி வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை-6.—இம்மாநிலத்தில் தொழில், அறிவியல், பொறியியல், நிர்வாகம், மேற்பார்வை வகையில் உயர்தகுதி பெற்றுள்ளவர்களின் தேவையை இந்த அலுவலகம் நிறைவேற்றி வருகிறது. இதற்காக இந்த அலுவலகம் அரசுத் துறையிலும் தனியார்த் துறையிலும் வேலையளிப்போரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டு செயலாற்றி வருகிறது. 1967–68-ம் ஆண்டின் போது (1967 ஏப்ரல் முதல் 1967 நவம்பர் வரை) இந்த அலுவலகம் உயர் தகுதி பெற்ற 2,682 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து அவர்களில் 273 பேர்களுக்கு வேலை பெற்றுக் கொடுத்தது.

IV. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் உள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் ஆலோசனைக் கழகங்கள்.—இந்தக் கழகங்களின் பணிகள் வருமாறு :—

(அ) அந்தப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் தகவல் அளித்து ஆலோசனை கூறுதல்.

(ஆ) குறிப்பிடப்பட்டுள்ள வகையின் கீழ் வருகிற தன்னுடைய பட்டதாரிகளையும் மற்ற பல்கலைக் கழகங்களினுடைய பட்டதாரிகளையும் பதிவு செய்து கொள்ளுதல்.

(இ) வேலையளிப்போருக்கு வேண்டியுள்ள தகுதி படைத்த விண்ணப்பதாரர்கள் குறித்துக் கேட்கப்படும் வினாக்களுக்குப் பதிலளித்து கேட்கப்படும் விவரங்களைக் கொடுத்தல்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் அறிவிப்பு உதவிக் கழகம் 154 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து 1967–68 ல் (1967 ஏப்ரல் முதல் 1967 நவம்பர் வரை) 17 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு உதவிக் கழகம் 401 விண்ணப்பதாரர்களைப் பதிவு செய்து 1967–68 ல் (1967 ஏப்ரல் முதல் நவம்பர் வரை) 51 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

V. தொழில்முறை வழிகாட்டுதல்–வேலை வாய்ப்பு ஆலோசனை கூறல்.—நீலகிரி மாவட்டம் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் தொழில் முறை வழிகாட்டுதல்–வேலை வாய்ப்பு ஆலோசனை கூறும் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இந்தத் தொழில்முறை வழிகாட்டுதல்–வேலை வாய்ப்பு ஆலோசனை கூறும் பிரிவுகள் பிழைப்பிற்குரிய வழியறிவிக்கும் நிலையங்களாகச் செயல்படுகின்றன. பிழைப்பிற்குரிய தொழில் பற்றிய பயனுள்ள தகவல் சேகரித்தும் பயிற்சி வகுப்புகளுக்கு வசதியேற்படுத்தியும் விண்ணப்பதாரர்களின் நலனுக்காக ஏற்றவகையிலுள்ள தொழில் பழகும் பயிற்சியளிக்க வசதி செய்தும் மேற்சொன்ன பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. தொழில்முறை வழிகாட்டும்–அதிகாரிகள் கல்வி நிலையங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தொழில் மேற்கொள்ளுவது குறித்த சொற்பொழிவுகள் ஆற்றுகிறார்கள்.

[1968 மார்ச் 19

சென்னை 14-ல் உள்ள தொழில்முறை வழி காட்டும் பிரிவு மாவட்ட வேலை வாய்ப்பு அளிக்கும் அலுவலகத்திலிருந்து "வேலை வாய்ப்பு, பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள்" என்னும் மாதாந்தர இதழ் ஒன்றை வெளியிட்டு வருகிறது. அந்தந்தப் பகுதியிலுள்ள விண்ணப்பதாரர்களின் நலனுக்காக தொழில், பயிற்சி வாய்ப்புகள் சம்பந்தப்பட்ட காலாண்டு இதழ் ஒன்றை மாவட்டங்களில் தொழில்முறை வழிகாட்டும் பிரிவுகள் வெளியிட்டு வருகின்றன.

இக் கால அளவில் இத் திட்டத்தினால் பலனடைந்தவர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறாகும் :—

அலுவலகங்களின் பெயர்கள்.		கூட்டாகப் பலருக்கு வழி காட்டுதல்.	தனிப்பட்டவர்களுக்கு வழி காட்டும் தகவல் அறிவித்தல்.	தனிப்பட்டவர்களுக்கு வழி காட்டுதல்.
(1)		(2)	(3)	(4)
1	சென்னை	18,937	6,580	..
2	மதுரை	4,506	5,325	..
3	கோயம்புத்தூர்	4,328	1,110	..
4	திருநெல்வேலி	2,541	1,265	1
5	கடலூர் (தற்போது நெய்வேலி)	5,150	3,309	1
6	வேலூர்	4,416	4,519	121
7	இராமநாதபுரம்	3,602	3,402	54
8	செங்கற்பட்டு (கிண்டியிலுள்ளது).	13,063	894	1
9	சேலம்	4,191	1,783	..
10	தஞ்சாவூர்	3,814	3,450	75
11	திருச்சிராப்பள்ளி	6,290	2,785	30
12	கன்னியாகுமரி	4,350	2,336	10

1966-ம் ஆண்டு டிசம்பரில் இயக்குநர் அலுவலகத்தில் செயல்படத் தொடங்கிய மாநிலத் தொழில்முறை வழிகாட்டும் பிரிவு, இம் மாநிலத்தில் செயல்படும் பன்னிரண்டு தொழில்முறை வழிகாட்டும் பிரிவுகளின் அலுவல்களை ஒருங்கிணைத்துக் கண்காணிக்கிறது. இந்த ஆண்டில் பல மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் (தொழில்முறை வழிகாட்டும்) உதவி இயக்குநர் பணியாளர் பயிற்சி வகுப்புகளை நடத்தினர். கிண்டியிலுள்ள செங்கற்பட்டு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், சென்னை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஆகியவற்றிலுள்ள தொழில்முறை வழிகாட்டும் பிரிவுகள் ஆற்றியுள்ள பணியை அவர் மதிப்பீடு செய்தார்.

மாதிரிப் பயிற்சி நிலையத்திலும் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தொழில்முறை வழிகாட்டும் அதிகாரிகள் மாணவர்களின் விருப்பச் சோதனைகள் நடத்தினர். இச் சோதனைகளை நடத்த மற்ற மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிகளும் அழைக்கப்பட்டனர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1968 மார்ச் 19]

VI. வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் அறியும் பிரிவு — ஆய்விலுள்ள காலப் பகுதியில் வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் சேகரிப் பிறகாக மூன்று காலாண்டுகளில் (அதாவது, 1967 மார்ச், ஜூன், செப்டம்பரில் முடிவடையும் காலப் பகுதியில்) தகவல் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டன. கிடைத்த விவரம் வருமாறு:—

காலாண்டு முடிவடைதல்.	கேட்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை.	பதில் அறிவித்தவைகளின் எண்ணிக்கை.	பதில் கிடைத்த சத வீதம்.
(1)	(2)	(3)	(4)
1967—			
மார்ச்	16,427	15,846	96·5
ஜூன்	16,219	15,502	95·4
செப்டம்பர்	16,083	15,519	96·5

இந்த ஆண்டில் கீழ்க்கண்ட அறிக்கைகள் வெளியிடப்பட்டன :—

(1) 1966-ஆம் ஆண்டு செப்டம்பர், டிசம்பர் ஆகிய திங்களில் முடிவடையும் காலாண்டு பகுதிக்கான மாநில வேலை வாய்ப்பு ஆய்வு அறிக்கைகள்.

(2) 1966-ம் ஆண்டு டிசம்பர், மார்ச் திங்களில் முடிவடையும் காலாண்டுப் பகுதிக்காக பற்றுக்குறைத் தொழில்கள் குறித்த அறிக்கைகள்.

(3) 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் உள்ள நிலவரப்படி வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் வேலை வாய்ப்பு அளிக்கப்படவிருக்கும் பொறியியல் பட்டம் பெற்ற விண்ணப்ப தாரர்கள் குறித்த சிறப்பு ஆய்வின் மீது கண்ட அறிக்கை 1967-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் வெளியிடப்பட்டது.

(வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் அறிவிப்பு) உதவி இயக்குநர், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களிலுள்ள வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் அறிவிப்பு களப் பிரிவுகளின் பணியைப் பார்வையிட்டார்.

VII. மாநிலத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு, சென்னை-6.— இந்த இயக்குநர் அலுவலகத்தின் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு அதன் வழக்கமான தொழில் ஆய்வு. பகுப்பாய்வுப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது. கீழ்க்கண்ட வகைப் பணிகள் முடிவுற்றன. பல தொழில்கள் சம்பந்தமான பல விரிவான வரைவு விளக்கங்களும் அறிக்கைகள் முதலியவையும் புதுடில்லி, வேலை வாய்ப்பு, பயிற்சியளிப்பு தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டன.

(I) மூலப்பணி—3 தொழில்கள்.

(II) சரிபார்க்கும் பணி—74 தொழில்கள்.

இந்த ஆண்டுகளில் இம் மாநிலத்தில் சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் உள்ள 72 நிறுவனங்களை/நிலையங்களை தொழில் தகவல் அறிவிப்பு அதிகாரி தொடர்பு கொண்டார்; தொழில்கள் பற்றிச் சரி பார்த்தறிய/ஆராய வல்லுநர்களுடனும் இவர் கலந்தாலோசித்தார்.

புதுடில்லியில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு மே மாதம் 11-ம் தேதி வரையில் வேலை வாய்ப்புப் பணியில் ஆராய்வதற்கும் பயிற்சியளிப்பதற்கும் ஆன மத்திய நிலையத்தில்

[1968 மார்ச 19

நடைபெற்ற வேலை வாய்ப்பு அதிகாரிகளுக்கான ஒருங்கிணைப்புப் பயிற்சிப் படிப்பிலும் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி வரையில வேலை வாய்ப்புப் பணியில் ஆராய்வதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் ஆன மத்திய நிலையத்தில் நடைபெற்ற தொழில் தகவல் அறிவிப்புப் பயிற்சிப் படிப்பிலும் தொழில் தகவல் அறிவிப்பு அதிகாரி கலந்து கொண்டார். 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்களில்—தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளத் தேர்ந்தெடுப்பதற்கு இம் மாநிலத்தில் நடைபெற்ற விருப்பச் சோதனை நிகழ்ச்சியிலும் மாநிலத் தொழில் தகவல் அறிவிப்பு அதிகாரி கலந்து கொண்டார்.

மாநிலத் தகவல் அறிவிப்புப் பிரிவு, கொதிகலன் பணியாளர் சம்பந்த மான சிறுநூல் ஒன்றை வெளியிட்டது.

"செவிலியர்" குறித்த மற்றொரு சிறு நூல் முடிவு பெற்றுள்ளது. புதுடில்லி, வேலை வாய்ப்புப் பணியில் ஆராய்ச்சி செய்வதற்கும் பயிற்சி யளிப்பதற்குமான மத்திய நிலையத்தில் பயிற்சி பெற்று வந்த மலேசிய அதிகாரிகள் இந்த இயக்குநர் அலுவலகத்தைப் பார்வையிட்டனர். தொழில் முறைத் தகவல் அறிவிப்புப் பிரிவு செயல்படும் முறை குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. உள்ளூர்ப் பள்ளி ஒன்றின் வாழ்க்கை வழிகாட்டும் ஆசிரியர் ஒருவரும், லயோலா கல்லூரியில் சமூகப் பணியில் எம். ஏ. படிக்கும் மாணவர் ஒருவரும் இந்தத் தொழில் முறைத் தகவல் அறிவிப்புப் பிரிவின் செயல்முறை பற்றி அறிந்துகொண்டு பயிற்சி பெற்றவர்களாவர்.

இருபது வாழ்க்கை வழி காட்டும் சிறு நூல்கள் தமிழில் அச்சிடப்பட் விற்பனைக்காக வேலை வாய்ப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

VIII. சென்னையில் உள்ள வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரியின் செயல்கள்—பதிவு செய்தல்.—ஆய்விலுள்ள காலப் பகுதியில் 1,434 பர்மா அகதிகளும் 149 இலங்கை அகதிகளும் தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலங்களில் வேலை வாய்ப்பு உதவி நாடிப் பதிவு செய்திருந் தனர்.

வேலை வாய்ப்பு.—மொத்தத்தில் 174 பர்மா அகதிகளும் 10 இலங்கை அகதிகளும் ஆய்விலுள்ள காலப் பகுதியில் வேலையில் அமர்த்தப்பட்டுள் ளனர்.

பதிவேடு.—இம் மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் உள்ளவாறு 1,103 பர்மா அகதிகளும் 123 இலங்கை அகதி களும் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

அனுப்பப்பட்ட மனுக்கள்.—அகதிகளிடமிருந்து வந்த 59 விண்ணப்பங் கள் தொழிலதிபர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டன; வந்த 502 மனுக்கள் மீது இந்த அலுவலகம் நடவடிக்கை எடுத்தது.

தொழிலதிபர்கள் தொடர்பு கொள்ளப்பட்டனர்.—ஆய்விலுள்ள காலப் பகுதியில் 127 தொழிலதிபர்களிடம் வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி தொடர்பு கொண்டார், பர்மா, இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு— அளிப்பது சம்பந்தமாகவே அவர் அவ்வாறு தொடர்பு கொண்டார்.

அகதிகளுக்கு வழி காட்டுதல்.—ஆய்விலுள்ள காலப் பகுதியில் இந்த அலுவலகத்திற்கு வந்து பதிவு செய்த சுமார் 500 அகதிகளுக்குத் தனிப் பட்டவகையில் வழி காட்டப்பட்டது அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகை களும் வசதிகளும் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்து தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1968 மார்ச் 19]

IX. உழைப்புச் சக்தியும் வேலை வாய்ப்புத் திட்டங்களும்—எய்திய சாதனை—(1) 1967–68-ல் சிறப்பு வேலை வாய்ப்புத் நிலவரம், தகவல் அறிவிப்புப் பிரிவிற்கான மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(2) 1966–67-ல் தொடங்கப்பட்ட மாநிலத் தொழில்முறை வழிகாட்டும் கழகப் பிரிவு 1967–68-ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுகிறது.

(3) ரூ. 17,100-க்கு வாழ்க்கை வழிகாட்டும் சிறுநூல்கள் அச்சிடப்பட்டுள்ளன.

(4) மதுரையில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு, வழி காட்டும் கழகம் ஒன்று அமைப்பதற்கும் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு, வழிகாட்டும் கழகத்திற்குப் பயிற்சிபெற்ற உதவியாளரை நியமிப்பதற்குமான செயற்குறிப்புகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது; இது குறித்த ஆணைகளை வெளியிட எதிர்பார்க்கிறது.

X. 1968–69-ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.—(1) மதுரையில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் அறிவிப்பு, வழிகாட்டும் கழகம் அமைத்தல்.

(2) பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் அறிவிப்பு, வழிகாட்டும் கழகத்திற்கான பயிற்சிபெற்ற உதவியாளரை நியமித்தல்.

(3) தலைமையிடங்களில் பணியாளர் பயிற்சிப் பிரிவை நிறுவுதல்.

(4) வாழ்க்கை வழிகாட்டும் சிறு நூல்களைத் தமிழில் அச்சிடுதல்.

மேற்படி திட்டங்களுடன் தர்மபுரி மாவட்டத்திற்காக மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றை அமைப்பதும் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்திற்காக வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான அரசாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

VIII. கைப்பணியாளர் பயிற்சித் திட்டம்.

பயிற்சி பெற்ற மனித சக்தி கிடைப்பதைப் பொறுத்துத்தான் இதன் வளர்ச்சி அமைந்துள்ளது. இம் மாநிலத்தின் விரைந்த தொழில் முன்னேற்றத்தின் காரணமாகக் கைப்பணியாளர் பயிற்சியின் முக்கியத்துவமும் அதிகரித்துள்ளது. பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பெருமளவு தேவைப்படுவதைச் சரிக்கட்ட கைப்பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வசதிகளும் பெருமளவு பெருகியுள்ளது. மூன்றாவது திட்டத்தின் இறுதியில், 9,600 பேர் பயிற்சி பெறும் வசதியுடன் 30 தொழிற் பயிற்சி நிலையங்கள் இருந்தன. 1966–67-ல் கூடுதலாக 3,000 பேர் பயிற்சி பெற வசதி செய்யப்பட்டது. மொத்தம் 31 தொழிற் பயிற்சி நிலையங்கள் இருந்தன; மொத்தம் 12,600 பேர் பயிற்சி பெற வசதியேற்படுத்தப்பட்டது. தொழில் பழகும் பயிற்சித் திட்டத்திற்கு ஒப்ப அமைந்திருக்கும் வகையில் இப் படிப்பின் கால அளவும் பாடத் திட்டம் முதலியனவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தொழில் பழகும் பயிற்சித் திட்டத்தின் கீழ் அடிப்படைப் பயிற்சிக் கால அளவிற்கு ஓராண்டுப் படிப்புத் தொடராக ஒத்துவரும் வகையில் தொழிற் பயிற்சி நிலையத்தில் கற்பிக்கப்படும் படிப்புகள் ஓராண்டிற்கும் இரண்டாண்டிற்கும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. நிதி வசதிக் குறைவு காரணமாக இந்திய அரசு, திட்ட ஒதுக்கீட்டைக் குறைத்துள்ளது. தற்போதுள்ள மூன்று தொழிற் பயிற்சி நிலையங்களை விரிவுபடுத்தும் வகையில் 1967 ஆகஸ்டு திங்களில் 504 பேரைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள வசதியேற்படுத்தப்பட்டது. 1968–69-ல் கூடுதலாக 1,008 பேரைச் சேர்த்துக் கொள்ள வசதியேற்படுத்தித் தர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தொழில் பழகும் பயிற்சித் திட்டம்—1961-ம் ஆண்டு தொழில் பழகும் சட்டத்தின் கீழ், தொழில் நிறுவனங்கள் தொழில் பழகும் குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்குப் பயிற்சியளிப்பது கடமையாக்கப்பட்டுள்ளது. 1961-ம் ஆண்டு தொழில் பழகும் சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் தொழில் பழகும் பயிற்சித் திட்டம், இம் மாநிலத்தில் அமைந்த தொழிற் சாலைகளின் ஒத்துழைப்புடன் சீராகச் செயல்பட்டு வருகிறது. மூன்றும் திட்ட இறுதியில் இம் மாநிலத்தில் 2,600 தொழில் பழகுவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

நான்காம் திட்டக் காலத்தில் இத் திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இச் சட்டத்தின் கீழ், இதுவரை 40 தொழில்கள் பயிற்சிக்கு எடுக்கப்பட்டுள்ளன; ரசாயனம், கட்டுமானம், அச்சடித்தல், மின் அணு வியல், பொறியியல் முதலிய பல்வேறு தொழில்களில் மேலும் 40 முதல் 50 வரையுள்ள தொழில்களில் பயிற்சியளிக்கவும் இந்திய அரசு கருதி வருகிறது. இத் திட்டத்தை விரிவாக்கிப் பலவகைகளில் சீராக்கிய பின் நான்காம் திட்டக் காலத்தில் தொழில் பழகுவோருக்கு மேற்கொண்டும் 3,000 வேலைவாய்ப்பு இடங்களைத் தேடித்தரும் இலக்கை அடைவதற்கும் இயலும்.

சிறியதும் பெரியதுமான 350-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், இச் சட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. முழு நேரத்திற்கும் குறுகிய காலத்திற்கும் தொழில் பழகும் சுமார் 3,500 பேர், தற்போது இம் மாநிலத்தில் பயிற்சிபெற்று வருகிறார்கள்.

தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்.—நான்கு இடங்களில் மாலைநேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பணிக்களரியில் தேவைப்படும் கணக்கு வரைவுகளில் தொழிலாளர்களின் படிப்பறிவைப் பெருக்கும் நோக்கத்தில் சென்னையில் இரண்டு நிலையங்களும் கோயம்புத் தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் ஆக நான்கு இடங்களில் இவ் வகுப்புகள் நடந்து வருகின்றன. இந்த வகுப்புகள் வாரத்தில் மூன்று நாட்களுக்கு நடத்தப்படுகின்றன. சுமார் 368 தொழிலாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். நான்காம் திட்டக் காலத்தில் மேற்சொன்ன நான்கு நிலையங்களிலும் 800 பேர் பயிற்சி பெறும் வசதியுடன் இந்த வகுப்புகளை நடத்துவதற்கான வசதிகளைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் சீர் செய்ய கிண்டி, மத்தியப் பயிற்சி நிலையத்தில் இந்திய அரசின் முன்னோடித் திட்டம் ஒன்று இப்போது செயல்படுத்தப்படுகிறது.

பொற்கொல்லர்களுக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் பகுதி நேரத் திட்டம்.—சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, பேட்டை ஆகிய இடங்களி லுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்றும் திட்டக் காலத்தில் இரண்டாண்டுக் கால அளவுள்ள பகுதிநேரப் பயிற்சிப் படிப்பைத் துவக்கு வதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. பொற்கொல்லர் கள், பலவகை வடிவமைப்புகள் தயாரிப்போர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோரின் நலனிற்காக ஆதாயமான தொழில் நடத்தி முன்னேற்றம் பெறுவதற்கு ஏற்ற வகையில் பொறியியல் திறனை வளர்த்துக் கொள்ள விரும்புவோருக்கு மாலை 6 மணியிலிருந்து 9 மணி வரையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த நான்கு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தற்போது 60 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

கிராமப் பயிற்சி நிலையங்கள்.—தற்போதுள்ள திட்டங்களை விரிவுபடுத்து வதுடன் கிராமக் கைவினைஞர்களின் நலனுக்காக இத் திட்டப் பகுதிகளில் கிராமப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு முனைந்து ஆலோசித்து வருகிறது. இத் திட்டம் இறுதி செய்யப்பட் டதும் இத் திட்டக் காலத்தில் சில கிராமப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளது.

1968 மார்ச் 19]

பொது—A. பர்மா, இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான பணிகள்.—மறுவாழ்வு அளிக்கும் பணியாக, தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றில ஒவ்வொரு தொழிலிலும் சேர்த்துக் கொள்ளப்படக்கூடியவர்களின் எண்ணிக்கையில் 5 சதவீதம், பர்மா, இலங்கை அகதிகளுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது. பெற்றோர்களுடன் தங்கியிருந்து பயிற்சிப் படிப்பு பெறுபவர் களுக்கு மாதத்திற்கு ரூ. 25 உதவிப் பணமும் பெற்றோர்களை விட்டு வந்து தனியே பயிற்சி பெறுபவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 55 உதவிப் பணமும் வழங்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களில்/ நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஹரிஜன வகுப்பினர்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் மாதத்திற்கு ரூ. 43 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது.

B. தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும், உண்டுறை இல்லங்களுக்கும், ஆசிரியர் குடியிருப்புகளுக்கும் கட்டிடங்கள் கட்டுதல்.—முப்பது தொழிற் பயிற்சி நிலையங்கள் அவற்றிற்கான சொந்தக் கட்டிடங்களில் அமைந்துள் ளன. இருபத்து மூன்று தொழிற் பயிற்சி நிலையங்களில் உண்டுறை இல்லங்கள் உள்ளன. படிப்படியான திட்டத்தில் நான்காம் திட்டக்காலத் தில் எஞ்சிய தொழிற் பயிற்சி நிலையங்களிலும் உண்டுறை வசதியுடன் கூடிய மாணவர் இல்லங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. இம்மாநிலத் திலுள்ள 22 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ஆசிரியர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மற்ற தொழிற் பயிற்சி நிலையங்களிலும் நான்காம் திட்டக் கால இறுதிக்குள் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது.

அனைத்து இந்தியத் திறமைப் போட்டி.—பெருமளவு விரிவுபடுத்தப்பட்ட போதிலும் பயிற்சித்தரம் குறையவில்லை. பயிற்சியளிப்பதை அவ்வப்போது மதிப்பீடு செய்தல், முன்னேற்றச் சோதனைகள் நடத்துதல், முறையாகக் கற்பித்தல் இவற்றின் மூலம் இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் குறையாவண்ணம் காக்கவும் தரம் உயரவும் வழி செய்யமுடிகிறது. கடந்த இரண்டு அனைத்து இந்தியத் திறமைப் போட்டிகளின் முடிவுகளிலிருந்து தெளிவாக்கப்பட்டவாறு, இம்மாநிலத்தில் பயிற்சி பெறுபவர்களின் திறன் உயர்ந்துகொண்டு வந்துள்ளது. அனைத்து இந்தியத் திறமைப் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து ஒரு தொழிலில் அல்லது பிறவற்றில் ஒவ்வொரு போட்டியிலும் தமிழ்நாடு முதல் பரிசைப் பெற்று வந்துள்ளது.

மொத்தச் செயல்திறனிலும் இந்தியாவில் தமிழ்நாடே சிறந்ததென அறிவிக்கப்பட்ட பெருமையும் தமிழகத்தைச் சாரும், தொடர்ந்து இரண் டாண்டுகளுக்குக் குடியரசுத் தலைவர் சுழற் கேடயம் பெறும் சிறப்பும் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது.

[1968 மார்ச் 19

இணைப்பு

முக்கியப் புள்ளி விவரக் குறிப்புகள்

ஆண்டு.	நிறுவனங்களின் எண்ணிக்கை.	வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை.	வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம்.	
(1)	(2)	(3)	(4)	
			ரூபாய்.	காசு.
(1) தொழிற்சாலைகள் சட்டம்—				
1965	6,834	3,66,279	15,33,233	00
1966	6,994	3,92,765		
1967	7,177	..		
(2) தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டம்—				
ஆண்டுத் தொடக்கத்தில்—				
1966	1,87,770	2,08,162		
1967	1,87,869	2,09,281		
1968	1,88,843	2,09,424		
(3) தமிழ்நாடு பீடித் தொழிற்சாலை வளவுகள் (தொழிலாளர் நிபந்தனைகளை முறைப்படுத்தல்) சட்டம்—				
1965-66	3,074	58,088	74,229	00
1966-67	2,932	46,487	52,679	50
1967-68	2,226	33,190	35,611	00
(4) தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்—				
ஆண்டுத் தொடக்கத்தில்—				
1967	19,986	67,835	1,54,437	50
1968	21,021	63,087	1,28,480	50
(5) மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்—				
ஆண்டுத் தொடக்கத்தில்—				
1966	291	83,636		
1967	301	84,764		

(6) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்—

ஆண்டு.	இச்சட்டம் செயலிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை.	இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை.	வசூலித்த தொகை.	நிர்வாகச் செலவு.	மேற்பார்வைச் செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
			(ரூபாய் இலட்சத்தில்.)		
1965	3,755	4,42,119	677·59	14·99	2·05
1966	4,481	5,01,722	619·95	16·42	2·26
1967	4,979	5,35,790	798·74	18·89	2·48

(7) தொழிலாளர் அரசாங்க ஈட்டுறுதிச் சட்டம்

ஆண்டு.	இச்சட்டம் செயலிலுள்ள இடங்கள்.	சட்டத்தினல் பலனடைந்து வரும் தொழிலாளர்கள்.	பண உதவி நலன் நோய்வாய்ப் படுவதற்கான நலன் நீண்ட காலத்திற்கு நீங்காத பிணிகளுக்கான விரிவு செய்த நலன் உட்பட்டது.	தற்காலிகமாகச் செயல்திறன் அற்றுப்போனதற்கான நலன்.	நிலையாகச் செயல்திறன் அற்றுப்போனதற்கான நலன்.	நம்பிவாழ் பவர்களுக்கான நலன்.	மகப்பேறு நலன்.	மருத்துவ நலன அளிப்பதற்காண செலவு.
			(ரூபாய் இலட்சத்தில்.)					
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1966 ..	36	2·83	82·82	6·14	5·30	0·71	0·62	93·53
1967 ..	39	1·07 (தொழிலாளர்கள்). 2·23 (குடும்பப் பிரிவுகள்).	95·03	7·00	6·31	0·75	5·90	145·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(8) **மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம்—**

ஆண்டு.	நிறுவனங்களின் எண்ணிக்கை.	வேலைக்கமர்த்தப் பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை.	வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம். / வசூலிக்கப்பட்ட புதுப் பிப்பதற்கான கட்டணம்.
(1)	(2)	(3)	(4)
1967-ம் ஆண்டின் இறுதி	73		ரூ. 38,712·25

(9) **சம்பளம் அளித்தல்—**

ஆண்டுகள்.	செயல்படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை. (தொழிற்சாலைகள் உட்பட)	இச் சட்டத்தினால் பலன்பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1965	20,043	587,453
1966	31,108	574,589
1967	35,563	684,683

(10) **குறைந்தளவுக் கூலிச் சட்டம்—**

1965	10,252	157,625
1966	6,709 (தொழிற்சாலைகள் நீங்கலாக.	74,249 (தொழிற்சாலைகள் நீங்கலாக).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(11) தொழிற் சங்கங்கள் சட்டம்—

1966 ஜனவரி 1-ம் தேதியுள்ள நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை.	1967 ஜனவரி 1-ம் தேதிய நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை.	1968 ஜனவரி 1-ம் தேதிய நிலவரப்படி அமைந்த தொழிற் சங்கங்கள்.
(1)	(2)	(3)
1,331	1,336	1,530

(12) வேலை நிறுத்தங்கள்—

ஆண்டுகள்.	நடைபெற்ற வேலை நிறுத்தங்கள்.	இழந்த மனித உழைப்பு நாட்கள்.
(1)	(2)	(3)
1965	135	454,401
1966	176	754,612
1967	305	1,120,517

இணைப்பு IV.

தொழிலாளர் கொள்கைபற்றிய விவர அறிக்கை.

[574-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

[1967-ம் ஆண்டு சூலைத் திங்கள் 11-ம் நாள் பேரவை முன் வைத்த ஆங்கில விவர அறிக்கையின் தமிழாக்கம்.]

தற்காலத்தில் தொழிலாளர்களின் உறவுகள் குறித்து அரசின் கோட்பாடுகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது பெரும்பாலும் தீர்வு செய்யப்பட்ட ஒரு செய்தியாகும். உலகெங்கணும் உள்ள தொழிலாளர் இயக்கம் அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவனத்தின் பல்வேறு கொள்கை மரபுகள், சிக்கலான பல உற்பத்தி முறைகள், அரசியல் நோக்கங்களால் ஏற்பட்டுள்ள அதிகத் தெளிவு ஆகியவையெல்லாம், தற்கால உலகத்தில் தொழிலாளர் கொள்கையை வரையறுப்பதற்குக் காரணமாய் அமைந்துள்ளன. தொழிற் கூடத்தில் தொழில்திபருடன் தொழிலாளர்கள் பொறுப்புமிகுந்த உறவு முறையை மேற்கொள்வதும், தொழிற் கூடத்திற்கு வெளியே தொழிலாளர்கள் மனிதர்களாக வளரவேண்டிய அளவுக்கு வளராமல் தடுக்கிற சமூக நெருக்கத்திற்கு அதிக அளவில் உட்படாமல் அவர்கள் முழு அளவில் வளர வேண்டுமென்பதே இந்த அரசின் தொழிலாளர் கொள்கையாகும். ஓர் அரசின் தொழிலாளர் கொள்கைக்கும், மற்றோர் அரசாங்கத்தின் தொழிலாளர் கொள்கைக்கும் உள்ள வேறுபாடு, தொழிலாளர் கொள்கையை வெளிப்படையாக எடுத்துக்கூறும் அறிக்கையில் அடங்கியிருப்பதில்லை. அரசாங்கத்தின் தொழிலாளர் கொள்கையை அரசாங்கம் எந்த முறையில் ஆர்வத்தோடு நிறைவேற்றுகிறதென்பதைப் பொறுத்தே இந்த வேறுபாடு எழுகிறது. தொழிலாளர் நிலைமையை எந்த அளவு தொழில் நுட்பத் திறமையுடன் அரசாங்கம் நுணுகப் பரிசிலனை செய்கிறது. தொழிலாளர் கொள்கையை எவ்வாறு சரிக்கட்டிக்கொண்டு போகிறது என்பதிலும் வேற்றுமை உண்டு ஆகவே, தொழிலாளர் நலனைக் கட்டிக் காப்பதில் இந்த அரசு கண்ணுங் கருத்துமாய் இருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். எனினும், தொழில் துறை உறவுகள் சமுதாயத்தில் பொதுவாக நிலவும் நிலைமையிலிருந்து வேறுபட்டவையாகக் கருதி அவற்றைமட்டும் தனியே விவாதிக்க முடியாது என்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தொழில்துறை உறவும் அந்த உறவின் தன்மையும் ஏனைய சமூக உறவுகளைச் சார்ந்தேயுள்ளன. அரசு மேற்கொள்ளும் செயல் முறைகளும் தற்போது சமுதாயத்தில் நிலவும் மரபுகளையே எதிரொலிப்பதைப்போல தொழில் துறை உறவு முறைகள் சமூக உறவுகளைச் சார்ந்துள்ளன. எனவே, தொழிலாளர் கொள்கை எதுவும் சமுதாயத்தில் பொருளாதார முறையிலும், பண்பாட்டு முறையிலும் மிகப் பெரும்பாலும் அரசியல் முறையிலும் தொடர்பு படுத்தப்பட்டுப் பார்த்தால்தான், அத்தொழிலாளர் கொள்கை பொருள் பொதிந்ததாக இருக்கும்.

2. உண்மையாகவே பொருள் பொதிந்த தொழிலாளர் கொள்கை ஒன்றை உருவாக்கக் கருதியுள்ள விவரங்களுக்கு வருவோமானால், முதற்கண் சில உண்மைகளை விளக்க வேண்டியுள்ளது. இவ்வுண்மைகள் இம் மாநிலத்தில் இதுகாறும் தொழிலாளர் நிலைமை எவ்வாறிருந்ததென்பதைத் தெளிவுபடுத்தும். இவற்றைத் தொழிலாளர் தகராறுகளைக் குறித்த உண்மைகள் என்றும், தொழிலாளர் நலனைக் குறித்த உண்மைகள் என்றும், பொதுவாக இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

3. 1966-ம் ஆண்டில் தொழிலாளர் தகராறுகளின் எண்ணிக்கை 1,000-க்கு மேல் கூடிவிட்டது. 1965-ம் ஆண்டு இருந்த நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1966-ம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், இவற்றின் காரணமாக இழக்கப்பட்ட மனித

வேலை நாட்களின் (Mandays) எண்ணிக்கை—ஆகிய இவை மிகவும் அதிகரித்துள்ளன. 19 6-ம் ஆண்டில் கதவடைப்புகள் உட்பட 176 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. இவற்றின் காரணமாக 7,54,612 மனித வேலை நாட்கள் இழக்கப்பட்டன. இவ்வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 69,310 ஆக உயர்ந்தது. தொழிலாளர் தகராறுகள் பெருகியுள்ளதற்கும் வேலை நிறுத்தங்களுக்கும் உரிய காரணங்கள அண்மைக் காலம் வரையில் சரிவர ஆய்வு செய்யப்படவில்லை யென்றாலும், தொழிலாளர் துறை அதிகாரிகள் பரிசீலனை செய்த பல வகையான தொழில் தகராறுகளை ஆய்ந்து பார்த்ததில், தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்கியதன் காரணமாகவும், வேலையிலிருந்து தாற்காலிகமாய் நிறுத்திவைத்ததன் காரணமாகவும், 32 சத வீதத் தகராறுகள் ஏற்பட்டன எனத் தெரிகிறது. தொழிலாளர் ஊதியத்தையும் படிகளையும் உயர்த்தவேண்டி 16·5 சத வீதத் தகராறுகள் ஏற்பட்டன. பூரிப்பூதியத் தகராறுகள் 12·5 சத வீதமாகும். அதாவது ஊதிய உயர்வு படிகள், பூரிப்பூதியம்போன்ற நிதி சம்பந்தமான கோரிக்கைகள் குறித்த தகராறுகள, தொழிலாளர் வேலை நீக்கத் தகராறுகளையும் தாற்காலிக வேலை நீக்கத் தகராறுகளையும்விடக் குறைவாகவே இருந்தன. சமரச ஏற்பாடு மூலம் தீர்த்து வைக்கப்பட்ட தகராறுகளில் 35 சத வீதத் தகராறுகள் தொழிலாளர் வேலை நீக்கத்தையும் தாற்காலிக வேலை நீக்கத்தையும் குறித்தவையே என்பதிலிருந்தும் இது உறுதியாகிறது. இவ்வாறே நடுவர் தீர்ப்பு மூலமாகத் தீர்த்துவைக்கப்பட்ட தகராறுகளில் 34 சத வீதத் தகராறுகள் இத்தன்மை வாய்ந்தவையே. 1966-ம் ஆண்டில் ஏற்பட்ட மொத்தத தகராறுகளில் 1 சத வீதத் தகராறுகள் ஆட்குறைப்பைப் பற்றியவையாகும். விடுப்பு வசதிகள், அலுவல் நேரங்கள் பற்றிய தகராறுகள் 2 சத வீதமாகும் 36 சத வீதத் தகராறுகள் இன்ன வகையைச் சேர்ந்தவையென வகைப்படுத்திக் கூறுவதற்கில்லை. இத்தகராறுகளுக்கு அடிப்படையான பெரிய கொள்கை எதுவுமில்லை. அலுவல் நேரத்தில் தொழிலாளர்களுக்கு காப்பி வழங்குதல், அடையாளம் காண்பதற்காக வில்லைகள் வழங்குதல், மேலும் ஒரு ஜோடி காலணிகள் வழங்குதல், மேலும் ஒரு ஜதை உடுப்பு வழங்குதல், குளிர் காலத்தில் கம்பளி வழங்குதல், வேலை சுமையைக் குறைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் இத்தகராறுகள் எழுந்தன. 1966-ம் ஆண்டில் ஏற்பட்ட தொழிலாளர் தகராறுகளில் 68 சத வீதத் தகராறுகளுக்குத் தொழில் துறையில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை எவ்விதத் தொடர்புமுடையதல்ல என்கிற முடிவு கிடைத்துள்ளது. மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட தகராறுகள் மற்றவர்கள் அடிக்கடிக் கூறுவதைப்போல, பொருளாதார அடிப்படையில் ஏற்பட்டவை அல்ல. புண்பட்ட உணர்வுகளும், கொந்தளிப்புகளும், ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்து கொள்ளும நேர்வுகளுமே பெரும்பாலான தொழிலாளர் தகராறுகளுக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்துள்ளன. இந்தத் தகராறுகள் ஏற்பட்ட தொழில் நிறுவனங்களிலே குறை தீர்ப்பு அமைப்பு (Grievance Machinery) ஒன்று செவ்விய முறையில் அமைந்திருந்தால், இந்தத் தகராறுகளைத் தவிர்த்திருக்கலாம.

4. தொழிலாளர்களுக்குள்ள ஒரு குறை தகராறாக ஏற்பட்ட பின்னரே தொழிலாளர் துறை தொழில் தகராறுகளைப் பொதுவாகக் கவனிக்கத் தொடங்குகிறது. ஆனால், ஒரு குறை தகராறாக மாறுவதற்கு முன்னர் குறையைத் தீர்க்க வேண்டுமென்பதுதான் குறை தீர்ப்பு நிறுவனத்தின் நோக்கமாகும். எனவே, குறை தீர்ப்பு நடைமுறையைச் செவ்வியதாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுவரை இந்த நிறுவனம் செவ்விய முறையில் செயல்படவேயில்லை. உண்மையில் ஒரு சில தொழில் நிறுவனங்களே குறை தீர்ப்பு நடைமுறையை உருவாக்கியுள்ளன. தொழில் துறையில் உறவுகளைச் சீராக்குவதற்கு இந்த முக்கியமான முறையைக் கையாளுவதில் இதுவரை அரசாங்கம் அதிக நாட்டம் செலுத்தவில்லை. இதன் முக்கியத்துவம் உணரப்பட்டதாகவும் தெரியவில்லை. தொழில் நிறுவனங்கள் அனைத்தும் குறை தீர்ப்பு அமைப்பு ஒன்றை நிறுவவேண்டுமென இந்த அரசு வற்புறுத்தும்.

1968 மார்ச் 19]

5. தொழில் தகராறுகளைச் சமரச அதிகாரிகள் எவ்வாறு கையாண்டனர் என்பதையும் தொழில் தகராறுகளில் தீர்வு காண்பதற்கான நிலையை உருவாக்குவதற்கு அந்த அதிகாரிகளும் தொழிலாளர் நீதி மன்றங்களும் எடுத்துக்கொண்ட முயற்சி எவ்வளவு என்பதையும் ஆராய்ந்து பார்த்தோமேயானால், அவர்கள் செயலாற்றுவதைக் குறித்து ஆய்வு செய்வது தேவையெனத் தெரிகிறது. 1966-ம் ஆண்டில் 15·3 சதவீதமுள்ள தகராறுகளே சமரச ஏற்பாடுகள் மூலம் தீர்த்துவைக்கப்பட்டன. 1965-ம் ஆண்டில் இவை 14·8 சதவீதத்திற்கும் சற்றுக் குறைவாக இருந்தன. 1966-ம் ஆண்டில் சமரச ஏற்பாடுகள் மூலம் தீர்த்துவைக்கப்பட்ட தொழில் தகராறுகளிலே 19 சதவீதத் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கு 3 முதல் 6 திங்களாயின. 16 சதவீதமுள்ள தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கு 6 முதல் 12 திங்களாயின. 4 சத வீதமுள்ள தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு ஓராண்டுக்குமேல் தேவைப்பட்டது. குறைந்த எண்ணிக்கையுள்ள தகராறுகளையே சமரச அதிகாரிகள் தீர்த்து வைத்ததும், அத்தகராறுகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் நீண்ட காலம் எடுத்துக் கொண்டதும்பற்றி ஆய்வு செய்யப்படும். முறைப்படி அமையாது நடுவர் தீர்ப்புமூலம் தீர்த்துவைக்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வந்துள்ளது. சமரச அதிகாரிகள் தகராறினை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென ஆலோசனை கூறியும் தொழிலதிபர்கள் 67 சதவீதத் தகராறுகளில் அவர்களது ஆலோசனையை நிராகரித்தனர். $5\frac{1}{2}$ சதவீதத் தகராறுகளை மட்டுமே தொழிலாளர்கள் நிராகரித்தனர். எனவே, தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கான இத்தகைய நல்லதொரு ஏற்பாட்டினை நிராகரித்தவர்கள் தொழிலதிபர்களேயன்றி தொழிலாளர்களல்லர். 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ம் தேதியன்று சென்னையிலே நான் கூட்டிய கூட்டமொன்றில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தபோது பெருமளவு நிதிக் கோரிக்கை அடங்கியதாக அச்சிக்கல்கள் இருந்திருக்கலாம், எனவே, நடுவர் தீர்ப்பு நடைமுறை மறுக்கப்பட்டிருக்கலாமெனத் தொழிலதிபர்கள் எடுத்துக் கூறினர். இது உண்மை நிலையை அவ்வளவாக விளக்குவதாயில்லை. ஏனெனில், நடுவர் தீர்ப்புக்கு இருதரப்பினரும் ஒப்புக்கொண்ட தகராறுகளிலே தொழிலாளர்களை வேலையை விட்டு விலக்கல், வேலையை விட்டுத் தள்ளல்பற்றிய தகராறுகள் மட்டுமின்றி, அதிக ஊதியம், அகவிலைப்படி, பூரிப்பூதியம்போன்ற அதிக நிதிப் பெறுபடியினை ஏற்படுத்தும் தகராறுகளும் அடங்கியிருந்தன. தொழில் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கு நடுவர் தீர்ப்புக்கு விடுவதே ஏற்றதொரு முறையாகும் என்பதைத் தொழிலதிபர்கள் ஏன் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதைக் கண்டறிய குறிப்பிட்ட ஆய்வு எதுவும் இதுவரை செய்யப்படவில்லை. இந்தப் போக்கினை அரசு ஆராயும். நடுவர் தீர்ப்புமூலம் மேலும் அதிகத் தொழில் தகராறுகள் தீர்க்கப்படுவதற்கு அரசு வகை செய்யும்.

6. பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் கூட்டு நிர்வாக மன்றங்கள் (Joint Management Councils) அமைப்பது குறித்தும் அரசாங்கம் முனைந்து நாட்டம் செலுத்தும். இத்தகைய நல்லதொரு மன்றத்தை நிறுவுவது குறித்து இதுவரை நாட்டம் செலுத்தப்படாதது வருந்தற்பாலது. இம்மாநிலத்திலே தனியார் துறையில் 16 நிறுவனங்களும், கூட்டுறவுத் துறையில் 2 நிறுவனங்களும், ஆக மொத்தம் 18 நிறுவனங்களுக்கு மட்டுமே கூட்டு நிர்வாக மன்றங்கள் உள்ளன. இவ்வகையில் தொழிலாளர் துறை ஆற்றக்கூடிய பணியினை ஆய்வு செய்ய இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. தொழிலாளர் நலம் குறித்து இதுவரை போதிய அக்கறை காட்டப்படவில்லை. தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதில் மிகச் சொற்ப அளவில்தான் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிதி வசதி போதிய அளவில் இராததே இதற்குப் பெரும்பாலும் காரணமாகும். தொழிலாளர்களின் இன்றியமையா இத்தேவையை நிறைவு செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து அதிக அளவில் நிதி

பெறுவதற்கு இம் மாநில அரசு முயலும். சென்னை மாநகரில் பெரும் பாலான தொழிலாளர்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர். இப்பெரிய சிக்கல் குறித்து தனியே ஆராயப்படும். தொழிலாளர்கள் வசதியான சூழ்நிலைகளில் வாழ்வதற்கு எளிதான வழிவகை எதுவும் இராவிட்டாலும், இயன்ற அளவு அவர்களுடைய நலனைப் பேணுவதற்கு இம் மாநில அரசு தன்னாலியன்றதையெல்லாம் செய்யும். தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு வினைபொருள் வாரியங்கள், குறிப்பாக காப்பி, தேயிலை வாரியங்கள் கொடுத்துள்ள மானியங்கள் மன நிறைவு அளிக்கத்தக்க வகையில் பயன்படுத்தப்படவில்லை. இக் குறைபாடு களெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் தொழிலாளர் நலனை உறுதிப்படுத்தத்தக்க பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

8. தொழிலாளர் சட்டம் எதன் மேலேனும் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஏற்படுகிற சட்ட நடவடிக்கைகளில் கட்சிக்காரர்களால் உள்ள தொழிலாளர்களுக்குப் பிரதிநிதிகளாக விளங்குகின்ற தொழில் சங்கத்திற்கு அல்லது தொழில் சங்கங்களுக்கு எவ்வாறு சட்ட உதவி அளிப்பது என்பதை இம்மாநில அரசு பரிசீலனை செய்து வருகிறது. இத்தகைய உதவி அளிக்கப்படும் சங்கங்கள் உரிய தேதியில் ஐந்நூறுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டும். இதற்காக வழக்குரைஞர் ஒருவரை நிலையாக அமர்த்திக்கொள்வது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது. மேற்கொண்டும் எந்தெந்த வழிகளில் தொழிலாளர் நலனை உறுதிப்படுத்தலாம் என அரசு ஆராய்ந்து வருகிறது. இப்போது முதல் தொழிலாளர் நலனே இம் மாநில அரசின் முக்கிய குறிக்கோளாயிருக்கும்.

9. இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகத் தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒன்றை நிறுவுவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. தொழிலாளர்களின் பல்வேறு நலப் பிரதிநிதிகள் இக்குழுவில் இடம் பெறுவர். தொழிலாளர்பற்றிய எல்லாப் பொருள் குறித்தும், குறிப்பாகத் தொழில் துறை உறவு குறித்தும், தொழிலாளர் சட்டம் குறித்தும், இக் குழு அரசுக்கு ஆலோசனை கூறும். அதே நேரத்தில் ஏனைய பல குழுக்களை மாற்றியமைப்பதெனவும், அவற்றின் நோக்கங்களை மீண்டும் வரையறுப்பதெனவும், அரசு முடிவு செய்துள்ளது. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியமும், மாநில ஆய்வு நிறைவேற்றுக் குழுவும் State Evaluation and Implementation Committee) இத்தகைய குழுக்களில் மிகவும் முக்கியமானவையாகும். இம் மாநிலத்தில் ஓட்டல் தொழில்போன்ற சில தொழில்களில் பணி நிலைமைகள் மன நிறைவளிக்கத்தக்க வகையில் இல்லை. ஓட்டல் தொழில் பணி நிலைமைகளைச் சிறப்பு அதிகாரி ஒருவர் ஆய்வு செய்வாரென முன்னர் ஆணையிடப்பட்டது. ஓட்டல் அதிபர்களும், தொழிலாளர்களும் இடம் பெறும் குழு ஒன்று இதனை விசாரணை செய்ய வேண்டுமென்ற கருத்துரையை அரசு இப்போது பரிசீலனை செய்து வருகிறது.

10. சமூகத்தில் நடைபெறும் பொதுவான நிகழ்ச்சிகளிலிருந்து தொழிலாளர் சிக்கல்களைத் தனியே பிரித்துவிட முடியாதென நான் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தேன். தொழில் முறையில் அமைதி நிலவ மிக முக்கியமெனக் கருதப்படுகிற ஒன்றிற்கு அதாவது, தொழில் துறையில் உயர் ஒழுக்க நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு எனது இக் குறிப்புரை நன்கு பொருந்தும். ஒழுங்கு முறையும் கூட்டுறவும் இந்தக் கோட்பாடு ஒவ்வொன்றின் அடிப்படையாக அமைந்துள்ளன. தொழிலதிபரும் தொழிலாளரும் நல்ல முறையில் உற்பத்தியிலீடுபடுவதற்கு முன்னர் இவை தேவையெனக் கருதப்பட்டால், இக்கோட்பாடுகள் பொதுவான சமூக வாழ்க்கையினின்று அறவே மறைந்துவிடக்கூடாது. இந்த நாட்டிலே தொழிலாளர் இயக்கத்திற்கு ஆதாரமாய் அமைந்துள்ள அரசியல் வாழ்க்கையிலும் ஒழுங்கு முறையும் கூட்டுறவும் அற்றுப்போகக் கூடாது. இவை இப்போது அற்றுப்போய்விட்டனவென்று நான் அஞ்சுகிறேன். தொழிற் சங்கங்களும், நிர்வாகங்களும் தங்கள் உறவு முறையை உயர் ஒழுக்

நெறிமுறைக் கோட்பாடுகள் குறிப்பிடுகிறபடி இயல்பாகவும் விரும்பியும் நல்ல முறையில் அமைத்துக்கொள்ள முடியுமானால், இந்தக் கோட்பாடுகளுக்கே இடமிருக்காது. எக்காரணத்தை முன்னிட்டேனும் இத்தகைய நல்லுறவு அமையாவிட்டால், இந்தக் கோட்பாடுகள் இருப்பதனாலும் பயனில்லை. சொல் அலங்காரமாகப் பேசிவிடுவதனால் மட்டும் நாம் மன நிறைவு கொள்ளும் பழக்கத்தை விட்டுவிட்டால், தொழிலாளர் சிக்கல்களை நாம் நல்ல வகையில் புரிந்துகொள்ள முடியும்.

11. உயர் ஒழுக்க நெறிமுறைக் கோட்பாடு ஒரு வகையில் தொழிலதிபர்கள் தொழிற்சங்கங்களுக்கு ஏற்பளிக்கும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளதேயொழிய அச்சிக்கலைத் தீர்க்கவில்லை. மற்றச் சிக்கல்கள் ஒருபுறமிருக்க, எண்ணிறந்த தொழிற் சங்கங்களிலே எந்தச் சங்கம் நிர்வாகத்துடன் உரையாடல் நடத்துவதற்கு ஏற்புடைய சங்கமென்று ஒப்புதலளிப்பதென்பதே சச்சரவை உண்டாக்குகிற அடிப்படைச் சிக்கலாகும். ஒரு தொழிலில் பல சங்கங்களிருப்பதால் தொழிலாளர்கள் எவ்வாறு சிதறுண்டு போகின்றனரென்பதையும் இதனால் அவர்களுக்குள்ள கூட்டுச் சாதனைத் திறன் எவ்வாறு குன்றிவிடுகிறதென்பதையும் நான் எடுத்துக் கூறத் தேவையில்லை. நிலைமை இவ்வாறிருப்பதால், பொறுப்புள்ள நிர்வாகங்கள் கூட இடர்ப்பாடுகளுக்கு ஆட்பட வேண்டியுள்ளது. ஒரு தொழிலில் ஒரு சங்கம் மட்டுமே இருப்பதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்குவதற்கு இம்மாநில அரசாங்கம் தக்கதெனக் கருதும் நடவடிக்கையை மேற்கொள்ளும். இந்த நடவடிக்கை தொழிலாளர் நலனுக்கும் நிர்வாகத்தினர் நலனுக்கும் ஏற்றதாயிருக்குமென்பது வெளிப்படையல்லவே. ஒரு தொழிலில் ஒரு தொழிலாளர் சங்கம் மட்டுமே செயல்பட்டால், அதற்கு உறுதுணையாகத் தொழிலாளர் அனைவரும் நிற்கின்ற காரணத்தால், உயர்ந்த ஊதியம் பெறுவதற்கும் உற்பத்தி நிர்வாகத்தில் தொழிலாளர் அதிக அளவில் பங்கு பெறுவதற்கும் தொழிலாளரும் நிர்வாகத்தினரும் ஒப்பிய வகையில் வேலை நேரத்தைக் குறைப்பதற்கும் ஓய்வு நேரத்தை மிகுதிப்படுத்துவதற்கும் இந்தச் சங்கம் நிர்வாகத்தினருடன் உரையாடல் நடத்துவதற்கு வசதி பெற்றிருக்கும். ஒரு தொழிலில் ஒரு தொழிற் சங்கம் மட்டுமே உருவாகுவது எப்படி என்பதே நம் முன்னுள்ள கேள்வி. இத்தகைய நிலைமை ஏற்படுவதற்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரையும் இணங்க வைப்பதுதான் ஒரே வழி என்பது என் கருத்தாகும். நான்கு மையத் தொழிற்சங்கங்களும் தனித்தனி அரசியல் கட்சியுடன் தொடர்புள்ளவையாதலால், அரசியல் கட்சிகளிடையே ஒரே சமயத்தில் இவ்வகையில் ஓர் உடன்படிக்கை காண்பது அவசியமாகும். இத்தகைய நிலைமையை எப்படியோ உருவாக்கிவிட முடியுமென வைத்துக் கொண்டாலும், சங்கம் அமைப்பதற்குத் தொழிலாளர்களுக்குள்ள அடிப்படை உரிமையைக் கருதும்போது, இந்த ஏற்பாடு எவ்வாறு உருவாக முடியும் என்பதே நம்முன் உள்ள சிக்கலாகும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்கவேண்டுமென்பது சட்டம் சார்ந்த கருத்தல்ல என்பதே இதற்கு விடை. தொழிலாளர் உறவுகள் முடிவில் சட்டத்திற்கு அப்பாற்பட்டவை என்ற கருத்தையே இது அடிப்படையாகக் கொண்டதாகும். பயன் அளிக்கும் வகையில் உரையாடல் நிகழ்த்தும் மிக உண்மையான ஒரு அதிகாரத்தைப் பெறுவதற்காக வழக்கமானதும் சட்ட உரிமையுள்ளதுமான ஒன்றைவிட்டு இக் கருத்தினைத் தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் உரையாடல் நிகழ்த்தும் இந்த முதன்மை நிறுவனத்தை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற விவரங்களை விரைவிலே முடிவு செய்துவிட முடியும். இரகசிய வாக்கெடுப்பின்மூலம் தொழிலாளர் அனைவரும் சில தொழிலாளர்கள் அடங்கிய குழு ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தொழிலாளர் நலனைக் கட்டிக்காப்பதற்கு இக்குழுவுக்கு அதிகாரமளிக்க வேண்டும். இதுவரை பலரும் சொல்லிவந்ததற்கு இக்கருத்து ஓரளவு வேறுபட்டதாகும். ஒரு சங்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற ஆலோசனை ஏற்பளிக்கப்பட்ட சங்கத்திற்கும் ஏனைய சங்கங்களுக்கும் உள்ள வேறுபாட்டினை அப்படியே வைத்துக் கொள்கிறது. பல சங்கங்களிருக்கையில் இரகசிய வாக்கெடுப்பின்மூலம் ஒரு சங்கம் தேர்ந்தெடுக்கப்படுவதால், ஏனைய சங்கங்கள் மறைந்து போகமாட்டா; அச்

சங்கங்கள் உரையாடல் நடத்தும் அதிகாரமின்றித் தொடர்ந்து செயல்படும். தொழிலாளர் அனைவரும் சேர்ந்து கூட்டாக உரையாடல் செய்கிற முறை நடைமுறையில் செயலுக்கு வரவேண்டுமென்றால், எப்போதும் அரசாங்கக் குறுக்கீட்டை நம்பியிருக்க வேண்டிய நிலைமையில் இல்லாதிருக்க வேண்டுமென்றால் நான் முன்னரே குறிப்பிட்டுள்ளவாறு தொழிலாளர் அடங்கிய குழு ஒன்றினைத் தேர்ந்தெடுப்பதுதான் இதற்குரிய ஒரே தீர்வாகும்.

12. தொழிலாளர் சட்டத்தைச் சீரமைக்க வேண்டுமென்ற கருத்துக்கு இம்மாநில அரசு ஆதரவளிக்கிறது. தொழிலாளர்கள் சிக்கல்கள் அனைத்திற்கும் சட்டமியற்றுவதே பரிகாரமெனப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால், மிகத் திட்டவட்டமாகச் சொல்வேன், அது பரிகாரமல்ல. ஒப்புதல் பெற்றிராத தொழிலாளர் சட்டங்கள் பயனற்றவை இதனால் இடர்பாடுகளே தோன்றுகின்றன. சுருங்கச் சொன்னால் இவ்வாறு சட்டம் இயற்றுவதற்கு ஏற்ற ஒப்புதல் இருந்தாலன்றி இன்று காணப்படும் போக்கிற்கிணங்க தொழிலாளர் சட்டங்களைப் பெருக்கிக்கொண்டு போதல் கூடாதென்பது இந்த அரசின் கருத்தாகும்.

13. கணக்கிடுதல் போன்ற பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தும் போக்கினை இந்த அரசு எதிர்க்கிறது.

14. தொழிலாளர் சட்டங்களை மீறியதற்காகத் தனிப்பட்ட தொழில் அதிபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்போது, பொதுத் துறை தொழில் நிறுவனங்கள் தொழிலாளர் சட்டங்களை மீறுவதை அரசு அனுமதித்து வரும் போக்கே, எதற்கெடுத்தாலும் அரசின்மீது குறைகூறும் நிலைக்கு ஓரளவு பொறுப்பாகும். செவ்விய முறைகளில் செயல்படுத்த இயலாத சட்டம் ஒன்றை இயற்றுவதே தவறு தொழிலாளர் சட்டங்கள் சில இத்தன்மைத்தானவை. ஆனால் அரசாங்க நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இடையே இவ்வகையில் வேறுபாடு கற்பித்து ஒரே தவறுக்கு வெவ்வேறான நடவடிக்கை எடுப்பது நியாயமாகாது. இதைப்பற்றிக் குறை கூறுகிறார்கள் என்றால், அது நியாயமானதுதான். அது நிலைமையை மிகச் சீர்கேடாக்கும். இந்த நிலைமையைச் சீர்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

15. நுகர் பொருள்களின் விலைவாசி விவரங்களைப் புதிதாகத் தொகுப்பதற்காக அரசினால் முன்னர் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட வல்லுநர், சென்னைப் பல்கலைக் கழகப் பொருளாதாரத் துறைத் தலைவர், பேராசிரியர் டாக்டர் வி. சண்முக சுந்தரம் அவர்களது அறிக்கை அரசிற்குக் கிடைத்துள்ளது. இந்த அறிக்கை இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் அடுத்த முறை கூடும் போது அதன்முன் இந்த அறிக்கை வைக்கப்படும்.

16. பொறியியல் தொழிலுக்கான மத்திய ஊதிய வாரியம் செய்த பரிந்துரைகள் இம்மாநிலத்தில் உள்ள 304 பொறியியல் பிரிவுகளுக்குப் பொருந்துகின்றன. அவற்றிலே 215 பிரிவுகள் தங்கள் தொழிலாளர்கட்கு இடைக்கால ஊதிய இடர் உதவியை வழங்கவில்லை என்பதைக் காணத் தமிழக அரசு வருந்துகிறது. இந்த உதவியைப் பெறுவதற்கு உரிமையுள்ள 65,901 தொழிலாளர்களிலே 48,838 தொழிலாளர்கள் இவ்வுதவியைப் பெறவில்லை. பொறியியல் பிரிவுகள் தத்தம் தொழிலாளர்களுக்கு இந்த இடைக்கால உதவியைத் தயக்கமின்றி வழங்கச் செய்வதில் இம்மாநில அரசு திட்டவட்டமான நடவடிக்கை எடுத்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள தொழில் பிரிவுகள் இவ்வகையில் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு அப்பிரிவுகளுக்கு 28—6—1967-ல் குறிப்பொன்று அனுப்பப்பட்டது. அரசு எடுத்துக்கொண்ட இம்முயற்சியின் பலனாகச் சில தொழிற் பிரிவுகள் இந்த இடைக்கால உதவியைத்

1968 மார்ச் 19]

தங்கள் தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. தோல் தொழிற்சாலைகளும், தோல் பொருள் தொழிற்சாலைகளும், ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு இவ்வண்ணமே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

17. தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதைப் பொறுத்த வரையில் ஆயிரத்துக்கு மேற்படாத தொழிலாளர்களைக் கொண்ட தொழிலிடங்களில் மருத்துவ உதவித் திட்டத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் செயலுக்குக் கொண்டுவருவதென அரசு முடிவு செய்துள்ளது. மருத்துவர்களும் மருத்துவத் துணைப் பணியாளர்களும் போதிய எண்ணிக்கையில் இல்லாமையினால், அரசாங்கத் தொழிலாளர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ நன்மைகளை சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும், மதுரையிலும் காப்புறுதி செய்துள்ளவர்களின் குடும்பத்தினருக்கு இதுவரை நீட்டிக்க இயலவில்லை. இப்போது போதிய எண்ணிக்கையில் மருத்துவர்கள் கிடைப்பர் என்ற உறுதி இருப்பதால், சென்னை மாநகரில் உள்ள இத்தகைய குடும்பத்தினரை 1967 அக்டோபர் திங்களுக்குள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு கருதியுள்ளது.

18. இறுதியாக உள்ளம் மகிழ முடியாதவகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் முனைந்துள்ள முற்றுகை (gherao) பற்றிக் கூற விரும்புகிறேன். தொழில் சங்கங்களில் தொழிலாளர் உறவுகளில் வன்முறைகள் கையாளப்படுவதை இம்மாநில அரசு ஏற்கனவே ஐயத்திற்கு இடமின்றிக் கண்டித்துள்ளது. "முற்றுகை" சட்டத்திற்குப் புறம்பானதாகும். அது முறையான தொழிற்சங்க நடவடிக்கை ஆகாது. என்றாலும் தொழிலாளர் பிணக்குகளை இம்மாநில அரசு வெறும் சட்டம் ஒழுங்கு குறித்த பிரச்சினையாகமட்டும் கருதாது என்பதையும் ஈண்டுக் கூற விரும்புகிறேன். "முற்றுகையை" இந்த அரசு பொறுக்காது, அவ்வாறே தொழில் அதிபர்கள் தொழிலாளர் சட்டங்களையும், உடன்படிக்கைகளையும் தீர்ப்புகளையும் ஊதிய வாரியத்தின் பரிவுரைகளையும் மீறி நடப்பதையும் அரசு பொறுக்காது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

How to use the Index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are intended from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bills (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

A.M./Ad. Motion ...	Adjournment Motion.
Ann	Announcement.
B. O. H.	Business of the House.
C. A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C. A. St.	Calling Attention Statement.
Consid.	Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

	(v) **Amendment to recommit to Select/Joint Select Committee, etc.**
Consid. Cl. ..	Consideration of clauses of a Bill.
D. E. E.	Demands for Excess Expenditure.
Dis. S. D. or D. S. D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D. S. G.	Demands for Supplementary Grants.
G. A	Governor's Address.
G. D.	General Discussion
H. A. H. Dis./ H.H.D. ...	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L. A.	Legislative Assembly.
L. C.	Legislative Council.
M.	Motion.
P. M	Privilege Motion.
R/Res	Resolution.
St.	Statement.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Index to Tamil Nadu Legislative Assembly Debates.

THIRD SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

14th to 16th, 18th and 19th March 1968.

Volume XI (Nos. 1 to 5).

A

PAGES

ACCIDENTS—

Fire—loss due to 144–146

Lorry 13–18

AGNI RAJU, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories 602–605

AGRICULTURE—

Crop Insurance Scheme, introduction 146–149

Pumpsets, power supply in Madurai and Ramanathapuram districts 279–282

Pumpsets, power supply in Madurantakam taluk ... 275–279

Ryots of Kadambuliyur Firka, postponement of collection of loans granted for soil conservation schemes (C.A.) 28–30

ALADI ARUNA, THIRU V.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Adiministration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 347–349

ALAGIRISAMY, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital outlay on Agriculture ... 31–33

PAGES

A—*cont.*

ALAGIRISAMY, THIRU S.—*cont.*

Budget 1968–69, Voting—*cont.*

General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department Famine Relief 449

Labour including Factories 619–621

Motor Vehicles Acts, Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 304

Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 158, 219–220

ALANGARAM, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 102–104

ANIMAL HUSBANDRY—

Exotic breeds of cocks, rearing 289–291

ANNADURAI, THIRU C. N.—

A. V. M. and other studios, shifting from Madras State (A.M.) 27–28

Budget, 1968–69, Voting—

Labour including Factories 618–619, 630–638

Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 194–195

'Thamizhar Padai', posters in Coimbatore and Erode (A.M.) 28

ANNAMALAI, THIRU V. D.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 488–490

AUTHIMOOLAM, THIRU D. S.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 516–519

PAGES

A—*cont.*

AUTHIMOOLAM, THIRU D. S.—*cont.*

Budget, 1968-69—Voting—*cont.*

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 353-357

B

BALAKRISHNAN, THIRU A. G.—

Government Press employees confirmation ... 566-568

BALAN, THIRU M. C.—

Budget, 1968-69, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 338-342

BALARAMAN, THIRU L.—

Budget, 1968-69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 76-78

Hotels, reduction of price of foodstuffs 285-289

BALASUBRAMANIAN, THIRU S.—

Budget, 1968-69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 83-84, 31

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 450, 451, 502-506

Labour including Factories 574

Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 158

"Thamizhar Padai", posters in Coimbatore and Erode (A.M.) 28

BALASUBRAMANYAN, THIRU A.—

Budget, 1968—69, Voting—

General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 451, 511-512

Labour including Factories 610-614

PAGES

B—*cont.*

BHARATHI MOHAN, THIRU G.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 481–483

BHOODAN MOVEMENT—
Chidambaram taluk, lands donated 442–443

BHUPATHY, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 305, 328–331
Spinning Mills, decision of Mill owners for closure (A.M.) 26

BHUVARAHAN, THIRU G.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 237–242

BILLS—
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968
Int. 449

BOJAN, THIRU K.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 81–82

BRIDGES—
Periyaruvi River, construction near Sanipatti ... 142

BUILDING (S)—
Directorate of Technical Education 427–429

C

CALLING ATTENTION—
Coimbatore Engineering Textool Company, Lock-out 301–304
Failure of monsoons in West Ramanathapuram district, famine relief measures 153–154
Ryots of Kadambuliyur Firka, postponment of collection of loans granted for Soil Conservation Schemes 28–30

PAGES

C—*cont.*

CHAIR—

ANNOUNCEMENTS :

Adjournment Motions, decision postponed ... 153

Estimates Committee, election 155–156

Public Accounts Committee, election 156

Privilege Committee, election 30

RULINGS AND OBSERVATIONS :

ADJOURNMENT MOTIONS :

Inability to release Hindi films in the State and shifting of studios from Madras to places outside the State.

Consent withheld under Rule 50 (iii), as the matter was not one which had already occurred and there was only an apprehension of its occurrence ... 28

Mill-owners' decision to close the cotton mills in Coimbatore.—

Consent withheld under Rule 50 (viii) as the matter was not of urgent public importance and involved only the ordinary day-to-day administration of the Government 207

Pasting of objectionable posters by 'Tamil Sena' in Coimbatore and Erode.—

Consent withheld, as the pasting of certain wall posters could not be considered to involve more than the ordinary administration of the law 28

Reference to Motions disposed of in Speaker's Chamber.—

A member, rising on a point of order, complained that though the Chair announced in the House the previous day that the motion given notice of by him would be taken up the next day, unexpectedly he had received a communication from the Secretary that morning that the Speaker had withheld his consent to the Motion. No opportunity was given to him as was the practice followed in he House in the past, to raise the matter in the House and explain how it came under Rule 50.

The Chair referred the member to a previous ruling in 1960 and observed that it was not proper to discuss in the House the ruling given by the Speaker

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS:

ADJOURNMENT MOTIONS:

Reference to Motions disposed of in Speaker's Chamber—cont.

in his Chamber, and if so desired, the Member might discuss the same with the Speaker in his Chamber itself. Consent given in the House, and not that given in the Chamber, was consent. The Secretary had sent him the communication by way of implementation of the orders passed under the signature of the Speaker ... 299–301

BUSSINESS OF THE HOUSE:

Suggestions and questions about the Agenda or Business of the House are to be made in the Business Advisory Committee in consultation with the Leader of the House and the Chair and it is not necessary to take up the time of the House to discuss the same ... 462–463

CALLING ATTENTION:

After a Minister's statement, only the Members who called the attention of the Minister could put one or two questions to the Minister by way of seeking clarification and the other Members did not enjoy that privilage 155

DEBATE:

Members should address the Chair—

Members should address the Chair while speaking lest they failed to notice the 'warning light' ... 179

Time-limit—

Members should finish their speeches within the time allotted to them 589

Decorum:

Reference to Central Government—

Shortcomings of the Central Government need not be referred to in the House. 554

DEMANDS FOR GRANTS:

In the course of the discussio on a Demand for Grant a member enquired whether a day would be set apart for the discussion on a report submitted by a Member of the Board of Revenue and the Chief

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

DEMANDS FOR GRANTS—*cont.*

Minister also replied to it. Thereupon the Chair observed that when the Demands were under discussion, a debate on the matter referred to by the member was out of place and after the Budget discussions were over, that member may bring forward his suggestion as a non-official resolution with the consent of the Speaker according to the procedure laid down in this regard. 465–466

Introductory speech by Minister—

A Minister moved a Demand and spoke on it by way of introductory remarks. Interrupting the Minister, a member rose on a point of order and enquired whether it was proper for the Minister to speak in detail at that stage inasmuch as a printed speech of the Minister in regard to that particular Demand had been laid on the Table of the House. Thereupon the Chair ruled that the Minister had the right to make certain introductory remarks and he was in order in doing it. 454

Relevancy—

Members should confine their remarks to the Demand under discussion. 216

EXPRESSIONS USED IN THE HOUSE:

Objectionable expressions.

"Bad law" மோசமான சட்டம் in the expression "In North Arcot as there is a bad law called the Palar Basin Rules"—Deprecated. 563

MATTER PRIVILEGE—

Publication in "Silamboli"—

On 16th March 1968, a member raised a matter of privilege regarding the publication in the weekly SILAMBOLI, namely, "Is this a Legislative Assembly or a market? Are the Members sleeping?"

The Leader of the House pointed out that this publication contained misrepresentation of facts, and the remarks about the House and the Members were quite unwarranted and hence there was a *prima facie* case of breach of privilege. However, as the paper did not enjoy so much publicity as to refer the matter to the Committee of Privileges it would suffice

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—

PRIVILEGE MATTER :

Publication in " Silamboli "—(cont.)

if the paper was let off with a warning. The Chair endorsed the suggestion of the Leader of the House and the matter was dropped with a warning to the paper. 152, 298

QUESTIONS :

Supplementary questions—

Admissibility —

After a supplementary about the increase of the price of cotton or the reduction of the price of cloth was answered by the Minister concerned, a member rose on a point of order and enquired whether questions which should be asked in Parliament could be allowed in the House. The Chair observed that the Ministers might be permitted to give the information available with them in their reply. 557

Clarification—

No clarification could be asked when there was no reply from the Minister to a Supplementary Question. 560

Putting—

A supplementary question should be put by the member who was called by the Chair and not by another who was not called. 280

Reference to names of Companies—

When a member referred to names of certain companies, the Chair drew his attention to Rule 31 (2) and observed that as far as possible it would be better to put supplementary questions without mentioning names. 25

Reference to Officers by name—

When a member mentioned the name of a Police Officer, the Chair held that members should not mention names as per rule 31 (2) and ordered expunction of the reference. 11

To be in the form of questions and not statements—

During a debate, statements might be made but not during question hour when members are to put their questions only. 20–21

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations : (cont.)

QUESTIONS :

Supplementary questions—cont.

Should be brief 278

Should be in the form of a question 438

Should be put for seeking elucidation to the answer given by the Minister to the main question and not based on the statement made by another **member**. 19, 20

Should relate to the main question 430, 559

SPEAKER.

Putting question—

After the Minister read his reply to a starred question, the Chair asked the Minister to clarify what was meant by a particular term, namely "மோகினிப்படி (Mohini padi). A member rose on a point of order and said that the Chair could never put a question. Thereupon the Chair observed that he only wanted the Minister to clarify the meaning of the term. **143**

CHEEMAICHAMY, THIRU K.

Backward District, constitution of a commission ... 445–447

Budget, 1968-69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 89–91

Transport Schemes Capital Outlay on Road Transport Schemes 304–305

Crop Insurance Scheme, introduction 146–149

Prime Minister—Chief Minister meet at Madurai ... 571–572

Pump-sets, power supply in Madurai and Ramanathapuram districts 279–282

CHINNARAJEE, THIRU C. K.

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties —Administration

Land Revenue Department

Famine Relief 510–511

PAGE

C—*cont.*

CHITHAN, THIRU N. S. V.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—

Administration

Land Revenue Department

Famine Relief 450

466-471

Government Hospital, Tirumangalam, Quarters for employees 568

Industrial Estate near Kappalur 429–431

S.S.L.C. Examination, results in 1965–66 and 1966-67 1–5

COMMITTEE (S)—

Estimates report on 'Police', presentation ... 574

Estimates, election (M) 155

Public Accounts, election (M) 156

Privileges, election (M) 30

CO-OPERATIVES—

Hand Pounding Rice Co-operative Societies, particulars 150–152

Labour Contract Society, Thanjavur 437–438

Muthupet Co-operative Urban Bank, misappropriation 292–294

D

DHANUSHKODI, THIRU P. S.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 73–75

DHARMALINGAM, THIRU N.—

Alleged Publication in 'Silamboli' (Privilege Matter) 152, 298

Budget, 1968–69, Voting—

General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 492–493

PAGES

D—*cont.*

DISTRICTS—

Backward—Constitution of a commision ... 445–447

DORAIRAJ, THIRU S. M.—

Budget, 1968–69, Voting :

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 205–207

DRAINAGE—

Scheme for Thanjavur district 559–560

DURAIRAJ, THIRU P.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 181–183

DURAISAMY, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories 621–624

Industrial Estate, Kurichi 431–436

E

ELLAPPAN, THIRU P. S.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 203–205

EXAMINATIONS—

S.S.L.C., results in 1965-66 and 1966-67 ... 1–5, 6–10

EXPUNCTIONS— 11,500, 501, 522, 523

F

FACTORIES—

Coimbatore Engineering Texttool Company, lock-out (C.A.) 301–304

Confectionery, Sirkali 25

FAMINE RELIEF—

Failure of monsoons in West Ramanathapuram district, measure to be taken (C.A.) ... 153–154

PAGES

F—cont.

FINANCIAL BUSINESS—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31–126
General Sales Tax and Other Taxes and Duties Administration, Land Revenue Department, Famine Relief 449–532
Labour including Factories 574–648
Motor Vehicles Act,—Administrations Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 304–379
Welfare of Scheduled Tribes, Castesand Other Backward Classes 156–254

G

GANESAN, THIRU S.—
Budget 1968–69, Voting—
Agriculture—
Capital Outlay on Agriculture 72–73

GNANASAMBANDAN, THIRU K. R.—
Budget 1968–69, Voting.—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 207–210
Text books, publication 130–136

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—
Deputy Commissioner of Police, Madras City ... 10–12
Police Officers deputed to border Police 12

GOPAL, THIRU M.—
Budget 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 201–203

GOVINDARAJAN, THIRU C.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories 575, 586–589, 647
Lorry accidents 13–18

PAGES

G—*cont.*

GOVINDARAJAN, THIRU V. S.—
Budget, 1968-69, Voting—
Labour including Factories 614–617

GOVINDASAMY, THIRU A.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 32, 33–68, 114–124, 125–126
Ryots of Kadambuliyur Firka, postponement of collection of loans granted for soil conservation schemes (G.A. St.) 29–30

H

HANDE, DR. H. V.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories 574, 597–602
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 378
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157, 221–223

HOME GUARDS—
Continuance 443–445

HOSPITALS AND DISPENSARIES—
Primary Health Centres, functioning 149
Tirumangalam, quarters for employees ... 568

HOSTELS—
Government Hostel for students, Sendurrai ... 22–23

HOTELS—
Foodstuffs, price reduction 285–289
Hotels and catering establishments, weekly holiday 282–285

I

INDUSTRIES—
Industrial Estate, Kurichi 431–436
Industrial Estate near Kappalur 429–431

PAGES

I—*cont.*

IRAJARATHINAM, THIRU D.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 501–502

J

JAMES, THIRU J.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories 594–597

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 88–89
General Sales Tax and other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 451
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157–158

JAYARAMAN, THIRU P.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories 593–594

K

KARUNANIDHI, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 304, 305, 306, 307–311, 319, 334, 367–378
Privileges Committee, election (M) 30

KARUPPIAH, THIRU A.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 495–497

KARUPPIAH, THIRU R.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 94–96
Crop Insurance Scheme, introduction 146–149

PAGES

K—*cont.*

KARUTHIRUMAN, THIRU P. G.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 110–114
General Sales Tax and Other Taxes and Duties—
Administration, Land Revenue Department, Famine Relief 519–525
Labour including Factories 624–630

KASIRAMAN, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 304, 306, 311–319
Mohini allowance to certain temples, revision ... 143–144

KITTAPPA, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 210–213

KOLATHUR KOTHANDAM, THIRU.—
Primary Health Centres, functioning ... 149
Pumpsets, power supply in Madurantakam taluk 275–279

KOTHANDARAMAN, THIRU V. K.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 33
General Sales Tax and Other Taxes and Duties—
Administration, Land Revenue Department, Famine Relief 449
Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 306
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 187–189
Cloth, incentive bonus for export 553–556
Fire accidents, loss due to 144–146
Hotels and Catering establishments, weekly holiday 282–285
Hotels, reduction of price of foodstuffs 285–283

PAGES

K—*cont.*

KOTHANDARAMAN, THIRU V. K.—*cont.*

Lorry accidents 13–18

Percolation tanks, particulars 561–563

Prime Minister-Chief Minister meet at Madurai 571–572

Regulated markets, Thanjavur district 563–566

Spinning Mills' decision of mill owners for closure (A.M.) 26

Wages Committees, constitution 23–24

KRISHNAN, THIRU E. R.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 472–476

KRISHNAN, THIRU N.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 358–360

KRISHNASAMY GOUNDER, THIRU R.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 33

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 349–351

KUMARASAMY, THIRU K. N.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 31, 106–108

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 451

Labour including Factories 617–619

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157

Spinning Mills, decision of Mill owners for clouse (A.M.) 26

PAGES

K—*cont.*

KUPPAMMAL, THIRUMATHI S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 86–87

L

LABOUR—
Wages Committees, constitution 23–24

LANDS—
Dry—, Melur taluk 560–561
Land Ceiling Act, surplus lands, Chidambaram taluk 572–573
Land Utilisation Order, 1961, enforcement ... 438–442

M

MADHAVAN, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories 574, 582,583, 638–647
Coimbatore Engineering Textool Company, lock-out (C.A. St.) 301–303, 304

MAHADEVAN, THIRU B.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes 335–337

MALAICHAMY, THIRU P.—
Bridge across Periyarvi river near Sanipatti ... 142
Dry lands, Melur taluk 560–561
Government Hostel for students, Sendurai ... 22–23
Home Guards Unit, continuance 443–445

MANI, THIRU K. B. S.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 33, 100–102

PAGES

M—*cont.*

MANI, THIRU K. B. S.—*cont.*
Budget, 1968–69, Voting—*cont.*
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157, 191–195

MANI, THIRU M. S.—
Budget, 1968–69, Voting—
Labour including Factories 589–591
Motor Vehicles Act—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes ... 319–325

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration
Land Revenue Department
Famine Relief 486-488
Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes ... 337–338
Spinning Mills, decision of Mill Owners for closure (A.M.) 26

MARIMUTHU, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 104–106

MARKET(S)—
Regulated—,Thanjavur district 563–566

MARTIN, THIRU T.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 484–486
Tourist Homes, Tirunelveli district 391

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Agriculture, Capital Outlay on Agriculture ... 97–99

PAGES

M—*cont.*

MARUDACHALAM, THIRU N.—*cont.*

Budget, 1968–69 Voting—

Labour including Factories 592–593

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157, 226–228

Coimbatore Engineering Textool Company, lock-out (C.A.) 301,303

MATHIALAGAN, THIRU K. A.—

Budget, 1968–69 Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 124–125

General Sales Tax and Other Taxes and Duties—Administration

Land Revenue Department

Famine Relief 449, 450 451, 452–461, 464–465, 471, 525–531

Failure of monsoons in West Ramanathapuram district, famine relief measures (C.A. St.) ... 153–154

MEIYAPPAN, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 93–94

MILLS—

Rice Mills in Thanjavur and Tiruchirappalli districts 18–22

MOTION(S)—

Adjournment Motions—

A.V.M. and other studios, shifting from Madras State 27–28

Spinning Mills, decision of Mill Owners for closure 26–27

'Thamizhar Padai' posters in Coimbatore and Erode 28

Estimates Committee, election 155

Privileges Committee, election 30

Public Accounts Committee, election 156

PAGES

M—*cont.*

MUNISWAMY GOUNDER, THIRU P. M.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 506–508

MURUGESAN, THIRU K.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 515–516

MUTHIAH, THIRU M.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 183–186

MUTHULINGAM, THIRU S.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 186-187

MUTHUSAMY, THIRU M.—
City Municipal Corporation, District Municipalities and Panchayats (Amendment) Bill, 1968 ... 449

N

NACHIMUTHU, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes, Capital Out lay on Road Transport Schemes 327–328

NAGALINGAM, THIRU P.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 228–230

NAGASUNDARAM, THIRU R.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and Other Taxes and Duties—
Administration, Land Revenue Department, Famine Relief 478–481

PAGES

N—*cont.*

NALLASWAMY, THIRU T. M.—

Budget 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 68–72

NANJAN, THIRU C.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories 607–610

NEDUNCHEZHIYAN, THIRU V.R.—

Alleged Publication in 'Silamboli' (Privilege Matter) 298

Estimates Committee, election (M) 155

Public Accounts Committee, election (M) ... 156

Spinning Mills, decision of Mill Owners for closure (A.M.) 26–27

O

OFFICES—

Government Press employees, confirmation ... 566–568

P

PACHAIYAPPAN, THIRU S. P.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 75–76

PANNEERSELVAM, THIRU M.—

Budget, 1968–69 Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 235–237

PAPERS LAID ON THE TABLE—

Abolition of Land Revenue and State Trading in Agricultural Products (Tamil); Second Report by Thiru S. R. Kaiwar, I.C.S. 380

Agricultural Produce Markets Act, 1959, Notification 533

Appropriation Accounts for 1966–67 and Audit Report, 1968 380

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Cinemas (Regulation) Act, 1955, Notification ... 533

Committee on Estimates, Third report on the action taken by Government on the recommenrations contained in the Report on 'Police' 648

Committee on Rules—March 1968, Fourth Report 380

Community Development and Panchayat Development, Note (English and Tamil) 127

Demand—Community Development, Financial Supplement (English and Tamil) 127

Demand No. XXXI—Famine Relief, Note on Policy (English and Tamil) 533

Demand No. I—Land Revenue, Policy Note (English and Tamil) 533

Demand No. 1—Land Revenue, speech of Minister (English and Tamil) 533

Demand No. 16, Policy note 255

Demand No. 29, Policy Note 255

Demand Nos. 30 and 43 Nationalised Transport, Speech of Minister (English and Tamil) ... 533

Entertainments Tax Act, 1939, Notification ... 380

Factories Rules, 1950, Notification 254

Fertilisers and Chemicals, Travancore, Ltd., Madras, Government's Review and Twenty-third Annual Report 533

Finance Accounts for 1966–67 380

General Sales Tax Act, 1959, Notification ... 380

Harijan Welfare, 1968–69, Policy Note (Tamil). 380

Inams (Supplementary) Act, 1963, Notification. 648

Inams (Supplementary) Amendment Bill, 1968, with Annexure 380

Indian Stamp Act, 1899, Notification 255

Nationalized Transport, Review 1967–68, (English and Tamil) 380

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Prohibition Act, 1937, Notifications 251, 648

Road Transport, 1967–68, Review (English and Tamil) 380, 533

Speech by Minister for Local Administration (Tamil) 127

POLICE—

Deputy Commissioner of Police, Madras City .. 10–12

Officers deputed to border Police 12

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 360–367

PRIVILEGE MATTER—

Alleged Publication in 'Silamboli' 152, 298

R

RAJA, THIRU A. M.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 352–353

Directorate of Technical Education, building ... 427–429

Government servants, retiring age 294–296

Hotels, reduction of price of foodstuffs 285–289

I.A.S. Officers, corruption charges 296–297

RAJANGAM, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classess 190–191

RAMACHANDRAN, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories 583–586

PAGES

R—*cont.*

RAMACHANDRAN, THIRU S.—*cont.*

Estimates Committee, Report on 'Police' presentation 574

Hotels, reduction price of foodstuffs 285–289

Ryots of Kadambuliyur Firka, Postponement of collection of loans granted for Soil Conservation Schemes (C.A.) 28–29

RAMALINGAM, THIRU S.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 174–180

RAMAMOORTHY, THIRU K.—

A.V.M. and other studios, shifting from Madras State (A.M.) 27

Budget, 1968–69, Voting—

Agriculture Capital Outlay on Agriculture ... 32

General Sales Tax and Other Taxes and Duties—Administration Land Revenue Department, Famine Relief 451

Labour including Factories 574, 575–582, 583

Crop Insurance Scheme, introduction 146–149

Hotels, reduction of price of foodstuffs 285–286

RAMAN, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 213–215

RAMASAMI, THIRU E.—

Budget, 1968–69, Voting—

Labour including Factories 605–607

RAMASWAMI GOUNDER, THIRU K. M.—

Budget, 1968–69, Voting—

Agriculture—Capital Outlay on Agriculture ... 32

PAGES

R—*cont.*

RAMASWAMI GOUNDER, THIRU K. M.—*cont.*

Budget, 1968–69, Voting—*cont.*

General Sales Tax and Other Taxes and Duties Administration, Land Revenue, Department, Famine Relief 450, 476–478

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 325–327

State Transport Buses, holding up by students at Boothapandi 447–448

RAMASWAMI NAIDU, THIRU S.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration Land Revenue Department Famine Relief 497–500

RAMASWAMY, THIRU S. J.—

State Transport Department, loss incurred ... 139–142

ROAD(S).—

Puthur—M. Kothangudi, formation 294

S

SAHADEVA KANDER, THIRU K.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 87–88

SAMINATHAN, THIRU K. N.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture .. 91–93

SATYAVANIMUTHU, DR. (THIRUMATHI)—

Budget, 1968–69, Voting :—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157, 158–174 242–253

SERVICES—

Government Servants, retirement age 294–296

I.A.S. Officers, Corruption charges 296–297

PAGES

S—*cont.*

SHANMUGAM, THIRU V. S.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 80–81

SIL FARM—

Eachankottai village, Thanjavur district ... 136–139

SIVASAMI, THIRU M.S.—

Budget, 1968–69, Voting—

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 512–514

SIVASUBRAMANIAN, THIRU S.—

Bhoodan Movement, lands donated in Chidambaram taluk 442–443

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 197–201

Hand Pounding Rice Co-operative Societies, particulars 150–152

Land Ceiling Act, Surplus lands, Chidambaram Taluk 572–573

Puthur—M. Kothangudi Road, formation ... 294

S.S.L.C. examination result in 1967 6–10

SLUMS—

Vigilance Committees for slum areas in City ... 568–570

SOMASUNDARAM, THIRU N.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 223–226

SOUNDARARAJA MOOPANAR, THIRU R.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 108–110

SUBBARAJA, THIRU A. A.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 31

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 508–510

Famine Relief 508–510

PAGES

S—*cont.*

SUBBARAJA, THIRU A.A.—*cont.*

Budget, 1968–69, Voting—*cont.*

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 304, 306, 342–346, 347

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 158

Failure of monsoons in West Ramanathapuram district, famine relief Measures (C.A.) ... 153

SUBBIAH THIRU A. K.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 32, 78–80

General Sales Tax and Other Taxes and Duties—Administration, Land Revenue Department, Famine Relief 459, 490–492

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes, Capital Outlay on Road Transport Schemes 305

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 157

Confectionary factory, Sirkali 25

Drainage Schemes for Thanjavur district ... 559–560

Labour Contract Society, Thanjavur 437–438

Land Utilisation Order 1961, enforcement ... 438–442

Muthupet Co-operative Urban Bank, misappropriason 292–294

Silk farm at Eachankottai village, Thanjavur district 136–139

Spinning Mills decision of Mill Owners for closure (A.M.) 26

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 84–86

SUBRAMANIA GOUNDER, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 96–97

PAGES

S—*cont.*

SURENDRAN, THIRU M.—
Budget, 1968–69, Voting—
General Sales Tax and other Taxes and Duties Administration Land Revenue Department Famine Relief 575
Labour including factories 575
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes ... 305
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 195–197

SWAMINATHAN, THIRU V.—
Exotic breeds of cocks, rearing 289–291
S.S.L.C. Examination, result in 1967 6–10
Text-books, publication 130–136

T

TANKS—
Percolation—, particulars 561–563

TEXTILES—
'Mohini allowance', revision 143–144

TEXT-BOOKS—
Publication 130–136

TEXTILES—
Cloth, incentive bonus for export 553–556
Mill-made, price 556–559
Workers, payment of bonus 129–130

THEERTHAGIRI, THIRU N.—
Budget, 1968–69, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 215–216

THIPPIAH, THIRU T. T. S.—
Budget, 1968–69, Voting—
Motor Vehicles Acts—Administration Road Transport Schemes Capital Outlay on Road Transport Schemes 351–352

TOURISM—
Tourist Homes, Tirunelveli district 291

PAGES

T—*cont.*

TRANSPORT AND COMMUNICATIONS—

State Transport, advisory committee of private operators, constitution 12–13

State Transport Buses, holding up by students at Boothapandi 447–448

State Transport Department, loss incurred ... 139–142

V

VARADARAJAN, THIRU N.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes 305
357–358

VEERAMANI, THIRU C.—

Budget, 1968–69, Voting—

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 216–219

VEERASWAMY, THIRU N.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemes
Capital Outlay on Road Transport Schemes ... 331–334

VINAYAKAM, THIRU K.—

Budget, 1968–69, Voting—

Motor Vehicles Acts—Administration
Road Transport Schemas
Capital Outlay on Road Transport Schemes ... 306

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes 158,
231–235

Crop Insurance Scheme introduction 146–149

Hotels and Catering Establishments, weekly holiday 282–285

Hotels, reduction of Price of foodstuffs ... 285–289

Land Utilisation Order 1961, enforcement ... 438–442

Mill-made textiles, price 556–559

'Mohini allowance' to certain temples, revision. 143–144

PAGES.

V—*cont.*

VINAYAKAM, THIRU K—*cont.*

Rice mills in Tiruchirappalli and Thanjavur districts 18–22

State Transport, advisory committee of private operators, constitution 12–13

Textile workers, payment of bonus 129–130

Vigilance Committees for slum areas in city ... 568–570

VISITS—

Prime Minister—Chief Minister meet at Madurai 571–572

W

WILLIAM, THIRU M.—

Budget, 1968–69, Voting—

Agriculture, Capital Outlay on Agriculture ... 99–100

General Sales Tax and Other Taxes and Duties—

Administration, Land Revenue Department, Famine Relief 494–495

LIBRARY
15 OCT 1970
STATE LEGISLATURE, MADRAS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS